வெளியீடு 2-12-1983] [Issued 2-12-19

(12)
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
3 மார் 1984
2715
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 13, 1983—தொகுதி XLIX எண் 4

Wednesday the 13th April 1983 Volume XLIX No 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department Fort St. George

Madras-600 009.

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

D
V211,31 N83
N83·49·4j1
136038
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

13—4—1983.

| | பக்கங்கள் |
|---|---|
| வினாக்கள்—விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 571-604 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் ... | |
| தகவல் கோரல் : | |
| (அ) சென்னை வாழ் மக்களுக்குக் குடிநீர் வழங்குவது. | 604 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. | 604 |
| (இ) போக்குவரத்துக் கழகம் உலக வங்கியிடம் பெற்றுள்ள கடனுக்கான வட்டி. | 605 |
| (ஈ) திரு பொ. விஜயராகவன் கைது .. | 646 |
| உரிமைப் பிரச்சனை : | |
| அவை முன்னவர் மீது—தீர்ப்பு .. | 606-607 |
| ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| பாளையங்கோட்டை சிறைக் கைதிகளில் சிலர் பல கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருப்பது. | 607-620 |
| அறிக்கைகள் அளித்தல்: | |
| (அ) விதி 109—இன் கீழ் சமூக நலத் துறை அமைச்சர் அளித்த விடை குறித்து .. | 62 -622 |
| (ஆ) மதிப்பீட்டுக் குழு .. .. .. | 628-629 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு .. ... | 629 |

| | |
|---|---|
| 6. கவன ஈர்ப்புகள் : | பக்கங்கள் |
| (அ) தொழிற்சாலைகளின் கழிவு நீரை பவானி ஆற்றில் விடுவது. | 623–625 |
| (ஆ) நாகர்கோவிலில் செயல்பட்டு வந்த பல்நோக்கு சுகாதார பெண் பயிற்சியாளர் பள்ளி திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டுள்ளது. | 625–628 |
| 7. அரசினர் சட்டமுன்வடிவு : | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1983. | 630–634 |
| 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1974–75 அளித்தல். | 635–636 |
| 9. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி). | |
| கோரிக்கை எண் 24—தொழில்கள். | 636–646 |
| கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 646–689 <br> 690–722 |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 636, 638, 639–644 661, 669, 670, 682–685, 686–687, 693 |
| திரு சி. த. சிதம்பரம் | 642–649 |
| திரு. கோ. விஸ்வநாதன் | 649–658 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் | 658–672 |
| திரு. ஜே. சி. டி. பிரபாகரன் | 672–682 |
| திரு. என். சங்கரய்யா | 690–708 |
| திரு. குமரி அனந்தன் | 709–722 |
| 10. அறிவிப்புகள் : | |
| (அ) பேரவை அலுவல் .. .. .. | 689 |
| (ஆ) உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் கைது செய்யப்பெற்றுள்ளது. | 689–690 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 723–724 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1983 ஏப்ரல் 13.

பங்குனி 30, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.'

பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.

### I. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

குளவாய்ப்பட்டியில் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 739— திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு அரசுத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் குளவாய்ப்பட்டியில் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் குளவாய்ப்பட்டியில் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை.

**திரு. பெ. திருமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தொகுதியில் குளவாய்ப் பட்டியில் குளுகோஸ் பாக்டரியை அமைப்பதற்கு நமது முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்த ஏற்பாட்டை நம்பி, நீண்ட நாட்களாக அந்த குளுகோஸ் பாக்டரி வரும் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இந்த அரசு அந்த பாக்டரியை அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழக அரசினுடைய சார்பாக இரண்டு நிறுவனங்கள்—தமிழ்நாடு அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனும் டிட்கோ நிறுவனமும்—அங்கு அந்தத் தொழிற்சாலை அமைக்கலாமா என்று ஆய்ந்துபார்த்தன. ஆனால், அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியக் கூறு இல்லாத காரணத்தாலே அது கைவிடப்பட்டது.

**திரு. பெ. திருமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, குளுகோஸ் தயார் செய்யக் கூடிய மூலப் பொருளான சோளம் அந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திலேயே ஆலங்குடி, கறம்பக்குடி, கொத்தமங்கலம், வடகாடு, கீரமங்கலம், செலட்டூர், போன்ற பகுதிகளில் அதிகமாக விளைகிற காரணத்தால், குளுகோஸ் பாக்டரியை என்னுடைய தொகுதியிலே ஆரம்பித்தால், பலபேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, சோளம் அதிகம் விளையக் கூடிய அந்தத் தொகுதியில் குளுகோஸ் பாக்டரியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குளுகோஸ் என்ற இந்த மூலப்பொருள்—மருந்துத் தொழில், மற்ற டெக்ஸ்டைல் தொழில்களுக்குத் தேவைப்படுகிறது. இந்த மூலப்பொருள்களுக்கு அடிப்படையாக இருப்பது மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு போன்ற அந்த மாவை உள்ளடக்கிய பொருளாகும். நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல அங்கே 15,000 டன்தான் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த 15,000 டன்னும் மரவள்ளிக் கிழங்கு அல்ல, மக்காச் சோளம். ஆனால் அந்த மக்காச்சோளத்திலே 6,000 டன் அளவுக்கு, அங்கே ஏற்கனவே South Indian Maize and Allied Industriesஎன்ற ஒரு நிறுவனத்தால் Corn Industry and General Industry என்ற பெயராலே





பயன்படுத்தப்படுகிறது. உபரியாக, 11,000 டன் மக்காச் சோளம்தான் புதுக்கோட்டையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. யாராவது தனியார் வந்து அந்தக்காரியத்தைச் செய்ய முன் வருவார்களானால் அரசு தக்க ஆதரவை நல்கும்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளுகோஸ் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள், வசதிகள், சாத்தியக் கூறுகள் நிறைந்த சேலம் அல்லது சேலம் பகுதியிலே இப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஏதேனும் முடிவெடுத்துள்ளதா என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலத்தில் அந்த குளுகோஸ் தொழிற்சாலை தொடங்குவதற்கு நல்ல சாத்தியக் கூறு—ஸ்கோப்—இருக்கிறது. குறிப்பாக, இன்றைய தினம் ஏறத்தாழ 85,000 டன் குளுகோஸ் நாட்டுக்குத் தேவைப் படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில், ஒரே ஒரு இடத்தில், அதுவும் உடுமலைப் பேட்டையில், 75,000 டன்னைப் பயன்படுத்துகிற அளவுக்கு மட்டுமே இன்றையதினம் உற்பத்தித் திறன் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, சேலத்தில் அப்படிப்பட்ட தொழிற்சாலை வருவதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதற்காக இரண்டு நடவடிக்கைகளைத் தமிழக அரசு இன்றைக்கு எடுத்து வருகிறது. ஒன்று, ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவில் மரவள்ளிக் கிழங்கை அதிகம் வளர்த்து, தரம் உள்ளதாக ஆக்கி, மாவுச் சத்தை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக, வேளாண்மைத் துறை சார்பாகஒரு தீவிர திட்டத்தை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தி வருகிறோம். நம்முடைய மாவுத் தொழிற்சாலைகளை நவீனப் படுத்தும்வகையில் அந்தத் தொழிற்சாலைகளை வைத்திருக்கின்ற அதிபர்களுக்கு வசதி செய்வதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது. இந்த இரண்டு நடவடிக்கைகளின் வாயிலாக அநேகமாக சேலம் மாவட்டத்தில் நல்ல சாத்தியக் கூறுகள் எதிர் காலத்திலே இருக்கின்றன.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் தொழிலிலே மிகவும் பின் தங்கிய மாவட்டம். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் குளுகோஸ் பேக்டரிக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். தமிழ் நாட்டிலே அதிகமாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பம் இருக்கின்ற பொழுது, அதனுடைய தேவையும் அதிகமாக இருக்கின்ற பொழுது, இலாபகரமான தொழிலாகவும் இருக்கின்ற பொழுது, புதுக்கோட்டை மாவட்

[1983 ஏப்ரல் 13

டத்திலே இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முன் முயற்சி எடுத்துக் கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, அப்படிப்பட்ட மூலப் பொருட்களை சேலம் மாவட்டத்திலிருந்து எடுத்துச் சென்றால் அதன் போக்கு வரத்துச் செலவெல்லாம் சேர்ந்தால் அடக்க விலை எப்படியிருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். எனவேதான், மூலப் பொருள் உற்பத்தியாகின்ற சேலம் அல்லது தர்மபுரி பகுதிகளில் இருந்தால் வயபிலிட்டியாக இருக்கும் என்ற கண்ணோட்டோத்தோடு அரசு பரிசீலிக்கிறது.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குளுகோஸ் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குச் சேலம் மாவட்டத்தைச் சிறந்த மாவட்டமாகக் கருதியிருக்கக் கூடிய நமது அமைச்சரவை சேலம் மாவட்டத்திலே கொங்கணாபுரம் என்ற இடத்திலே மூலப் பொருளாகிய மக்காச் சோளம் கிடைப்பதால் கொங்கணாபுரத்திலே இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல அரசு இன்றைக்குத் தெளிவாக இருக்கிறது. நல்ல ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் வந்தால் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து உதவிகளைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குளுகோஸ் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். குளுகோஸ் தயாரிப்பதற்கு அடிப்படைத் தேவையான, மூலப்பொருளான மக்காச் சோளம் வேலூர் பகுதியில், அதிலும் குறிப்பாக காட்பாடி வட்டாரத்தில் அதிகமாக இருக்கிறது. இரண்டு விதமான சோளம் இருக்கிறது. ஒன்று ஐ. ஆர். 8; மற்றொன்று சிறிய ரகம். இந்தச் சிறிய ரகம் அதிகமாக சத்து கொண்டது. அது குளுகோஸ் தயாரிப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே, காட்பாடி வட்டாரத்தில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே பொதுப்படையாகச் சொல்லியிருக்கிறேன். எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் ஆவன செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர்களும் தொழில் முனைவர்களை ஊக்குவித்து, உருவாக்கி எங்களுக்கு அறிமுகப்படுத்தினால் இருவரும் சேர்ந்து அந்தத் தொழிற்சாலைகளை அமைப்போம்.

**தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுப்புழு விற்பனை நிலையங்கள்**

*வினா எண் 740— **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டுப்புழு விற்பனை நிலையம் (Cocoon Market) எந்தெந்த இடங்களில் உள்ளது?

(ஆ) விலை யாரால் நிர்ணயம் செய்யப்படுகிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) கும்பகோணம், மன்னார்குடி ஆகிய இரண்டு இடங்களிலும் பட்டுப்புழு விற்பனை நிலையங்கள் முறையே 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

(ஆ) பட்டுக்கூடுகளின் விலை பட்டுக்கூடு அங்காடிகளில் ஏலத்தின் மூலம் தற்போது நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுப்புழு வளர்ச்சி என்பது தமிழகத்தில் இன்றைக்கு அரசு உதவியால் அதிகப்படியாக இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் அதிக மார்க்கெட் இல்லாமல், கர்நாடக மாவட்டத்தில் பெங்களூருக்கு எடுத்துச் சென்று விற்கிறார்கள். எனவே, வடார்க்காடு, தர்மபுரி மாவட்டங்களின் மையப் பகுதிகளில் மார்க்கெட் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் சொன்னதைப்போல இன்றைக்குப் பட்டுக்கூடுகளை நாங்களே கொள்முதல் செய்கின்ற அளவிற்குத் தமிழ்நாட்டில் திண்டுக்கல் போன்ற பகுதிகளில் உருவாக்கியிருக்கிறோம்; வடார்க்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி பகுதியில் பட்டுக்

கூடு அங்காடி இன்றைக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. அதன் வாயிலாக விவசாயிகள் மத்தியிலிருந்து பட்டுக்கூடுகளை, கொள்முதல் செய்து கொடுத்த பிறகு காஞ்சியில் தமிழ்நாடு சில்க் பெடரேஷன் என்ற மத்திய அமைப்பை கோவாப்டெக்ஸ் மூலம் வைத்திருக்கிறோம். எனவே, பட்டு நூலுக்கு கர்நாடகத்திற்குச் செல்லாமல் இங்கேயே கொள்முதல் செய்து பாதுகாப்பை நல்கி வருகிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற பட்டுப் புழுக் கூடுகளிலிருந்து கிடைக்கின்ற பட்டின் தரம் குறைவாக இருக்கிறது என்றும், கர்நாடகத்தில் உற்பத்தியாவதற்குக் கூடுதலான விலை கிடைக்கிறது என்றும் கூறப்படுவது உண்மையா? அப்படியிருந்தால் தமிழ்நாட்டிலுள்ள பட்டுப் புழுக் கூடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல அந்த நிலைமை கடந்த காலத்திலே நிலவி வந்தது உண்மைதான். ஆனால் கடந்த நான்காண்டு காலமாகத் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற பட்டுக் கூடுகளின் தரத்தை உயர்த்தி அந்த விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டுமென்பதற்காக இரண்டு விதமான முயற்சிகளை நாம் எடுத்திருக்கிறோம். பட்டுக் கூட்டினுடைய தரம் நல்ல முறையிலே இருக்க வேண்டும். அப்படித் தரம் நல்ல முறையிலே இருக்கவேண்டுமென்றால், கன்டென்ட், அடர்த்தி அதிகமாக இருக்கவேண்டும். அதிகமான அடர்த்தி இருக்கவேண்டுமென்றால், தரமான முட்டைகள் இருக்கவேண்டும். தரமான முட்டைகள் இருக்கவேண்டுமென்றால், நவீன முறையைக் கையாள வேண்டும். ஜப்பான் நாட்டிலுள்ள பயோல்டின் முறையை இங்கே கொண்டு வந்து சென்ட்ரல் சில்க் போர்டு மூலமாகப் பெற்று, வடாற்காடு மாவட்டத்தில், மாண்புமிகு சுந்தரம் சொன்னது போல், ஏலகிரி மலையில் 5,000 ஏக்கர் பரப்பளவிற்கு, சென்ற ஆண்டு செயல்படுத்தி அது நல்ல பயனை அளித்துள்ளது. அதிலே ரிஜெக்ஷன் அதிக அளவு கிடையாது. அந்த முறையில் நீக்குகின்ற அளவு அதிகமில்லை. ஷார்ட் லீஸ் என்ற முறையையும் ஜப்பானில் கையாண்டு வருகிறார்கள். அந்த முறையையும் நாம் கையாண்டு வருகிறோம். அதாவது இளம்





புழு என்ற வகையில் ஜப்பான் நாட்டைப் போல் தமிழ் நாட்டில் பல இடங்களில் கையாண்டு வருகிறோம். அந்தப் புழுவினுடைய ஆயுட்காலம் 28 நாட்கள். அதில் 8 நாட்கள் இளம் பட்டுப் புழுக்கள் வளர்ப்பு நிலையத்தில் இருக்கும். பிறகு விவசாயிகளுக்கு 24 நாட்கள் கழித்துக் கொடுக்கப்படுகிறது. இளம் பட்டுப் புழு வளர்ப்பை சண்முகா நதித் தீரத்திலே ஆறு மாதத்திற்கு முன்பு பார்வையிட்டேன். அப்போது அது அந்த ஜப்பான் நாட்டு முறையில் நல்ல வகையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஜப்பான் நாட்டு முறையைத் தமிழ்நாட்டில் புகுத்திச் சென்ற ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறோம். ஆகவே அந்தப் பட்டுப் புழுவினுடைய தரத்தை பயோல்டின், ஷார்ட் லீஸ் போன்ற முறைகளினால் செயல்படுத்தினால், தரத்தை நிச்சயமாக உயர்த்த முடியும். நல்லமுறையில் விவசாயிகளுக்குப் பயன் கிடைக்கும்.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, இந்தப் பட்டுப் புழுத் தொழிற்கூடங்களில் வேலை செய்யக் கூடிய பெண்களை 12 மணி நேரம் வேலை வாங்கிவிட்டு, அவர்களுக்கு ரூ. 2.50, ரூ. 3·50 என்ற கூலி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க அரசு ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** உறுப்பினர்களுடைய உணர்வுகளை மையமாகக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## திருச்சி கூட்டுறவு தொழிற்கல்வி நிலையம்

*வினா எண். 741—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி கூட்டுறவு தொழிற்கல்வி நிலையத்தில் மாணவர்களைச் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

(இ) இங்கு அளிக்கப்படும் டிப்ளமோவை மாநில அரசு அங்கீகரிக்குமா?

[1983 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக்கல்வியைப் பல்தொழில் (பாலிடெக்னிக்) கல்வி நிறுவனங்களின் மூலமே கற்பிக்கலாம் என்பதால் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை.

(இ) அரசு ஆணை (நிலை) எண். 2246 கல்வித்துறை நாள் 16—10—1980-ன்படி இக்கல்வியை முதுநிலை பட்டப் படிப்பிற்கு இணையாக அங்கீகரிக்கப்பட்டது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இந்த டிப்ளமாவை அங்கீகரித்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. ஏற்கெனவே இந்த டிப்ளமா பெற்றவர்களுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே அப்படிப்பட்ட ஆலோசனை இப்போது இல்லை.

## உதவிக் கல்வி அலுவலர்கள் சங்கக் கோரிக்கைகள்

*வினா எண் 742 ;—திரு செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நடைபெற்ற உதவிக் கல்வி அலுவலர் மாநாட்டில் உதவிக் கல்விஅலுவலர்கள் சங்கம் கோரிக்கை ஏதும் வைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(ஆ) உதவிக்கல்வி அலுவலர் கழகம் வைத்துள்ள கோரிக்கைகள் பெரும்பாலும் 1—6—1981 முதல் புதிதாக தொடங்கப்பட்ட உதவிக் கல்வி அலுவலர்களின் நிர்வாகம் தொடர்பாக அளித்துள்ள ஆலோசனைகளே. அவைகள் ஆய்வு செய்யப்பட்டு, பயனுள்ளவைகள் சில ஏற்பட்டுள்ளன, மற்றும் சில ஆய்வில் உள்ளன,



1983 ஏப்ரல் 13]

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, உதவிக் கல்வி அலுவலர்கள் கோரிக்கைகள் சிலவற்றை அரசு ஏற்றுக் கொண்டதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை வைத்து, இந்த அரசு ஏற்றுக் கொண்டு எந்தெந்த கோரிக்கைகளை செயல்படுத்தின என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆசிரியர்கள் வேறு பணிக்குச்செல்ல உதவிக் கல்வி அலுவலர் அனுமதியின் பேரில் தாங்கள் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில்லறைச் செலவினங்கள் உதவிக் கல்வி அலுவலகத்திலிருந்து நேரடியாகப் பெற உத்திரவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். கல்வி சம்பந்தப்பட்ட விதிமுறைகள், கல்வி சம்பந்தமான புத்தகம் அனைத்தையும் வழங்க வேண்டுகிறோம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஊதியம் செக் முறையில் வழங்கும்படியான உத்தரவிட வேண்டுகிறோம் என்று கேட்டிருக்கிறார்கள் அதற்கு 1-3-1983-ல் உத்தரவு இடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சம்பந்தமாக ஆணையர் செய்து வந்த அனைத்துப் பணிகளையும் உதவிக் கல்வி அலுவலர்கள் செய்ய உத்தரவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

மேலும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டு ஊராட்சி ஆசிரியர்கள் அடங்கிய புதிய நிர்வாக அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆய்ந்து செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி தக்க பரிந்துரைகள் செய்யும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். வேறு சில கோரிக்கைகளையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவைகள் முழுவதும் உதவிக் கல்வி அலுவலர்கள் நல்ல முறையிலே செயல்படுவதற்கான யோசனைகளாக இருக்கின்றன. அவர்களுக்காக எதுவும் கேட்டுக் கொண்ட முறையிலே எந்த யோசனைகளும், கோரிக்கைகளும் இல்லை. ஆகவே இந்த நிர்வாக சம்பந்தப்பட்ட அந்த யோசனைகளை ஆராய்ந்து தக்க முடிவுகளை அரசு எடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களினுடைய அனைத்து பள்ளிகளுக்கும் உதவிக் கல்வி அலுவலர்கள் நேரடியாகச் சென்றுபள்ளிகளைக் கண்காணிக்க வேண்டிய சூழ்நிலையில் அவர்களுக்கு வாகன வசதி இல்லை என்ற ஒரு குறைபாடு அவர்களிடம் இருக்

கிறது. ஏற்கெனவே கடனாகவோ, அல்லது வேறு வகையிலோ அவர்களுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் ஒவ்வொருவருக்கும் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்பற்றியும் பள்ளிக் கல்வி இயக்குநருடைய பரிந்துரை கேட்கப்பட்டு இருக்கிறது.

**திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றக்கூடிய உதவிக் கல்வி அலுவலர்கள் தற்சமயம் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மதிய உணவை நடத்தக்கூடிய அந்தப் பொறுப்பைக்கூட அவர்கள் கவனித்துக் கொள்வதற்கான இந்த உத்தரவு இல்லை என்று சொல்கிறார்கள். அதை இந்தப்பள்ளித் தணிக்கையாளர்கள்தான் செய்கிறார்கள். ஆகவே கண்காணிப்பு முறை அவர்களிடத்திலே இருக்கிறது. இந்த மதிய உணவை கண்காணிக்கக்கூடிய உத்தரவையாவது அந்தக் கல்வி அலுவலர்களுக்கு இட்டு அரசு உத்தரவு அனுப்புமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெப்புட்டி இன்ஸ்பெக்டர்கள் என்கிற முறையிலே துணை ஆய்வாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பள்ளிக் கூடங்களை கண்காணித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த உதவிக் கல்வி அலுவலர்கள் என்பவர்கள் பஞ்சாயத்து யூனியனிலே ஆசிரியர்களாக இருந்தவர்களை நாம் அரசு ஊழியர்களாக ஆக்கியபோது அவர்களை நிர்வாகம் செய்வதற்காக, சொல்லப்போனால் ஒரு பள்ளிக்கூடத்தினுடைய மேனேஜரைப் போன்று ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு மேனஜராக இருந்து அந்தக் காரியங்களைச் செய்வதற்காக நாம் இந்த புதிய பதவியை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே அந்தப் பொறுப்புகளை செய்வதற்கு அவர்களுக்கு நேரம் போதுமானதாக இருக்கும். அதை ஒழுங்காகச் செய்தாலே நல்லது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே. உதவிக் கல்வி அலுவலர்கள் இடத்திற்கு தலைமை ஆசிரியர்களை, நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தலைமை ஆசிரியர்கள் பணியை விட கொஞ்சம் கீழ் நிலையிலே இருக்கின்ற ஒரு பணியாகும். பத்து



ஆண்டுகள் பணி முடித்து தேர்வு நிலைபெற்ற பள்ளி உதவி ஆசிரியர்கள். பள்ளித் துணை ஆய்வாளர்கள் பள்ளித் துணை ஆய்வாளர்களாக பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்கள். உதவிக் கல்வி அலுவலர்களாக நியமிக்கப்படுவார்கள். ஆகவே தலைமை ஆசிரியர்கள் கீழே இருக்கின்ற ஒரு பொறுப்பு.

### வடமதுரையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி

*வினா எண். 743—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி வடமதுரையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டக்கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (ஆ): இப்பள்ளியில் உள்ள 25 பிரிவுகளில் 19 பிரிவுகளுக்கு போதிய கட்டட வசதி உள்ளது. இப்பள்ளிக்கு போதிய கழிப்பறைகளும் 5 ஏக்கர் நிலமும் உள்ளன. ஆகவே நிதியொதுக்கத்தை அனுசரித்து இப்பள்ளியின் கட்டடத் தேவைகள் வருமாண்டுகளில் கருத்திற்கொள்ளப்படும்.

### 1982-ல் சேலம் மாவட்டத்திலுள்ள மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்ற பிளஸ்-டு பரீட்சை.

* வினா எண். 744—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள லிட்டில் பிளவர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பல மேல்நிலைப் பள்ளிகளில் 1982-ல் பிளஸ்-டூ பரீட்சை எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் காணாமல் மறைந்து போனதாகவும், அதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஈ) பாதிக்கப்பட்ட மாணவருக்கு அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

[1983 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விவர அறிக்கை *பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோர்ட்டினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே அடுத்து வரும் தேர்வினை முதலாக கொண்டு அன்னாரது மருத்துவம், பொறியியல் போன்ற மேற்படிப்புக்களுக்காக பரிசீலிக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றம் உத்தரவிட்டு இருக்கிறது. அப்படியிருந்தும் கீழே வரும்போது அவர்கள் செய்முறை தேர்வு செய்யவேண்டாம், என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் எழுத்துப் பூர்வமான தேர்வுக்கு அவர்கள் ஆஜராக வேண்டாமா ? அது சரிதானா? அதற்குப் பதிலாக அவர்களை ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டதாக அரசாங்கம் முதல் வருஷத்திற்கு—தேர்வு செய்யப்பட்டார் என்று அரசாங்கம் அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தத் தேர்வில் விடைத்தாள்கள் காணாமல் போன நிலையிலே உயர்நீதி மன்றம் அளிக்கப்பட்ட தீர்ப்பாகும். இந்தத் தேர்வுக்கு இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று செய்முறை—பிராக்டிகல் எக்சாமினேசன், இன்னொன்று தியரி பரிட்சை எழுதுவது. பரிட்சை எழுதியதிலே தான் இந்தத் தவறுகள், விடைத்தாள்கள் காணாமல் போன தவறுகள் நிகழ்ந்து இருக்கின்றன. ஆகவே பிராக்டிகல் எக்சாமினேசன் மறுபடியும் எழுத வேண்டுமா என்று பார்க்கிறபோது அதை எழுத தேவையில்லை. இது முதலிலே தேர்வுக்கு மார்க் போடப்பட்டு இருக்கிறது. அதிலே எந்தவித தவறும் இல்லை. இந்தத் தவறு விடைத்தாள்களிலேதான் வந்திருக்கிறது. ஆகவே அதை மறுபடியும் எழுதச் சொல்லி, அவர்கள் எழுதுவதற்கு வாய்ப்பு தரப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரிக்கும் போகும்போது அதை இரண்டாவது அட்டெம்டைப் போல் ஒரு நிலை இருக்குமானால் அவர்களுக்கு இடம் கிடைக்காது. நாம் அவர்களுக்கு அங்கே முதல் முயற்சியிலே வெற்றி பெற்றவர்களுக்குத் தருகிற அந்த மதிப்பை அவர்களுக்குத் தரமாட்டோம். ஆனால் இப்போது உயர்நீதி மன்றம் அது மாணவர்களுடைய தவறு அல்ல என்ற காரணத்தாலே இரண்டாவது முறை அந்தப்

* 72৩ 726ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 13]

பரிட்சை எழுதியிருந்தாலும்கூட அதை முதல் முறையாக கருதவேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9—20)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவரைப் பொறுத்தவரையில் பரீட்சை எழுதியிருக்கிறார். அந்தப் பேப்பரில் ஒருபகுதி இருக்கிறது. ஒரு பகுதி காணாமல் போயிருக்கிறது. அது அவருடைய தவறு இல்லை. அது நிர்வாகத்தில் ஏற்பட்ட தவறு. அதைப்பரிசீலனை செய்து வருகிறீர்கள். அது வேறு விஷயம். பேப்பர் தவறிவிட்டது என்ற காரணத்திற்காக அவரை மீண்டும் பரிட்சை எழுதச் சொல்வது தண்டனை என்ற அடிப்படையில் இல்லையா? ஆகவே, அவர் தேர்வு பெற்று விட்டார் என்று அறிவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு செய்யப் பெற்றுவிட்டதாக மட்டும் அறிவிப்பதால் அந்த மாணவருக்கு எந்தவிதமான நன்மையும் இருக்காது. காரணம், மருத்துவக் கல்லூரிக்கோ, அல்லது இன்ஜினீரிங் கல்லூரிக்கோ அவர் தகுதி பெறவேண்டும் என்று சொன்னால் அந்த மார்க்குகளை வைத்துத்தான் செலக்‌ஷன் கோர முடியும். வெறும் தேர்வு பெற்றுவிட்டார் என்று சொன்னால் அவன் 80 மார்க் பெற்றான் என்றோ, 90% மார்க் பெற்றான் என்றோ சொல்லமுடியாது. இரண்டாவது முறை அவர் தேர்வு எழுதுகிறார் என்று சொல்வதற்குப் பதிலாக முதன் முறையாகத் தேர்வு எழுதியதாக அவர் கருதப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் சொல்லிவிட்ட பிறகு நாம் இங்கே அந்தப் பிரச்சனைப் பற்றிப் பேச ஒன்றும் இல்லை. உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத்தான் நாம் இப்போது நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம். இதிலே விவாதித்து முடிவு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி பரிட்சை எழுதிய சில மாணவர்கள், சரியாக எழுதவில்லை என்று சொன்னால், எந்தெந்த சென்டர்களில், யார் யார், எந்தெந்த ஆசிரியர்கள் அந்தப் பேப்பர்களைத் திருத்துகிறார்கள் என்று பார்த்து , பாஸ்போடச் சொல்ல

வேண்டும் என்பதற்காக பெற்றோர்களோடு அந்தந்த இடங்களுக்குச் செல்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. இப்போது அந்தப் பழக்கமே இல்லை. குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு விடைத்தாள்கள் அனுப்பும் வழக்கம் தற்போது இல்லை. அப்படி யாராவது சுற்ற ஆரம்பித்துவிடப் போகிறார்கள். தற்போது மைய விடை திருத்தும் முறைதான் வைத்து இருக்கிறோம். இந்தத் திட்டத்தில் எந்த ஆசிரியரிடத்தில், எந்த விடைத்தாள் திருத்த வரும் என்பது அவர்களுக்கும் தெரியாது, அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கும் தெரியாது. மற்ற யாருக்கும் தெரியாது. அங்கே வந்து இருக்கின்ற 10 பேப்பர், 5 பேப்பரை எடுத்து அதை ஆசிரியர்களுக்குத் தருவார்கள். எந்த விடைத்தாள் எந்த ஆசிரியரிடத்தில் வரும் என்று தெரியாது. அப்படி யாராவது சுற்றிக்கொண்டு இருந்தால் அவர்கள் செய்த பாவத்திற்கு பரிகாரம் தேடிக்கொள்வது போல்தான் இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள விட்டில் பிளவர் மேல்நிலைப்பள்ளியில் பரீட்சை எழுதிய மாணவர் ஒருவரின் விடைத்தாள்கள் காணாமல் போய், அந்த மாணவன் உயர்நீதிமன்றம் வரை வழக்குத் தொடுத்து, அதிலே தீர்ப்பளிக்கப்பட்டு, அதன் பிறகு அந்த மாணவன் மறுபடியும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுகிறான் என்று இங்கே சொல்லப்பட்டது. இந்தத் தவறு அந்தப் பள்ளியில் ஏற்பட்ட தவறு என்பதால், இதற்கான மொத்தச் செலவையும் அந்தப் பள்ளியையே ஏற்றுக்கொள்ளச் சொல்லி அரசு உத்தரவிடுமா? ஏழை எளிய மாணவர்கள் ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குப் போய் இப்படி வழக்கு தொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றம் சம்பந்தமாக, இந்தத் தவறு சம்பந்தமாக காவல் துறை தற்போது புலன் விசாரணை நடத்தி வருகிறது. யார் தவறு செய்து இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே, அது முடியும் வரையில் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. மற்றபடி, இந்தத் தவறுகள் இனிமேல் நிகழாவண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம். கூடுதல் தாளைக் கொடுக்கிறபோதே, அதன் மேல் ஒன்று, இரண்டு, மூன்று என்று





அவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணிக்கையைப்பொறுத்து அந்த விடைத்தாள்களில் எழுதவேண்டும். அதை வாங்கி வைக்கிற ஆசிரியர்களும் அது சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். திருத்துகிற இடத்தில் இருக்கிற ஆசிரியரும் அது சரியாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதை மறுபடியும் சேகரிக்கிற ஆசிரியர்களும் அது சரியாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும் என்று சொல்லி நான்கு இடங்களில் அந்த விடைத்தாள்கள் சரியாக இருக்கிறதா என்பது பார்க்கப்படுகிறது. இந்த முறை ஏற்படுத்தப்பட்டு இருப்பதால் இப்படிப்பட்ட தவறுகள் இனி நிகழாது.

ரெட்டிப்பாளையம் அருகே பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண் 745—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் ரெட்டிபாளையம் கிராமத்தினருகில் பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) பாலம் அமைக்கும் பணி ரூ. 3.20 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கும் பணி ரூ. 3.20 இலட்சம் மதிப்பீட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ரெட்டிப்பாளையத்திலிருந்து அங்குள்ள ஆதி திராவிடர் காலனிக்குச் செல்லும் அந்த வழியில் பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம்அமைக்கும் திட்டம் பற்றி நான் கேள்விக் கேட்டிருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் வேறு ஒரு இடத்தைக் குறிப்பிட்டு பாலம் கட்டும்

வேலை நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் எந்த இடத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தைக் குறிப்பிடுகிறார்களோ அந்த இடத்தில்தான் பாம்பன் ஆற்றின் குறுக்கே இந்தப் பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக சாலைப் பணிகளும்கூட 4.2 கிலோ மீட்டர் அளவிற்கு ஐந்து இலட்சம் ரூபாய் அளவிற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதுவும் அங்கீகாரம் பெற்றுவருகிறது.

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, இந்தப் பால வேலை நான் குறிப்பிட்டுள்ள பகுதியில் நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அப்படி அந்த இடத்தில் எந்த வேலையும் நடைபெறுவதில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு அமைச்சர் அவர்கள் சொல்வது எந்த இடம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் கூறுவதில் உறுப்பினர் அவர்களுக்கு சந்தேகம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆனாலும்கூட நான் குறிப்பிட்ட பகுதியை, அதைப் படித்துக்காண்பிக்கிறேன். 7—12—1979ல் ரெட்டிப்பாளையம் மாவட்ட எல்லைச் சாலையிலிருந்து மோசக்கல் செல்லும் 4.2 கிலோமீட்டர் சாலையை ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தவும் மேற்கண்ட பாலம் கட்டவும் அனுமதி வழங்கியுள்ளது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இன்னொரு பாலமாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அவர்கள் கேட்டுள்ள கேள்வி, தண்டராம்பட்டு தொகுதியில் ரெட்டிபாளயம் கிராமத்தினருகில், பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா? என்பதாகும். இதே ரெட்டிபாளையம் பக்கத்தில்தான் பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ரெட்டிபாளையத்திலிருந்து போகிறது என்று சொன்னார்கள். இந்தப் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். ஆரம்ப காலத்தில் பக்கத்திலுள்ள ஹரிஜனக் காலனிக்குப் போவதற்குப்



பாதை அமைக்க எஸ்டிமேட் தயார் செய்யும்போதே அது விடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த பாலம் அமைக்கும் பணியைச் செய்தாலும் ஒரே எல்லையிலுள்ள—நான்கு கிலோ தூரம் இருக்கிறது.—இவ்வளவு அதிகமாகச் செலவு செய்யும்போது ஒரு குறிப்பிட்ட சமுதாயமக்கள் வாழ்கிற இடத்திற்கு அந்த பாலத்தை எடுத்துக் கொள்ள வருங்காலத்திலாவது அதை இணைப்பதற்கு வழி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் வாழ்கிற அந்தக் காலனிக்கு பாலம் அமைக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். அது பற்றிய குறிப்புகள் என்னிடமில்லை. ஆகவே தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

## மதுரை மாநகராட்சியில் செயல்பட்டு வந்த ஆற்றுப்படுகை பாதுகாப்புப் போலீஸ்.

***வினா எண் 746—திரு. க. பாரமலை :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியில் செயல்பட்டு வந்த ஆற்றுப் படுகை பாதுகாப்புப் போலீஸ் (River Bed Police) என்ற அமைப்பு தற்சமயம் செயல்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த அமைப்பை முனைப்புடன் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :**

(அ) மற்றும் (ஆ) ஆற்றுப்படுகை காவலர் அமைப்பும், நகரத் தொல்லை ஒழிப்பு காவலர்களும் இணைந்து (Town Nuisance squad) ஆற்றுப் படுகைகளிலும் நகரின் பிற பகுதிகளிலும் நிகழும் சுகாதாரக் கேட்டைத் தவிர்க்கும் பணியில் முனைப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

**திரு. க. பாரமலை :** தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள், ஆற்றுப்படுகைகளில் பணிகள் முனைப்பாக நடைபெறுகிறது என்று சொன்னார்கள். சென்னையிலிருந்து மதுரை

கவனிக்க தற்போது 25 பேர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களை நாளையிலிருந்து ஆற்றுப் படுகைக்கு அனுப்பி, அசுத்தம் செய்வதைத் தடுக்கும் பணியை மேற்கொள்ள அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 25 பேர்கள் உடனடியாக இந்தப் பணிக்குப் பயன்படுத்தப்படும். ஆனால், அந்த 25 பேர்களும் அங்கேயே உட்கார்ந்துவிடுவார்களோ என்ற பயம் எனக்கிருக்கிறது. இருந்தாலும், அங்கே எவ்வளவு சீக்கிரமாக இந்த வேலைகளை நடைமுறைப்படுத்த முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**காவிரியிலிருந்து வெலிங்டன் ரிசர்வாயருக்கு பாசனநீர் விநியோகம்.**

*வினா எண். 747—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரியிலிருந்து வெலிங்டன் ரிசர்வாயருக்கு கட்டளைக் கால்வாய் மூலம் பாசன நீர் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து வெலிங்டன் ரிசர்வாயருக்கு கட்டளை கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமான கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் இல்லை என்று தெரிவித்தார்கள். காவிரியிலிருந்து, சென்னைக்கு கட்டளை கால்வாய் மூலம் குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஆய்வில் இருக்கிறதா ? ஆய்வு செய்து முடிக்கப்பட்டு விட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாசன சம்பந்தமான கேள்வி, தாங்கள் குடிதண்ணீர் பற்றி கேட்கிறீர்கள். எங்கேயிருந்து கொண்டு வருவது ?

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, இத்திட்டத்திற்கு இடமில்லை என்று சொன்னார்கள். ஆனால், வெலிங்டன் ரிசர்வாயருக்குப் பக்கத்தில் 3, 4 ஓடைகள் மேடிட்டு இருக்கின்றன. இந்த வருஷம் மழையில்லாவிட்டாலும், மழை பெய்கின்றபோது, இந்த ஓடைகள் மேடிட்டு இருப்பதால், ரிசர்வாயருக்குத் தண்ணீர் வருவதில்லை. கிட்டத்தட்ட, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இங்கே தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றது. மழை பெய்கின்றபோது, காட்டாறுகளிலே இருந்து வருகின்ற தண்ணீர், அந்த ரிசர்வாயருக்கு பக்கத்திலுள்ள ஓடைகள் எல்லாம் மண் மேடிட்டு இருப்பதால், அங்கே தண்ணீர் தேங்க முடியாமல் தடைபடுகிறது. எனவே, அந்த ஓடைகளை தூர் எடுத்து, பள்ளப்படுத்தி, ரிசர்வாயருக்கு வருங்காலத்திலாவது அந்தத் தண்ணீர் வர அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வெல்லிங்டன் ரிசர்வாயருடைய கொள்ளளவு குறைந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த கருத்தை அரசுக்கு வந்த வேண்டுகோளாக ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

**பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் கொள்ளளவை உயர்த்தும் பணி**

*வினா. எண். 748—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளின் கொள்ளளவை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைமைப் பொறியாளரின் (பாசனம்) பரிசீலனையில் உள்ளது.

செல்கிறபோது—ரெயில் வண்டி காலையில்தான் செல்கிறது—யாரும் பார்க்கலாம்—இன்று கூடப் பார்த்தால் ஆயிரக்கணக்கானவர்கள் ஆற்றுப்படுகையில் காலைநேரத்தில் மலஜலம் கழிப்பதைப் பார்க்கமுடியும். ஒரு காலத்தில் அது நியாயமாகக் கூட இருந்திருக்கலாம், ஆனால் உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பின்னால் வீதிக்கு வீதி நவீன முறையில் கக்கூஸ் கட்டப்பட்ட பின்னரும்கூட இன்றும் தினம் காலையில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆற்றுப்படுகையை மலஜலம் கழிக்க உபயோகப்படுத்தி வருகிறார்கள். நான்கைந்து ஆண்டுகளாக ஒரு வழக்கு கூட பிடித்துப் போட்டதாக வரலாறு கிடையாது. மேலும், அதைப் பற்றி விசாரித்தால் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த ஆற்றுப்படுகை போலீஸை வேறு வேலைக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவெனில், இன்று நவீன கழிப்பிட வசதிகளை பலவிடங்களில் செய்து கொடுத்திருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் ஆற்றுப்படுகையை மலஜலம் கழிக்க உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே, அதைத் தடுக்க இந்தப் பாதுகாப்பு போலீஸ் படையை (ரிவர் பெட் போலீஸ்) அதிகப்படுத்தி அமைச்சர் அவர்கள் சொல்வது போல் முனைப்பாக செயல்பட உடனடியாக ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் காலையில் மதுரைக்கு விமானம் மூலம் நாங்கள் ஆற்றுப்படுகையைக் கடந்து செல்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் கண்ணால் பார்ப்பதில்லை. எவ்வளவு தூரம் பார்க்காமல் மதுரை மாநகருக்குள்ளே நுழையமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நாங்கள் நுழைந்து விடுகிறோம். ஆனாலும் கூட 25 பணியாளர்கள், நகரத்தொல்லை ஒழிப்புக் காவலர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நியூஸன்ஸ் ஸ்க்வாட் என்று சொல்வார்கள். அவர்கள் செயல்படுவதாகத்தான் குறிப்பு இருக்கிறது என்றாலும் முனைப்பாக செயல்படவில்லை என்றால் துரிதமாகச் செயல்படுவதற்குரிய நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும். 1951-ல் போடப்பட்ட 25 பேர்கள்தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கூட உயர்த்த வேண்டுமென்கிற கொள்கைக் குறிப்புகளின் அடிப்படையில் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-30)

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் தூய்மை காவல் படை ஆற்றுப்படுகைக்கு மட்டும் அவசியமானதல்ல. மதுரை யாத்திரீகர்கள் வரக்கூடிய நகரம். மதுரையில்



மையமாக இருக்கக்கூடிய மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றிலும் அசுத்தம் செய்யும் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. திருமலைநாயக்கர் மகால், மாரியம்மன் தெப்பக்குளம் போன்ற பல முக்கியப் பகுதிகளுக்கு யாத்திரீகர்கள் வருகிறார்கள். எனவே, இதுபோன்ற காரியங்களைத் தடுப்பதற்கு இந்த போலீசின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவனசெய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, துரித நடவடிக்கை எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை கண்டிப்பாக அரசின் மூலமாக எடுக்கப்படும். அதேநேரத்தில், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு அங்கு நடைபெற்ற நேரத்தில், நூற்றுக் கணக்கான நவீன கழிப்பறைகள் மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், குறிப்பாக நகரப் பகுதிகளிலே இருக்கின்றவர்கள், அந்தக் கழிப்பறைகளை உபயோகப்படுத்தவேண்டும். ஆனால், அப்படி செய்வதில்லை. கழிப்பறைக்கு பக்கத்தில் சுற்றிலுமுள்ள இடத்திலே போய் உட்காரக்கூடிய நிலைமைதான் வளர்ந்துகொண்டு வருகிறது ; உள்ளே போய் உட்கார வேண்டுமென்ற எண்ணம் வளரவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் அரசியல் கட்சித் தலைவர்களாக இருக்கக்கூடிய அண்ணன் நெடுமாறன் போன்றவர்கள் இதை அவர்களிடத்திலே உணர்த்த வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப் படுகையை அசுத்தம் செய்வதால், சில நேரங்களில் வைகை ஆற்றில் தண்ணீர் வருகிறபோது, அந்த அசுத்தமும் சேர்ந்து வருகின்ற காரணத்தினால், அந்தத் தண்ணீரில் குளிப்பதால், பல வியாதிகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆதலால், தற்சமயம் அந்த வைகை ஆற்றில் குளிப்பதற்குத் தடை விதிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது வைகை ஆற்றில் தண்ணீரே இல்லை.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி சொல்வது ஒரு உண்மையான சமாசாரம். வைகை ஆற்றிற்குப் பக்கத்தில், கிணறுகள் தோண்டி, அந்த ஊற்று நீரில் இந்த அசுத்தங்களும் சேர்ந்த அந்த தண்ணீரைக் குடிக்கிறார்கள். அந்த ஊற்று நீருடன் அந்த அசுத்தங்களும் சேருவதினால், பல்வேறு விதமான தொத்து வியாதிகள் பரவுவதற்குக் காரணமாக இருக்கிறது. இதைக்

[1983 ஏப்ரல் 13

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இந்த அணைகளுடைய நீர் கொள்ளளவு எவ்வளவு? இப்போது இருக்கிற கொள்ளளவை இன்னும் கூடுதலாக்க அணைகளின் உயரத்தை மேலும் 6 அடி உயர்த்த அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தற்போது பேச்சிப் பாறை அணையின் கொள்ளளவு 4450, மில்லியன் கன அடி; பெருஞ்சாணி அணையின் கொள்ளளவு 2,890 மில்லியன் கன அடி. 1969 ஆம் ஆண்டு பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளின் உயரம் ஏற்கனவே இருந்ததைவிட 6 அடி கூடுதலாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்தப் பொருள் மீது முடிவான அறிக்கையைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) விரைவில் அனுப்பி வைப்பார்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிர் செய்வது இருபோகம் விளைச்சல் நடைமுறையில் இருக்கிறது. ஆகவே இந்த பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து வெளியே வருகின்ற தண்ணீர் முறையாக எல்லா கால்வாய்களுக்கும் சீராக கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? அது மட்டுமல்லாமல் அணைகளிலிருந்து வருகின்ற தண்ணீரின் அளவை மேலும் அதிகப் படுத்த வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இந்த பேச்சிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய இரண்டு அணைகளிலிருந்து கோதையாறு திட்டம், சித்தாறு பட்டணங்கால் திட்டம் என்ற இரு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். கோதையாறு திட்டத்தில் இருபோகம், சித்தாறு பட்டணங்கால் திட்டத்தில் இருபோகம், இராதாபுரம் திட்டத்தில் ஒரு போகம் என்ற அளவுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் இந்த அணைகளின் உயரத்தை உயர்த்துவதன் மூலம் கொள்ளளவை அதிகப்படுத்த முடியும் என்று அரசு கருதுகிறது. ஆகவேதான் இதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்க, தலைமைப் பொறியாளர் (பாசனம்) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் ; விரைவில் அவருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. மணி : தலைவரவர்களே, பேச்சிப்பாறை அணையின் உயரத்தை உயர்த்த வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதேநேரத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்னால் சோதையாற்றில் இருக்கிற எலக்ட்ரிசிட்டி ஸ்டேஷன் அமைக்கும்போது அங்கிருந்து எடுத்துப் போட்ட மண்ணாலும், மூன்று பக்கங்களிலும் இருக்கிற அரசு இரப்பர் தோட்டங்களிலிருந்து அவர்கள் எடுத்துப் போடுகிற மண்ணாலும் இந்த அணையின் நீர் பிடிப்புப் பகுதி தூர்ந்து, அதனுடைய முதல் கட்டமாகச் சொல்லக் கூடிய கோதையாறு வந்து சேரக்கூடிய பகுதி 50 அடி, 60 அடி ஆழம் இருந்தது தற்போது 4 அடி என்ற அளவுக்கு குறைந்து விட்டது. அணையை உயர்த்துவதை விட இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியை தூர்வாரினாலே கொள்ளளவை அதிகப் படுத்த முடியும். ஆகவே, அந்தப் பணியையும் சேர்த்துச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?



1983 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கொள்ளளவு குறைந்திருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் தூர் வார வேண்டுமென்ற கருத்தை அரசு இப்போது செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது பற்றியும், மண் மூடி தூர்த்திருந்தால் தூர் வாருவது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தூர் வாரும் மண்ணை எந்த இடத்தில் போடுவது என்ற ஒரு பிரச்சனை இருக்கிறது. அதனால் தூர் வாருவதைவிட அணையின் கரையை உயர்த்தினால் கொள்ளளவை அதிகப் படுத்த முடியும் என்று கருதுகிறோம். அதனால் நீர் பிடிப்பு பகுதியும் அதிகமாகும் ; நீரைத் தேக்கி வைக்க முடியும். அதனால் தான் அணையின் உயரத்தை அதிகப்படுத்துவது பற்றி பரிசீலனை செய்து வருகிறோம்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேச்சிப்பாறை பெருஞ்சாணி அணைகளினால் பலன் பெறும் மொத்த ஆயக் கட்டு எவ்வளவு? இந்த அணைகளை மேலும் உயர்த்துவதின் மூலம் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பாசனம் பெறும் என்பது உண்மை. இரண்டு பருவக் காற்றாலும் மழை கிடைக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தண்ணீர் வீணாகாமல் இருக்க அணைகளின் கொள்ளளவை அதிகப் படுத்த, அணைகளின் உயரத்தை மேலும் அதிகரிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி என்பது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த 40 ஆண்டு காலத்தில் இல்லாத நிலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற அனு

பவத்தை வைத்து பார்க்கும்போது இந்த அணைகளின் கொள்ளளவை அதிகப் படுத்த அணைகளின் கரைகளை உயர்த்துவது தேவை என்று நாம் கருதுகிறோம். அதனால்தான் அந்த அணைகளின் உயர் மட்ட அளவை உயர்த்துவது சம்பந்தமாக தொழில் நுட்ப விஷயங்கள், கட்டுமான பணிகள் போன்றவைகளை ஆராயச் சொல்லியிருக்கிறது. ஆராய்ந்து அந்த முடிவுகள் வர வேண்டும். கூடுதலாக எவ்வளவு கிடைக்கும் என்று புள்ளி விவரம் சொல்ல முடியாது. இந்த திட்டங்களை செயல் படுத்த நாம் முயற்சிகளை மேற்கொள்ளும்போது, திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் நாங்குனேரி பகுதிகள் பயனடைய வாய்ப்பு இருக்கிறது. அத்தோடு இப்போது வறட்சியினால் பாதிக்கப்பட்டு குடிதண்ணீருக்கே தட்டுப்பாடு தேவைப் படுகிறது என்கிற பிரச்னையும் எதிர் காலத்தில் தடுக்க முடியும். அதற்காக நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு ஆயக் கட்டுகள் பயனடையும் என்று கேட்டார்கள்? கோதையாறு திட்டத்தில் 64 ஆயிரம் ஏக்கர் இருபோகம் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும்; சித்தாறு பட்டணங்கால்வாய் திட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கருக்கு—இருபோகம் பாசன வசதியும், ராதாபுரம் திட்டத்தில் 17 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு ஒரு போகம் பாசன வசதி கிடைக்கும் என்று இருக்கிறது.

(முற்பகல் 9—40)

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம்.

* வினா எண் 749.—திரு. கா. வே. கந்தசாமி: மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர்கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்திலிருந்து கிணத்துக்கடவு தொகுதியிலுள்ள பொன்னாவரத்திலிருந்து நல்லி கவுண்டன் பாளையம் வரையிலுள்ள சுமார் 6,000 ஏக்கருக்கு பாசனத்தை நீட்டித்து உத்தரவு அளித்தும், திட்ட வேலைகள் தொடங்காததிற்கு காரணம் என்ன?

(ஆ) எப்போது வேலை தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** (அ) மற்றும் (ஆ): வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன.



**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு பாசனத் திட்டத்தின் விரிவாக்கப் பணியில் காங்கேயம் தாலுக்காவும் சேர்த்து விரிவு படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். அப்படி அந்தத் திட்டம் விரிவு படுத்தப் படுமேயானால் எத்தனை ஏக்கர்களுக்குப் பாயும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆழியாறு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் இது வரையில் கிட்டத்தட்ட 3.60 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு சென்ற ஆண்டுகளில் இந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது கடைசியாக 28—2—1983 அன்று பொதுப்பணித் துறை இட்ட ஆணையின்படி மேலும் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பொதுவாக இந்தப் பரம்பிக்குளம் -ஆழியாறு பகுதியிலே விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, சில இடங்களில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்போது திரும்பவும் சில பகுதிகளில்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், காங்கேயம், வெள்ளூர் பகுதி, கங்காணி போன்ற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து வருகிற 16-ஆம் தேதி, தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து அரசு ஆலோசனை செய்ய இருக்கிறது.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குளம், ஆழியாறு நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்ட காலக் கட்டத்திலிருந்து இன்று வரை பல 100 விழுக்காடு நீர் பாய்கின்ற பல நிலப் பரப்புகளை அரசு உயர்த்திக் கொண்டே போகிறது. அந்த நிலை அப்படி விரிவடைந்து போகிற போது, அந்த நீரை பெறுகிறவர்களுடைய கொள் அளவு அதிகமாகி வருகிறது என்பதை அரசு அறியுமா? இந்தத் திட்டத்தினுடைய கொள் அளவை அதிகரிப்பதற்கு ஏதாவது புதிய திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா? ஏற்கனவே பயன்படுத்தி வந்த விவசாயினுடைய நன்மையைக் கருதி, இப்படி பரப்பளவுகளை விரிவாக்குகின்ற முடிவுகளை முடித்துக் கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவர் அவர்களே, இருக்கிற நீரை கூடுமான வரையில் முறைப்படுத்தி வழங்குவதன் மூலமாக அதிக பட்சமாக எவ்வளவு நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது 16-ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர்களோடு பேசி முடிவு எடுக்க இருக்கிறது. அனேகமாக இதற்கு மேல் விஸ்தரிக்க வாய்ப்பு இருக்காது

[1983 ஏப்ரல் 13

என்று கருதுகிறேன். நிச்சயமாக விவசாயிகளுடைய நலன்கள் பாதிக்காத அளவுக்குதான் இந்தத் திட்டங்களை அரசு மேற்கொள்ளும்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைப்பொருள் பெருவள திட்டம் ஆரம்பிக்கும் திட்டம்.

* வினா எண். 750—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைப்பொருள் பெருவளத்திட்டம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : ரூ. 22.31 இலட்சம் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் (I.R-D.P.) ஒரு பனைப் பொருள் பெருவளத் திட்டம் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பினை தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது.

திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைப்பொருள் பெருவளத் திட்டம் ஆரம்பப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது தவிர, வேறு ஏதாவது பனைப் பொருள் சம்பந்தமான தொழிலில், திட்டம் ஆரம்பிப்பதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை எளிய கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், (பாம்கர் ஃபெடரேஷன்) பாம்பே கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசிடமும் பெற்ற மொத்தத் தொகை 6,46,448 ரூபாயைக் கொண்டு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மணல்மேல்குடியில் உள்ள மாநில இணைக் கிளை மூலம் ஏழை எளிய இளைஞர்களுக்குப் பனை



1983 ஏப்ரல் 13]

ஏறுவதில் பயிற்சியளிக்கப்பட்டு தொடர்ந்து தொழில் செய்வதற்காக ஒவ்வொரு நபருக்கும் 100 பனைகள் வீதம் குறைந்த குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு இரா. தாமரைக்கனி ; தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைப் பொருள் பெருவளத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதுபோல் வேறு மாவட்டத்திலும் ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பனைப் பொருள் தொழில் கூடம் ஆரம்பிப்பதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைப் பொருள் பெருவளத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையினை கடந்த வாரம் நமது நிதி அமைச்சர் அவர்கள் கூட வந்து பார்வையிட்டு அந்தத் திட்டம் நல்லபடியாக செயல்படுகின்றது என்று பாராட்டினார்கள். அந்த வகையிலே அந்தத் திட்டத்தை விரிவாக்கவேண்டும். புதுக்கோட்டைப் பகுதியில் அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் இன்னும் மற்ற பகுதிகளிலும், ஆலங்குடி பகுதியில் உள்ள குலமங்களம் என்ற இடத்திலும் பனை மரம் அதிகமாக இருக்கின்றன. எனவே அந்தப் பகுதிகளில் எல்லாம் அந்தத் தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி, மற்றும் பனை அதிகமாக உள்ள இடங்களில் அப்படிப்பட்ட தொழில் கூடங்களை ஆரம்பிக்கலாமே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் மாவட்டத்திற்கு ஒன்று என்ற முடிவின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவசியம் ஏற்பட்டால் மற்ற இடங்களிலும் அந்த நிலையங்களை உருவாக்குவது பற்றி பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருள் பெருவளத் திட்டத்தின்கீழ் தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேலம் மாவட்டத்தில் மேலக்குறிச்சி என்ற இடத்தில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அதிகமாக

இருக்கிறார்கள். பொதுவாக எந்த மரங்களும் வளராத இடங்களில் பனை மரம் வளர வாய்ப்பு இருக்கின்றது. அது சம்பந்தமாக மாநாடு எல்லாம் நடத்தி செயல்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள வனத் தோட்டத்திற்குச் சொந்தமான இடங்களில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் என்ற இடத்தில் ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்த பனைப் பொருள் பெறுவளத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்குரிய குறிப்பு அரசிடம் இருக்கின்றது. எனவே விரைவில் அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆதங்கோட்டில் நிறுவ இருக்கும் பனைப்பொருள் உற்பத்தி நிலையம்

* வினா எண். 751—திரு. டி. மணி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் ஆதங் கோட்டில் நிறுவ இருக்கும் பனைப் பொருள் உற்பத்தி நிலையம் எப்போது முதல் செயல்படவுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பனைப் பொருள் உற்பத்தி நிலையத்தை ஆதங்கோட்டில் ஆரம்பிப்பதற்கான முயற்சியினை இந்த வாரியம் எடுத்துக்கொண்டு வருகின்றது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ஆதங்கோட்டிலே இந்தப் பனைப் பொருள் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கான இடங்கள் எந்த அளவுக்கு அரசாங்கத்தின் கையிலே இருக்கின்றது? அப்படி இருந்தால் அந்த இடத்திலே இந்தத் தொழிலுக்கான முதல் கட்டுமானப் பணியை இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதங்கோட்டில் வாரியத்திற்குப் பாத்தியப்பட்ட இடம் இருக்கின்றது. அங்கே ஆரம்பிக்க முயற்சியினை அரசு எடுத்து வருகின்றது. அது சம்ப



தப்பட்ட வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அந்தத் திட்டத்தைக் கொடுத்து விரைவிலே அதற்கான ஆர்டரைக் கொடுக்க இருக்கிறார். எனவே விரைவிலே அந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படும் ஆதங்கோட்டிலே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை ஆதங்கோட்டிலே கொண்டு வந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 1982 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு இப்போது ஓராண்டுக் காலத்தைத் தாண்டிவிட்டது. எனவே மீண்டும் காலம் அதிகமாக ஆகிவிடாமல் வாரியத்தின் கையகத்திலே இருக்கின்ற ஒரு ஏக்கர் 92 செண்ட் நிலத்திலே ஆரம்ப வேலையை ஆரம்பிக்கவேண்டும். மேலும் இதற்கு 5 ஏக்கர் நிலம் தேவை என்றாலும் தற்போது இருக்கின்ற இடத்திலே ஆரம்ப வேலையை ஆரம்பித்தால் 2 ஆண்டுக்குள்ளாக முடிந்து பயன் உள்ளதாக அமையும். ஆகவே, தாமதமின்றி அதைச் செய்ய அரசு முயற்சிக்குமா ?

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதங்கோட்டில் காலம் கடந்து ஆரம்பிக்கப்போவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். முதலில் வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நெல்லை மாவட்டத்திற்கும் இடையில் உள்ள பார்டர் எல்லையில் உள்ள வள்ளியூரில் ஆரம்பிக்கலாமா என்று பரிசீலனைச் செய்ததில், 6 மாதம் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அங்கு சீசன் முடிந்தவுடன் அடுத்து 6 மாதம் நெல்லை மாவட்டத்திலும் ஆரம்பித்தால் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு வள்ளியூர் பக்கத்திலே ஆரம்பித்தால் தான் இருக்கும் என்று பரிசீலனைச் செய்தது. பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வின்சென்ட், திரு. முத்துராமலிங்கம், திரு. மணி ஆகியோர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பனை வள பெரு திட்டம் ஆரம்பிப்பதற்கு முடிவு எடுத்து ஆதங்கோட்டையில் ஆரம்பிக்கப்படயிருக்கிறது. விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதங்கோட்டில் நிறுவ இருக்கின்ற இந்த பனைப் பொருள்கள் உற்பத்தி நிலையத்தில் எத்தனை பேர்

களுக்கு வேலை கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது? அதிலே என்ன என்ன பொருள்கள் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்கின்ற இந்த பனைப் பொருட்கள் பெருவளத்திட்டத்தின் அடிப்படையில் ஏறத்தாழ குறைந்தது 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அங்கே ஒவ்வொரு பனைப் பொருட்கள் பெரு வளத் திட்டத்தின் கீழ் நுங்கைப் பதப்படுத்தும் பிரிவும், பனங் கற்கண்டு பிரிவும், பனைத்துண்டு பனை நார், பிரிவும், பனை ஓலை, பனை வெல்ல உற்பத்தி பிரிவும் பனைக் கிழங்கு மாவு உற்பத்திப் பிரிவும், பனைத்துண்டு தூரிகைப் பிரிவும், பனை மர கட்டுமான பொருள்கள் பிரிவும், பனைச் சினை ஆலைஆகிய இது போன்றவைகள் அங்கே செயல்படுகின்றன.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம் பகுதியில் அதிகமாக பனை மரங்கள் இருப்பதன் காரணமாக அங்கே ஒரு பனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே பனை மரங்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக அங்கே இப்போது அந்தோணியார்புரம் என்ற இடத்திலும கோவில் பட்டி தொகுதியில் இனாம் பாப்பாத்தி என்ற இடத்திலும் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்து வருகிறது. இன்னும் 2 இடங்கள் திருநெல்வேலி மாவட்டத்துமேலபுளியங்குடி, வேம்பார் என்ற 2 இடங்களிலே போடலாமா என்று ஆராய்ந்து, வருகிறது. சாததானகுளம் தொகுதி நெல்லை மாவட்டத்தில் இருப்பதால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்கு இலக்கணம் வகுத்த பழம் பெரும் தமிழறிஞர் ஆதான் கோட்டு ஆசான் அவர்களுக்கு சிலை வடிக்க தமிழக அரசு ஆணைப் பிறப்பித்து இருக்கிறது. அவர் பிறந்த ஆதான் கோட்டையிலே இந்தப் பனைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் வர இருப்பதன் காரணமாக அவர் பெயரை அதற்குச் சூட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136038

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் இது பற்றி பரிசீலிக்கும்.

### செட்டிகுளத்திலுள்ள கால்நடை முதல் உதவி நிலையம்.

* **வினா எண். 752—திரு. இ. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளத்தில் உள்ள கால்நடை முதல் உதவி நிலையம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** (அ) ஆம். கேந்திர கிராம நிலையப் புனரமைப்பின் காரணமாக 1–8–1978 முதல் செட்டிக்குளம் கால்நடை முதலுதவி நிலையம் இயங்கவில்லை.

(ஆ) செட்டிகுளத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சங்களாபுரம் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் அழகப்பாபுரம் என்னும் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும் இயங்கி வருகின்றன. அவைகள் செட்டிகுளம் கிராம விவசாயிகளின் கால்நடைகளுக்கு தேவையான மருத்துவ வசதியை பூர்த்தி செய்கின்றன. மேலும் சங்களாபுரம் கிராமத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர் வாரத்தில இரண்டு நாட்கள் செட்டிகுளம் சென்று அங்குள்ள கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து வருகிறார்.

**திரு. இ. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்களாபுரம் கிராமத்தை விட செட்டிகுளத்தில் மக்கள் தொகையும் அதே நேரத்தில் கால்நடைகளும் அதிகமாக இருக்கும் பகுதி ஆகும். ஏற்கனவே அங்கே இயங்கி வந்து இப்போது மூடப்பட்டுள்ள அந்தக் கிளை நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, 20 ஆயிரம் கால்நடைகள் என்ற மதிப்பீட்டில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்ற ஒரு நியதி இருந்து வருகிறது. அடுத்த ஆண்டு அரசு 10 ஆயிரம் கால்நடைகள் இருந்தால் ஒரு மருந்தகம் அமைக்கலாமா என்பதைப்பற்றி பரிசீலித்து வருகிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் செட்டிகுளத்தில் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

[1983 ஏப்ரல் 13

## சமூக நல வாரியம் தீட்டியுள்ள திட்டங்கள்

*வினா எண். 753—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மத்திய சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற சமூக நல வாரியம் திட்டங்களை தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) மத்திய அரசின் பான்யம் எவ்வளவு?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை ஒன்று * சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சமூக நல வாரியத்தால் நடத்தப்படுகிற சத்துணவு திட்டத்திற்காகவும் குழந்தைகள் காப்பகத்திற்காகவும் ஒரு குழந்தைக்கு 20 காசு வீதம் 4.32 லட்சமும், ரூ. 4.44 லட்சமும், ரூ. 4.29 லட்சமும் இப்படி பல்வேறு தொகைகள் கொடுக்கப்பட்டதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம்தான் முதலமைச்சருடைய சத்துணவு திட்டத்திலே சேர்க்கப்பட்டு விட்டதால் மைய அரசு வழங்கிய மானியத்தை இந்த நிலையிலே சேர்த்துக் கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே, சமூக நலத் துறை வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகிற சத்துணவுத் திட்டம் வேறு, தமிழகத்தில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் மூலம் நடத்தப்படுகிற திட்டம் வேறு. அந்த அடிப்படையில் மைய அரசு உதவியைக் கொண்டு ஒரு குழந்தைக்கு 20 காசு வீதம் 132 நிறுவனங்கள் மூலமாக 4,335 குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலமாக பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற விவரம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தரப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்த சமூக நல வாரியத்தாலே நடத்தப்படுகிற குழந்தைகள் சத்துணவு திட்டம் எந்த இலாகாவினால் பராமரிக்கப்படுகிறது அல்லது தனியார்களால் வழங்கப்படுகிறதா?

*726–730 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 13]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, இந்த அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் அது விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் சமூக நல வாரியம் 1961 ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழ்நாடு சமூக நல இயக்குநரகத்தோடு இணைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக, அரசுக்கும் வாரியத்திற்கும் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையே ஒழுங்கான செயல் பாடும் மற்றும் ஒருமித்த கருத்தும் இருந்து வருகிறது என்ற வகையில் செயல் பட்டு வருகிறது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மைய அரசினால் அறிவிக்கப்பட்ட சத்துணவுத் திட்டம் குழந்தைகள் காப்பகத் திட்டம் இந்தத் திட்டங்களின் மூலமாக 9,550 குழந்தைகளுக்கு அதிகமானவர்கள் பயன் பெற்று வருகிறார்கள். இந்த மைய அரசின் திட்டம் தனியாக இயங்குகிறதா? அல்லது முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதா? எங்களுக்குத் தெரிந்த தகவல்படி சத்துணவுத் திட்டத்தில் இணைக்கப் பட்டிருப்பதை அனுபவ பூர்வமாக நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அமைச்சர் அவர்கள் எந்த நிலையில் அறிவிப்புச் செய்து, எந்த நிலையில் அது இயங்குகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிற திட்டங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் உணவுத்திட்டம் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தோடு இணைந்து செயல் பட்டு வருகின்றது. சமூக நல வாரியத்தின் மூலமாக மைய அரசு உதவி பெற்று நடத்தப்படுகிற திட்டம் வேறு என்பதைப் பற்றி நான குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் வேறு, சமூக நலத் துறை வாரியத்தின் மூலம் செயல்படுகிற இந்தத் திட்டம் வேறு என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இந்த சமூக நல வாரியத்தின் மூலமாகச் செயல்படுகிற குழந்தைகள் காப்பகத்தில் பணி புரியக்கூடியவர்கள் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிவதற்காக மாற்றம் செய்யப்படுகிறார்களே, அது சமூக நலத் துறைக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைகளை மாற்றுவதற்குத் தொடர்ந்து சமூக நல வாரியத்தில் பணியாற்றக் கூடியவர்கள் அங்கேயே பணியாற்றுவதற்கான ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—50 உடுக்குறியிடாத வினாக்களையும் விடைகளையும் தனி இணைப்பில் 239—277ம் பக்கங்களில் காண்க. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளின் (ஆ) பிரிவில் இனம் 183 ஆக வைக்கப் பெற்றுள்ளது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10—00)

## 2. தகவல் கோரல்.

### (அ) சென்னை வாழ் மக்களுக்குக் குடிநீர் வழங்குவது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தவைர் அவர்களே, நாளைய தினம் தமிழ் புத்தாண்டு தினம். சென்னையிலே ஒரு நாள்விட்டு ஒருநாள் தான் குடிதண்ணீர் விடப்படுகிறது. புத்தாண்டு தினத்திலாவது சென்னை வாழ் மக்களுக்கு குடிதண்ணீரை நிறுத்தாமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

**திரு. நூ. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிண்டியிலே குதிரைப் பந்தயத்திலே நடைபெற்ற தடியடியைப்பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை என்றைக்கு எடுத்துக் கொள்வது என்று பரிசீலிக்கப்பட்டு பின்னர் தெரிவிக்கப் படும்.





### (இ) போக்குவரத்துக் கழகம் உலக வங்கியிடம் பெற்றுள்ள கடனுக்கான வட்டி.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன் தினம் நம்முடைய போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் உலக வங்கி போக்குவரத்துத் துறைக்கு அளித்திருக்கிற கடன் தொகைக்கு வட்டி வீதம் குறித்து பின்னால் அறிவிப்பதாக சொன்னார்கள். அதை எப்போது அறிவிப்பார்கள் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரிடத்தில் தகவல் இருந்தால் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே உலக வங்கியிடமிருந்து கடன் பெற்று இரண்டாவது திட்டத்தில் நாம் 555 புதிய பேருந்துகளை விட்டிருக்கிறோம். அதற்கு உலக வங்கி கொடுத்திருக்கிற கடன் 12.60 கோடி ரூபாய். இதிலே மத்திய அரசாங்கம் நமக்கு கடனாக அதை வாங்கிக் கொடுக்கிற போது நம்மிடத்திலே வசூலிக்கிற வட்டி வீதம் 10.5 சதவீதம். ஆனால் அவர்கள் உலக வங்கிக்கு கொடுக்கிற வட்டி 0.5 சதவீதம் தான். இன்னும் சொல்லப்போனால் முதல் ஆண்டிலே நாம் கொடுக்கக்கூடிய வட்டியின் கணக்கு 132 லட்சம் ரூபாய். அவர்கள் உலக வங்கிக்கு செலுத்துகிற வட்டி ரூ 6.3 லட்சம் மட்டும் தான். இதனை நாம் பதினைந்து ஆண்டு காலத்திலே திருப்பிக் கட்டவேண்டும். முதல் ஆண்டிலே கட்டத் தேவையில்லை. மீதம் இருக்கிற 14 ஆண்டுகாலத்தில் இதனை திருப்பிக் கட்டவேண்டும். அவர்கள் முதல் 15 ஆண்டு காலத்திற்கு கட்ட வேண்டிய அவசியமில்லை. ஆனால் மொத்தமாக 40 ஆண்டு காலத்திலே கட்டினால் போதுமானது. இந்த நிலைமைகள் இருக்கின்றன. எனவே இந்தத் தொகை சற்று அதிகமென்று கூட நாம் கருதுகிறோம். தென்மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கூட 11 தீர்மானங்களில் இதையும் ஒரு தீர்மானமாக வைத்து, உலக வங்கியிலே வாங்கக் கூடிய கடனை அதேவட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு சர்வீஸ் சார்ஜ் என்ற அளவில் ஏதாவது சிறிது சேர்த்துக் கொடுத்திருந்தாலும் நலமாக இருக்கும். அதிக வட்டி என்று கருதி அதற்கான வேண்டுகோளைக் கூட வைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தகவல் எதுவும் அவைக்கு கொடுப்பதாக இருந்தால் அதை அறிக்கையாக வைத்துவிடலாம். யாரும் கேட்டுத்தான் தர வேண்டும் என்ற நியதி இல்லை.

3. அவை முன்னவர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 5—4—1983 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு ப. பொன்னுரங்கம் அவர்கள் பேரவையின் 246-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையில் எழுப்ப என் இசைவைக்கேட்டு, அதற்கான விளக்கமும் அளித்தார். இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பு பிறகு அளிக்கப்படும் என்று நான் அறிவித்திருந்தேன்.

27—11—1982 அன்று ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்ட இன்றியமையாப் பணிகள் குறித்த அவசரச் சட்டத்தை நிரா கரிக்கும் தீர்மானம் ஒன்றுக்கு தானும் திரு. ரகுமான்கான் அவர் களும் முன்னறிவிப்பு கொடுத்திருந்ததாகவும், அந்த அவசரச் சட்டம் 6—3—1983 தேதியுடன் காலாவதி ஆகிறபடியால், அந்தத் தீர்மானத்தை அந்தத் தேதிக்கு முன், அரசியலமைப்புச் சட்டப்படியும், பேரவையின் விதிமுறைகள் படியும் பேரவையில் கட்டாயம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அப்படி எடுத்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டியது அரசின் கடமை யென்றும், அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பெற முடியாமல் போனது தமது உரிமையை பாதிப்பதாகவும், எனவே அதற்குக் காரணமான அரசும், பேரவை முன்னவரும் அவை உரிமையை மீறியிருக் கிறார்கள் என்றும் திரு. பொன்னுரங்கம் குறிப்பிட்டார்.

அரசியலமைப்புச் சட்டப்படி அத்தகைய ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொள்ள நாள் குறிப்பிட வேண்டியது அவசியம் என் பதைத் தாம் ஏற்பதாகவும், அவ்வாறே அலுவல் ஆய்வுக் குழு வுடன் கலந்து 4—3—1983 அன்று அத்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட அன்று பேரவை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டது என்றும், பேரவையில் அன்றைய தினம் அத்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லையென்றால் அதற்குத்தாம் பொறுப்பு இல்லை யென்றும், நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதோடு தம் கடமை முடிந்து விட்டதாகவும் மாண்புமிகு பேரவை முன்னவர் தம் விளக்கத்தில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டது போல மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களது தீர் மானம் 4—3—1983 தேதியிடப்பெற்ற பேரவை நிகழ்ச்சி நிரலில் இறுதி இனமாகச் சேர்க்கப்பட்டது.

ஆயினும் பேரவையில் அத் தீர்மானம் நிறைவேற்றப்பெறும் வாய்ப்பு இல்லையென்ற காரணத்தாலும், சட்டமன்ற மேலவையில் இத்தீர்மானம் 6—3—1983-க்கு முன் எடுத்துக் கொள்ளப்பெறும்





வாய்ப்பு இல்லாத காரணத்தாலும், மேலும் பல கட்சித் தலைவர் களும் இத்தீர்மானத்தின் மீது ஒரு விவாதம் அச்சமயம் தேவை யற்றது என்ற கருத்தைத் தெரிவித்தபடியாலும், இத் தீர்மானம் அவையின் கருத்துக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தீர்மானம் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு விட்டதால், மாண்புமிகு பேரவை முன்னவர் குறிப்பிட்டது போல இதில் அரசின் தவறு ஏதும் இல்லை. அவை நிகழ்ச்சிகளில் இணைக்கப்பட்ட இனத்தை விவா திக்காது ஒத்திப் போட்டால் அதற்குப் பேரவைத் தலைமையும் பொறுப்பாகாது. எனவே, இப் பிரச்சினையில் மேலெழுந்தவாரி யாகப் பார்க்கையில் உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதால் இசைவு மறுக்கப்படுகிறது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாளையங்கோட்டை சிறைக் கைதிகள் சில பல கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ் வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், கே.ஆர். சுந்த ரம், பெ. சு. திருவேங்கடம், டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், எம், அப்பாதுரை, இரா. கருப் பையா, சோ. அழகர்சாமி, கே. எம். தங்கமணி ஆகியோர் ''10 ஆண்டுகளாக தண்டனை அனுபவித்த கைதிகள் அனைவரை யும் விடுதலை செய்ய வேண்டுமென பாளையங்கோட்டை மத்தியச் சிறையிலுள்ள கைதிகள் அண்மையில் உண்ணாவிரதம் இருந்து வருவதாலும் அதை ஆதரித்து திருச்சி மத்திய சிறையிலுள்ள கைதிகள் அனைவரும் ஆதரவு தெரிவித்து, 7—3—1983-ல் உண்ணாவிரதம் இருந்துள்ளதாலும், இது மேலும் பல சிறைகளுக் குப் பரவி வருவதாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத் துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந் தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறையில் 6—4—1983 முதல் 10 அம்சக் கோரிக்கைகளை வைத்து, அங்குள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தக்

கைதிகள் 11 பேர்களுடைய உயிருக்கு மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த 11 கைதிகளும் பாளையங்கோட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கே குளுகோஸ் ஊசி போடுவதற்கு முயற்சிக்கின்ற பொழுது, அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதோடு இன்றைக்கு அவர்களுடைய உயிருக்கே மன்றாடிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில், அங்குள்ள 22 கைதிகள் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆலோசனைக்கும் எதிராக, பல்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படி மாற்றப்படுகின்ற ஒரு முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை இங்கே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆயுள் தண்டனைக் கைதிகளைப் பொறுத்தவரையில், விடுதலை செய்ய, 14 ஆண்டுகள் முடிந்த பிறகுதான் பரிசீலிக்க வேண்டுமென்ற நிலை மாற வேண்டுமென்று அவர்கள் கோருகின்றார்கள்.

கிரிமினல் புரொசீஜர் கோட் செக்ஷன் 433-ஏ என்கின்ற பிரிவு உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோருகிறார்கள். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தவே அகில இந்திய சிறைச்சாலை சீர்திருத்தக் குழுவில் தலைவர் முல்லாவினுடைய தலைமையில் இருக்கக் கூடிய அந்தக் குழுவினுடைய பரிந்துரையே, 14 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பரிசீலனை என்பது கைதிகளின் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அழித்து, அவர்கள் வாழ்வில் இருள் சூழ்ந்த நிலையை உருவாக்குகிறது. கல்வி, தொழில் பயிற்சியில் அக்கறையில்லாமல், அவநம்பிக்கையையே ஏற்படுத்துகிறது. இதனால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். கைதிகளின் புனர்வாழ்வுக் கதவுகள் மூடி முத்திரையிடப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆகவே இந்த விதிகள் காரணமாக, கைதிகளுக்கு எல்லாவற்றின் மீதுமே வெறுப்பு ஏற்பட்டு விரக்தி அடைகிறார்கள். இதனால் சிறை விதிக் கட்டுப் பாடுகளைத் துச்சமென மதித்து கலவரங்கள் வெடிப்பது தவிர்க்க முடியாதது என்ற நிலையை அவரே கூறியிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிடுகின்றபொழுது, இதனால் சிறைச் சீர்திருத்தம் என்னும் சக்கரம் 100 ஆண்டுகளுக்குப் பின்னுக்குத் தள்ளப்படுகிறது என்ற கருத்தையும் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அதே கருத்தை, தமிழக அரசால் உருவாக்கப்பட்டிருக்கிற நரசிம்மன் குழுவும் தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைத்த பிறகு பேசுகிற மாதிரி பேசக் கூடாது. சிறைச் சீர்திருத்தம் என்றெல்லாம் பேச ஆரம்பித்தால், எப்பொழுது முடிவுக்கு வருவது? அப்படி போனால், சிறைச்சாலைகள் பூராவையும் திறக்க வேண்டியதுதான். ஏன் உண்ணாவிரதம்? ஏன் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்கான காரண காரியங்களைச் சொல்லி முடியுங்கள்.

(முற்பகல் 10-10)

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, அவர்களுக்குக் கல்வி, பொழுது போக்கு போன்ற இப்படிப்பட்ட வாய்ப்பு வசதிகள் கூட மூடி மறைக்கப்படுகிறது; மறுக்கப்படுகிறது என்று கூடச் சொல்ல முடியும். மாலை ஐந்து மணி, ஆறு மணி அடித்தவுடன் அவர்களை உள்ளே அடைத்து விடுவதால் இப்படிப்பட்ட வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இரவு 9 மணிக்கு மேலேதான் அவர்கள் அடைக்க வேண்டுமென்று நரசிம்மன் குழு தெரிவித்திருக்கிறது. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இரண்டு, மூன்று மணி நேரம் கழித்த பிறகு தான் அடைக்க வேண்டுமென்று முல்லா கமிஷனும் சொல்கிறது. எனவே இதைக் குறித்து பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப் பட்டியல் செம்மைப்படுத்துவது பற்றி, பலவகை உணவுப் பொருள்களையும் சேர்க்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும், அதற்குக் குழு அமைக்கப்பட வேண்டும் என்பதும் நரசிம்மன் குழுவின் பரிந்துரை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தினம் ஆறு ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்பதும் அந்தக் குழுவின் பரிந்துரை. ஆனால் நாலரை ரூபாய் தான் வழங்கப் படுகிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஜெயில் மேனுவல் விதிகளை அவர்களுடைய பார்வைக்கு வைக்க வேண்டியதும் அவசியம்.

ஏற்கெனவே அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று, ஆயுள் தண்டனைக் கைதிகள் வெளியே வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாயாவது அவர்களது புனர் வாழ்வுக்கு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள்.

அப்படித்தான் பல்லாண்டுகளாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே, மாவட்ட அளவிலே, குழுக்கள் இருப்பதும், அவர்களுடைய நன்னடத்தைப் பற்றி ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு நபர்களுடைய நன்னடத்தையை இந்தக் குழு பரிசீலித்து அரசுக்கு அனுப்புவதும், அரசாங்கமும் அதைப் பரிசீலித்து விடுதலை செய்கின்ற நிலை வாடிக்கையாக இருந்து வந்தன. அப்போதுதான் சிறையிலே இருப்பவர்கள் திருந்தியவர்களாக வெளியே சென்று தங்களுடைய வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் பேசுகின்றபோது மத்திய அரசினுடைய விதிகளை இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஆனாலும் அவர்களுக்கு 14 ஆண்டுகளுக்குப் பிறகுதான் விடுதலை கிடைக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது என்று நினைத்தால் உண்மையிலேயே சிறையிலே இருப்பவர்கள் தங்களுடைய வாழ்நாள் சிறையிலேயே கழிந்து விடுமோ என்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலையிலே தான் நம்முடைய அரசாங்கம் கூட மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி, அல்லது மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்து, ஒவ்வொரு ஆண்டும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அந்தக் குழுவைத் தவறாமல் கூட்டவும், பலபேருடைய நன்னடத்தையை அவர்கள் சிபாரிசு செய்கின்றபோது, அவர்களுடைய உறவினர்கள் கூட பல்வேறு அலுவலகங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் — போலீசிற்கு வந்தால் போலீசை பார்க்க வேண்டும், மற்ற அதிகாரிகளையும் பார்க்கப் போகிறார்கள். பிறகு இந்த ஆண்டு தள்ளுபடியாகின்றன. பிறகு அடுத்த ஆண்டு, அதற்கடுத்த ஆண்டு என்று இப்படியே சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை தான் இன்றையதினம் நடந்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில் அவர்களை எல்லாம் அந்தக் குழு யாரை சிபாரிசு செய்கின்றதோ அவர்களையெல்லாம் மாநில அரசிற்கு இருக்கின்ற அதிகாரங்களை வைத்து, அவர்களை விடுதலை செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், பல்வேறு கோரிக்கைகளான, உணவுக்கு அதிகமான தொகைகள், சிறைகளிலே பல்வேறு நியாயமான சலுகைகள், போன்றவற்றைக் கேட்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கொடுப்பதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இன்னும் விரிவாக இதைப்பற்றி பேசி இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாளையங்கோட்டைச் சிறையிலே ஆயுள் தண்டனை பெற்றிருக்கின்ற சிறைக் கைதிகள், 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைகளிலே தங்களுடைய வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறவர்கள் அரசு தங்களை விடுதலை செய்யவேண்டுமென்று கோரி, உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அதோடு வேறு பல கோரிக்கைகளை வைத்து அந்த உண்ணாவிரதத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை நம்முடைய அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு இருப்பதை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டிற்கு முன்பே ஆயுள் தண்டனை பெற்றவர்கள் உச்ச நீதிமன்றத்தினுடைய 1978 ஆம் ஆண்டு தீர்ப்பிற்கு முன்னதாக அந்த ஆயுள் தண்டனையைப் பெற்றவர்கள் விஷயத்திலே, அவர்கள் கழித்த உடனே விடுதலை செய்யப்படுவதற்கான அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. அதற்கான முறையிலே ஆலோசனை போர்டின் பரிந்துரைகளின் அடிப்படையிலே அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். 15 தினங்களுக்கு ஒரு முறை போர்டு கூட்டம் நடைபெறுகிறது என்று கூறினார்கள். இந்தச் சட்டமன்றத்திலே கூட, தொடர்ச்சியாக இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்தின்போது, பல்வேறு சந்தர்ப்பங்களில், அது சம்பந்தமாகவும் வலியுறுத்தப்பட்டு, அதே பதிலை அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இது வரையில் அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்கின்ற காரணத்தாலும் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திருச்சி போன்ற சிறையில் அங்கே இருக்கின்ற ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் அவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். முல்லா கமிஷன் அவர்களுடைய பரிந்துரைகள் கூட—433-ஏ பிரிவு சட்டத்தையே திருத்தம் செய்ய வேண்டும், மத்திய அரசாங்கம் திருத்தம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே பரிந்துரையைக்கூடக் கொடுத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-20)

ஆகவே இந்த அடிப்படையிலே காலதாமதம் ஏற்படுகிறது. பாளையங்கோட்டைச் சிறையிலே 2 ஆண்டுக் காலமாக அங்கே இருக்கின்றவர்களுக்கு போர்டு வைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக இன்றைய தினம் தமிழக அரசாங்கம் சொல்லிலே ஒன்று இருந்தாலும்,

அவர்களைப் பொறுத்தவரையில் கல்வி வசதி ஏற்படுத்தி, வெளியில் வரும்பொழுது அரசுத் துறை அல்லது தனியார் துறையில் வேலை கிடைக்கக் கூடாது என்கின்ற முறையிலே அந்தப் பணி விதிகள், ரூல்ஸ் இருக்கின்றன. அது மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதும் அந்தக் கமிஷனின் ரிப்போர்ட் என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஜெயிலில் இருக்கின்ற இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக ரிமாண்ட் கைதிகளை உடனடியாக ஜாமீன் இல்லாமலேயே விடுதலை செய்ய வேண்டும் என்பதும் அவர்களின் சிபாரிசு என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

அவர்கள் தங்களது குறைபாடுகளைக் கூறுகின்ற வகையில் நீதிபதிகளின் பார்வைக்கு மனுப் பெட்டிகள் வைக்க வேண்டும்.

சிறையைப் பார்வையிட சர்வ கட்சித் தலைவர்களையும் அனுமதிக்க வேண்டும்.

திருமணம், இறுதி சடங்கு போன்ற நிகழ்ச்சிகளுக்கு அவசர பரோல் வழங்குவது மத்திய சிறை கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கலாம் என்பதும், கர்நாடகத்தில் உள்ளதைப் போல அங்கேயுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலே நீண்ட கால விடுப்பு அளிக்கப்பட வேண்டும் என்றால் சாவல் துறை அல்லது நன்னடத்தை அதிகாரி சான்றிதழ் தேவையில்லை. ஆகவே, விடுதலை அடைந்தவுடனே அவர்கள் காவல் துறைக்கு அறிவிக்கலாம். அந்த வாய்ப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

ஏற்கனவே இஸ்மாயில் கமிஷனைப் பொறுத்த வரையில் பல சிறைச் சாலைகளில் உள்ள குறைபாடுகளையும், அதிகாரிகளிடத்தில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இந்த அரசு அந்த குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்காதது மட்டுமல்ல, அவர்களுக்குப் புரமோஷன், அதாவது பதவி உயர்வு கொடுக்கின்ற சூழ்நிலையில் சிறை நிர்வாகம் இன்றைக்கு மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட அடிப்படைத் தேவைகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறி, அவைகளைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சமீபத்தில் 15 நாட்களுக்கு ஒருமுறை நாங்கள் ஒரு கன்சல்டேட்டிவ் போர்டு வைத்திருக்கிறோம். துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று



சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் சமீபத்தில் சில குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே ஒரேயொரு நபர் மட்டும் ஆறு ஆண்டுகளில் விடுதலை அடைந்தார் என்று சொல்லப்பட்டது. ஆனால் பாளையங்கோட்டை சிறைச் சாலையில் ராஜாதேவர் என்கிற ராமச்சந்திர தேவர் என்பவர், கன்விக்ட் நம்பர் 6977, நான்காண்டுகள் முடிந்தவுடனே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இதனுடைய காரணம் என்ன, அல்லது இரகசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

ஆகவே, இந்தக் கைதிகளைப் பொறுத்த வரையில் மிகவும் பரிவோடு கவனிக்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட சில விஷயங்களையெல்லாம் விரிவாகப் பேச வேண்டிய காரணத்தால் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பெ. க. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் பத்தாண்டு தண்டனை பெற்றவர்கள், ஆயுள் கைதிகள் பத்தாண்டுக் காலம் சிறையிலே இருந்தால் அவர்களுடைய நன்னடத்தையைக் கருதி விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் உள்ளடக்கிய பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்து, அதிலே பல பேர் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்ற காரணத்தால் ஆஸ்பத்திரியிலே கூட சேர்க்கப்பட்டிருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி போன்ற சிறைகளிலேயும் இதுபோன்ற போராட்டங்கள் நடைபெற இருக்கின்றன. இன்னும் சில சிறைச் சாலைகளிலேயும் இப்படிப்பட்ட போராட்டங்கள் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு.

சமுதாயத்தில் பல்வேறு தீங்குகளைத் தங்களை அறியாமலே செய்து விட்டவர்கள் ஆயுள் தண்டனை பெற்று சிறைகளில் இருந்து வருகிறார்கள். வெளியிலே கூட தாங்கள் செய்த தவறுகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் சிறையிலே சந்திக்கும்பொழுது என்ன தவறுகளைச் செய்தார்கள், எப்படி இந்தத் தண்டனைக்கு ஆளானார்கள் என்பதைப்பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்லி, உண்மையான நிலைமைகளைச் சொல்வதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். அப்படி சிறைக்கு வந்து விட்டவர்கள் நாம் நல்ல நிலைமையில் நடந்துக் கொண்டு, திரும்பவும் வெளியிலே வந்து சமுதாயத்திலே நல்ல மனிதனாக, குற்றமற்றவனாக விளங்கி தன்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றுதான் பெரும்பாலோரும் எண்ணுகிறார்கள்,

[திரு. கே. எம். தங்கமணி] [1983 ஏப்ரல் 13

அளிக்க வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளைப் பற்றி இன்னும் பேசவேண்டியிருப்பதால இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருக்கும் 11 சிறைவாசிகள் தங்களுடைய 10 கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 4—4—1983 மற்றும் 5—4—1983 முதல் உண்ணாவிரதம இருப்பதாக அச்சிறையின் கண்காணிப்பாளரிடமிருந்து அறிக்கை வந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், உணவு முறையில் முன்னேற்றம் இல்லை என்றும், அரசுப் பணிக்குச் செல்வதற்கு தடை உள்ளது என்றும், பிரிசன் மான்யுவல் புதுப்பிக்க வேண்டும என்றும் அந்தப் போராட்டம் இல்லை. காரணம், உணவு முறையில் நாம் 7ஆவது நிதிக் குழுவின் உதவியைப் பெற்ற பிறகு பல மாற்றங்களைச் செய்து இருக்கிறோம். இதைப்பற்றி நான் ஏற்கெனவேயும் கூறியிருக்கிறேன்.

அதைப்போலவே, சிறைவாசம் அனுபவித்த ஒருவர் விடுதலைக்குப் பிறகு வேலைக்குச் செல்லவேண்டுமானால் அவருக்கு தடையேதும் இருக்கக்கூடாது என்ற ஜி.ஓ. கூட போட்டு இருக்கிறோம்.

இதையும் ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். பிரிசன் மான்யுவலைப் பொறுத்தவரையில் $1\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் மிகத் துரிதமாக அத்தனையையும் ஈடேற்றி தற்போது முழுமையாக ஆக்கப்பட்டு இருப்பதைக்கூட அவையில் சொல்லியிருக்கிறேன்.

கைதிகளைப் பொறுத்தவரையில், சின்னத்தம்பி, சுந்தரத் தேவர், நரம்புவேலார், செல்லச்சாமி, ஜோசப், குரிலூயிஸ், எலியாஸ், துரைசிங்கம், சுந்தர்ராஜ், சுரேந்திரன் மற்றும் தானுமாலையபெருமாள் ஆகிய 11 சிறைவாசிகளும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுடைய உடல்நிலை அண்மையில் கிடைத்த மருத்துவஅறிக்கையின்படி கவலைக்கிடமாக உள்ளது. அவர்களை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி செய்ய பாளையங்கோட்டை சிறை அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுடைய 10 கோரிக்கைகளும், அவைகளைப் பற்றிய குறிப்புகளையும் நான் அவையில் தெரிவிக்கவிரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 13] [திரு சி. பொன்னையன்]

கோரிக்கை 1.—ஆயுள் சிறைவாசிகள் 10 வருட சிறை வாசம் முடிந்த உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.

கோரிக்கை 2.—குற்றவியல் நடைமுறைத் தொகுப்பின் 433ஏ பிரிவு நீக்கப்படவேண்டும்.

குற்றவியல் நடைமுறை தொகுப்பு பிரிவு 432இல் அரசுக்குத் தண்டனைப் பெற்றவர்களின் தண்டனைக் காலத்தைக் குறைக்கவோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ அதிகாரம் உள்ளது. ஆனால் அதே தொகுப்பில் உள்ள மையச் சட்டம் பிரிவு 433ஏ-இன்படி 18—12—1978ஆம் நாளுக்கு பின்னர் ஆயுள் தண்டனை பெற்ற எவரும் சிறையில் 14 ஆண்டுகள் கழித்தால் ஒழிய விடுதலை செய்யப்படக்கூடாது. எனவே ஆயுள் சிறைவாசிகளைப் பொறுத்தவரையில் பிரிவு 432-ன் கீழ் உள்ள அதிகாரத்தை அரசு 18—12—1978க்கு முன்பு உள்ள ஆயுள் சிறைவாசிகளுக்கு மட்டுமே அவர்கள் 14 ஆண்டுகள் முடிக்காமலிருந்தால் கூட உபயோகப்படுத்த முடியும். இதன்படி ஆயுள் சிறை தண்டனை பெற்று 10 ஆண்டுகள் சிறையில் கழித்த சிறைவாசிகளின் நேர்வுகளை அந்தந்த சிறைக்கென ஏற்படுத்தப்பட்ட அறிவுரைக் குழுவின் முன்பு வைத்து அக்குழுவின் அறிவுரையைப் பெற்றபின் அரசு கவனமாகப் பரிசீலிக்கிறது. அவ்வாறு பரிசீலிக்கையில் அச்சிறைவாசிகள் செய்த குற்றத்தின் தன்மையையும் அவர்கள் திருந்தியுள்ளார்களா என்பதையும் தீர்மானித்து அரசு தேவையான ஆணைகளை வெளியிடுகிறது. வயது முதிர்ந்த சிறைவாசிகளின் நேர்வுகளில் அவர்களை சில ஆண்டுகளிலேயே வெளியில் விடுவதற்கான பரிசீலனையும் அரசு செய்கிறது. இதையெல்லாம் பரிசீலிக்காமல் எல்லாச் சிறைவாசிகளையும் ஒரு குறிப்பிட்ட சிறிய காலத்திற்குப் பின்பு விடுதலை செய்ய வேண்டும் என்று கூறுவது ஏற்புடையதல்ல.

இந்த அறிவுரைக் கழக ஏற்பாட்டின் கீழ் தண்டனை முடியும் காலத்திற்கு முன்பே விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 1977 முதல் ஒவ்வொரு ஆண்டும் பின்வருமாறு இருக்கிறது. 1977இல் 130 பேர். 1978 இல் 135. 1979இல் 58. 1980இல் அட்வைசரி போர்ட் மாதம் ஒரு முறை கூடவேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு—101 பேர். 1981இல் 217 பேர். 1982ஆம் ஆண்டில் அட்வைசரி போர்ட் மாதம் இருமுறை கூடவேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு—458 பேர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

மையச் சட்டம் குற்றவியல் நடைமுறை தொகுப்பு பிரிவு 433ஏ ஏற்படுத்தப்பட்டதால் 18—12—1978இல் இருந்து ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் 14 ஆண்டுகள் சிறையில்

செயலிலே அவர்களுக்கு இந்த நீதி கிடைக்கவில்லை என்பதுதான் அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு இருக்கின்ற குறையாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் இன்றைய தினம் நக்சலைட் என்ற பெயரால் சிறையிலே வைத்திருக்கின்ற கைதிகள் இருக்கிறார்கள். அவர்கள் 14 ஆண்டுகாலம், 15 ஆண்டு காலத்திற்கு மேலே கூட அவர்கள் அந்தச் சிறைச்சாலைகளிலே தண்டனையை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் விஷயத்திலும் அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஒரு இரக்கமும், பரிவும் இல்லாத ஒரு நிலை உள்ளது. அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அந்த மாதிரியான நக்சலைட் கைதிகளாக இருக்கக்கூடியவர்கள், 14 ஆண்டுகாலம் கழித்தவர்கள் இன்றைய தினம் நம்முடைய சென்னையிலே இருக்கின்ற அரசு மருத்துவ மனையிலே நம்பியார் என்ற கைதி ஒருவர் மிகவும் ஆபத்தான நிலைமையிலே அவர்கள் மருத்துவ சிகிச்சை பெற்று அவர்களைப் பரோலில் விடுவிக்கவேண்டுமென்ற கோரிக்கைகூட அனுப்பியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திலேகூட மருத்துவச் சான்றிதழ்கள் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அங்கே இருந்துகூட அதற்கு தாக்கீதுகள் வந்திருக்கின்றன. அப்பேர்ப்பட்டவர்கள் விஷயத்திலும்கூட அரசாங்கம் பரிவு உணர்ச்சி காட்டுவதற்கு இன்றைக்குத் தயாராக இல்லாத நிலைமை தான் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த நிலைமைகளிலே சிறைகளிலே இருக்கின்றவர்கள் ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அவர்கள் செய்த குற்றங்களுக்காக ஆண்டாண்டுக் காலமாக அனுபவித்து வரக்கூடிய கஷ்டங்கள், அவர்கள் சிறை வாழ்க்கையிலே அங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களிலே நாம் பேசியிருக்கிறோம். அந்தக் கைதிகள் அனுபவித்து வருகின்ற கொடுமைகள், இன்றைய தினம் கொடுமையான வாழ்க்கைக்கு ஆளாக்கப்பட்டு, சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதைப்போன்ற நிகழ்ச்சிகள் ஏதாவது வெளியிலே வருவதுகூட கஷ்டம். தெரிந்து கொள்வது கஷ்டம். ஆனால் எப்படியோ இது இன்றையதினம் இருக்கின்ற நிலைமையிலே இந்த விஷயங்கள் வெளியிலே வந்து, அது பத்திரிகையிலே எல்லாம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் பிரசுரம் ஆகியிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் இந்த மாதிரியான சிறையிலே இருக்கின்ற நிலைமைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிடுவதற்கான வசதியைக் கூட அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கும்போது அதையும் அரசாங்கம் மறுத்து வருகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலே அதற்கான முறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் சிறையிலே பார்வையாளர்களாக அனுப்புவதற்கான



வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை எல்லாம் நிறைவேற்றப்படாத ஒரு நிலையிலே, இன்றையதினம் ஒரு நெருக்கடியான நிலைமையிலே அந்தக் கைதிகள் பாளையங்கோட்டைச் சிறையிலே அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். 6 பேர்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு இருக்கிறார்கள். உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்கள் நிலைமை ஆபத்தாக இருக்கிறது. ஆகவே அவர்களை விடுதலை செய்வது சம்பந்தமாக ஆலோசனை செய்வதற்கும், இந்த மாதிரியான கைதிகளுடைய நிலைமைகள் பற்றி பரிசீலனை செய்வதற்கும் முழுமையாக இந்த அவையில் விவாதிக்கக் வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதியன்று பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலே ஆயுட்காலக் கைதிகளாக இருக்கின்றவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து தமிழகத்திலே உள்ள பல பெரிய மாவட்டங்களில் குறிப்பாக கடலூர் போன்ற சிறைச்சாலைகளிலே இந்தப் போராட்டம் வளர்ந்து கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை இன்றையதினம் வந்துகொண்டிருக்கிறது. இவர்கள் எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக ஏதோ தவறு செய்துவிட்டதன் காரணமாக, தண்டனை பெற்று, 10 ஆண்டுகாலம், 14 ஆண்டு காலம் என்று ஆயுட்காலம் முழுவதும் சிறைத் தண்டனை பெற்றதற்குப் பின்னாலே இன்றையதினம் அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காக அவர்கள் உண்ணாவிரதப் போரர்ட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். சிறைகளிலே அவர்கள் நியாயம் கேட்டால் அவர்களை அடிப்பதும், அல்லது வேறு ஊரிலுள்ள சிறைச்சாலைக்கு மாற்றுவதும் போன்ற நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் சிறைச்சாலைகளிலே இருந்துகொண்டு வருகின்றன. மேலும் 10 ஆண்டு காலம் சிறையிலே இருந்தவர்களை விடுதலை செய்ய வேண்டும், மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையிலே அவர்களுக்கு பரோல் கொடுக்க வேண்டும், கைதிகளுக்கு உணவு அளிப்பதை கண்காணிக்க கைதிகளைக் கொண்டு பஞ்சாயத்து ஒன்றை அமைக்க வேண்டும், அவர்கள் புகார்களை எல்லாம் புசார்ப் பெட்டியிலே போட்டால் அதை கவனித்து நடவடிக்கை எடுப்பதற்காக நீதித்துறைச் சேர்ந்த ஒரு குழு அமைக்கப்பட வேண்டும், விடுதலை ஆகின்ற ஆயுட்காலக் கைதிகளுக்கு எல்லாம் 5 ஆயிரம் ரூபாய் புனர் வாழ்வுக்காக, அவர்களுடைய மறுவாழ்வுக்காக

இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளாது. காரணம் சோதனையிடாமல் உறவினர்களை உள்ளே அனுமதிக்கும்போது ஏற்படுகின்ற மோசமான விளைவுகள் என்னென்ன என்பதைக் கருத்திற்கொண்டு இதை அரசு ஏற்றுக்கொள்ளாது.

கோரிக்கை 9.—நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும் என்பது.

வழக்குகளை சீக்கிரமாகத் தீர்ப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு எழுதி, பலமுறை அவர்களோடு கலந்து பேசி, அவர்கள் கூறிய சில ஆலோசனைகளை அரசு ஏற்று, தற்போது உயர்நீதிமன்றத்தின் எல்லைக்குள் இருக்கிற அனைத்து நீதி மன்றங்களுக்கும் தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை 10—சிறைவாசிகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பது.

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (பீப்பிள்ஸ் ரெப்பிரசென்டேஷன் ஆக்ட்) 62-வது பிரிவின்படி சிறைவாச தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கும் எவருக்கும் வாக்குரிமை அளிக்க வழிவகை இல்லை. மத்திய அரசு அதற்கு ஏற்பாடு செய்தால் ஒழிய வேறு வழிவகை இல்லை.

மற்ற சிறைகளுக்கு உண்ணாவிரதம் இதுவரை பரவவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) விதி 109 இன் கீழ் சமூக நலத் துறை அமைச்சர் அளித்த விடை குறித்து.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 10–3–1983 அன்று கேள்வி நேரத்தில் வினா 364-க்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரவர்கள் பதில் சொல்





லும்போது நகரங்களில் நர்சரி பள்ளி நடப்பதுபோல கிராமங்களில் முதலமைச்சர் சத்துணவுத் திட்ட மையங்களில் குழந்தைகளுக்கு பாடம் சொல்லித்தந்து, அறிவை வளர்ப்பதாகக் கூறினார்கள். அது உண்மை அல்ல. மேலும் என்னுடைய துணை வினாவுக்கு அதைய்ய உறுதி செய்தால் அது உண்மைக்கு மாறானது.

(1) சத்துணவுத் திட்ட மையங்களில் குழந்தைகளின் வருகையைப்பற்றி பதிவு செய்ய ஆஜர் பட்டியல் தினமும் எடுப்பதில்லை. (2) பாடம் சொல்லிக் கொடுக்க புத்தகமோ, சிலேட் பலகையோ எந்த மையத்திற்கும் வழங்கப்படவில்லை.
(3) மைய அமைப்பாளருக்கு பாடம் நடத்துவது பற்றி பயிற்சி எதுவும் நடத்தி தேர்வு செய்யவில்லை.

(4) மைய அமைப்பாளர்கள் விடுப்பில் சென்றால் அந்த நாட்களில், அந்த மையங்களை எவ்வித கல்வி அறிவும் இல்லாத அங்கு சமையல் செய்யும் ஆயாக்கள்தான் கவனித்து கொள்கிறார்கள். மேலும் குழந்தைகள் சத்துணவு மையம் என்றுதான் அங்கே உள்ளதே தவிர பள்ளி என்ற வாசகமே இல்லை ;

(5) சத்துணவு மையங்களை மேற்பார்வை செய்ய கல்வித் துறையினர் யாரும் செல்லுவதில்லை;

(6) எனவே இம்மாதிரி கல்வித் துறைக்கும், சத்துணவு மையங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இருப்பதாக அல்லது இருக்க வேண்டுமென்று எந்த உத்திரவும் அரசு மூலம் அனுப்பியதாக தெரியவில்லை ;

(7) ஆகவே, உண்மைக்கு புறம்பான தகவலை அவைக்கு தந்துள்ளதால், அது சம்பந்தமாக நான் மேலும் உண்மைகளை சொல்லவும், அமைச்சரிடம் விளக்கம் பெறவும் எனக்கு அனுமதி தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் 1 : முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் குழந்தைகளின் வருகை ஒவ்வொரு மையத்திலும் பதிவு செய்யப்படுகிறது. மேலும், தினந்தோறும் மாவட்ட வாரியாக மையத்திற்கு வருகை தந்த குழந்தைகளின் எண்ணிக்கை அடங்கிய காலமுறை அறிக்கை, 15 தினங்களுக்கு ஒரு முறை அரசுக்கு அனுப்பப்படுகிறது.

விளக்கம் 2 : முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 600 மதிப்புள்ள படிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சாதனங்களைக் கொண்டு, வரையறுக்கப்படாத முன் பள்ளிக் கல்வி (Non-formal Pre-School ) அளிக்கப்படுகிறது. சமூக

கழித்தாலொழிய அவர்களை விடுதலை செய்ய முடியாது. எனினும் இந்த அரசு அந்தப்பிரிவோடு 433-பி என்னும் பிரிவினை ஏற்படுத்தி மாநில அரசுக்கு 18–12–1978இல் இருநூ ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளையும் அவர்கள் 14 ஆண்டுகள் சிறையில் கழிக்காமல் இருந்தால் கூட விடுதலை செய்ய அதிகாரம் வழங்க ஒரு கருத்துருவை மைய அரசுக்கு ஏற்புக்கு அனுப்பியது. ஆனால் மைய அரசு அந்தக் கருத்துருவை ஏற்றுக்கொள்ளவில்லை. இதுபற்றி மீண்டும் மைய அரசுக்கு நம் கோரிக்கையை வலியுறுத்தி இந்த அரசு அண்மையில் எழுதியது. ஆனால் மைய அரசு நம் கோரிக்கையை மீண்டும் நிராகரித்துவிட்டது.

கோரிக்கை 3.—மருத்துவச் சான்றிதழ் கொடுத்தவுடன் அவசர கால விடுப்பு வழங்கப்படவேண்டும்.

அவசர விடுப்புக்கோரி வரும் கோரிக்கையை பரிசிலிக்காமல் விடுப்பு அளிப்பது ஏற்கத்தக்கதல்ல. அந்தக் கோரிக்கை உண்மையானது தானா என்று சரிபார்த்த பின்புதான் விடுப்பு அளிக்க முடியும். காரணம், பல நேரங்களில் மருத்துவச் சான்றிதழ்கள் வருகின்றபோது, ப்ரோபேஷனரி ஆபீசர்ஸ் அல்லது மற்றவர்கள் அதை ஆய்வு செய்கிறபோது மருத்துவச் சான்றிதழ்களே தவறாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தக் கோரிக்கை உண்மையானது தானா என்பதைச் சரிபார்க்காமல் மருத்துவச் சான்றிதழ் அடிப்படையிலேயே அவசர கால விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளாது.

(முற்பகல் 10–30)

கோரிக்கை 4.—பஞ்சாயத்து முறையை பாளையங்கோட்டை சிறையிலும் ஏற்படுத்த வேண்டும் என்பது.

தற்போது பஞ்சாயத்து முறை மதுரை மத்திய சிறையில் உள்ளது. அங்கே நல்லமுறையில் கைதிகளின் நலனை பேணி வருவதில் இந்த பஞ்சாயத்து முறை சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், பாளையங்கோட்டை சிறை உள்ளிட்ட அனைத்துச் சிறைகளிலும் பஞ்சாயத்து முறையை நடைமுறைப் படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

கோரிக்கை 5.—புகார் பெட்டிகள் நீதித்துறை அதிகாரிகளால் மட்டுமே திறக்கப்பட வேண்டும் என்பது,



அந்தக் கோரிக்கையை ஏற்று, உயர்நீதிமன்றத்திற்கு 10–3–1983 அன்று அரசு எழுதியிருக்கிறது. எல்லா சிறைகளிலும் உள்ள புகார் பெட்டிகளை நீதித்துறை அதிகாரிகளே திறக்க வேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

கோரிக்கை 6.—ஆயுள் சிறைவாசிகள் விடுதலை பெறும்போது ஆளுக்கு 5,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என்பது.

இந்தக் கோரிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் சிறைவாசிகளுக்கு பணி வாய்ப்புகள் ஏற்படுத்தி அவர்கள் திருந்திய வாழ்க்கை வாழ்வதற்காக தேவையான உதவிகள் செய்வதற்கு ஏழாவது நிதிக் குழுவின் மானிய உதவிகளில் இருந்து ஒரு பகுதியை (சுமார் 217 இலட்சம்) சிறைவாசிகள் நலக்கழகம் (டிஸ்சார்ஜ்டு பிரிசனர்ஸ் வெல்ஃபேர் கார்ப்பரேஷன்) என்னும் ஒரு புதிய கழகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் சிறைவாசிகளுக்கு உதவிகள் அளிக்க அரசு எண்ணியுள்ளது. இதற்கான ஒப்புதலை வேண்டி மத்திய அரசுக்கு எழுதியுள்ளோம். அவர்களுடைய ஒப்புதல் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

கோரிக்கை 7.—எல்லா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிறைப்பார்வையாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பது.

தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்த நடைமுறை நூல் தொகுதி இரண்டு விதி எண் 22 (2)இன்படி அனைத்து மத்திய சிறைகளுக்கும் 6 அலுவலற்ற பார்வையாளர்களும், மாநில மகளிர் சிறை, வேலூருக்கு 5 அலுவலற்ற பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தவிர மாவட்டத்திலுள்ள அனைத்து மாவட்ட அலுவலர்களும் அலுவல் பார்வையாளர்களாக செயல்படுவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், அலுவலற்ற பார்வையாளர்களாக நியமிக்கப்படுவார்கள். உளவியல் நிபுணர்கள், மனநோய் மருத்துவர்கள், சமூக சேவகர்கள் போன்ற சிறை நிர்வாகத்திற்கு உண்மையிலேயே பயனளிக்கக்கூடியவர்களுக்கு, அவர்கள் அரசியல் கட்சிகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்றாலும் கூட அவர்களை நியமனம் செய்வதில் முன்னுரிமை தரப்படுகிறது.

கோரிக்கை 8.—சிறைவாசிகளின் உறவினர்கள் சிறைவாசிகளைப்பார்க்க வரும்போது அவர்களைச்சோதனை இடாமல் நேராகச் சிறைவாசிகளைப் பார்க்க அனுமதிக்க வேண்டும் என்பது

நலத்துறையின்கீழ் உள்ள மையங்களில் பயன்பெறும் குழந்தைகள் 2 முதல் 4 வயதுப் பிரிவினர். ஆகையால் அந்த வயதுப் பருவத்திற்குரிய படிப்புப் பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இந்த வயதுக் குழந்தைகள், புத்தகம் மற்றும் எழுது பலகையை (சிலேட்டு) பயன்படுத்த இயலாது. எனவே அவைகள் வழங்கப்படவில்லை.

விளக்கம் 3 : கிராமப்புறங்களில் உள்ள மையங்களுக்கு, எஸ்.எஸ்.எல். சி. தேர்ச்சி பெற்ற/தேர்ச்சி பெறாத கல்வித் தகுதியுடையவர்களும், நகர் புறங்களில் எஸ்.எஸ்.எல்.சி., தேர்ச்சி பெற்ற கல்வித் தகுதி யுடையவர்கள் மட்டுமே அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு, ஆரம்பத்தில் ஒரு வார கால பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது, மைய அமைப்பாளர்களுக்கு ரூ. 40 இலட்சத்திற்கும் அதிகமான செலவில் ஒரு மாத கால தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென, பயிற்சி பெற்ற, பெரும்பாலும் மனை இயல் பட்டம் பெற்ற 100 பேர் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

விளக்கம் 4 : மைய அமைப்பாளர்கள் விடுப்பில் சென்றால் மையத்தை நிர்வகிக்கும் திறமை வேண்டும் என்பதால்தான் ஒவ்வொரு மையத்திற்கும் எழுதப்படிக்க தெரிந்த இரண்டு குழந்தை நல உதவியாளர்கள்(ஆயாக்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். 2 முதல் 4 வயது வரை வரம்பில் உள்ள குழந்தைகளுக்கு வரையறுக்கப்பட்ட பாட திட்டங்கள் நிர்ணயம் செய்து கல்வி புகட்டுவது இயலாதது. 2 முதல் 4 வயதுப் பிரிவிலுள்ள குழந்தைகளுக்கு கல்வியைக் காட்டிலும், சத்தான உணவு, உடல்நலம் சுகாதாரம் போன்றவைதான் முக்கியமானவை ஆகும். எனவே முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் என்று பெயரிடப்பட்டுள்ளது பொருத்தமானதாகும்.

விளக்கம் 5, 6 : இரண்டு முதல் 4 வயது பிரிவில் உள்ள குழந்தைகளுக்கு அந்த பருவத்திற்குரிய மற்றும் கல்வியின் மீது அவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில்தான் போதிக்க படுகிறது. இந்த வயது பருவத்திற்கு வரையறை செய்யப்பட்ட பாடத் திட்டங்கள் வகுக்கப்படவில்லை யாதலால், கல்வித் துறையினர் மேற்பார்வையிட அவசியம் இல்லை. எனினும், கிராமப் புறங்களில், மையங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் நேரடிப் பார்வையில் இருப்பதால், அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சமூக கல்வி அலுவலராலும் மையங்கள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

விளக்கம் 7 : ஆகவே, என்னுடைய பதிலுரையில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் ஏதும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



## 6. கவன ஈர்ப்புகள்

### (அ) தொழிற்சாலைகளின் கழிவு நீரை பவானி ஆற்றில் விடுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜி. கே. சுப்பிரமணியன், ஆர். ரெங்கசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இருவரும் இருக்கையில் இல்லை. அவற்றிற்கான விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது:—

### அறிக்கை.

கோயமுத்தூர் மாவட்டம், சிறுமுகையிலுள்ள திருவாளர்கள் சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், கீழ்க்கண்ட பொருட்களைத் தயாரிக்கிறது.

(1) செயற்கையிழை நூல் (300 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

(2) ஸ்டாபில் இழை .. (600 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

(3) மரக்கூழ் .. .. (3,000 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

(4) பாலி நாசிக் இழை .. (200 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

(5) சோடியம் சல்பேட் .. (240 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

(6) க்ளாபர்ஸ் உப்பு .. (60 மெட்ரிக் டன்/மாதத்திற்கு).

இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் திரவக் கழிவு நீரை வெளியிடுகிறது.

இத்தொழிற்சாலை, தனது கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக சுமார் ரூ. 2 கோடிக்கு ஒரு கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையத்தை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையிலிருந்து

வெளிவரும் கழிவு நீரானது, தானே இயங்கும் கண் தடுப்பு (Bar Screens) வழியாகச் செல்கிறது. இந்தக் கண் தடுப்பால் கழிவுநீரில் உள்ள நூல் இழைகள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பின்னர், கழிவு நீரானது இரண்டு நடுநிலைப் படுத்தும் தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இத்தொட்டிகளில் கழிவு நீரானது மாறி மாறி சேகரிக்கப்பட்டு, சுண்ணாம்பு அ. கலவையின் மூலம் நடுநிலைப்படுத்தப்படுகிறது. இந்தத் தொட்டிகளின் அடிபாகத்திலுள்ள அமைப்பின் மூலம் கழிவு நீரில் காற்று செலுத்தப்படுகிறது. பின்னர், இக்கழிவு நீரானது இரண்டு படிவுத் தொட்டிகளில் சுத்தப்படுத்தப்படுகிறது. இவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட கழிவுநீர் காற்றூட்டிகள் (Aerators) பொறுத்தபபட்டுள்ள தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்தத் தொட்டிகளில் தேவையான அளவு கழிவு நீர் சுத்திகரிக்கப்படுவதற்காக 30 காற்றூட்டிகள் (Aerators) பொறுத்தப்பட வேண்டும். இதுவரை 18 காற்றூட்டிகள் பொறுத்தப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள காற்றூட்டிகள் பொறுத்தப்பட இருக்கின்றன. இந்தத் தொட்டிகளில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பவானி ஆற்றில் வெளியிடப்படுகிறது.

1974 ஆம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் விதிகளுக்கிணங்க, திருவாளர்கள் சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், வாரியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள். இது சம்பந்தமாக, தொழிற்சாலையிலிருந்து கேட்கப்பட்டிருந்த கூடுதல் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 30 காற்றூட்டிகளும் அமைக்கப்பட்ட பின்னர் தொழிற்சாலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு மேம்பாட்டையும் எஞ்சிய காற்றூட்டிகளை விரைவில் பொறுத்த ஆவன செய்யுமாறு தொழிற்சாலை அறிவுறுத்தப் பட்டுள்ளது.

திருவாளர்கள் டி. டி. கார்டு போர்டு அண்டு பேப்பர் மில்ஸ் தொழிற்சாலை பவானிசாகர் நகரியத்திலிருந்து சுமார் 3 கி. மீ. தொலைவிலுள்ள புங்கார் கிராமத்தில் அமைந்திருக்கிறது. தொட்டம்பாளையம் கிராமமானது, பவானிசாகர் நகரியத்திலிருந்து சுமார் 4. கி. மீட்டர் தொலைவிலுள்ளது. இத்தொழிற்சாலை க்ராப்ட் காகிதம் மற்றும் காகித அட்டைகளை நாளொன்றுக்கு சுமார் 24 மெட்ரிக் டன் என்றளவில் தயாரிக்கின்றது. பழைய காகிதங்கள் வைக்கோல், புல் மற்றும் இரசாயனப் பொருட்களாகிய காஸ்டிக் சோடா, ரோஸின், படிகாரம் போன்ற மூலப் பொருட்கள் இத்தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகின்றன.



இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 3,000 கிலோ லிட்டர் கழிவுநீரை பவானி ஆற்றங்கரையில் அமைந்துள்ள, தொழிற்சாலைக்குரிய சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் வெளியேற்றுகிறது. இக்கழிவு நீரானது படியவைக்கும் தொட்டிகளில் படிய வைக்கப்பட்டு பின்னர் விவசாயத்திற்காக வெளியேற்றப்படுகிறது.

புங்காரில் அமைந்துள்ள திருவாளர்கள் டி. டி. கார்டு போர்டு அண்டு பேப்பர் மில்ஸ் லிமிடெட், இது வரை வாரியத்தின் ஒப்புதலைக் கோரி விண்ணப்பிக்கவில்லை. வாரியத்தின் ஒப்புதலைப் பெறுமாறு மேற்படித் தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் கழிவு நீரை சுத்திகரிப்பதற்குரிய செயல் முறைக் குறிப்புகளையும் சமர்ப்பிக்குமாறு தொழிற்சாலை கேட்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10-40]

### [ஆ] நாகர்கோயிலில் செயல்பட்டு வந்த பலநோக்கு சுகாதார பெண் பயிற்சியாளர் பள்ளி திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மி. வின்சென்ட், டி. மணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, ''நாகர்கோயிலில் செயல்பட்டு வந்த பல்நோக்கு சுகாதார பெண் பணியாளர் பயிற்சிப் பள்ளியை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு மாற்றியதால் மக்கள் மத்தியில் நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

கள். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். அதாவது ** என்ற வார்த்தை தேவையில்லை என்று கருதுகிறேன். அது அவருக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த்தை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் சொன்ன கருத்தின் அடிப்படையில் அது நிச்சயமாக கவனிக்கப்படும் என்று நான் சொன்னேன். அது மட்டும் அல்ல, மானிய கோரிக்கையின் போதும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முத்துகிருஷ்ணன் அவர்கள் இதே வினாவை எழுப்பினார்கள். அப்போதும் பரிதாபத்துடன் அதை கவனிக்கப்படும் என்கிற அளவுக்கு நிலைமைகள் அங்கே இருந்துகொண்டு வருகின்றன. ஆகவேதான் இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வின்சென்ட் அவர்களும் மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் சொன்னதன் அடிப்படையிலே அங்கே ஒரு இடத்தை கொடுப்பார்களானால், அங்கே இடம் பார்த்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், அதை கவனிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அதே நேரத்தில் என்கோரச்மெண்டு எடுப்பதற்கும் கொஞ்சம் உதவி செய்தால் நாம் அங்கே இதை ஆரம்பிப்பதற்கு சௌகரியமாக இருக்கும் ஏ. என். எம். கோர்ஸ் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### 5. அறிக்கைகள் அளித்தல் —தொடர்ச்சி.

### (ஆ) மதிப்பீட்டுக் குழு.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் ;

(அ) காவல் துறை பற்றிய குழுவின் அறிக்கை—பதினேழாவது அறிக்கை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(ஆ) தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட கிராம மற்றும் சிறு தொழில்கள் குறித்த அறிக்கை பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழு அளிக்கும் அறிக்கை—பதினெட்டாவது அறிக்கை.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்டப் பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்து (சைக்குலோட்டைல்டு) அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் மேற்கண்ட அறிக்கைகளில் 2 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பிவைக்கப்பெறும்.

### (இ) பொது நிறுவனங்கள் குழு.

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்—

(அ) தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியத்தின் 1971-72ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.

(ஆ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79ம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை.

(இ) இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1976-77 மற்றும் 1977-78ஆம் ஆண்டுகளுக்கான (சிவில் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் குறித்த பத்திகளின் மீதான மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் மேற்கண்ட அறிக்கைகளின் தமிழ் மற்றும் ஆங்கில படிவங்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அச்சிட்டப் பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பிவைக்கப்பெறும்.

அறிக்கை

நாகர்கோயில் தலைமை மருத்துவமனையில் ''மல்டிப்ர்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ்'' பயிற்சி பள்ளி ஒன்றை ஆரம்பிப்பதற்கு 1979 ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டது. இப்பயிற்சி 1980 பிப்ரவரி முதல் வாரத்தில் தொடங்கியது. 1980 ஆம் ஆண்டில் இப்பள்ளிக்கு தனியாக கட்டிடம் கட்டுவதற்கு அரசு உத்திரவிட்டது. பள்ளி கட்டுவதற்கான இடத்தை குடிசை வாழ்மக்கள் ஆக்கரமிப்பு செய்து உள்ளதாலும், நிலத்தை கையசப்படுத்துவதில் ஏற்படும் வழக்குகளினாலும் அந்த இடத்தில் கட்டிடம் கட்ட இயலவில்லை என்று அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே பள்ளிக்கு வேண்டிய புதிய கட்டிடத்தை பாளயங்கோட்டையிலுள்ள அரசு தலைமை மருத்துவமனையில் கட்டுவதற்கு அரசு 31—11—1981-ல் ஆணையிட்டது. பொது சுகாதார இயக்குநர் நாகர்கோயில் அரசு தலைமை மருத்துவமனையில இயங்கி வந்த ''மல்டி பர்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ்' பயிற்சி (பல்நோக்கு சுகாதார பெண் பணியாளர்) பள்ளியை மேற் கூறப்பட்ட புதிய கட்டிடதிற்கு பணியாளர் மற்றும் உபகரணங்களுடன் மாற்றும்படி கருத்துரு அனுப்பியதன்பேரில் அரசு 22—11--1982-ல் உத்திரவிட்டது. மேற் கூறப்பட்ட பல் நோக்கு சுகாதார பெண் பயிற்சியாளர் பள்ளிக்கு திருநேல்வேலி மருத்துவக் கல்லுரி மருத்துவமனை முதல்வர் நாகர் கோயிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ அலுவலரும் கன்னியாகுமரி மாவட்ட சுகாதார அலுவலரும் மாணவர்களை தேர்ந்தெடுக்க அரசு ஆணையிட்டுள்ளது. 1—2—1983 முதல் இப்பயிற்சி பள்ளி இயங்குகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. மி. வின்செண்ட் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கட்டிடம் கட்ட இடவசதி இல்லை என்று அரசு தெரிவித்துள்ள கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. நாகர் கோவில் தலைமை மருத்துவமனையில் புதிதாகச் சில மாடிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளன. மேலும் அப்படி இடவசதி பெறுகின்ற வகையில் குமரி மாவட்டத்தில் வேறு பல இடங்கள் உள்ளன. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் இட வசதியைப் பெற்றுத் தந்தால் அரசு அதை ஏற்றுக் கொள்ளுமா ? படித்தவர்கள் அதிகமாக இருக்கும் குமரி மாவட்டத்தில் வேலைக் கொள படிக்கும் மருத்துவ சென்டர் இது ஒன்று மட்டும் தான் இருந்தது. எனவே இருந்த மருத்துவ





சென்டர் வசதியை இழந்து தவிக்கும் குமரி மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்பு காட்டுவாரா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் மீது நிச்சயமாக அன்பு காட்டப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஹட் ட்வெல்லர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் அந்தப் பகுதியிலே குடிசை போட்டு என்க்ரோச்மென்டிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அகற்ற வேண்டும் என்று பார்த்தபோது அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் உதவி செய்தால் நலம். மேலும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இடத்தைப் பெற்றுத் தந்தால் முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தால் நிச்சயமாக அரசாங்கம் பரிவோடு அதனை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கையில் அந்த இடத்தினை எடுப்பதிலே இடர்பாடுகள் இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அந்த இடத்திலேஇருக்கின்ற சிக்கல்களைப்பற்றி அந்த மாவட்டத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தகவல்களைக் கொடுத்துள்ளார்கள். எனக்கு முன்னால் பேசிய நாகர்கோவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய சில தகவல்களைக் கூறியுள்ளார்கள். ஆனால் குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் புதிய திட்டங்கள் வருவதே மிகக் கஷ்டமான ஒரு காரியம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் செயல்பட்டு வந்ததைக்கூட எடுத்துச் சொல்வது என்பது அந்த மக்களுக்குச் செய்கின்ற ஒரு * * . ஆகவே அதற்குத் தேவையான இடத்தைப் பெற்றுத் தருகின்ற நேரத்தில் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) ஆகவே அந்தப் பயிற்சி பள்ளியினை மீண்டும் அங்கே கொண்டு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார்

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலை நிச்சயமாக நடத்தலாம். பஞ்சாயத்துத் தேர்தலுக்கு
வாக்காளர்கள் ஜாபிதாவைத் தயாரித்து சுலபமாக நடத்துகிற
போது இந்த கூட்டுறவுச் சங்ககங்களுக்கு தேர்தல் நடத்தாமல்
இருப்பது சரியல்ல. தனி அதிகாரிகள் அங்கே காட்டாட்சி என்று
தான் சொல்ல வேண்டும். அந்த ஆட்சி மேலும் நீடிக்க வேண்டு
மென்று சொல்வது சரியல்ல. அதன் காரணமாக கூட்டுறவு
சங்கங்களில் ஏற்படக்கூடிய சிரமங்கள் கஷ்டங்கள் அதிகமாக
இருக்கின்றன என்பதைக் கூறி ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட
சட்டத்தை அமைச்சர் அவர்கள் அமலாக்குகிற முறையிலே
தேவையான அதிகாரங்களைப் பெற்று ஜூலை 1 ஆம் தேதி
தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று கூறி இந்தச் சட்ட முன்வடிவிற்கு என்னுடைய ஆட்
சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்
களே, தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி
அதிகாரிகள் நியமித்தல் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுக
நிலையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான்
எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல் புதிய
காம்ப்ரஹென்சிவ்லெஜிஸ்லேஷன் விரிவான கூட்டுறவுச்சட்டத்தை
நாம் இந்த அவையிலே நிறைவேற்றியிருக்கிறோம். அந்த
சட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்திலேயே நான் தெளிவாகச்
சொன்னேன். என்னுடைய மானியக் கோரிக்கைமீது விவாதம்
நடக்கிற போதும் தெளிவாகச் சொன்னேன். பல ஆண்டுகளாக
கூட்டுறவு இயக்கத்தினுடைய மேல் மட்டத்தில் தனி அதி
காரிகள் இருக்கிறபோது ஆங்காங்கு பல தவறுகள் நடக்கின்றன
என்பதையும் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திலே அது
வும் நுகர்வோர் அங்காடிகளில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த
விற்பனை அங்காடிகளில் எல்லாம் 29 இடங்களில் தவறுகள்
முறைகேடுகள் நடந்து, சி.ஐ.டி. பிரிவு கண்டு பிடித்து தக்க
நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்து நடவடிக்கையும்
எடுத்திருக்கிறோம் என்பதை இந்தஅவையிலே கூறியிருக்கிறேன்.
அது மட்டுமல்ல, பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம் என்று
சொல்லப்படுகிற பொது விநியோக முறையில் மலிவான
விலையிலே ஏழை எளிய மக்களுக்கு நலிந்த பிரிவினருக்கு பொருட்
கள் கிடைக்கவும் நுகர்வோர்களுடைய இரத்தத்தை இடைத்
தரசர்கள் உறிஞ்சுவதை தடுப்பதற்காகவும் சட்டத்திலே இருக்
கிற சந்து பொந்துகள் அடைக்கப்பட வேண்டும் என்றும்



அந்தச் சந்து பொந்துகள் அடைக்கப் பட்டது எவ்வாறு என்
பவைப் பற்றியும் அவையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.
எதிர் காலத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து தான் நுகர்
பொருள்களை வாங்க வேண்டும். இடைத் தரகர்கள் அறவே
நீக்கப் பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல் ஐ.எஸ்.ஐ.,
அக்மார்க் என்று ஒரு தரத்தினுடைய அளவைக் குறிக்கக்கூடிய
பொருள்கள் இருக்கிறபோது அவற்றைத்தான் கண்டிப்பாக
வாங்க வேண்டும். இல்லையென்றால் நடவடிக்கைக்கு உட்
படுத்தப் படுவார்கள் என்பதும், பிரிவு, 162-ன் கீழ் நுகர்பொருள்
களில் தவறு நடக்கிற போது, ''ஸ்டாக் டெபிசிட்'' என்ற
போர்வையிலே கையாடல் செய்கிறபோது அல்லது ஒரு உற்
பத்தியாளரிடமிருந்து வாங்காமல், இடைத் தரகர்களிடமிருந்து
வாங்கி , உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கியதாக பொய்யான
கணக்குகளை எழுதுகிற போது கடுமையான நடவடிக்கைக்கு
அதிகாரிகள் உட்படுத்தப் பட வேண்டுமென்பதற்கெல்லாம்
நாம் சட்டத்திருத்தத்தை கொண்டுவந்திருக்கிறோம். அநத நல்ல
நோக்கோடுநாம் சட்டத்தை ஈடேற்றிவிட்டு, தேர்தலை தள்ளிப்
போட வேண்டுமென்பது அரசினுடைய எண்ணம் அல்ல என்
பதை தெளிவு படுத்துவதற்காகத்தான் இதை கூறுகிறேன்.
அதுமட்டுமல்லாமல் வரவிருக்கிற தேர்தலைப்பொறுத்த வரையில்
அது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க்கட்சியாக
இருந்தாலும் சரி, அரசியல் கட்சிகளின் தலையீடே கூட்டுறவு
இயக்கத்திலே இருக்க முடியாத அளவிற்கு புதிய சட்டத்தை
தற்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம. குறிப்பாக உழவர்
பெருமக்கள், நலிந்த பிரிவினர்; ஏழை மக்களுடைய அமைப்
பாக அந்த அமைப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்
அனைத்து இயக்கங்களுடைய சட்ட மன்ற பேரவை மேலவை
உறுப்பினர்கள் அடங்கிய பொதுக்குழு பாரதத்தின் பல்வேறு
பகுதிகளுக்குச் சென்று, புதியதொரு முன் உதாரணமாக சட்
டத்தை நாம் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் கூட்டுறவுத்
துறையிலே தேர்தல் வருவதால் ஆளும் கட்சிக்கு பாதிப்பு என்ற
எண்ணம் இந்த அரசிற்கு அறவே இல்லை என்பதை சொல்
கிறேன். காரணம் ஆளும் கட்சிக்கு மட்டுமல்லாமல், எதிர்க்
கட்சி எதுவாக இருந்தாலும், தோழமை கட்சிகள் எதுவாக
இருந்தாலும்கூட, அரசியல் தலையீடே இருக்க முடியாத அள
விற்கு சட்டத்திலே நாம் திருத்தங்களை கொண்டு வந்திருக்கி
றோம். (This will be a movement by, for and of the people
என்றஅளவிலே தான் புதிய சட்டத்திலே தேர்தல் நடக்கிறபோது
இருக்குமென்ற காரணத்தால், தேர்தலை தள்ளிப் போட வேண்டு
மென்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட பில் அல்ல. ஜூன்
மாதத்தில் தனி அதிகாரிகளுடைய காலம் முடிவடைகிறது. நாம்
தற்போதுதான் சட்டத்தை மேலவையில் நிறைவேற்றியிருக்

## 7. அரசினர் சட்ட முன் வடிவு.

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1983.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன். காரணம் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுடைய நலனுக்காக இருப்பது. ஆனால் அங்கே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லை. பல ஆண்டு காலமாக தேர்தல் இல்லை. நியமனம் அங்கே இருக்கிறது. ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் நியமன உறுப்பினர்களாக இன்னும் சொல்லப் போனால் 8 ஆண்டுகளுக்கு மேலாக நியமனம் இருப்பதாக கேள்விப் படுகிறேன். தனி அதிகாரிகளுடைய தர்பார் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊழல், லஞ்ச லாவண்யம் இவைகளால் மக்களுடைய பணம் வீணாக்கப்படுகின்ற சூழ்நிலைதான் இன்றைக்கு இருக்கின்றன. ஆனலும் இந்த தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிப்பதற்கு அரசின் சார்பாக தொடர்ந்து பல காரணங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. '' காம்ப்ரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் என்ற ஒரு சட்டம் கொண்டு வந்ததால் கால தாமதம் ஆனது என்று சொன்னீர்கள். இப்போது சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. ஜனாதிபதியினுடைய அங்கீகாரம் பெற வேண்டும் என்றுசொல்கிறீர்கள். அடுத்து பூர்வாங்க வேலைகள் நடைபெறுகிறது என்று சொல்வீர்கள், இப்படி காலத்தைக் கடத்திக் கொண்டு இருப்பது சரியாக இருக்காது. எனவே இந்த சட்ட முன்வடிவை நான் எங்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன் என்பதோடு இப்படி மக்களுடைய பிரதிநிதிகள் எல்லாத் துறைகளிலும் இல்லாமல் இருப்பது ஒரு ஜனநாயகத்துக்கு உகந்தது ஆகாது. பஞ்சாயத்தில் இன்றைக்கு பிரதிநிதிகள் இல்லை, நகராட்சிகளில் இன்றைக்கு பிரதிநிதிகள் இல்லை.... (குறுக்கீடு)



(முற்பகல் 10–50)

நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கனவே கூட எவ்வளவு தவறுகள் நடைபெற்றன என்பதையெல்லாம் நாம் இங்கே விவாதித்து இருக்கிறோம். அந்தத் தவறுகள் தடுக்கப்பட வேண்டுமானால் '' நொண்டிக் குதிரைக்கு சறுக்கி விழுந்தது சாக்கு '' என்பது போல ஏதாவது சமாதானம் சொல்லாமல் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

**திரு. என். வ த ராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகள் நியமித்தல் திருத்தச் சட்ட முன்வடிவை நான் அறிமுக நிலையில் ஆட்சேபித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே விரிவான ஒரு கூட்டுறவு சட்டத்தை நாம் இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த 7 ஆண்டு காலமாகவே தனி அதிகாரிகள் தர்பாரிலேதான் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து வருகின்றன. அமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்கு இந்தத் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார் கள். நான் ஆச்சரியப்படுகிறேன். கூட்டுறவுத் துறை தான் தனியார் துறையைவிட ஒரு அளவுக்கு சிலாக்கியமானது என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதிலே தனி அதிகாரிகள் இருந்துகொண்டு ஆதிக்கம் செலுத்துகிற போது பல ஆண்டுகளாக இருக்கிறபோது நிச்சயமாக தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே 6 மாத காலத் திற்குள்ளே தேர்தலை நடத்தி விடக்கூடிய முறையிலே இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வராமல் அதற்கு மாறாக இருக் கிற காரணத்தினால் நான் என்னுடைய ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கங்கள் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆண்டு காலம் நீடிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யக் கூடிய நிலையிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஆட்சேபிக்க விரும்புகிறேன். அதற்கான கண்டனத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். காரணம் கூட்டுறவுச் சட்டம் முழுமை யாக இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு மேலவையிலும் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிறது. ஆகவே இந்த நிலையில் அதற்குத் தேவையான மற்ற அதிகாரங்களைப் பெற்று தேர்தலை நடத்துவதுதான் சரியான நடைமுறையாக இருக்கும். ஜூலை 1 ஆம் தேதி தேர்

[திரு சி. பொன்னையன்] [1983 ஏப்ரல் 13

றோம். எப்படி இருந்தாலும் மத்திய அரசிடத்தில் சென்று ஒப்புதல் பெற இன்னும் ஒரு மாதம் ஆகும். அதுமட்டுமல்லாமல் இரண்டு அவைகளுக்கு நான் ஒரு உறுதி மொழியை தந்திருக்கிறேன். வழக்கமாக சட்டத்தை ஈடேற்றுவதோடு நம்முடைய பணி நின்று விடுவதில்லை, என்று சொல்லி சட்டத்தை ஒட்டிய விதிமுறைகளும், சட்டத்தை ஒட்டிதான் இருக்கவேண்டும்.

Rules and by—laws of the Act should be in consonance with the main substantive provisions of the Act.

என்ற முறையிலே இருக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு பொதுக்குழு உறுப்பினர்களுடைய அனுமதியைப் பெற்று அந்த ரூல்களை கூட வெளியிடுவோமென்று, வழக்கத்திற்கு மாறாக நாம் ஒன்றில் இசைவைச் சொல்லியிருக்கிறோம். அதற்கு கிட்டத் தட்ட இரண்டு மாதங்கள் ஆகுமென்று பல்வேறு அரசியல் இயக்கங்களிலிருந்து பொறுக்குக்குழு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எச்சரிக்கையாகத்தான் நாம் இன்றைக்கு ஓராண்டு காலமென்று போட்டிருக்கிறோமே தவிர, கண்டிப்பாக தேர்தல் அதற்கு முன்னாலேயே வந்து விடும் என்று சொல்லி சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



## 8. மிகைச்செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1974–75 அளித்தல்.

1983 ஏப்ரல் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. 1980–81ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1974–75ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1974–75ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6.28 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக "மருத்துவம்", "பாசனம்" என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. மருந்துகள், மருந்துப் பொருள்கள், பார்னார்டு கதிரியக்கவியல் நிறுவனத்திலுள்ள கதிர் வீச்சு இயந்திரத்திற்கான சாதனங்கள் துணைப் பாகங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு தவிர்க்க முடியாத செலவு ஏற்பட்டது. வெளியூர்ப் பகுதிகளிலும் கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்கு அதிகச் செலவு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. எல்லா வகைக் கோரிக்கைகளின் கீழும் ஏற்பட்டுள்ள செலவுக்கு, பெட்ரோல், டீசல் எண்ணெய், உயவெண்ணெய், டயர், டியூபுகள் விலையில் ஏற்பட்ட பெருத்த உயர்வு, அகவிலைப்படி, ஏனைய படிகள் கொடுத்தது ஆகியவை முக்கியமான காரணங்களாகும். பாசனத்தின்கீழ் பராமரிப்புச் செலவுகளில் ஏற்பட்ட அதிகச் செலவு, அணைக்கட்டுச் சீரமைப்புப் பணிகள், வறட்சிப் பாதிப்புப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளருக்கும், இராமநாதபுரத்தைச் சேர்ந்த பாசனப் பணியாளருக்கும் தொகை கொடுத்தல், முந்தைய ஆண்டுகளில் செய்த தவறான வகைப் பாட்டுகளைத் திருத்தி

யமைத்ததில் இறுதியாகச் செய்த சரிக்கட்டுதல்கள் காரணமாகவும் மிகைச் செலவு ஏற்பட்டது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1974-75ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

9. வரவு-செலவுத் திட்டம், 1983-84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,37,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டத்தில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் குத்தாலம் ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை அமைக்கவேண்டிய இன்றியமையாமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெற்றுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,37,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைக் கருகில் அமைக்க உத்தேசித்துள்ள கருப்புக்கல் மெருகேற்றும் தொழிற்



சாலையை கருப்புக்கல் பெருமளவில் கிடைக்கும் திண்டிவனம் வட்டம் பகுதியில் அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,37,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அந்த வட்டத்தை தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவிக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,37,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,37,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதியில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் அதிகம் இருப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,37,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ.19,92,11,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,92,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,92,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,92,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி விதையில் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று பெருந்துறையில் புதிதாக ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :





''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,92,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும்* என்பது பற்றிய தொழில் துறை கொள்கைக் குறிப்புகள், விளக்கங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்று, சபைக் குறிப்பிலே ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்ததற்குப் பின்னால் இறுதியில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

அதற்கு முன்னதாக, இப்பொழுது உங்கள் மூலமாக அவைக்கு ஒரு வேண்டுகோளையும், அறிவிப்பையும் செய்ய விரும்புகிறேன். தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் எல்காட் என்ற நிறுவனத்தின் மூலம் எலக்ட்ரானிக்ஸ் டிஜிடல் கைக்கடிகாரங்களைத் தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கிறது, இந்திய நாடு முழுவதும் சுமார் 32 இலட்சம் கைக்கடிகாரங்களைத் தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அதிலே தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன்தான் முன்னோடியாக, முதன்முறையாக அந்த எலக்ட்ரானிக்ஸ் கைக்கடிகாரங்களைத் தயாரித்து, வெளிச் சந்தையிலே, மார்க்கெட்டிலே கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்களுடைய பார்வைக்காக, பேரவைத் தலைவர் அறைக்குப் பக்கத்திலே, கமிட்டி அறைக்கு முன்னாலே அது வைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கைக்கடிகாரங்களைப் பற்றி, எல்காட் நிறுவனத்தைப் பற்றி, '' COMMERCE ''

* 731—808 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

என்கிற பொருளாதாரப் பத்திரிகை, பிரபலமான பத்திரிக்கை

"It is a matter of pride for Tamil Nadu that ELCOT has come out with such sophisticated watches even though as many as 13 State Electronic Corporations as well as Hindustan Machine Tools have been Licensed to produce such electronic watches,"

என்று போட்டு அந்தக் கைக்கெடிகாரங்களைப் பற்றி அந்த பத்திரிகை மேலும் விவரிக்கிறது.

நான் நேற்றே சொன்னதைப்போல, அது மிகத் துல்லியமாக நேரத்தைக் காட்டக் கூடியது. மிகக் கவர்ச்சிகரமான முறையிலே, அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது. பல்வேறு டிசைன்களிலே, பல்வேறு கலர்களிலே கிடைக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளுக்கு ஒரு கைக்கடிகாரம் இனாமாகத் தரப்படுமா என்று கேட்கிறார்கள். அதைத் தயாரிக்கின்ற நிறுவனம், தமிழ்நாடு எலக்டரானிக்ஸ் கார்ப்பரேஷன், எல்காட் என்கின்ற அரசுத் துறை நிறுவனம். எனவே, அரசுத் துறை நிறுவனத்திலே செய்யப்படுகின்ற கைக்கடிகாரங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் இனாமாக எடுத்துக் கொண்டார்கள் என்ற கெட்ட பெயர் வந்து விடக் கூடாது என்கின்ற காரணத்தால் இனாமாகத் தருவதாக உத்தேசம் இல்லை.

ஆனால், அதற்குப் பதிலாக, தவணை முறையிலேயாவது வாங்கிக் கொள்வதற்கு அனுமதி தரலாமா என்று பேரவைத் தலைவரையும், செயலாளரையும் கேட்டோம். அதற்குக் கூட விதிகளில் இடமில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

இப்பொழுது வைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கைக்கடிகாரங்கள், வெளியே அதனுடைய விலை 303 ரூபாய்.

பெண்கள் கட்டுகின்ற கைக்கடிகாரங்கள் இரண்டு வகையான கடிகாரங்கள் சந்தையிலே விற்பனைக்கு வந்திருக்கின்றன. அதிலே 303 ரூபாய் 47 பைசா வெளியே விலை. இன்னொரு கடிகாரத்தின் விலை 277 ரூபாய் 97 பைசா. அது இங்கே, ஸ்பெஷல் டிஸ்கவுண்டாக, சிறப்புத் தள்ளுபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 275 ரூபாய் 74 பைசா விலையிலே கிடைக்கிறது.

277 ரூபாய்க்குக் கிடைக்கின்ற அந்தக் கடிகாரம் 252 ரூபாய்க்கு இங்கே கிடைக்கிறது.

எனவே, இரண்டிலேயும் சேர்த்து டிஸ்கவுன்ட் அதிலே 28 ரூபாய், இதிலே 25 ரூபாய்..



ஆண்கள் கட்டும் கடிகாரம் 290 ரூபாய். அது இங்கே 264 ரூபாய்க்குக் கிடைக்கும். அதிலே டிஸ்கவுன்ட் ஏறக்குறைய 26 ரூபாய், 27 ரூபாய் கிடைக்கிறது.

முதலிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொன்றுதான் வாங்கிக்கொள்ளலாம் என்று அறிவிக்கலாம் என்று இருந்தோம். ஆனால் நீங்கள் ஒன்றை வாங்கிக் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் போகும்போது, அதனுடைய கவர்ச்சியைக் பார்த்துவிட்டு வீட்டிலிருக்கின்ற சகோதரிகள் நிச்சயமாக எனக்கு இல்லையா என்று கேட்பார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கும் சேர்த்து, இரண்டாக வாங்கிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, 50 ரூபாய் டிஸ்கவுன்ட் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷனில் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே கார்ப்பரேஷனிலே பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் பார்த்து அதிலே எந்த டிசைன் பிடிக்கிறது என்பதை முடிவு செய்து கொண்டு, பின்னாலே பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) அதிலே கியாரண்டியெல்லாம் இருக்கிறது. இந்த வேண்டுகோளை மட்டும் இப்பொழுது வைத்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரைகளுக்கு பிறகு என்னுடைய விளக்கத்தைச் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர்களுக்குத் தர வேண்டுமென்று கேட்கவில்லை. ஏனென்றால் நீங்கள் சொன்னமாதிரி, ஒரு குற்றச்சாட்டு வரும். எனவே, அங்கத்தினர்களின் சார்பிலே சேர்த்து ஆடவர் கட்டுகின்ற வாட்ச் ஒன்றும், லேடீஸ் கட்டுகின்ற வாட்ச் ஒன்றும் நம்முடைய துணை சபாநாயகரவர்களுக்கு பரிசாக அளித்தால், அவர் எல்லோருக்கும் காட்டி விளம்பரம் செய்வார் என்று சிபார்சு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கொடுத்தால் வாங்கிக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, துரைமுருகனுக்குக் கூட ஒன்று அன்பளிப்பாகக் கொடுக்கலாம்,

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தவணை முறையில் 10 மாதங்களுக்கு சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** இதைப்பற்றி துறைச் செயலருடனும், துறைத் தலைவரிடமும் பேசினேன். அரசு இலாகா, உறுப்பினர்களிடமிருந்து டெலிபோன் பாக்கி பிடிப்பது போன்று, அரசுத்துறை நிறுவனம் அங்கே பிடித்துக்கொள்ள முடியவில்லை என்று கூறுகிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** இந்த எலக்ட்ரானிக் வாட்ச் இரண்டு கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். உறுப்பினருக்கு ஒன்றும், மனைவிக்கு ஒன்றும் என்று. ஆனால் சில உறுப்பினர்களுக்கு * * * * இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. த. சிதம்பரம் :** துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திற்குப் பல நல்ல திட்டங்கள் வர இருந்தும், வராமல் வெளி மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மின்வெட்டின் காரணமாக பல தொழில்கள் இயங்காமல், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிற நிலையில், இந்தத் தொழில் மானியம் வந்திருக்கிறது என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை விட மிகப் பெரிய ஆச்சரியம், எல்லா மாநிலங்களிலும் செய்யாத ஒரு புதிய சாதனையை நம்முடைய மாநிலத்திலே செய்வதாக அறிக்கையிலே கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம் என்று கேட்டுப் பார்த்தேன். அதற்கு இந்த அரசாங்கத்தினுடைய பழக்கம் தான் காரணமாக இருக்கும் என்று நம்புகிறேன். அவசரச் சட்டங்களை அதிகமாகப்போட்டு பழக்கப்பட்ட இந்த அரசாங்கம் Ordinance பேக்டரி, 'திருச்சிராப்பள்ளி' என்றஅவசரச் சட்டங்களை—உற்பத்தி செய்யக் கூடிய தொழிற் சாலையை திருச்சிராப்பள்ளியிலே ஆரம்பிப்பதாக இந்த குறிப்பிலே கொடுத்திருக்கிறீர்கள். 57-ஆம் பக்கம் ஆங்கிலத்தில் ஆர்டினன்ஸ் பேக்டரி, திருச்சிராப்பள்ளி துவக்க இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆக அவசரச் சட்டங்கள் அதிகமாக போட்டுப் பழகிய இந்த அரசாங்கம், இந்த மாநிலத்தில் எல்லா வகையிலும், அவசரச் சட்டங்களை உருவாக்குகின்ற தொழிற்சாலையை ஆரம்பிக்கிறது என்பதை பெருமைக்குரிய ஒன்றாகக் கருதுகிறார்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அதைப்போல் ஏன் பல தொழில்களை நீங்கள் இங்கே நடத்தவில்லை? ஏன் அவைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று கேட்டபோது, நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியும், மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் வரவில்லை, அனுமதி கிடைக்கவில்லை என்றெல்லாம் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் அவர்களை கேட்கவிரும்புவது எல்லாம்,—நீங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எத்தனை அனுமதிக்காக கேட்டீர்கள்? அதிலே எத்தனைக்கு அனுமதி கிடைத்திருக்கிறது? எவ்வளவிற்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதுதாம். இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களின் பார்வைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பார்களா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி மன்றத்து உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றுசேர்த்து கூட்டி, நீங்கள் இந்தத் தொழில்களுக்கு அனுமதி தரவில்லை என்று கண்டன பேரணிகளை, பொதுக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிற நீங்கள் . . . (குறுக்கீடு)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சிதம்பரம் இங்கே ஆர்டினன்ஸ் பேக்டரி பற்றி சொன்னார்கள். அதற்குத் தமிழாக்கம் அவசரச் சட்டங்கள் பேக்டரி என்று சொன்னார்கள். அப்படி ஒரு பேக்டரி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. சி. த. சிதம்பரம்:** மாண்புமிகு நமது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நான் பேசியதை, அவர் சரியாக ஆங்கிலப் புத்தகத்தைப் பார்க்காமல் அவசரமாகக் குறுக்கிட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். உங்களுடைய தொழிற் கொள்கையிலே 57-வது பக்கத்திலே பார்த்தால் நான் சொல்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். உங்களிடத்திலே ஏற்பட்ட தவறு . . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் இடத்திலேயிருந்து தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேனே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆர்டினன்ஸ் பேக்டரி என்பது படைக்கலத்திற்கு பயன்படுகிற ஒரு தொழில். அதைத் தயாரிக்க, அந்தத் தொழிற்சாலையை மைய அரசு 1966-லே திருச்சியிலே துவக்கியது. எனவே ஆர்டினன்சை இந்த ஆர்டினன்சோடு ஒப்பிட்டுச் சொல்வார்களானால் ஒருவேளை மத்திய அரசை

மனதிலே வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினால் அதை நேரடியாகவே அவர்களைப் பார்த்து பேசலாம். அதை செயல்படுத்தாத எங்களைப் பார்த்துச் சொல்லவேண்டாம்.

**திரு. துரைமுருகன்** : தலைவர் அவர்களே, இதிலே இந்த ஐ-யை இருக்கக்கூடாது. இதை இந்த ஐ-யோடு சேர்த்து அச்சடித்து, புருப் கரெக்சன்கூட பார்க்காமல் கொடுத்து இருக்கிறீர்களே என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். உங்களுடைய டிபார்ட்மென்ட் அந்த லட்சணத்திலே வேலை செய்கிறது. இதற்கு மத்திய அரசு, மாநில அரசு என்று பேசுவதெல்லாம் பிரயோஜனம் இல்லை. டிபார்ட்மென்ட்லே பார்க்கவில்லை. ஏன் பார்க்கவில்லை என்று அவர்களைக் கேளுங்களேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 40 பக்கங்கள், 50 பக்கங்கள் என்று பிரின்ட் பண்ணுகிறபோது ஒரு சிறு எழுத்துப் பிழை, அச்சுப்பிழை ஏற்படுவது என்பது பெரிய பிரச்னை அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இது துறையினுடைய கையாலாகாத தனத்தை காட்டாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற வகையிலே பேசுகிறபோது பேசலாம். **

(குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. சி. கோபால் : சவால்கள் மாதிரி இருப்பது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு).

**திரு. துரைமுருகன்** : **

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : தலைவர் அவர்களே, அதை சேர்த்தே எடுத்துவிடலாம். பின்னாலே இரண்டு பேரும் பேசப் போகிறோம் என்ற பொருளிலே நான் அதைச் சொன்னேன்.

**திரு. சி. த. சிதம்பரம்** : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் என்று எல்லாம் சொன்னார்கள். ஆகையினாலே இதிலே இருக்கக்கூடிய தவறுகளை மட்டும் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். இந்த 'ஐ' தேவை

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இல்லை என்பதை ஒத்துக்கொண்டால் பிரச்னை தீர்ந்து போய் விடுகிறது. ஆகவே அதை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தொழிற்கொள்கையிலே இந்தத் தொழில் மேம்பாட்டுக் கழகம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதிலே 1980-81 ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் ரிப்போட்டிலேகூட மொத்தம் 602.33 லட்சம் நஷ்டத்திலே இருக்கிறது என்று அந்த ரிப்போர்ட் கூறுகிறது. எப்படி நஷ்டம் வந்திருக்கிறது என்றால் சிமென்ட் பிளான்ட்டிலே 169.39 லட்சமும், ஸ்டீல் பிளான்ட்டிலே 412.33 லட்சமும் மற்ற வகையிலே 20.61 லட்சமும், ஆக மொத்தம் 602.33 லட்சம் நஷ்டம் வந்திருக்கிறது என்று இந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த மேம்பாட்டுக் கழகம் எப்படி செயல்படுகிறது, அது எந்த அளவிலே நஷ்டத்தை நோக்கி நடைபோடுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், தொழில் முதலீட்டுக் கழகம் எப்படி நடந்து கொண்டு வருகிறது என்பதைப் பற்றி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இதற்கு மாறாக அது நடை போட்டுக் கொண்டு வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1977-78-லே அதனுடைய லாபம் 133.68 லட்சம். 1979-80-லே லாபம் 85.16 லட்சம். 1980-81-லே 2.24 லட்சம் லாபம். ஆகவே, 103.68 லட்சம் லாபமாக இருந்தது, 85.16 லட்சத்திற்குக் குறைந்து, இப்போது 80-81-லே 2.24 லட்சத்திற்குக் குறைந்திருக்கிறது என்பதை எப்படி நல்லமுறையிலே செயல்படுகிறது என்று சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11-20)

ஏன் இது குறைந்து இருக்கிறது என்பதற்குக் காரணம் வரிக் கடன் 87.76 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே லாபம் குறைந்து இருக்கிறது. ஆகவே முதலீட்டுக் கழகத்தின் லாபம் குறைந்து இருப்பதில் இருந்து அவர்களுடைய செயல்பாட்டை இங்கே நாம் தெரிந்து கொள்ளலாம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளுக்குச் சலுகைகள் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். 15 சதவிகிதத்திற்கு இணையான தொகை அல்லது ரூ. 15 லட்சம் அளவிற்குச் சலுகைகள் அளிக்கிறோம் என்று

சொல்கிறீர்கள். எங்களுடைய பகுதியில் பல பேர் தொழில் நடத்த, புதிதாகத் தொடங்க வந்தார்கள். நம்முடைய அமைச் சருக்குத் தெரியும். என்னுடைய பகுதியில் இருப்பவர்கள் தான் சென்னையில் ஆனாலும் சரி, கோவை மற்ற பகுதிகளில் ஆனா லும் சரி, தொழில் தொடங்க முன்வருகிறார்கள்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஈ) திரு. பொ. விஜயராகவன் கைது.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொ. விஜய ராகவன் அவர்கள் அஸ்ஸாம் படுகொலையைக் கண்டித்து ஊர் வலம் வந்தபோது கைது செய்யப்பட்டு இருப்பதாகத் தகவல் வந்து இருக்கிறது. அது பற்றி தங்களுக்கு ஏதேனும் தகவல் வந்து இருக்கிறதா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்):** இதுவரையில் அது பற்றிய தகவல் இல்லை.

[9. வரவு—செலவுத்திட்டம், 1983-84—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).]

**திரு. சி. த. சிதம்பரம் :** என்னுடைய பகுதியில் உள்ளவர்கள் தொழில் தொடங்க முன்வருகின்ற நேரத்தில், அந்தச் சலுகை களை அளிக்க வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் மைய அரசாங்கம் அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வில்லை. ஆகவே, சலுகைகள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த கொள்கை விளக்கக்குறிப்பில் 15 சதவிகிதம் சலுகைகள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதைக் கேட்கிற நேரத்தில் மத்திய அரசு பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவில்லை என்று சொல்கிறீர்கள். ஆகவே, எங்களுக்குச் சலுகைகள் இல்லாத காரணத்தால் தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்கள் வந்தும் அது நடைமுறைப்படுத்த முடியாமல் இருக் கிறது. எங்களுடைய பகுதியில் ஒரு கெமிக்கல்ஸ் தொழிற் சாலை தொடங்கவேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டது. இந்தச் சலுகை இன்மை காரணமாக அது விடப்பட்டு இருக்கிறது. அதைப்போல 4-5 பஞ்சாலைத் தொழிற்சாலைகள் அங்கே ஏற் படுவதாக இருந்து, இந்தச் சலுகை இல்லாத காரணத்தால் அதுவும் நின்று போய் இருக்கிறது. ஆயுர்வேத மருந்து தயாரிக் கும் தொழிற்சாலைக்கான ஏற்பாடுகள் கூட செய்து, அந்தச் சலுகை இல்லாத காரணத்தால் அங்கே உடனடியாக எந்தவித



மான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்ற காரணத்தால், அந்தத் தொழிற்சாலையே இன்றைக்கு வரவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசாங்கம் கொடுக்காவிட்டாலும், நாங்கள் மாநில அரசே அந்தச் சலுகைகளைக் கொடுத்து தொழில்களை ஊக்குவிக்கப் போகி றோம் என்பதை இங்கே தெளிவுபடுத்தவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிமெண்ட் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு சிமெண்ட் இறக்குமதி செய்யப்படுகிறது. அது உண்மையான சிமெண்ட்தானா அல்லது போலி சிமெண்ட்டா என்று தெரிய வில்லை? எங்கள் மாவட்டத்தில் கள்ளார் பிளாக்கில் அந்தச் சிமெண்ட்டை உபயோகித்து கட்டப்பட்ட கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது என்று சொல்லி, அந்தச் சிமெண்ட்டை ஆய்வு செய்வதற்காக மத்திய ஆராய்ச்சிக் கழகத்திற்கும், சென் னைக்கும் வந்து இருக்கிறது. இதிலே சிலர் ஏதாவது ஊழல் செய்கிறார்களா அல்லது போலி சிமெண்ட்டைக் கொடுத்து இந்த நிலைமையை ஏற்படுத்துகின்றார்களா என்பதைப் பற்றி மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே, திருப்பத்தூரிலே ஒரு டயர் தொழிற்சாலை அமைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னமும் அந்த டயர் தொழிற்சாலை அங்கே வரவில்லை. அந்தத் தொழிற் சாலை அங்கே வரவில்லை என்று சொன்னால், அந்த நிறுவனம் அங்கே போட்ட பணத்தை, அதற்காகச் செலவழித்த பணத்தை, மூலதனத்தை, தொழில் ஆரம்பிக்க அவர்கள் செய்த செலவை, எப்படி ஈடுகட்ட முடியும். அவர்களுக்கு இந்த அரசாங்கம் செய் யும் உதவி என்ன என்பதை உள்ளபடியே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொழிற்சாலை அங்கே உருவாக்கப்பட ஒரு நிறைவான முடிவை அரசாங்கம் காணவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலையைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறீர்கள். அது பலருக்கு வேலை வாய்ப்பைத் தந்து இருக்கிறது. சுற்றி யுள்ள இடங்களுக்குப் பயன் தந்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். சிவகெங்கையில் நீண்டநாளாக ஒரு சர்க்கரை ஆலை வேண்டும் என்று கோரப்பட்டு, அதற்காக பல ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. விரைவாக அங்கே அது நடைமுறைப்படுத்தப் படும் என்று முன்னாலே சொல்லப்பட்டது. ஆனால் இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் அது செயல்படுத்தப்படவில்லை. ஆகவே சிவகெங்கையில் ஒரு சர்க்கரை ஆலையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கயர் தொழிற் சாலை மூடிக்கிடக்கிறது. தமிழ்நாட்டில் மிகப்பெரும் தொழிற் சாலை அது. ஏற்றுமதி சம்பந்தப்பட்டவரையில் கயர் பாய் உற்பத்திச் செய்கின்ற தொழிற்சாலை அது ஒன்றே ஒன்று தான். இன்றைக்கு அது மூடிக்கிடக்கிறது. அந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தி, வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நன்மை செய்யுமா? அல்லது வேறு ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி வேலையில்லாத் திண்டாட்டத் தைப் போக்குமா என்பதை அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 'இந்தியன் ரேயர் எர்த்ஸ்' மணல் கம்பெனி. அதை வைத்து நிறைய உப தொழில் செய்யலாம் என்று கருத்துச் சொல்லப்படுகிறது. அதைப் பயன்படுத்தி அங்கே நிறைய துணைத் தொழில்களைத் தொடங்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'சிப்காட்' பற்றி அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஐந்து ஆண்டுக் காலத்திற்கு மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்போம் என்று சொன்னார்கள். இப்போது அப்படிக் கொடுக்கிறார்களா என்று தெரியவில்லை. ஐந்தாண்டுக் காலத் திற்கு சிப்காட்டுக்கு மின்சாரம் முழுமையாகத் தருவோம் என்று சொல்கிறவர்கள் இப்போது இருக்கிற தொழிற்சாலைகளுக்கு முழுமையாக அல்ல, எத்தனை மணி நேரம் மின்சாரம் தருவோம் என்று சொல்லத் தயாரா? இத்தனை மணி நேரம் மின்சாரம் வரும் என்று சொல்லக்கூட இந்த அரசாங்கம் தயாராக இல்லை. அதனால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு, வேறு மாநிலங் களுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எத்தனை மணி நேரம், எந்தநேரத்தில் இப்படித் தருவோம் என்பதையாவது சொல்ல வேண்டும்.

அதைப்போன்று எங்கள் பகுதியிலே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி பகுதியிலே இப்போது நிறைய தொழில் தொடங்க வசதி படைத்தவர்கள் முன்வந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அமைச்சரவர்களிடத் திலே நேரிலே சொல்லியிருக்கிறோம். அதை அமைச்ச ரவர்கள் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு தொழில் கருத்தரங்கு நடத்தி, அங்கே வருபவர்களைப் பயன்படுத்திக் கொண்டு நல்ல முறையிலே தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். வெளி மாவட்டங்களிலும் வெளி மாநிலங்களிலும் தொழில்களைத் தொடங்கியவர்கள் இப்போது சொந்த மாவட்டத்தில் தொழில் தொடங்கலாம் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக்





கொண்டு அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அதற்கு விரைவிலே ஒரு கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். பின்தங்கிய மாவட்டத்தில் பல தொழில்கள் வர இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். முந் தைய அரசு எடுத்த முயற்சிகளை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலை வரவர்களே, நம்முடைய தமிழகம் தொழில் துறையிலே நல்ல முன்னேற்றம் கண்டிருப்ப தக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அண்மைக் காலங்களில் அதாவது 1979—80-ல் உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்கள் சதவீத பங்கைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அதாவது, percentage share of States in net domestic produc icn தமிழ்நாடு 4-வது இடத்தைப் பெற் றிருக்கிறது. மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் அடுத்து தமிழ்நாடு 4-வது இடத்தைப் பெற்றிருக் கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதைப்போன்று அகில இந்திய முன்னேற்றத்தை ஒப் பிட்டுப் பார்க்கும்போது, அதாவது 'இன்டெக்ஸ் நம்பர் ஆஃப் இன்டஸ்டிரியல் ப்ரொடக்ஷன்ஸ்' என்பதைப் பார்த்தால் 1980-ல் மட்டும் அகில இந்திய முன்னேற்றம் 1.2 சதவிகிதம் என்றிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் 10 சதவீத உயர்வு காணப்படுகிறது.

அதைப்போன்று சராசரி நபர் வருமானம் 1970—71ஆம் ஆண்டு விலைவாசி அடிப்படையில் 1976 முதல் 1979 வரையில் உள்ள கணக்கைப் பார்க்கும்போது அகில இந்திய சராசரி 5 சதவீதம் கூடியிருந்தால் தமிழ்நாட்டில் 9.5 சதவீதம் கூடியிருக்கிறது என்பதை நிச்சயமாக நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதைப்போன்று தொழில் துறையில் உருவாக்கப்பட்டி ருக்கிற வேலைவாய்ப்பு எண்ணிக்கையை தமிழ்நாட்டில் 1980—81 ஆம் ஆண்டில் பார்த்தால், இதிலே தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. மகாராஷ்டிரம், மேற்கு வங்காளத்தை அடுத்து தமிழ்நாடு மூன்றாவது இடத் தைப்பெற்று, 8½ இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. ஆகவே நல்ல முன்னேற்றம்

ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும் ஒன்றை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களோடு பேசி, அவர்களை வற்புறுத்தி இன்னும் கொஞ்சம் அதிகமான பணத்தை தன்னுடைய இலாகாவுக்கு பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1800 கோடி ரூபாய் செலவு செய்கின்ற இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீட்டில் 22 கோடி ரூபாய்தான் பெரும் தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது போதாது என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-30)

இங்கே தொழில் வளர்ச்சி போதாது, தொழில் வளர்ச்சி மங்கி விட்டது என்று சொல்பவர்கள் பலபேர் இருக்கிறார்கள். நான் அவர்களைக் குறை சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் பெரும் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமானால், மாநில அரசுகள் அதற்கு மத்திய அரசைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்த பிறகுதான், லைசென்ஸ் கொடுத்த பிறகு தான் தொழில்களை துவங்க முடியும் என்பதையும் அவர்கள் மனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகாலமாக, தமிழகத்தின் தொழில் முனைவோர்கள், தொழில் துவங்கவேண்டும் என்று டெல்லிக்குப் போகும்போது, அங்கே அவர்களுக்கு ஒரு பட்டியலைக் காட்டி அதிலே 87 மாவட்டங்கள் இருக்கின்றன என்று காட்டி No industrial District என்ற வகையில், நீங்கள் அந்த மாவட்டத்திலேதான் தொழிலை துவங்க வேண்டும் என்று மத்திய அரசு அவர்களை வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

இதிலே நான் எடுத்து சொல்லவிரும்புவது என்னவென்றால், அந்த 87 மாவட்டங்களில் தென்னகத்தில் விந்திய மலைக்கு, இந்தப் பக்கம், பதார் என்று சொல்லப்படுகிற கர்நாடகத்தில் உள்ள மாவட்டம் மட்டும் தான் அந்த பட்டியலிலே இருக்கிறது. மற்ற 86 மாவட்டங்களும், விந்திய



மலைக்கு அப்பால், அந்தப் பக்கம் உள்ள வட மாவட்டங்களாகத்தான் இருக்கின்றன. இது தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதேபோல இப்படிப்பட்ட ஒரு தவறான கொள்கையை மத்திய அரசு வைத்திருக்குமானால் மூலப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கும், செய்து முடித்த பொருள்களை திரும்பவும் மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பதற்கும் செலவு அதிகம் ஆகும். அதனால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படும் என்றும் மத்திய அரசு மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் எல்லா மாவட்டங்களிலும் ஒரேவிதமான தொழில்களை ஆரம்பிக்கவும் முடியாது. டெக்னிக்கல் தொழில் யூனிட்டும் இருக்கின்றன, நான்-டெக்னிகல் தொழில் யூனிட்டும் இருக்கின்றன. வசதியில்லாத இடங்களில் இவைகளை மாற்றி ஆரம்பித்துவிடக் கூடாது. உதாரணமாக சம்பல் பள்ளத் தாக்கிலே கொண்டுபோய் டெக்னிகல் இன்டென்சிவ் யூனிட்டை ஆரம்பித்து போடுங்கள் என்று சொன்னால், எந்த தொழில் அதிபரும் அதற்கு தயாராக இருக்க மாட்டார்கள். அது மட்டும் அல்லாமல், 87 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் தொழில் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்று விரும்புவதும் சரியல்ல. அது முடியாது என்பதையும் நான் மத்திய அரசுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எல்லா இடங்களிலும் தொழில்களை வளரச் செய்ய முடியாது. உதாரணமாக சிக்கிம், டார்ஜிலிங் போன்ற இடங்கள் இருக்கின்றன. அங்கே சுற்றுலா வளர்ச்சியைத்தான் ஏற்ப்படுத்த முடியுமே தவிர, தொழில்களை உருவாக்கி நடத்துவது என்பது நடைமுறைக்கு சரியானது அல்ல. தொழில் மையமாக மாற்றப்பட்ட அமெரிக்க நாட்டிலே கூட சில பகுதிகள் தொழில் வளர்ச்சியில்லாமல் இருக்கின்றன. நியூ ஹேமிங்டன், ஆன்டேனியா, பெர்மின் போன்ற இடங்களில் தொழில் வளர்ச்சி என்பதே கிடையாது. ஆனால் அதற்காக அந்த பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா ? இல்லை. அந்தப் பகுதிகளின் மற்ற எந்த வளமும் பாதிக்கப்படாமல், எல்லா வாழ்க்கை வசதிகளும் பெற்றுத்தான் விளங்குகின்றன.

ஆகவே, இதுபோன்ற தொழில்மயமாக்கும் பட்டியலைத் தயாரிக்கும்போது அவைகளை, அந்தந்த தாலூக்கா டெவலப்மெண்ட்டுகளை வைத்துத்தான் பார்க்க வேண்டுமே தவிர மாவட்டவாரியாக வைத்து பிரிக்கக் கூடாது, அது மிகப் பெரிய தவறு. ஆகவே அதை மத்திய அரசு மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல மத்திய அரசின் முதலீட்டை பற்றி இந்த
மாமன்றத்திலே பலபேர்கள் பேசியிருக்கிறோம். நம்முடைய
மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர்
அவர்களும் கூட அதைப்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள்.
1967-க்கு பின்பு, தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி மாற்றப்
பட்டதற்குப் பின்னால் இதுவரையில் மைய அரசு தமிழகத்தில்
பெரிய தொழில்கள் என்ற பெயரில் என்ன முயற்சியை
செய்திருக்கிறது என்று பார்த்தால் அது உருப்படியாக செய்து
இருப்பது சேலம் ஸ்டீல் பிளாண்ட் என்ற பெயரில் ஆரம்பித்து
சேலம் ஸ்டீல் ரோலிங் மில்லாக வந்திருக்கிறதே அந்த 167
கோடி ரூபாய்தான் அதன் முதலீடு. மற்றபடி 2,3 தொழிற்சாலை
களுக்கு விரிவாக்கம் என்கிற பெயரில் ஏதோ செலவு செய்
திருக்கிறார்களே தவிர, வேறு எந்தவிதமான புதிய தொழிலும்
தமிழ்நாட்டிலே துவங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்
என்பதை மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் தெரிவிக்கவில்லை
என்றாலும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பி
னர்களாவது சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆகவே, தமிழகத்திலே புதிய தொழிற்சாலைகள் துவங்க
வேண்டும். பெரிய தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டும்
என்று மைய அரசை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்
கிறேன். கப்பல் கட்டும் மையங்கள் துவங்குவதில் தமிழகத்
திலே பல நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிபட்ட
ஷிப்பிங் யார்டு ஒன்றை மைய அரசு துவங்க வேண்டும்.
எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்
மின்சாரத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.
மின்சாரம் போதாது என்றெல்லாம் சொன்னார்கள்.
அவரைக் கேட்க விரும்புவது, அவர் ஒரு வார்த்தை
கூட கல்பாக்கத்தைப்பற்றிக் கூறவில்லையே ஏன் என்கிற வருத்
தம்தான். இதில் 17 ஆண்டுக் காலமாக என்ன செய்து கொண்
டிருக்கிறது மத்திய அரசு? ஏன் இவ்வளவு காலதாமதம் இதில்.
பிராஸஸ் யூரேனியம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.
அமெரிக்கா மறுத்துவிட்டாலும், கனடா தரவில்லை என்
றாலும், சோவியத் யூனியன் தரத் தயராக இருக்கிறது.
ஏன் அதை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தாரா
பூரிலே காட்டுகின்ற அக்கறையை ஏன் கல்பாக்கத்திற்கு காட்ட
அவர்களுக்கு மனம் வரவில்லை என்று கேட்கவிரும்புகிறேன்.

பொதுவாக முதலீடு சப்சிடைஸ் அதற்கு கிடைக்கவில்லை
என்று சொன்னாலும் கூட, தமிழகத்திலே 3 பெரிய யூனிட்டுகள்
இருக்கின்றன. பி எச். ஈ. எல். நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு
360 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறது. ஹிந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் 500 கோடி வரையில் வியாபாரம் செய்



கிறது. இன்டக்ரல் கோச் பேக்டரியும் கிட்டத்தட்ட 65 கோடி
வரையில் வியாபாரம் செய்கிறது. இந்த 3 நிறுவனங்களும்
சேர்ந்து சுமார் 500 கோடி ரூபாயை முதலீடு செய்து மேலும்
அவர்கள் தேய்மானத்திற்காக ஒதுக்குகின்ற பணத்தையும்
எடுத்து இதில் முதலீடு செய்தால், 75 கோடியிலிருந்து 100
கோடி வரை முதலீடு செய்ய முடியும். ஆகவே, அந்த வகையில்
இதில் முன் வந்து செய்வதற்கு மைய அரசு நடவடிக்கை எடுத்
துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு மாநில அரசுகள் கேட்கின்ற லைசன்சுகளையும்
லெட்டர் ஆப் இன்டென்டுகளையும் காலதாமதம் செய்யாமல்
வழங்குவதற்கு மைய அரசு முன் வரவேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே,
மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் 1982 ஆம்
ஆண்டில் 41 அனுமதி கடிதங்களை மைய அரசு கொடுத்த
தாகச் சொல்கிறார்கள். சில நாட்களுக்கு முன்னால், இங்கே
வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் திவாரி அவர்கள், தமிழ்
நாட்டிற்கு அந்த வகையில் 66 கடிதங்கள் அளித்திருக்கிறோம்
என்று சொன்னார்கள் இதிலே எது சரி என்று எனக்குத்
தெரியவில்லை.

இங்கே நேவல் அக்காடமி வரும் என்று எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறோம். ஆனால் அது ஒரு கேள்விக்குறியாகவே
இருக்கின்றது. அண்மையிலே திருச்செந்தூர் தேர்தலின்போது
மத்திய அமைச்சராக இருக்கின்ற தமிழ்நாட்டை சேர்ந்த திரு.
ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசும்போது தமிழ்நாட்டிற்கு
நிச்சயமாக நேவில் அக்காடமி கொடுக்கவேண்டும் என்று பேசி
இருக்கிறார்கள். ஆனால் அது வெறும் தேர்தல் வாக்குறுதியாக
இருக்கக்கூடாது. தேர்தல் முடிவுகளைப் பார்த்தபின் அதை
மாற்றி கொள்ளக்கூடாது. அவர்கள் தமிழ்நாட்டிற்கு அதை
அளிக்கவேண்டும். தமிழகத்தை தொழில் மையமாக ஆக்கு
வதற்குக் காரணமாக இருந்தவர் அவர் என்ற நன்றி உணர்வோடு
நான் கேட்டுக்கொள்கிறேன். அவர் மத்தியிலே அமைச்சராக
இருக்கின்றபோதே இதைச் செய்து தரவேண்டும் என்று வேண்டி
விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதே போல் அண்மையில் தமிழ
கத்திற்கு வந்த அமைச்சர் திரு. திவாரி அவர்கள் ஹிந்துஸ்தான்
ஃபோட்டோ பிலிம் தொழிற்சாலையை ஒட்டி கலர் ஃபிலிம்
தொழிற்சாலை ஒன்றைத் துவக்க இருக்கிறோம். அதாவது
இந்தியாவிலே ஆரம்பிக்கப்பட உள்ள 3 கலர் ஃபிலிம் தொழிற்
சாலையில் ஒன்றை அங்கே துவங்க இருக்கிறோம் என்று பேசி
இருக்கிறார்கள். வெறும் பேச்சோடு நிற்காமால் அது தமிழகத்

திற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலி யிலே மூன்றாவது சுரங்கம் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நான் பேப்பரிலே பார்த்தேன். அதற்காக நான் மைய அரசுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று இரண்டாவது அனல் மின் நிலையம் நெய்வேலியிலே துவக்கப் பட இருக்கின்றது. தமிழ்நாடு ஏற்கெனவே பசியோடு இருக் கின்றது, மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்றது. ஆகவே அங்கே உற்பத்தியாகின்ற மொத்த மின்சாரத்தையும் தமிழ்நாட்டிற்கே மொத்தமாகத் தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

திருச்சியிலே இருக்கின்ற பி. எச். இ. எல். நிறுவனத்தைச் சுற்றி சுமார் 200 சிறிய தொழில்கள் வளர்ந்து இருக்கின்றன. அந்தத் தொழில்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற வகையிலே அங்கே இருந்த ஒரு யூனிட்டை ஹைதராபாத்திற்கு மாற்றி விட்டார்கள். இந்த வருடம் அங்கே ஒரு வால்வ் ப்ரடக்ஷன் யூனிட்டை பஞ்சாபுக்கு மாற்ற இருக்கிறார்கள். இது உடனடி யாக கைவிடப்படவேண்டும். அப்போதுதான் அங்கே இருக்கின்ற சிறு தொழில்கள் பிழைக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து தொழில் திட்டங்களைப் பற்றி எல்லாம் பேசும் போது சேலம் உருக்காலையின் சோகக் கதையை நம்மாலே சொல்லாமல் இருக்க முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே தஸ்தூர் கமிட்டி அறிக்கையைச் சமர்ப்பித்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக்காலத்திலே இருந்து சேலம் உருக் காலையைப்பற்றி எழுதிக்கொண்டிருந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகு அண்ணாவின் தலைமையிலே எழுச்சிநாள் கொண்டாடினோம் சேலம் உருக் காலை வேண்டும் என்று கேட்டு. சேலத்திலே இன்டக்ரேட்டட் ஸ்டீல் ப்ளான்ட் வரும் என்று எதிர்பார்த்தோம். கஞ்சமலை யிலே இருக்கின்ற இரும்பை வெட்டி எடுப்பார்கள், ஒரு 3,000 கோடி அல்லது 4,000 கோடி ரூபாய் மூலதனம் செய்வார்கள் 10 அல்லது 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று எல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால் ஒன்றுமே நடைபெற வில்லை. 1971 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது அன்றையதினம் சேலம் பாராளுமன்றத் தொகுதியின் உறுப் பினரும் இன்றைய பேரவைத் தலைவருமான மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் அன்றைக்கு அதைத் துவக்கி வைத்த பிரதமர் அவர்களுக்கு தங்க மாங்கனியை அளித்தார்கள். நம்மாலே அதை மறந்துவிட முடியாது. அவர் நினைத்தார்,



சேலத்திலே செல்வம் கொழிக்கும் தமிழ்நாடு தொழில் மய
மாகும் என்று. ஆனால் எல்லாமே வீணாகப் போய்விட்டது.
தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். அண்ணாவின்
கனவு தூள் தூளாக ஆக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு நமக்குக்
கிடைத்திருப்பது என்ன ? வெறும் 167 கோடி ரூபாயிலே ஒரு
ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் ரோலிங் மில்தான் இடையிலே சொன்
னார்கள். இது ஒரு ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் ப்ளான்டாக மாற்றப்
படும் என்று சொன்னார்கள். அதாவது வருமா என்று எதிர்
பார்த்துக்கொண்டிருந்தோம். 400 கோடி அல்லது 500 கோடி
ரூபாய் முதலீடு செய்யப்படும், அங்கே ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல்
தயாரிக்கப்படும் என்று எண்ணிக்கொண்டிருந்த அந்த நம்பிக்கை
யும் வீணாக போய்விட்டது. நாம் யானையை எதிர்பார்த்தோம்,
ஆனால் பூனை கூட வரவில்லை, கழுதை தேய்ந்து கட்டெறும்
பாக ஆன கதையாக எல்லாம் போய் முடிந்திருக்கின்றது. ஆனால்,
இந்த நேரத்திலும் நாம் நம்பிக்கையை இழந்துவிடவில்லை.
இங்கே ஒரே ஒரு யோசனையை மட்டும் நான் மத்திய அரசின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற
ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் பிரிவினை விரிவுபடுத்துகின்ற வாய்ப்பு
இருக்கின்றது. எனவே அந்தப் பிரிவு நிச்சயமாக விரிவுபடுத்தப்
படவேண்டும். சேலத்திலே தேவையான அளவுக்கு நிலம் எடுத்து
வைத்திருக்கிறார்கள். தண்ணீர் போதுமான அளவுக்கு கிடைக்
கின்றது. பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் நிறையப் பேர்
இருக்கிறார்கள். தேவையான இன்ஃப்ராஸ்ட்டக்சர் முழுவதும்
சேலத்திலே கிடைக்கின்றது. ஆகவே இதைப்பயன்படுத்திக்
கொண்டு அங்கே ப்ளான்ட் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.
ரூர்கேலாவிலும், பொகாரோவிலும் இருந்து தயாரிக்கப்
படுகின்ற கச்சா ஷீட்டுக்களை சேலத்திற்கு அனுப்பினால்
வருஷத்திற்கு ஒரு 5 இலட்சம் அனுப்பினால் போதும், அதை
வைத்துக்கொண்டு இங்கே ஸ்டெய்ன்லஸ் ஷீட், கால்வனைஸ்ட்
ஷீட், டின் ஷீட் ஆகியவற்றைத் தயாரித்து தென் மாநிலம்
முழுவதும் நம்மாலே விற்க முடியும். அப்படிப்பட்ட ஒரு நல்ல
வாய்ப்பு இருக்கின்றது. வெளிநாடுகளிலே எல்லாம் இதைத்
தான் செய்கிறார்கள். ஜப்பான், சோவியத் யூனியன், யு.எஸ்.எ.
போன்ற நாடுகளில் எல்லாம் ஒரு இடத்திலே தயாரிக்கப்
படுகின்ற கச்சா ஷீட்டுக்களை எல்லாம் இன்னொரு இடத்திற்கு
அனுப்பி அங்கே பொருட்களாக மாற்றிக்கொடுக்கிறார்கள்.
அப்படிச் செய்யவேண்டும் என்று மத்திய அரசினிடத்திலே
நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மூலதனம் அதிகமாகத்
தேவைப்படாது. 200 கோடி அல்லது 250 கோடி செலவானால்
போதும். 2,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகவே
அதற்கு மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்திப் பெற
வேண்டும் என்றும் தமிழ்நாட்டு மக்களின் ஏமாற்றத்தைப் போக்கு
வதற்கு இது உதவும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்தமைக்கு தமிழக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 44, 45 லட்சம் மக்களைக் கொண்ட வட ஆற்காடு மாவட்டத்தில் நல்ல தொழில் வளர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. இராணிப்பேட்டையைத் தவிர மற்ற பகுதிகள் எல்லாம் இன்னும் தொழில் வளர்ச்சி அடையாமல் இருக்கின்றன. தமிழகத்தில் முதல்முதலாக இருக்கின்ற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். 25 சதவீத காடுகள் அங்கே இருக்கின்றன. அதைப் பயன்படுத்த வேண்டும். இரும்புத் தாதுப் பொருள்கள் அங்கே நிறைய இருக்கின்றன. Quartz, Chiua Clay, Ilmenite, Magnecite இவைகள் எல்லாம் உண்டு.

இவைகளை எல்லாம் பயன்படுத்துவதற்கு நல்ல தொழிற் சாலைகளைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம், ஆற்காடு ஆகிய 2 வட்டங்களையும் பிற்பட்ட வட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று ஏற்கனவே நாங்கள் மாவட்டத்திலிருந்து வேண்டுகோள் விடுத்து இருக்கிறோம். நேற்றைக்கு நாங்கள் எல்லாம் வலியுறுத்திப் பேசியிருக்கிறோம். அதிலே ஒரு வட்டத்தையாவது இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : சேர்மன் சார், தொழில் அமைச்சர் அவர்கள் இந்தச் சபை முன் வைத்திருக்கிற குறிப்பின் பேரில் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அந்தக் குறிப்பில் தமிழ்நாடு அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு நிறைய பண்ணியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். இது மகிழ்ச்சிகரமான செய்தி. அதை குறிப்பைப் பார்த்தால் ஓஹோ ஓஹோ என்று இருக்கிற மாதிரி இருக்கிறது. ஆனால் என்ன நடக்கிறது என்று பார்த்தால் உற்பத்தி பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. காரணம் எனர்ஜி இல்லை, தண்ணீர் இல்லை, ஒரு மனிதன் வாழ்வுக்குத் தண்ணீர் எவ்வளவு அத்தியாவசியமோ அதே மாதிரியாகத்தான் பவரும் அவசியம். அதற்குப்பிறகு இன்ப்ராஸ்டரக்சர் பெஸிலிட்டிஸ் இருக்கிறது. முன்கூட்டியே இந்த அரசாங்கம் நிரந்தரமான பாலிசியை எடுத்துக்கொண்டு ஏன் டெவலப்பண்ணவில்லை என்று கேட்க விரும்புகிறேன். நிறைய தொழிற்சாலைகள் வரவேண்டும், நடுத்தர, பெரிய, சிறிய, குடிசை தொழிற் சாலைகள், உற்பத்தி எல்லாம் வரவேண்டும். ஆனால் அதே சமயத்தில் அவர்களுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன என்ன கூறுகள் இருக்கின்றனவோ அவற்றைச் செய்ய மறுக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலதிபரும் 20 கோடி, 50 கோடி, 100 கோடி



என்று போட்டு எதை அவர்கள் நம்பி இருக்கிறார்கள்? முக்கியமாக பவரைத்தான் நம்பியிருக்கிறார்கள். பவர் இல்லையென்றால் எவ்வாறு உற்பத்தி பெருகும்? இப்போது இயற்கையின் காரணமாக சில கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அதைவிட செயற்கையின் காரணமாக பெரிய கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஒவ்வொரு இண்டஸ்ட்ரியிலும் ஆப்டிமம் புரடக்ஷன் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால்தான் அவர்களுக்கு சாதகமாக இருக்கும். ஒரு சைக்கிள் இன்டஸ்ட்ரி இருக்கிறது என்றால் குறைந்தது 4 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யவேண்டுமென்றால் 3 லட்சம் உற்பத்தி செய்தால் பேலன்ஸ் பண்ணலாம். 3 லட்சம் செய்தால் கொஞ்சம் கூடுதலாக லாபம் வரும், 4 லட்சம் செய்தால் உச்ச மட்டத்திற்கு லாபம் வரும் என்று கணக்கு இருக்கிறது. அதையெல்லாம் பார்த்துத்தான் இன்ஸ்டிட்டியூஷன்ஸ் கடன் கொடுக்கிறார்கள். தொழிலதிபர்கள் போடுகிற பணம்

only about 20 or 25 percent, but the rest comes from the Financial Institutions and Banks. But, if the power is not given to them, how will they produce? How will they keep up the establishment? How will they pay the salaries? How will they pay the interest on the principle which they have received from the various institutions? I Just want to realise the importance of these factors.

எனக்கு முன்னாலே ஒரு நண்பர் பேசியபோது சென்ட்ரல் கவர்ன்மெண்ட் 1967 இல் இருந்து உருப்படியாக திட்டம் போடவில்லை என்று சொன்னார். பாரதமாதா உங்களுக்கு மட்டும் பாரத மாதா இல்லை, இந்தியாவுக்கே பாரதமாதா, ஒரே முகமாகக் கண்ணால் பார்க்க வேண்டுமே தவிர, இங்கே மட்டும் கடைக் கண்ணால் பார்த்தால் அவர்கள் பெரிய கூக்குரல் போடுவார்கள். நீங்களே கொடுத்திருக்கிறீர்களே, இதிலே 55, 56, 58 பக்கங்களிலே. அதன் பிரகாரம் கணக்குப் பார்த்தால் 10, 15 ஆண்டுகளில் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் 500, 700 கோடி முதலீடு செய்திருக்கிறார்கள், மேலும் செய்யப்போகிறது. நெய்வேலி இரண்டாவது கட்ட சுரங்க வேலை மூலமாக பவர் புரடக்ஷன் எடுத்துக் கொண்டால் அதற்குக் குறைந்தது 500, 600 கோடி வேண்டும். நான் கேட்கிறேன்.

Power Minister is a Minister with Electricity, B.E. qualification. Can he not organise his Department perfectly? He is a knowledgeable person-absolute knowledgeable person. There are ever so many methods of producing, not only the Thermal and Hydal power available. He can

(முற்பகல் 11-40)

மத்திய அரசு அண்மையில் ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறது. சென்னையில் இருக்கின்ற 'மெட்ராஸ் ரீபைனரி லிமிடெட்' எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையை ஒரு 200 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தூய்மைப்படுத்தும் எண்ணெயின் அளவு 2.8 மில்லியன் டன்னிலிருந்து 5.6 மில்லியன் டன்னாக உயர்த்தி அப்படி உயர்த்தும்போது 6 லட்சம் டன் நாப்தா நமக்கு கிடைக்கும். இதை அங்கே இருக்கிற இரசாயன உரத் தொழிற்சாலை முழுவதும் பயன்படுத்தப்போவது இல்லை. மிச்சம் இருக்கிற நாப்தாவை வெளி மார்க்கேட்டில் தான் விற்கவேண்டும். இதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாநில அரசையும், மத்திய அரசையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த விரிவாக்கம் 1984 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிந்து விடும் என்று சொல்கிறார்கள். அப்படி ஆனால் முடிவதற்கு முன்பாகவே அதையொட்டி ஒரு பெரிய பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ் ஏற்படுத்த வேண்டும். அதற்கு மத்திய அரசு அனுமதி தரவேண்டும். மாநில அரசு அதை வற்புறுத்திப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதில் டிட்கோ நிறுவனம் பெரிய பங்கை ஏற்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதேபோல் குஜராத்தில் உள்ள பரோடாவைச் சுற்றி அந்த சுத்திகரிப்பு ஆலையை சுற்றி 400 கோடி ரூபாய் அளவில் அங்கே இருக்கிற பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே இங்கேயும் உருவாக்க வேண்டும் என்று நான் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத்துறையிலும், கூட்டுத்துறையிலும் தமிழக அரசு தன்னால் இயன்ற வரை முதலீட்டை செய்து இருக்கிறது. தனியாருக்கு கடன் வசதி அளித்து இருக்கிறார்கள். டிட்கோ, டி.ஐ.ஐ.சி. மூலமாக பிற்படுத்தப்பட்ட தாலுக்காவில் இப்போது 15 சதவீதம் மானியத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே டிட்கோ பரிசீலனை செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது என நான் அறிகிறேன். மத்திய அரசிடமிருந்து பணத்தை வாங்கி அதை தனிப்பட்ட தொழில் முனைவோருக்கு கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் அதை வாங்குவதற்கு தேவையான ஒரு ரீவால்விங் பண்டு ஏற்படுத்த வேண்டும் என்று மாநில அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



மின்னனுத் தொழிலிலே தமிழக அரசு நல்ல ஆர்வம் காட்டுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மின்னனுத் தொழிலில் தான் நாம் அதிகமான கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டை நூற்பாலையில் போட்டால் 125 பேருக்குத்தான் வேலை கிடைக்கும். அதே ஒரு கோடி ரூபாயை எலக்ட்ரானிக் இண்டஸ்ரீஸில் போடுவோமானால் 275 பேருக்கு வேலை கிடைக்கும் என்று கணக்குப் போட்டு சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது மின்னனுத் தொழிலில் ஏனோ நம்முடைய தமிழக அரசு இன்னும் அதிகமாக கவனம் செலுத்தாமல் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது 19 அல்லது 20 லட்சம் முதலீடு போட்டிருக்கிறார்கள் எல்காட் தொழிலில். அதற்கு கோடிக்கணக்கில் போடவேண்டிய முதலீட்டை லட்சக் கணக்கில் போட்டிருக்கிறீர்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 6-வது திட்ட முடிவில் மின்னனுத் தொழில் உற்பத்தி 33 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அது 33 கோடியாக இருந்தால் நம்முடைய மொத்த உற்பத்தியில் பார்க்கும் போது தமிழ்நாட்டின் பங்கு 3 சதவீதமாகத்தான் இருக்கும். ஆகவே இதைக் கொஞ்சம் அதிகமாக்கவேண்டும் என்றும் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு 15 கோடி ரூபாய் பட்ஜெட்டில் போட்டிருக்கிறோம். அந்த 15 கோடி ரூபாயை எல்காட் மூலமாக மாவட்டங்களில் எலக்ட்ரானித் தொழிற்சாலை ஆரம்பித்து அதன் மூலமாக அதைச் செயற்படுத்தவேண்டும் என்று நான் வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் துறையோடு போட்டிபோட்டு இலாபம் சம்பாதிக்கின்ற அளவுக்குத் திறமையோடு விளங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தகுதி படைத்தவர்கள், தொழில் தெரிந்தவர்கள் இவர்களைத் தலைவராகவும், நிர்வாக இயக்குநராகவும் நியமிக்க வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்கள் விஷயம் தெரிந்தவர்களாக இருந்தால் மட்டும் அவர்களை அந்த பதவியில் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகிகளை அடிக்கடி மாற்றுவதாலே தொழில் துறை நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் தொழில்பேட்டைகளில் தேவையான அளவுக்கு இன்னும் தண்ணீர் வசதி, சாலைகள் வசதி, குடியிருப்புகள் வசதி ஆகியவற்றைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 11-50)

take various other ways of producing it. Just now, I was talking and said why don't we go to foreign countries to find out how they are coping up with the situation? There are ever so many factors that can be taken into consideration and then you can start the power.

அராபியன் நாடுகளில் மழையோ கிடையாது. அவர்கள் எப்படி இந்த பவரை உபயோகிக்கிறார்கள்.

They invest about 600 crores of rupees to get 900 M·W. of power. They produce not only dieselised water but at the same time they could produce power. That is a very successful event. Why do not you go and find out and embark on Bonn Scheme to see that this State is perpetually freed from the shortages of power. I want that this Government which is keen to industrialise our State, should come out with a bold policy and see that it is executed.

பாலிசி மட்டும் இருந்தால் பிரயோஜனம் இல்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர் என்பது மிகவும் அவசிமானதொன்றாகும். தண்ணீர் குடிப்பதற்கே இல்லை. பாக்டரிகளுக்கு எப்படித் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்வீர்கள். எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ஸ்கீமை நாம் எடுத்தோம். நேற்று நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் கூட ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். வீராணம் புராஜெக்ட்டை சென்ட்ரல் கவர்ன்மெண்ட் தான் விட்டு விட்டார்கள், நாங்கள் அதற்கு பொறுப்பில்லை என்று சொன்னார்கள்.

Mr. Acting Speaker it is a very wrong statement that the Hon'ble Minister has given to this Hon'ble House.

சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அதுபற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அதை நிறுத்தி வைத்தார்கள். பரிசீலனை செய்பவர்கள் ஒரு ஸ்பெஷல் குரூப். அவர்கள் பரிசீலனை செய்துவிட்டு இது பீசிபிள் ஸ்கீம். இட் கேன் பி இம்ப்ளிமென்ட்டட் என்று சொன்னார்கள். அதற்குள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அவர்கள் கைவிட்டு



விட்டார்கள். என்ன காரணம்? அரசியலா? நான்-பீசிபிளா? பொறுமையா? என்ன காரணத்தால் அதை விட்டுவிட்டார்கள். அப்படி விட்டுவிட்ட அவர்கள் ஏன் மாற்றுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை? தண்ணீர் எவ்வளவு முக்கியமானது; தண்ணீர் இல்லாமல் யாரும் இருக்கவே முடியாது. இன்னும் ஒரு சில மாதங்களில் மழை பெய்யாவிட்டால் மக்கள் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளாவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை. அரசாங்கம் இதில் மெத்தனமாக இருந்துவிட்டார்கள் என்று குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு காங்கிரஸ்களின் இணைப்பிற்காக ஒரு பெரிய கூட்டத்தில் கடற்கரையில் பேசுகிறபோது இந்த வீராணம் திட்டத்தைப் பற்றி மிகக் கடுமையாக விமர்சித்தார்கள். தி.மு.க. ஆட்சியைப் பற்றி பல விவரங்களைச் சொல்லி வந்தார்கள், அதிலே நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் அது வீராணம் திட்டம். இது பீசிபிள் இல்லாத திட்டம்; நிறைய முறைகேடுகள் இருக்கின்றன என்று சொல்லி, முதலிலே தடங்களை ஏற்படுத்தியதே பாரத பிரதமர் அவர்கள் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

**THIRU K. S. G HAJA SHAREEF :** Sir, I do not know how far the Statement given by the Hon'ble Minister for Industries is correct. But at the same time the Government of India have appointed a Committee. The Committee found that it was a feasible Scheme.

**திரு. ப. நெடுமாறன் :** குறுக்கீட்டிற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னது எவ்வளவு உண்மை என்று மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் கேட்டார்கள். பாரத பிரதமர் பேசியது உண்மை மட்டுமல்ல, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயல் குழுக் கூட்டத்திலே, மதிப்பிற்குரிய ஹாஜா செரீப் அவர்கள் உள்ளிட்ட அந்தக் கூட்டத்திலே விவாதித்து இதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, வீராணம் திட்டத்தைப் பற்றி முழு

வதுமாக விசாரணை செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார்கள் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுமட்டுமல்ல, அதற்கு மாற்றுத் திட்டமாக கிருஷ்ணா நதி நீர் தரப்படுமென்று சொன்னார்கள். அது குறித்துப் பேசுவதற்காகத் தான் நம்முடைய முதல்வர் அவர்கள் கூட 18 ஆம் தேதி போகிறார்கள்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் :** மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசியிருக்கலாம். ஆனால், அந்தக் குழு போட்டார்களே, அந்தக் குழுவினுடைய 'வெர்டிக்ட்' என்ன?

It is afeasible scheme என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தண்ணீர் எங்கே இருந்தாலும், எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம். எந்தத் திட்டத்தையும் 'பீசிபிலிட்டி' என்று சொல்வதற்கு சாத்தியக் கூறு இருக்கிறது. அதுவல்ல பிரச்சனை. சென்னை நகருக்கு நிரந்தரமான திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றால், எதை நிறைவேற்ற வேண்டுமென்பது தான் கேள்வி. அந்தத் திட்டம் நின்றுவிட்ட நிலையிலேதான் இந்தப் பிரச்சனைகளெல்லாம் பேசப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் :** சார், அதைக் கைவிட்டவுடன் ஏன் ஆந்திராவிலேயிருந்து கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருவதறகு உடனடியாக எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவில்லை யென்று நான் தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன். நான் பலமுறை இந்தச் சபையிலேயே பேசியிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் நான் சொல்லியிருப்பது, உங்களுக்கு ஒரு 'டைனமிக் பாலிசி' இல்லை. எது எது முக்கியமாக இருக்கிறதோ, மனித வாழ்விற்கோ, இண்டஸ்ட்ரியல் பெருக்கத்திற்கோ அல்லது விவசாயப் பெருக்கத்திற்கோ பர்மனென்டாகப் பைசல் செய்வதற்கு நீங்கள் முயலவில்லை, யத்தனிக்கவில்லை யென்று நான் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் திரும்பல திரும்ப நான் சொல்ல விரும்புகிறேன்.





I am very happy Mr. Acting Speaker Sir, Hon'ble Industry Minister has stated that he is going to have an integrated scheme of developing simultaneously all these small scale, mediume scale, large scale including cottage industries and he has given some statistics to show how within two or three years a number of small scale industries have come up.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Mr. Deputy Speaker, Sir, may I request the Hon'bl Minister for industries to compare the performance of other States with our own performance.

நான் ரொம்பவும் வேதனையுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பக்கத்து மாநிலங்களான ஆந்திராவையும், கர்நாடகத்தையும் எடுத்துக் கொண்டால், அவர்கள் எவ்வளவு துரிதமாகப் பாடுபட்டு, எவ்வளவு கஷ்டப்பட்டு, பெரிய, பெரிய தொழில்களை உருவாக்குகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Please compare the performance of this State about 15 years back and what is your performance now within these 15 and 16 years. The Statistics will show the figures correctly. If you are not satisfied in the statistics if would like an Expert Committee be appointed to find out the actual factual thing. about all these things and also to find out why industries are not coming here.

100 கோடி, 50 கோடி முதலீடு போட்டுவிட்டு பிறகு உங்களுடைய உதவி இல்லை, உங்களுடைய ஒற்றுமை இல்லை, உங்களுடைய பவர் இல்லை, உங்களுடைய தண்ணீர் இல்லை. உங்களுடைய இன்ப்ராஸ்டிரக்சர் இல்லை. இவ்வளவும் இல்லாமல் எப்படி அவர்கள் சமாளிப்பார்கள்? இன்ப்ராஸ்டிரக்சர் பெசிலிட்டீஸ் ஒன்றும் முழுதாக ஏற்படுத்தவில்லை. ஒரு பெரிய இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஏற்படுத்தி விட்டு, அங்கே ரோடு இல்லை, லைட் இல்லை, பவர் இல்லை, தண்ணீர் இல்லை, பிள்ளைகள் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்கள் இல்லை, தொழிலாளர்கள் இருப்பதற்குக் குடியிருப்பு வசதியில்லை. இவ்வளவும் இல்லை என்றால், எப்படி இண்டஸ்டிரிஸ் வரும்? நேற்று

முந்தின நாள் இந்த அவையில் பேசப்பட்டது. கர்நாடக முதலமைச்சர் அவர்கள் ஹோசூர் பற்றி நீங்கள் மிகவும் கணிசமான அளவுக்கு முந்திவிட்டீர்கள், பெங்களூரிலிருந்து தான் எல்லா ரா மெட்டீரியல்ஸ்ஸும் போகிறது. ஆகவே, நீங்கள் தடை செய்ய வேண்டுமென்று ஏதோ சொன்னதாக, இங்கே ஒரு நண்பர் புகார் செய்தார். அது எவ்வளவு தூரம் சரி என்பது எனக்குத் தெரியவில்லை.

B.t the fact is Karnataka Chief Minister has no business to tell us what we should do and what we should not do. it is our business and it is o r job. To-day what we do is within our State. If he wants to state within two miles from Hosur, he can certainly do it. Bangalore needs raw mate.ials for its industries a d that State is benefitted. The people are going to Bangalore beca se this Government has not made neces ary i fra tructure facilities.

அவசியம் நீங்கள் அதைக் கண்ணும் கருத்துமாக இருந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பரவலாக ஒரு குற்றச் சாட்டுச் சாட்டப் பட்டு வருகிறது.

(நண்பகல் 12—00)

பெரிய தொழிலதிபர்கள் இங்கே வந்தால் அவர்கள் முதலமைச்சரவர்களைப் பார்ப்பதற்கு இன்டர்வியூ கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது ; மறுத்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இதைப் பற்றி நான் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால்,

The Federation of Chambers of Commerce at Delhi, having all the Chambers in it. All the Chambers are federated to it. It is a mainbody. It is also a policy m king body and the Governme t of India consult them very fraquently. When these people go to other States, they contac the Chief Minister of other States and the Chief Ministers are lso coming to witness the meeting and take part in the committee





meeting and spend hours together. I have known the Hon. Chief Minister of West Bengal, Mr. Jyothi Basu, when we had our meeting, the Executive Committee meeting, he brought with him e Reven e Minister, Industries Minister and Finance Minister and they took part in the discussion of the Committee. There was discussion about power development, industrial units working etc. After hearing the views of the committee members, he gave as an assurance that he would certainly do. This is the position in every State, wherever the meetings are held. But when that body came here I am sorry to make this observation, that they were not invited even for 'Tea'. It was a task to make the Government to agree and participate Is it proper and correct on the part of the Chief Minister and the Government. These are people, who are having biggest industries in the country. It is the duty of the Government to see that they are being encouraged and they should be interviewed by the Minister concerned and including the Chief Minister and they should take pride in consulting them and having more industrial expansion in Tamil Nadu. I am telling this because I want a dialogue should be organised between the Government, Government Officials and the members of the business community, so that the industrialists and business community would feel confident and say here is the Government on whom we can rely upon for their help for their assistance and for other administative facilities. At present it is not there.

There was news item in the paper that Neyveli can supply water at the rate of 150 million gallons a day. They can also bring that water to Madras City like water that is brought from Krishna.

இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கி றேன். இதற்கும் 150 அல்லது 200 வேகன்களைப் பெறுவதற் காக இரயில்வேயை அப்ரோச் செய்து, பாதுகாப்பு அமைச்சருடன் பேசி ஆலோசனை செய்தால் அவசியம் இதற்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்லாமல், வீராணம் ப்ராஜெக்ட்க்கு வாங்கிய பெரிய பெரிய குழாய்கள் பெருமளவிற்கு இருக்கின்றன. கால்வாய் வெட்டியதும் இருக்கிறது. அவைகளையும் இதன் மூலமாகப் பயன் படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும்.

உபயோகப்படுத்த முடியுமானால் எவ்வளவு தூரத்திற்கு உப யோகப் படுத்தலாம்; எவ்வளவு சீக்கிரமாக உபயோகப் படுத்தலாம்; என்ன செலவில் உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஒரு எமர்ஜென்சி ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

because we are facing a very very big crisis. We should take action on 'emergency basis'. I certainly feel that this is a national threatening and this should be taken according to the measures agreed upon by the Government and by all political parties.

நான் ஒரு யோசனையை அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரி ஒரு சுச்சுவேஷனில் அரசாங்கமே ஒரு உயர் மட்டக் குழுவை, consisting of all the members of the various Opposition parties be appointed so that the Committee might be given full powers to take all decisions to approach even Government of India and traders and other entrepreneurs to see how best we can save the situation and save the people from various sufferings.

சார், சில பொருள்களுக்கு இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். முக்கியமாக ''ஆட்டோமேடிக் ஸ்பேர் பார்ட்ஸ்'' புரட்யூசர்ஸ் சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் என்ன நாம் உற்பத்தி செய்யவில்லை—ரயில்வே பெட்டிகள் உற்பத்தி செய்கிறோம், மோட்டார் கார் உற்பத்தி செய்கிறோம், லாரிகள் உற்பத்தி செய்கிறோம், சைக்கிள்கள் உற்பத்தி செய்கிறோம். உற்பத்தி செய்யாதது ஒன்றுமேயில்லை. எவ்வளவு சௌகர்யம் இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறதோ அவ்வளவு சௌகர்யத்திற்கு ஏற்றாற்போல் அவர்களும் உற்பத்தி செய்கிறார்கள். அதே சமயத்தில், சில டாக்ஸ் பர்சேஸ், இவைகளைத் திருத்தி அமைத்தால், அதனால் பெரிய அனுகூலம் ஏற்படும் என்று அந்தத் தொழிலில் உள்ளவர்கள் வந்து சொல்கிறார்கள். அதைக் கவனிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த டாக்ஸ் நம்முடைய அண்டை மாநிலங்களில்மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில் தான் பெருமளவு அதிகமாகப் போடப்பட்டு வருகிறது. அதனால் விற்பனை பாதிக்கப்படுகிறது என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். இப்போது இந்த பவர் ஷார்ட்டேஜ் இருப்பதால், ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கு உபகாரம் செய்கிறோம் என்று அரசாங்கம் ஒரு வெளியீடு செய்திருக்கிறது. சில பேர்கள் அதை நம்பி அவர்கள் ஜெனரேட்டர்களுக்கு ஆர்டர் செய்துவிட்டு ஏதோ முன்பணமாக ரூ. 20,000, 30,000, கொடுத்துவிட்டு, ஜெனரேட்டர் வருமா என்று, அரசாங்கத்தை அணுகியபோது நீங்கள் கொடுக்கவேண்டிய பாக்கியைக் கொடுக்கவில்லை. அதைக் கட்டிவிட்டு, மீதியை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அந்த மாதிரியான நிலைமை இருந்தால், புரொடக்ஷன் எவ்வாறு இருக்கும்? அப்படி புரொடக்ஷன் இல்லாத நிலைமையில், அவர்கள் எப்படி பணம் கொடுக்கமுடியும்? இதை அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி



றேன். ஏனென்றால் அவர்களால் பணத்தைக் கொடுக்க முடியாது. அதனால்தான் அரசாங்கம் ஆராய்ந்து, ஜெனரேட்டர்களை வாங்குவதற்கு பணத்தைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடனை அந்தத் தவணையில் நீங்கள் கொடுக்கவில்லை, ஆகவே இப்போது கடன் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், அது சரியானதா, முறையானதா? (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 10, 15 உறுப்பினர்கள் பேசவேண்டும். அமைச்சர் ஒன்றரை மணி நேரம் பேசவேண்டுமென்று சொல்கிறார்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : எனக்கு மேலும் 15 நிமிடங்கள் தேவை.

I am not concerned about that. We are here to say whatever we want to say. If you see that we are talking anything irrelevant, you are bold enough to say and I will stop my speech. We cannot shorten our speech. அதை அவர்கள் அவசியம் யோசனை செய்து, அவர்கள் திரும்பவும் அந்த நிபந்தனை இல்லாமல் தளர்த்திக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால் தான், அவர்கள் புரொடக்ஷன் ஆரம்பிப்பார்கள். அப்போது தான் அவர்களால் அந்தக்கடனுக்குள்ள வட்டியையும் அசலையும் கொடுக்க முடியும். அப்படிச் செய்தால் தான் நம்முடைய ஸ்டேட் கவர்ன்மென்ட் நல்ல முடிவு எடுத்ததாகச் சொல்ல முடியும்.

சார், எண்ட்ரி டாக்ஸ். தயவு செய்து அதை விட்டுவிட வேண்டுமென்று நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதைப்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள். அவர் எவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாரோ, அதே மாதிரி பிசினஸ் கம்யூனிட்டியும் அதை எதிர்க்க 'அப்போஸ்' பண்ணுவதற்கு ஒரு ஸ்டாண்டு எடுத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

The entire business community will stand united in opposing this tax. I do not know who has advised the Hon. Finance Minister about this tax. The whole business community at each and every Municipal Town including villages and big cities have criticised about it and took out a procession to express their feelings to say that the collection is going to be small but the hardship to the business community would be greater.

அதனால் வரக்கூடிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வராது போல் இருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்துதான் நாம் வரவழைக்க வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்துதான் நாம் திற்கு வருகின்றது. அதேமாதிரி நம் மாநிலங்களிலிருந்து நம் மாநிலத் மாநிலத்திற்குச் செல்கிறது. அதுமாதிரி இருக்கும் பொழுது அவர் கள் எப்படி எண்ட்ரி டாக்ஸ் கொடுப்பார்கள்? அதைப் பற்றி எவ்வளவு சொல்லியிருந்தும் அவர்கள் இவ்வளவு பிடிவாதமாக இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. ஆக அவர்கள் எவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார்களோ அவ்வளவு பிடிவாதமாக பெரிய வியாபாரிகளும் இருக்கிறார்கள். இதிலே யார் கை பெரிய அளவில் ஓங்குகிறது என்பது பெரிதல்ல.

(பிற்பகல் 12-10)

I want the Government to realise the realities of the Situation and see that a decision is taken.

அதற்குப் பதிலாக ஏதாவது அந்த பிசினஸ் கம்யூனிட்டியைக் கூப்பிட்டு எங்களுக்கு 20 கோடி 30 கோடி வேண்டும், ஏதாவது அதற்கு யோசனை சொல்லுங்கள் என்று கேட்டால் அவர்கள் சொல்வார்கள். ஒரு அரை பர்சென்ட், கால் பர்சென்ட் என்று நிறுத்திக் கொள்வதற்குக் கூட நீங்கள் சொன்னால் அவர்கள் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படி நீங்கள் பேசிய தற்குப் பின்னாலே உங்களுக்கு 20 கோடி நிரந்தரமாகக் கிடைக் கும். அந்த டாக்ஸை நீங்கள் போட்டு விட்டு, 20 கோடி ரூபாயைச் சம்பாதிப்பதற்கு, 10 கோடி ரூபாய் அளவிற்கு, அதற்கு மேலே நீங்கள் செய்ய வேண்டியதாக இருக்கும். ஆகவே நீங்கள் அந்த முறையை அணுக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள்,

Industrial Development Advisory Committee போட்டார்கள். மிகவும் நன்றி.

After a very long time I am very happy that the Hon. Minister thought it fit to appoint a Committee. But that Committee is too unwieldy. It is a not Committee but it is a council of 60 members—a General Body as my Deputy Leader says. Can it discuss anything—I doubt very much. Sir, I would suggest Sir that the Hon. Minister appoints a Standing



Advisory Committee consisting of 10 members who are noted for their successful industrial ventures in our State. They will be in a position to advise the Government as to what are the industries to be started, what are the difficulties for the industries and how those can be removed and in this respect they will be able to give a very good advice. This is how things are done in various big industries. But that Committee can be entrusted with the work of giving advices.

I welcome the move of free zone introduction. I only want the Hon. Minister to pursue this and see that we develop a free zone in our State which will be good our to State.

பொதுவாக நான் சொன்ன யோசனையைக் கேட்டு அவசியம் இந்த பவர், வாட்டருக்கு ஒரு நிரந்தர நிவாரணம் கண்டு பிடிக்க வேண்டும். அது இந்த அரசின் கையிலே தான் இருக்கிறது.

Sir, We can approach the Central Government and discuss with them and see how best we can solve all these problems. There is no use of going on accusing the Central Government and saying that they should have done this or that and also they are giving a partial treatment a step motherly treatment. After all it is a Central Government and our people have elected 43 Members of Parliament to the Central Government. You cannot neglect it and you cannot accuse them and speak in a very damaging manner about the Hon. Prime Minister in your procession. We are extremely sorry for it.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே குறுக்கிட்டுச் சொன்னார்கள். ஊர்வலம் போனபோது அந்த ஊர்வலத்திலே என்ன என்ன கோஷங்கள் வைக்கப்பட வேண்டும், வாசகங்கள் வைக்கப்பட வேண்டும் என்பன பற்றி எங்களுடைய அதிகார பூர்வமான ஏடான "அண்ணா" பத்திரிகையிலே எங்களுடைய கொள்கை பரப்புச் செயலாளர் அவர்களாலே என்னென்ன கோஷங்கள் போட வேண்டும் என்பதைப் பற்றி வரையறுத்துச் சொல்லப்பட்டு, அதன்படிதான் அந்த ஊர்வலத்திலே போனவர்கள் அந்தக் கோஷங்களைச் சொன்னார்கள் என்று ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். எனவே நடைபெறாத ஒன்றைத் திருப்பித் திருப்பி நீங்களே யாராவது ஊர்வலத்திலே போய் இருக்க மாட்டீர்கள்— யாராவது சொன்ன தகவலை வைத்துக் கொண்டுதான் நீங்கள் சொல்கிறீர்கள். எனவே வெளியிலே சொல்லாத ஒன்றைச் சொன்

னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் சொல்லி,
அதை அவைக் குறிப்பிலே கொண்டு வந்து ஏற்ற வேண்டாம்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
உங்கள் பத்திரிகையிலே என்ன என்ன கோஷங்கள் எழுப்ப வேண்
டுமோ அதைப்பற்றிப் போட்டிருந்தீர்கள். ஆனால் அங்கே எழுப்
பிய கோஷங்கள் முற்றும் மாறானது. மாண்புமிகு அன்னை
இந்திரா காந்தியினுடைய பொறுப்புக்கும் பதவிக்கும் களங்கம்
கற்பிக்கிற முறையிலே பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு). ஆனால்
அன்றைக்கு ஊர்வலத்திலே பேசியதை அந்த ஊர்வலத்திலே
போனவர்கள் போட்ட கோஷங்களை எல்லாம் சென்னையிலே
இருந்த பல இலட்சக்கணக்கான மக்கள் நன்றாக அறிவார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, என்ன நடந்தது என்பதை மக்கள் அறி
வார்கள் என்று சொன்னார்கள். மக்கள் எப்போதும் எல்லா
வற்றையும் அறிந்து தான் இருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே
மறுக்கப்பட்ட ஒரு செய்தியை மீண்டும் இங்கே சொல்வது சரி
யல்ல. அந்த ஊர்வலத்தில் நீங்கள் கலந்து கொண்டதற்கு
வாய்ப்பு இல்லை. வெளியே இருப்பவர்கள் சொன்னதைத்தான்
நீங்கள் இங்கே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) உங்களுக்குச் சொல்
லப்பட்ட தகவலை வைத்துக் கொண்டு இங்கே சொல்கிறீர்கள்.
அதிகார பூர்வமாக இன்னின்ன கோஷங்களைத் தான்
எழுப்ப வேண்டும் என்று ஏற்கனவே அறிவித்து இருந்தோமோ
அதைத்தான் அவர்கள் எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, நீங்கள் ஏதாவது
சொல்ல வேண்டும் என்று விரும்பினால் அதை நேரடியாகச்
சொல்லுங்கள். எங்கள் மூலமாகச் சொல்ல வேண்டாம் என்று
நான் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதுமாதிரி திசை திருப்ப
வேண்டாம். அங்கே என்னென்ன கோஷங்கள் எழுப்பப்பட்டன
என்பது மக்களுக்குத் தெரியும். அங்கே சொல்லாத ஒன்றைச்
சொன்னதாகச் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடை
யாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவர்
அவர்களே, ஊர்வலத்தில் என்னென்ன கோஷங்கள் போட
வேண்டும் என்று திட்டமிட்டபடிதான் அதிலே கோஷங்கள்
எழுப்பப்பட்டன. கோயம்புத்தூரில் கூட ஊர்வலம் நடத்தி
னோம். அங்கே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. நடக்
காத ஒன்றை நடந்ததாகச் சொல்லி, அப்படிப்பட்ட கருத்துக்
களை எழுப்புவதன் மூலம் என்ன நினைத்துக் கொண்டு இருக்



கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஒன்றைத் தெளிவாகச்
சொல்லிக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்த வரையில்,—
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப்
பொறுத்த வரையில், பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்
களை தரக் குறைவாகப் பேசும் எண்ணம் கிடையாது. அதைத்
தெளிவுபடுத்திச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். நாங்கள்
அதை மறுத்துச் சொன்ன பிறகும், மீண்டும் மீண்டும் நீங்கள்
அதைத் திருப்பிச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். எங்
களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**THIRU K. S. G. HAJA SHAREEF:** Sir, I do not dispute the instructions given by the A.I.A.D.M.K. to their workers. But I was not here on that day. I was in Delhi. Some of the important people in Delhi asked me the next day ' Mr. Haja is it a fact that slogans have been raised against the Prime Minister'. I said I do not know. I am here. I will certainly enquire into it and let you know.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** அடுத்த தடவை
போகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்
களிடத்தில் தாராளமாகத் தெரிவிக்கலாம்— அப்படிப்பட்ட
கோஷங்கள் போடப்படவில்லை என்று.

**THIRU K. S. G. HAJA SHAREEF :** When I came here and after finding that this was a fact I called on the Chief Minister and had a discussion about, it. The Hon. Chief Minister was good enough to say that it was not so. I will tell you that. I will take it for granted. But the senior officials who have witnessed the procession, have told me about this. Mr. Acting Speaker Sir, we will forget it. As a businessman unless I give respect to my lieutenants they cannot enjoy respect from their subordinates. If I do not respect the Hon. Minister,—whatever may be our differences, whatever may be our objectives, but still you are in the helm of affairs and I have to show you the due respect which you command—the people will not respect me. Only from that angle I tell you Sir that it is better that not only we speak but also we treat others in an honourable manner. I am one of those who observe all the parliamentary tradition in talking both here as well as in public platforms. I only want Sir, that immediate action should be taken to resolve two or three problems. That is water and power. The water problem is more a night mare to me than even the food problem. In food at least the people can resort to various kinds of food. But water is a night mare me. When I say, believe me Sir, and I am sure that nobody is more concerned about these problems than the Hon. Minister and the Hon.

Chief Minister and I am positive that they will take all measures to see that the difficultites are mitigated to a considerable extent and I still persist that a Committee of all the Opposition Leaders is appointed to take all actions in this direction, because I feel this is a natural calamity and this will have to be faced on the measures agreed upon in common.

(பிற்பகல் 12–20)

***திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மன்றத்தின் முன்பாக வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல கிடைத்திருக்கிற வாய்ப்புக்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் தன்னுடைய உரையிலே சொல்லும்போது எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குற்றம் சொல்கிற மனப்பாங்கு இருக்கிறது ; மாற்றாந்தாய், மாற்றாந் தாய் என்று எத்தனை முறை சொல்கிறீர்கள் என்ற அந்தக் கேள்விக் கணையினை முன்வைத்த போது ஏறத்தாழ 1,30,100 சதுர கிலோ மீட்டர் இருக்கிற இந்த மாநிலத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே 7 ஆவது பெரிய மாநிலமாக இருக்கிற இந்த மாநிலத்திலே 5 கோடி மக்களுக்கும் பதில் சொல்லக் கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து தொழில் துறையில் தொய்வு இல்லாத பணியை ஆற்றி வந்திருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு 4 ஆவது இடத்தை பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த மாநிலம் பெற்றிருக்கிறது. இன்னும் கொஞ்சம் விரைந்து பணியாற்றினால் 3 ஆம் இடத்தை எட்டுகின்ற நிலையில்தான் இந்த மாநிலம் தொழில் துறையில் இருக்கிறது என்ற உண்மையினை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்மிடம் இருக்கிற 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்', Infra Stracture நம்மிடம் இருக்கிற அடிப்படை மூலாதாரங்களைவைத்து, இந்த மாநிலத்திலிருக்கிற கடுமையான தண்ணீர் பிரச்சினையும் இந்த மாநிலத்தில் இருக்கிற மின்சாரப் பற்றாக்குறையையும் தாண்டி இந்தக்குறியீட்டை எய்தியிருக்கிறோம் ; நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறோம், என்பதை நான் இங்கே சில புள்ளி விவரங்கள்மூலமாக தெளிவாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹாஜாசெரீப் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.





மைய அரசு இந்த மாநில அரசின் சார்பாக நாம் வைத் திருக்கிற, மின்சார உற்பத்திக்காக நாம் வைத்திருக்கிற திட்டங்களை எத்தனை முறை கிடைப்பிலே போட்டிருக்கிறார் கள்? தேங்கி இருக்கிற அந்த கோப்புகளுக்கு விடையிறுக்கப் பட்டு அனுமதி அளிக்கப்படுமானால் மின்சார உற்பத்தியிலே தன்னிறைவு எட்டக் கூடிய அந்தக் காலத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்து சேர்க்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை மட்டுமல்ல. தண்ணீர் பிரச் சனையில் கூட இங்கே கடுமையான பற்றாக்குறை இருக் கிறது என்பதை ஒரு புள்ளிவிவரம் மூலம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாய நிலங் களுக்கு தண்ணீர் போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால் நிலத்தடி நீரை தொடர்ந்து நாம் எடுத்து வந்திருக்கிறோம். ஏற்கனவே நிலத்தடி நீரைப் பயன்படுத்தி கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் தொழில்களுக்கு தண்ணீர் வேண்டுமென்று கேட்கும்போது இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் 'பர் காபிட்டா வாட்டர் ரிசோர்ஸஸ்' 570 கன மீட்டர் ஆக இருக்கிறது. ஆனால் இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் இருக்கிற அந்த சராசரியை நாம் பார்க்கும்போது 4000 கன டி.எம்.சி. இருக்கும்போது நம்மவர் பெறுகின்ற அந்த சராசரி 'பர் காபிட்டா வாட்டர் ரிசோர்ஸஸ்' 570 கன மீட்டராக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படி இருக்கிறபோதும் தொடர்ந்து தொழில்களுக்கு தண்ணீர் தருவதற்கு கடல் நீரைக் கொண்டு நல்ல நீரை தயாரிக்கும் ஆராய்ச்சியை (டி சாலினேஷன் பிராஜக்ட்) நடத்த நாம் அதிகமான கவனத்தைச் செலுத்தி, மாநில அரசின் சார்பிலே மிகத் தீவிரமான பெரிய திட்டத்தை தயாரித்து மைய அரசுக்கு தருவோமானால் அதற்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை மைய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நாம் வைக்கும்போது மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் இதே வேகத்தோடு மைய அரசை வலியுறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் தொடர்ந்து தொழில் துறையில் வியத்தகு மாற்றங்களைச் செய்து வந்திருக்கிற காரணத்தினால் 1976–77ஆம் ஆண்டில் 3051 மில்லியன் யூனிட்டாக இருந்த, அந்த மின்சாரத்தை நாம்

பயன்படுத்துகின்ற நிலைமை 1979–80-ல் 3810 மில்லியன் யூனிட்டாக வளர்ந்திருக்கிறது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

The value in the factory section has gone up. என்று நான் புள்ளிவிவரத்தைச் சொல்லும்போது 1960–61-ல் 81 கோடியாகவும், 1966–67-ல் 170 கோடியாகவும், 1978–79-ல் 967 கோடியாகவும் இதை நாம் உயர்த்தியிருக்கிறோம்.

The average annual Rate of Industrial producton 1976-ல் 137.6ஆகவும், 1979-ல் 172.3 ஆகவும் உயர்த்திக் காட்டியிருக்கிறோம். 'இன்ஸ்பைட் ஆப் டிராபேக்ஸ்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு மின்சாரப் பற்றாக்குறை, தண்ணீர் இல்லாமை, வேண்டிய அளவுக்கு நிலக்கரி கிடைக்காமை, இரயில் பாதை திட்டங்களில் நாம் புதிதாகப் போட வேண்டுமென்று வைத்திருக்கிற கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் இருந்தாலும் கூட அவற்றை எல்லாம் செய்து உயர்வாக இருக்கிறோம்.

வேலை செய்வோரின் எண்ணிக்கையை நாம் பார்க்கும் போது 1976–77-ல் 6.98 இலட்சம் பேராக இருந்தது 1980–81-ல் 8.78 இலட்சம் பேர்களுக்கு நாம் வேலைவாய்ப்பினைத் தர முடிந்திருக்கிறது. அதைப்போன்று,

Industrial Development Bank of India and Central Invertment subsidy seheme. என்பதைப்பொறுத்தவரையில் இந்த மாநிலம்தான் எல்லா மாநிலங்களைக்காட்டிலும் முதன்மையான இடத்தை, அனுமதியைப் பெறுவதிலே இருந்து வழங்குவதிலே இருந்து தொடர்ந்து நாம் பாராட்டத் தக்க வகையிலே முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 52.12 விழுக்காடாக இந்த மாநிலத்திலே இருக்கிறது. தேசம் முழுவதும் 48.44 ஆக இருக்கிறபோது, தொடர்ந்து தொய்வு இல்லாத பணிகளை ஆற்றி, அந்த விழுக்காடுகளை குறைப்பதற்காக நாம் எடுத்துக் கொண்டிருக்கிற அத்தனை முயற்சிகளும் இன்றைக்கு





வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது என்பதை நான் தெளிவாக கூற விரும்புகிறேன். அதேபோல 50 விழுக்காடுகளுக்கு மேற்பட்ட சாகுபடியாகாத நிலங்கள் இன்னும் பயன்படுத்தபடாமல் தரிசாகக் கிடக்கக்கூடிய நிலங்களை யெல்லாம் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்த வேண்டும் என்று இன்றைக்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

சேலம் உருக்காலையைப் பற்றி மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எவ்வளவோ கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒரு கால கட்டத்தில், இன்டக்ரேட்டட் ஸ்டீல் பிளேண்டாக அது வரும் என்று நாம் விரும்பினோம். ஆனால் இன்றைக்கு அது சாதாரண ஸ்டீல் ரோலிங் மில்லாக வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நாம் உள்ளபடியே வேதனைப்படுகிறோம். நம்மைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 35 ஆயிரம் டன்னாக ஆகிற உற்பத்தியை 70 ஆயிரம் டன்னாக மாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். அப்படி என்று சொன்னால், ஏறத்தாழ 50 கோடியை செலவிட்டால் போதும் என்று அறிக்கை தந்திருக்கிறார்கள். புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள். 50 கோடியை முதலீடு செய்வதற்கு மைய அரசு தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அங்கே கிடைக்கின்ற அந்த இரும்புத் தாது கூட குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 42 சதவீதம் தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், மேலை நாடுகளில் 18 சதவீதம் இருக்கக்கூடிய தாதுக்களையே பயன்படுத்தி சிறப்பாக உற்பத்தி செய்து—டைரக்ட் ரிடெக்ஷன் மெத்தட்— என்று சொல்லுகிறார்கள்—அதன் மூலமாக அதிகமாக உற்பத்தி செய்து இந்தியா போன்று வளரக்கூடிய 3-ஆம் நிலையில் உள்ள நாடுகள் உட்பட பல்வேறு வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய முறையிலே அவர்கள் செய்து வருகிறார்கள். அதன் அடிப்படையில் சேலம் உருக்காலை திட்டத்தையும், டைரக்ட் ரிடக்ஷன் மெத்தட் [illegible] நாம் பயன் படுத்துவோமேயானால், உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஸ்தூர் அண்டு கம்பெனி சமர்ப்பித்த அந்த அறிக்கை இன்றைக்கு மைய திட்ட அமைச்சகத்தின் உள்ளே, [illegible] பவனிலே தூங்கிக் கொண்டிருக்கிறது. கிடப்பிலே [illegible] பட்டிருக்கிற அந்த தஸ்தூர் அண்டு கம்பெனியின் [illegible] அறிக்கையை எடுத்து, விரைவாக அதில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொ[illegible] வேண்டும் என்று [illegible] அரசை [illegible]

கேட்டுக் கொள்கிறேன். எரி வாயுவை பயன்படுத்தி, இரசாயன உரம் செய்யும் 6 தொழிற்சாலைகளை இன்றைக்கு மைய அரசு ஆரம்பிக்க இருக்கிறது. அதற்கான உத்தரவுகளையும் கொடுத்திருக்கிறது. அதிலே ஒரு தொழிற்சாலையை மத்திய பிரதேசத்திலே உள்ள குணா மாவட்டத்திலும், (குறுக்கீடு) பத்னூர், சவாய் மாவட்டங்களிலும், உத்தரப் பிரதேசத்திலே மாத்தூர், பதோன் படேலி, ஷாஜஹான்பூர், சுல்தான்பூர் என்ற 4 மாவட்டங்களிலும் இந்த இரசாயன உரத்தொழிற்சாலைகளை தொடங்கப் போவதாக , மைய அரசினுடைய இரசாயன மற்றும் உர அமைச்சகத்தினுடைய செய்தியாக பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வட மாநிலங்களிலே மட்டும் இப்படி 6 இரசாயன உரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகிறீர்களே, அதை இந்தியா முழுவதும் ஏற்படுத்தும் வகையில், தென்னிந்திய மாவட்டங்களையும் சேர்த்திருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும். ஏன் அப்படி அதை பரவலாக செய்ய முன் வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். இப்படி புறக்கணிக்கின்ற நிலைமையை மைய அரசு கையாளுமேயானால், அது நம்மை எங்கே கொண்டு போய் சேர்க்கப் போகிறதோ என்ற ஐயப்பாடு தான் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஏற்படுகிறது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், பஞ்சாப், அஸ்ஸாம் மாநிலங்கள் போன்று பிரச்சனைகள் சூழ்ந்த மாநிலமாக இந்த மாநிலம் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அமைதி பூங்காவாக தமிழகம் விளங்கி வருவதை தமிழகத்திலிருக்கும் தொழில் முனைவர்கள் கூறுகிறார்களே. இங்கே முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் நல் உறவு இருக்கிறது. தொழில் அமைதி இருக்கிறது. தொழிலாளர்களை பாதுகாக்கும் சட்டம் இருக்கிறது. முதலாளிகளையும் பாதுகாக்கும் சட்டம் இருக்கிறது. இப்படி தொழில் அமைதி தமிழகத்தில் இருக்கும் போது, மத்திய அரசின் இப்படிப்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் தான் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேதனையை உண்டாக்குகிறது அந்த விதத்திலேதான் மைய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையும், தொழில் கொள்கையும் அமைந்திருக்கிறது. என்பதைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். அன்னிய செலாவணி கையிருப்பு என்று சொல்லப்படுகிற, ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் ரிசர்வில், 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் தேதி வரை 5220 கோடியாக இருந்தது. 2½ ஆண்டுகளுக்குப் பின்னால் 1982 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி முதல், 3,153 கோடியாக அந்தக் கையிருப்பு குறைந்திருக்கிறது என்று மைய அரசே வெளியிட்டிருக்கிற புள்ளி விவரங்கள், ஆதாரத்தோடு



சொல்கிறது. ஏறத்தாழ 2,067 கோடி அன்னியச் செலாவணி கையிருப்பு குறைந்திருக்கிறது. அதற்கு பல காரணங்களைச் சொல்லியிருக்கிறது. அந்த புள்ளி விவரங்களை அளித்திருக்கிற மைய அரசாங்கம். இரசாயன உரம், சமையல் எண்ணெய், சிமெண்ட் மற்றும் கோதுமை ஆகிய பொருள்களை இறக்குமதி செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

1970-71 ஆம் ஆண்டிலே மட்டும் இரசாயன உரத்திற்காக 100 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்திருக்கிறோம் என்றும், 1980-81 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பிறகு 728 கோடி ரூபாய்க்கு அதை இறக்குமதி செய்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய தென் மாநிலங்களிலே இப்படிப்பட்ட இரசாயன உரங்களின் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறபோது, அதற்கான மூலதனங்களும் இருக்கிறபோது, அதை இங்கே ஏற்படுத்தாமல், அன்னிய செலாவணியின் கையிருப்பைக் குறைக்கின்ற விதத்திலே ஏன் இந்த நிலைமைகளை எடுத்திருக்கிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை.

(பிற்பகல் 12-30.)

அதுமட்டுமல்ல. இதைப் போலவே கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து சிமென்ட் இறக்குமதி செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே சிமென்ட் ஆலை தொடங்குவதற்கு லைசன்ஸ் கொடுக்க அதிலும் குறிப்பாக பாளையம் சிமென்ட் தொழிற்சாலை தொடங்குவதற்கு இன்னும் பல திட்டங்களை உருவாக்குவது பற்றி கேட்கின்றபோது அவர்கள் கொடுக்காமல் அன்னியனுக்கு இந்தியப் பணத்தை வாரி இறைக்கத்தான் தயாராக இருக்கிறார்களே தவிர இங்கே தமிழகத்திலே நாம் நல்ல திட்டங்களைத் தீட்டி அவற்றைக் கேட்கின்றபோது உதாசீனம் செய்கின்ற நிலைமை தான் இருக்கின்றது. இதை எல்லாம் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்ல வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து நோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட் என்ற வகையிலே ஒரு அபாயகரமான அறிவிப்பினை மத்திய அரசு வெளியிட்டு நடைமுறைப்படுத்துகின்ற அந்தச் செய்திகளை எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். விந்தியமலைக்குத் தெற்கே இருக்கின்ற தென் மாநிலங்களில் உள்ள தொழில்கள் அத்தனையையும், உருவாகி இருக்கின்ற அத்தனை தொழில்களையும் முடக்கிப் போடுகின்ற

ஒரு நிலைமையில் இன்றைக்கு 86 மாவட்டங்களில் தான் தொழில்
களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்ற நிலைமை
இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு பொருளாதாரக் கொள்கை
இது என்பதை தெளிவாக்க விரும்புகிறேன். எந்த இந்தியனும்
இன்றைக்கு பொருளாதாரத் துறையில் செயற்கரிய
செயலைச் செய்ததற்காக, நோபல் பரிசை வாங்கவில்லை.
பொருளாதாரத் துறையிலே விநோதமான கருத்துக்களைச்
சொல்வதற்கு நோபல் பரிசு என்று வைத்திருந்தால் ஒரு வேளை
மக்களுக்கு அப்பால் நிற்கின்ற இந்தத் தொழில் கொள்கைக்கு
நிச்சயமாக அந்த நோபல் பரிசைத் தரக்கூடிய நிலைமை இருக்
கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன? 86
மாவட்டங்களில் தொழிலை ஆரம்பிக்கவேண்டும் என்றால்
அதாவது உத்தரப் பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும்
பூலான்தேவிக்கு பூமாலை போடுகின்ற, மாநிலங்களாக அல்லது
மான்சிங்கிற்கு முன்னாலே மண்டியிட்டு வரவேற்கின்ற மாநிலங்
களாக இருக்கின்ற இடங்களில்தான் தொழில்களைத் தொடங்க
வேண்டும் என்றால் இங்கே இருக்கின்ற பணத்தையும் மூல
தனத்தையும் கொண்டுபோய் கொள்ளைக்காரன் கையிலே
ஒப்படைக்கவேண்டும் என்றா சொல்கிறார்கள். அடிப்படை
வசதிகளான இன்ஃபராஸ்ட்ரக்சர் அங்கே இருக்கின்றதா? 86
மாவட்டங்களில் இதுவரை யாருமே உரிமம் பெறுவதற்கு முன்
வரவில்லை என்று அடிப்படைக் காரணத்தைத் தவிர வேறு
எந்தக் காரணத்தையாவது சுட்டிக்காட்ட முடியுமா என்று அறிய
விரும்புகிறேன்.

Thiru K.S.G. Haja Sheriff : Sir, the Hon'ble Member is asking
whether there are full infrastructural facilities in other States? How are
we concerned with it? If there are no developmental action and deve-
lopmental activities, we should adopt some policies. Let us sit and dis-
cuss and try to develop to the best advantage of our people.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மற்ற மாநிலங்களில் இருக்கின்ற நிலைமையை
நான் சொல்கிறேன். 86 மாவட்டங்களை நோ இண்டஸ்ட்ரீஸ்
டிஸ்டிரிக்ட் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்திய நாட்டிலே
உள்ள தொழில் அதிபர்கள் இதுவரையில் அங்கே தொழில்
களைத் துவங்காததற்கு அடிப்படைக் காரணத்தைச் சொல்
கிறேன். அங்கே அடிப்படை ஆதாரங்கள் இல்லை. அங்கே
போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆகின்றது. பொருட்களை
உற்பத்தி செய்யப் போகின்ற தொழில் அதிபர்களுக்கு பாதுகாப்பு
இல்லாத நிலைமை இருக்கின்றது. ஆகவே இங்கே தமிழகத்திலே
இருக்கின்ற மூலதனத்தைக் கொண்டுபோய் கொள்ளைக்காரர்



களை அடக்கி ஆள முடியாத அரசாங்கங்கள் இருக்கின்ற இடங்
களிலே கொண்டுபோய் போட வேண்டும் என்றால் என்ன ஆகும்?
இங்கே இருக்கின்ற முதலாளிகள் தொழில்களை ஆரம்பிக்க விரும்
புகிறபோது நீங்கள் உத்தரப்பிரதேசத்திலும், மத்தியப்
பிரதேசத்திலும் போய்தான் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும்
என்று சொன்னால் என்ன ஆகும்? இந்தியத் துணைக் கண்டத்
திலே உள்ள எல்லா மாவட்டங்களையும் தொழில் மையமாக
ஆக்கப்போகிறோம் என்று சொன்னால் அந்தக் கருத்தை நாங்கள்
ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அப்படியானால் கேர
ளம், ஆரியானா போன்ற மாநிலங்களில் வட நாட்டிலே இருக்
கின்ற சில மாநிலங்களின் மாவட்டங்களை விட பரப்பளவிலே
குறைவாக இருக்கின்றது. அப்படிப்பட்ட மாவட்டங்களிலே
நீங்கள் ஒரு தொழிலைக் கூட தொடங்காததற்குக் காரணம்
நிச்சயமாக நான் சொல்கிறேன், தொழில் அதிபர்களுக்கு உகந்த
ஒரு சூழ்நிலை அந்த 86 மாவட்டங்களில் இல்லை. எனவே
தொடர்ந்து நீங்கள் வற்புறுத்தினால் இங்கே தொழில் அதிபர்
கள் தொழில்களை தொடங்குவதற்கு அனுமதி இல்லை என்று
சொன்னால், நாங்கள் வட மாநிலங்களுக்குப் போக
மாட்டோம், நாங்கள் உரிமம் கேட்டு அனுப்பிய விண்ணப்பப்
படிவங்கள் எல்லாம் அங்கேயே கிடப்பிலே கிடக்கட்டும், ஒரு
கனிந்த சூழ்நிலை வரும், ஆட்சி மாற்றம் நேரிடும், அப்படி
ஆட்சி மாறுகின்றபோது நாங்கள் கம்பெனியை ஆரம்பித்துக்
கொள்கிறோம், என்ற ஒருவகையான மனப்போக்கு வந்து
விடக்கூடும். ஆகவே அப்படி வற்புறுத்திக் கட்டாயமாகத்
தொழில்களைத் துவங்குங்கள் என்று சொன்னால் உரிமமே
வேண்டாம் என்று சொல்லிவிடுகின்ற சூழ்நிலைக்குக் கூட தள்ளி
விடுகின்ற நிலைமையை அந்தத் தொழில் கொள்கை ஏற்படுத்து
கின்றது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

ஏற்கனவே 6-வது ஐந்தாண்டுத் திட்ட குறியீட்டு அளவை
தொழில் துறையில் நாம் எட்டவில்லை. பொதுத்துறை உரிமங்
கள் வழங்குவதிலே நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற கால தாம
தத்தின் காரணமாக தொழில் அதிபர்கள் இன்றைக்கு விரக்தி
மனப்பான்மையோடு We can't run from pillar to post
என்று அந்த அடிப்படையில் மத்திய அரசினுடைய தொழில்
கொள்கையில் முடங்கிப் போய் இருக்கிற நிலைமை
தான் இன்றைக்கு நாட்டில் இருக்கிறது என்பதையும் நான்
தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும் இப்படிப்பட்ட 86 மாவட்டங்களை தொழில் நுட்பம்
அதிகமாகத் தேவைப்படுபவை, தொழில் நுட்பம் அதிகமாகத்
தேவைபடாதவை என்று இரண்டாகப் பிரித்து 86 மாவட்டங்களில்

வைத்து இருக்கிறார்களா என்று கேட்டால், வேலைக்கு வேண்டும் என்று ஆள் கேட்டுப் போனால் அதிகமாகக் கூலி கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலையும் அல்லது அப்படிப்பட்ட இடங்களில் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள், படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலையும் பாதுகாப்பாக பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கின்ற கல்வி வசதி இல்லை, சுகாதார வசதி இல்லை இப்படிப்பட்ட இடங்களில் எப்படி நாங்கள் தொழிற்சாலையை துவக்க முடியும் என்று இன்றைக்கு மத்திய அரசின் அமைப்பிற்கு அனுப்பிக் கொண்டு இருக்கும் சூழ்நிலையும் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எல்லா மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி பெறவேண்டும் என்ற அடிப்படையை விடுத்து தாலுக்கா அடிப்படையில் (Unit of development sho ld be a taluk) என்ற அந்த அடிப்படையில் நிச்சயமாக மைய அரசினுடைய தொழில் கொள்கை மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கருத்தை ஒட்டி நான் சொல்கிறேன்.

I wi.h that the Ce tr l Governme t shou ld work out a compiehensive policy for developmeat of backward areas.

அப்படிப்பட்ட மாநில அரசுகளை கலந்து மாநில அரசுகளுடைய உள்ள உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் உங்களுடைய தொழில் கொள்கை நிச்சயமாக அமைந்து ஆக வேண்டும். இன்றைக்கு சென்னை நகரத்தில் ஒரு F : tra le zone-ஐ உருவாக்குவதற்குரிய வாய்ப்பு இருக்குமானால் அதை நிறைவேற்ற ஆற்றல்மிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மின்னனு உற்பத்திக்காக ஜெனரேட்டர்வாங்கும் போது இப்போது லோன் வழங்குவதிலே காலதாமதம் இருப்பதாக அறிகிறேன். கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஒரு வேளை சப்ஸிடி அளிக்க முடியுமானால் அப்படிப்பட்ட ஜெனரேட்டர் வாங்குவதற்காக சப்ஸிடியை அளிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசுக்கு அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கிற இவ்வளவு தொகைக்கு மாநில அரசுக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று இருக்கிற நிலைமைகளை மைய அரசுக்கு அனுப்பிவைத்து இருக்கிற உரிமை பழுவங்களில் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கையாக மாநில அரசே இன்றைத் தீர்த்துக்



கொள்ளலாம் என்று அதிக அதிகாரங்களை தொழில் துறையில் தரக்கூடிய அந்த வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ உரிமங்களை அனுப்பியிருக்கிறோம் என்று புள்ளிவிவரத்தோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்து இருக்கிறார்கள். ஆனால் கால தாமதத்தை தவிர்க்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் டெல்லிக்கு செல்கின்றபோது எல்லாம்—இதைப்பற்றி பேசவேண்டும் —இதைப்பற்றி பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மாநில அரசு சார்பில் (in tit te for  u y of cent e- tate relation ) மாநில மைய அரசு உறவுகளை தொழில் துறையில் விரிவாக்கி நம்முடைய உணர்வுகளை வெளியிடுவதற்கு (Ins i te for stu y of cent e- tate ela ion ) என்கின்ற அந்த அமைப்பை நாம் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ராஜ்ய சபையில் பேசுகிறபோது இராணுவச் செலவைக் குறைத்தாவது தேசத்தின் வளர்ச்சிப் பணிக்கு அந்தப் பணத்தை செலவிட வேண்டும் என்று அன்றைக்குப் பேசினார்கள். அதே உணர்வோடு இராணுவச் செலவைக் குறைத்தாவது மாநிலத்தில் இருக்கின்ற அந்த தொழில் வளர்ச்சியை அதிகரிக்கத்தக்க பணிகளை மைய அரசு மேற்கொள்ளவேண்டும்.

எக்ஸ்போர்ட் சப்ஸிடி பற்றி ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். 1982–83 ஆம் ஆண்டில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசு 500 கோடி ரூபாயை ஒதுக்கி செலவிட்டுக்கொண்டு இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் 1984–85-ல் 600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சப்சடிக்கு ஒதுக்குகின்ற பணம் எந்த தொழில் முனைபவருக்கு போய் இருக்கின்றது என்றும் பயனடைந்தவர்கள் யார் என்றும் முறையான விவரம் இதுவரை தரப்படவில்லை. இத்தகைய பணம் தவறாக பயன்படுத்தப்படுகிறதோ என்கின்ற அச்சம் கூட எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. உண்மையில் ஏற்றுமதி அதிகரிக்கவில்லை என்று புள்ளி விவரங்கள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன என்றால் மாநிலங்கள் நியாயமான காரியங்களுக்காக, வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி உதவி இன்றி மைய அரசிடம் போனால் இல்லை என்று சொல்கின்ற அந்த நிலைமையினை நிச்சயமாகத்தவிர்த்து ஆகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலையைத் தூத்துக்குடியிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும், வேதாரண்யம், சென்னை, செங்கை கடல் ஓரப் பகுதிகளிலும் தொடங்

கப்படவேண்டும். தமிழகத்தில் கடலூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் மைனர் துறைமுகங்கள் என்று சொல்லத்தக்க அளவில் சிறு துறைமுகங்களை பக்காவாக அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளை நாம் செய்து ஆகவேண்டும். சேது சமுத்திரம் திட்டத்தை வேகமாகவும், விரைவாகவும் அமுல்படுத்த வேண்டும். இதனால் இராமநாதபுரத்தில் இருக்கின்ற பின் தங்கிய பகுதிகள் எல்லாம் வளர்ச்சி எய்தக் கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி சிய்றுஅளவிலான நீர் மின் நிலையங்கள், சூரிய ஒளியைப் பயன் படுத்தி எரிச் சக்தி உற்பத்தி நிலையங்கள். ஆகியவற்றைப் பற்றி கூட விரிவாக அறிக்கைகளை தயாரித்து நிபுணர்கள் குழுவை நியமித்து ஆக்கபூர்வமான முறையில் பணிகளை நாம் ஆற்ற வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். ஆற்றல் மிக்க தொழில் அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற மானியத்தை வரவேற்கிறபோது தொடர்ந்து தொய்வு இல்லாமல் 4 ஆம் இடத்தை எட்டிப் பிடித்து இருக்கிற நாம் பல்வேறு நிலைகளில் குறைபாடுகள் இருந்தாலும் கூட நமக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்கள் மைய அரசின் சார்பில் தரப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் 4.1 சதவீதம் இருந்தாலும் கூட, இந்த மாநிலத்திலே நாம் பெற்றிருக்கின்ற வெற்றி இன்றைக்குத் தமிழகத்திலே தொழிற் துறையில் மிகப் பெரிய மாற்றங்களை மட்டுமல்ல, மறு மலர்ச்சியே ஏற்படக்கூடிய நாள் வெகு விரைவிலே வரக் காத்து இருக்கிறது என்று சொல்லி வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் பேசுகின்றபோது வீராணம் திட்டம் கைவிடப்பட்டது பற்றிக் குறிப்பிட்டார்கள். தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை, சென்னையில் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை, அந்தத் திட்டம் கைவிடப்பட்டதற்கு அரசியல் காரணமா என்று கேட்டார்கள். இன்று மட்டுமல்ல, கடந்த 2 மூன்று நாட்களாகவே அதுபற்றி இந்த மன்றத்திலே பேசப்பட்டு வருகிறது. சென்னையில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே. 1977-79 ஆம் ஆண்டிற்கான பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி 29-3-79 அன்று இந்த மன்றத்திலே ஒரு அறிக்கையை வைத்திருக்கிறது. அந்த அறிக்கையிலே

As a result of all these failures, irreagularities and shortcomings, the scheme has totally fa led. Whether the pipes already manu-



factured can be tested a d used and the work on the scheme can be resu ned and completed remains a big ques ion mark.

என்று அந்தக் கமிட்டி அதிலே சுட்டிக் காட்டியிருப்பதை நான்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தக் கமிட்டியில் திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. ஆறுமுகம், திரு. தங்கப்
பாண்டியன் மற்றும் திரு. லத்தீப் போன்ற உறுப்பினர்கள் இருந்
தார்கள். அதிலே காங்கிரஸ் கட்சி சட்டமன்ற பேரவை மேலவை
உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் மீது
விவாதிக்கிறபோது எந்த விதமான டிஸன்டிங் நோட்டும்
அவர்கள் கொடுக்கவில்லை என்பதையும் நான் இந்த
நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே
ஒட்டு மொத்தமாக வைக்கப்பட்ட அந்த அறிக்கையிலே
சுட்டிக் காட்டியிருப்பதை நான் இந்த மன்றத்திலே சொல்ல
விரும்புகிறேன். வீராணம் திட்டம் பற்றி சொல்லப்படுகிறபோது
ஏற்கனவே ஏற்பட்ட குறைகள், தவறுகளின் காரணமாக முழுமை
யாக அது தோல்வியடைந்துள்ளது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட
குழாய்களை மீண்டும் உபயோகப் படுத்த முடியுமா, பயன்படுத்த
முடியுமா என்பதையும்—அது கேள்விக் குறியாக அமைந்திருக்
கிறது என்று —அந்த அறிக்கையிலே வெகு தெளிவாகச் சுட்டிக்
காட்டப்பட்டிருக்கிறது. அதே போலவே நெய்வேலி சேத்தியா
தோப்பு திட்டத்தைச் செயல்படுத்த உலக வங்கிக் கடன் உதவி
பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்குக்
கடன் உதவி செய்ய வேண்டுமென்றால், சிமிண்ட் குழாய்களுக்கு
பதிலாக உருக்குக் குழாய்களைப் பயன்படுத்த வேண்டும் என்று
நிபந்தனை போட்டு அப்படிப் பயன்படுத்தப்படுகிறபோது
சுமார் 2.5 கோடி ரூபாய் செலவாகும் என்றும் உலக வங்கி
சொல்லியிருப்பதாக அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்
கள். அப்படி 205 கோடி ரூபாய் செலவாகும் இன்னும் சொல்லா
போனால் அதற்கு மேலேயும் செலவாகும் என்று சுட்டிக் காட்டி
அதன் மூலமாக சென்னைக்கு ஒரு நாளைக்கு 182 மிலியன்
லிட்டர் தண்ணீர்தான் கிடைக்கும் என்றும் அதிலே சொல்லப்
பட்டிருக்கிறது......

**திரு. துரை முருகன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் ...

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** நீங்கள் பேசுகிற
போது சொல்லுங்கள். (குறுக்கீடு) காவிரி ஆற்றில் திருச்சி
மாவட்டத்திலே கட்டளை பொது மதகுக்குக் கீழே ஒரு இடத்
திலே நீரை எடுத்து வெட்டப்பட்ட திறந்த கால்வாய் மூலமாக
செம்பரம்பாக்கம் வரை கொண்டு வந்து அங்கே நீரைத் தூய்மைப்
படுத்தி சென்னை மாநகருக்குக் கொண்டு வரலாம் என்று, இந்த

வீராணம் திட்டத்தை கைவிட்டுவிட்டு அதற்குப் பதிலாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலமாக சென்னைக்குத் தண்ணீர் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்களுக்கு இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். திரு. துரை முருகன் அவர்களுக்கு பின்னாலே தெரிவிக்கிறேன். அது மட்டுமல்ல, திட்டத்திற்காக அன்று மொத்தமாக அரசு ஒதுக்கிய தொகை 16.53 கோடி ஆகும் என்றும் அதிலே அந்தத் திட்டத் துவக்கத்திலேயே முன் பணமாகவும் பொருளாகவும் 13¼ கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி அதை எடுத்துச் சொல்கிற நேரத்திலே தவறுகளுக்கான பொறுப்பு அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, மேலே உள்ளவர்களையும் சாரும் என்றும் அதிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை அப்படியே படிக்க வேண்டுமென்றால்

"It cannot be said that tne various irregularities and lapaes mentioned in this Report have occurred only at the official level. The responsibility for these irregularities has also to be shared equally by those who are above the official level.".

என்று மிகத் தெளிவாக அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்): மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதைத் தடுக்கிற வகையில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால் அனுமதிக்க வேண்டியதில்லை என்று விதி இருக்கிறது. ஆகவே அனுமதிக்க முடியாது.

திரு. துரைமுருகன்: நான் கேட்பது அமைச்சர் அவர்கள் பேசுவதை குறித்தல்ல. அவர் பேசுவதை குறுக்கிட்டு நான் பேசவில்லை. நான் கேட்பது வேறு. பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எம். எஸ். மாணிக்கம்) நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 16½ கோடி ரூபாய் திட்டத்தில் கிட்டதட்ட 13¼ கோடி ரூபாய் வேலை துவங்குவதற்கு முன்னாலேயே





கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டிதான் இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறாது. இதை நிறைவேற்ற முடியாது என்று பொது நிறுவனங்கள் குழு இந்த அவையிலே அறிக்கை வைத்திருக்கிறது. இட் இஸ் எ ஓப்பன் பாக்ட். அதைத்தான் சொல்கிறேன். அதிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். டிசென்ட் நோட் கூட அதிலே இல்லை. எனவே இந்த காரணங்களினால்தான் அந்தத் திட்டம் கைவிடப்பட வேண்டிய அந்த சூழ்நிலை வந்து, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக திருச்சி பகுதியிலேயிருந்து தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் எழுப்பலாம்.

* * * * * *

நான் இந்த நேரத்தில் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இப்போது தொழில் குறித்த மானியக் கோரிக்கை நடந்து கொண்டிருக்கிறது. பல அங்கத்தினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு முடியாது, தொடர்ந்து 18 ஆம் தேதி எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கிடையில் அமைச்சர் அவர்கள் எழுந்து ஒரு பதிலை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் பேசுவதும், அதற்கு பின்னாலே இறுதியாக அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதும் தான் வழக்கமாக இருந்திருக்கிறது. வரிக்கு வரி லாவணி பாடுவதைப் போல எந்த அமைச்சரும் இதுவரை பதில் சொன்னது கிடையாது. அமைச்சர் அவர்கள் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அவரிடத்திலே நிறைய பாக்ட்ஸ் அண்ட் பிகர்ஸ் இருக்கலாம். ஆனாலும் அதை இடையிலே சொல்வது முறையல்ல.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத்தலைவர் அவர்களே, இப்போது துரைமுருகன் அவர்கள் பேசட்டும் என்று அனுமதித்திருக்கிறீர்களா? அவர் ஒழுங்கு பிரச்சனை என்ன என்பதை மட்டும் சொல்லட்டும். ஏதோ பேசிக் கொண்டு அவர் லாவணி பாடுகிறாரே தவிர நான் லாவணி பாடவில்லை. மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொன்னேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. துரைமுருகன் :** இட் இஸ் நன் ஆப் ஒரிஸ் பிசினஸ். நான் இன்னும் முடிக்கவே இல்லை. (கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

**திரு. து. புருஷோத்தமன் :** அமைச்சர் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். துரைமுருகன் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்லித்தான் நான் அவருக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமா? நீங்கள் உட்காருங்கள். தலைவரைப் பற்றி துரைமுருகன் பேசியவை அனைத்தையும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத்தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், இப்போது தொழில் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விவாதம் முடிந்து விட்டதைப் போல அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறாரே, இப்படி ஒரு முன்மாதிரியை நீங்கள் இந்த அவையில் ஏற்படுத்தப் போகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் தங்களுக்கு உடனடியாக பதில் கிடைக்க வேண்டுமென்பதற்காக பாயின்ட்—ஆப் ஆர்டர் கேட்பதால் அமைச்சர் அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வேறல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய ஒழுங்குப்பிரச்னையைச் சொல்லி மிக வேகமாக பேசினார்சள். நான் அப்போது பேசாமல் இருந்தேன். நான் பேசிமுடிக்கிற வரையில் அவர் மீண்டும் குறுக்கிடாமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறாஜா செரீப் அவர்கள் பேசுகிறபோது சில பிரச்னைகளை சொல்லிக் கொண்டு வந்தார்கள். அப்போது தண்ணீர் பிரச்சினையை பற்றிப் பேசினார்கள். வீராணம் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டு, அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது; அது என்ன காரணத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் அவருடைய கருத்தைச் சொன்னார்கள்.



நேற்று கூட இதுபற்றி பேசப்பட்டது. எனவே அதுபற்றி நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். பதில் சொல்வது எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சொல்லலாம். அதில் ஒன்றும் தவறில்லை. தொழில் மானியக் கோரிக்கை வருகிறபோது பதில் சொல்லப் போகிறேன். பின்னால் உறுப்பினர் அவர்களும் பேசவிருக்கிறார். அவருக்கும் சேர்த்து தான் பதில் சொல்லப் போகிறேன். இப்போது வந்த பிரச்னைக்கு தொடர்ச்சியாக ஒரு தகவலை இந்த அவைக்கு தருவது நல்லதென்று கருதி நான் சொன்னேன். 16½ கோடி ரூபாய் திட்டத்திலே ஏறக்குறைய 13¼ கோடி ரூபாய் வேலை துவங்குவதற்கு முன்னாலே கொடுத்ததை, தி.மு.க. உறுப்பினர்கள், காங்கிரஸ், உறுப்பினர்கள் உள்ளிட்ட அந்த பொது நிறுவனங்கள் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. அவை அதிகாரிகள் மட்டத்திலே நடந்திருகக் முடியாது. அதற்கு மேல்மட்டத்திலே இவை நடந்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிற அந்த பகுதியை நான் படித்துக்காட்டினேன்.

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்ல, உலக வங்கி சொன்ன அந்தத் திட்டத்திற்கும் பல கோடி ரூபாய் ஆகும். எனவே நடைமுறைப்படுத்த முடியாது. அந்த பைப்புகளை எடுக்க வேண்டுமென்று சொன்ன விவரங்களையும், பல்வேறு விவரங்களையும் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையிலேதான் அது கைவிடப்பட்டது. மற்றொரு திட்டமான திருச்சி குஜ்ஜிலியம்பாறையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான அந்த முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், தண்ணீர் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை என்ற காரணத்தாலே, இன்றைக்கு திருச்சிக்குப் பக்கத்திலே காவிரி ஆற்றிலிருந்து கட்டளைப் பொது மதகுக்குக் கீழே ஓரிடத்திலே நீரை எடுத்து, வெட்டப்பட்ட திறந்த கால்வாய் மூலமாக, செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கொண்டு வந்து அதிலேயிருந்து நீரைத் தூய்மைப்படுத்தி, சென்னை நகருக்குத் தரலாம் என்று அரசு அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது எனவே, வீராணம் திட்டத்தை விட்டதற்கும் காரணம் அரசியல் அல்ல. அதிலே நடந்த ஒழுங்கீனங்கள், தவறுகள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. அதைச் சொன்னேன். இதில் என்ன ஒழுங்குப் பிரச்னை இருக்கிறது?

**திரு. துரைமுருகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது முடிந்த விவகாரம். (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

[1983 ஏப்ரல் 13

திரு. துரைமுருகன் : அமைச்சர் அவரிடம் இருக்கிற பாக்ட்ஸ் அன்ட் பிகர்ஸ் சொல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால். ........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் பார்க்கிறேன், இந்த வீராணம் விவகாரம், 5 வருடங்களாக இந்த அவையிலே பேசப்பட்டிருக்கிறது. திரும்பவும் நாம் அதைப் பற்றி பேச வேண்டியதில்லை. ஏற்கனவே எடுத்த முடிவு. அப்படியே இருக்கிறது. அடுத்து, மாண்புமிகு சங்கரைய்யா..

திரு. துரைமுருகன் : அமைச்சர் இடையிலே எழுந்து பதில் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த சப்ஜெக்டைப் பேசியதே தவறு.

திரு. துரைமுருகன் : அவரா, நானா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே பேசி விவாதத்திற்கு உட்பட்டது அது.

திரு. துரைமுருகன் : புரொசீஜர் சரியா ?

THE HON. THIRU. S. THIRUNAUKKARASU : We are already adobling this procedure.

யாராவது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பும்போது, பதில் சொல்வது வழக்கம்.

It is not a new one Tnat procedure is being adopted.

திரு. துரைமுருகன் : திரு. ஹாஜா செரீப் பேசி, திரு. பிரபாகரன் பேசி முடித்த பிறகு, அமைச்சர் எப்படி பதில் சொல்கிறார் ? நான் கேட்க விரும்புவது டிஸ்கஷன் முடிந்து விட்டதா ? அமைச்சர் பதில் சொல்ல ஆரம்பித்திருக்கிறாரா?. (குறுக்கீடு) அவரிடம் இருக்கிற பாக்ட்ஸ் அன்ட் பிகர்ஸ் அவர் சொல்லலாம். என்னிடம் இருப்பதை நான் சொல்லலாம். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனி ஒன்றுமே அவைக் குறிப்பிலே எழுத வேண்டாம்.



1983 ஏப்ரல் 13)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : அமைச்சர் அவர்கள் நான் பேசியதற்கு விளக்கம் தெரிவித்துள்ளார். அதை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம் இங்கு கொஞ்சம் கூச்சலாக இருந்தது. மறுபடியும் அவர்கள் பைனலாக ரிப்ளை செய்யும்போது அதைப் பற்றி விளக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

10. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தொழில் மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்குப் பல மாண்புமிகு உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதால், கட்சித் தலைவர்களுடன் கலந்து முடிவு செய்து, இந்த மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்ந்து 18-4-1983, திங்கள் கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18-ஆம் தேதிய நடவடிக்கைகள் 19-ஆம் தேதியன்றும் மற்றவை தொடர்ந்தும் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. சென்னை நகர காவல்துறை ஆணையரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

I have th honour to inform you that Thiru P. Vijayaraghavan, M.L.A. (Killiyoor Constituency, Kanyakumari District) along with some other members of the Janata Party were arrested

today (13-4-1983) at 10·30 hours in 'X' station Crime No·362/83 u der
se tion 1·3 IPC read with s ction 41, Macras Cit, Police Act near
Tri mph of Labou Statue, K marajar Salai whe he took o t a p o-
c ssion with th int t on of r orti g to a fa t in f o t cf th Custom
Ho e, R jaj S lai in violati n of the proh bitory orders in fo ce in the
City H ha b e brot g t to the City Police Office, Egmore, Mad a

9 வரவு - செலவுத் திட்டம், 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால்
கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தொழில் மானியம் குறித்துமார்க்
ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், சர்வ
தேச நிதி நிறுவனங்கள் போன்றவைகளிடமிருந்து இந்திய அரசாங்
கம் பெற்றிருக்கிற கடன்களுக்கு அந்த சர்வ தேச நிதி நிறுவனங்
கள் விதித்திருக்கிற நிபந்தனைகள் இந்திய நாட்டிலே தொழில்
வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கிறது என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்தியாவில் இன்றைக்கு இந்தத்
தேசிய தொழில்கள் வளர வேண்டுமென்றால் என்ன செய்ய
வேண்டும்? தேசிய விடுதலை இயக்கம் தனக்கு முன்னால்
வைத்த இலட்சியங்களில் ஒன்று, அயல் நாட்டிலிருக்கின்ற
தொழில் முதலாளிகளுடைய சுரண்டலை ஒழிக்க வேண்டு
மென்பது. ஆனால் அதற்குப் பதிலாக அந்த அயல் நாட்டின்
பெரு முதலாளிகளின் ஆதிக்கம், இந்தியா சுதந்திரம் அடைந்து
இத்தனை ஆண்டு காலமாகியும் மேலும் அதிகரித்துக் கொண்டே
யிருப்பதால் இந்த நாட்டின் தேசியப் பொருளாதாரம் பெரிதும்
பாதிக்கப்படுகிறது. இந்த நாட்டின் ஒரு பகுதியாக இருக்கின்ற
தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்
படுகிறது என்பதைத் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பன்னாட்டு முதலாளிகள், தேசிய ரீதியிலே
வளர்ந்து வரும் தொழில்களை எதிர்த்துப் போட்டி போடுகிறார்
கள். இந்தியாவிலுள்ள ஏகபோக முதலாளிகளும் அதேபோல
தங்களுடைய ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார்
கள். அதனால் சிறு தொழில்கள் வளரவிடாதபடி தடுக்கிறார்
கள். இந்தப் பின்னணியில் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி



யைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டிய அவசியத்தை இந்திய அரசாங்
கம் ஏற்படுத்தியிருக்கிறது. விலைவாசி உயர்வு, அவர்கள் பல்
வேறு பொருள்களுக்கு விதித்த விலை உயர்வு, இரயில்வேக்
கட்டணத்தின் உயர்வு ஆகிய உயர்வுகளின் விளைவாகத்
தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும் பெரிதும் பாதிக்கிறது.
இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து,
மத்திய அரசாங்கத்தின் இந்தக் கொள்கையில் ஒரு மாற்றம்
வேண்டுமென்ற போராட்டத்திற்குத் தமிழக அரசாங்கம் தன்
னுடைய குரலைக் கொடுக்காமல் போனால் தமிழகத்தில்
தொழில் வளர்ச்சி ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அயல் நாட்டுப் பெருமுதலாளிகளின் சுரண்டலைத் தடுத்து,
இந்தியாவிலுள்ள ஏகபோக முதலாளிகள் வைத்திருக்கின்ற
சொத்துக்களை நாட்டுக்குச் சொந்தம் என்று செய்தாலொழிய
உண்மையான தொழில் வளர்ச்சி இன்றைக்கு நாட்டிலே ஏற்பட
முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

மாநில அரசைப் பொறுத்தவரையில் ஏராளமான வளர்ச்சிக்
கழகங்கள் என்று தொழில் துறையிலே வைக்கப்பட்டிருக்கின்றன.
சாதாரண ஒரு வாசகர் இந்தத் தமிழ்நாட்டிலுள்ள தொழில்
வளர்ச்சிக் கழகங்களைப் படித்துப் பார்த்தால் அவருக்கு நிச்ச
மாகப் பைத்தியம் பிடித்துவிடும். மற்ற விஷயங்களில்
வற்புறுத்துவதைப்போல, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் என்று
வற்புறுத்துவதைப் போல, இந்தக் கழகங்களின் எண்ணிக்கையைப்
பொறுத்தவரையில் தொழில் துறையில் எந்தவிதமான கட்டுப்
பாடும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஏராளமான கழகங்கள்
இருக்கின்றன என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதைப்
பற்றிப் பரிசீலனை செய்து, உண்மையிலேயே வித்தியாசமான
வேலைகளைச் செய்து கொண்டிருந்தால் அதற்காக வேண்டு
மானால் கழகங்கள் இருக்கலாமே தவிர, ஒன்றுக்கொன்று
தொடர்புடையதாக இருந்து, ஒன்று செய்ய வேண்டிய
வேலையையே மற்றொன்றும் செய்ய வேண்டிய நிலைமை
இருந்தால் அதை மாற்ற வேண்டும். ஏதோ சரித்திர ரீதியாக
முன்னாலே ஆரம்பித்து விட்டார்கள் என்பதற்காக இப்படிப்
பல்வேறு கழகங்களை வைத்துக் கொண்டிருக்க வேண்டிய
அவசியமில்லை. அதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டியது
பெரிதும் அவசியம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 13

ஏன் இவ்வாறு சொல்கிறேன் என்றால், இன்றைக்குத்
தொழில் முனைவர்களாக இருந்தாலும் ஒரேயொரு இடத்திலே
அவர்கள் தங்கள் மனுக்களைக் கொடுப்பதன் மூலம் காலதாமதம்
குறைந்து தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உதவி
செய்யும். அவ்வாறில்லாமல் ஒவ்வொரு விஷயத்திற்கும்
ஒவ்வொரு கழகத்திற்குச் சென்று கொண்டிருந்தால், அவர்கள்
மனுக்களைப் போட்டுக் கொண்டிருந்தால் காலதாமதம்
ஏற்படும். எனவே, இதில் சீர்திருத்தம் செய்தால் கால
தாமதத்தைத் தவிர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மற்றப் பிரச்சனைகளுக்குப் போவதற்கு
முன்னால், இந்தத் தொழில் வளர்ச்சியின் பெயரால் ஏற்பட
கூடிய பொல்யூஷனைப் பற்றிச் சொல்ல வேண்டும். பொல்யூ
ஷன் காரணமாக, ஆகாயத்திலும் தண்ணீரிலும் ஏற்படக்
கூடிய அபாயம் இருக்கிறது. இதன் காரணமாக, மேட்டூர்
போன்ற இடங்களிலேயும், இரயில்வே தொழிற்சாலைகளின்
மூலமாகவும், பள்ளிப்பாளையம் காகிதத் தொழிற்சாலையின்
மூலமாகவும், சிமென்ட் தொழிற்சாலை மூலயாகவும், தோல்
தொழிற்சாலை மூலமாகவும் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்
படுகிறார்கள். அவர்களுடைய குடிதண்ணீருக்கு ஆபத்து
ஏற்படுகிறது; அவர்களுடைய ஆடு மாடுகள் அந்தக் கிணறு
களிலே உள்ள தண்ணீரைக் குடிப்பதால் இறந்துவிடுகின்றன
என்று பெரிய கிளர்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன.
தொழில்களுக்கு ஏற்பாடு செய்கின்ற நேரத்திலே ஆகவே
விவசாயிகளைப் பாதிக்காத அளவிற்கு அந்தத் தொழிற்சாலைகள்
அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்; சுற்றுப்
புறம் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற
கண்டிப்பான ஏற்பாடுகளைச் செய்யாமற் போனால், கண்ணை
விற்றுச் சித்திரம் வாங்கிய கதையாகத்தான் முடியும். தொழிற்
சாலைகளை உண்டாக்குகிறோம் என்ற பெயரில் இந்த நாட்டு
லுள்ள ஐந்து கோடி மக்களுக்கு உணவு அளிக்கின்ற விவசாயி
கள் செய்கின்ற விவசாயம் கணிசமான அளவிற்குச் சீரழிந்துவிடக்
கூடாது. அந்த விவசாயிகளின் சார்பில் குரலெழுப்புவதற்கு ஸ்தா
பன ரீதியாகத் திரட்டக் கூடிய சக்தி இல்லாத காரணத்தால்
அவர்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், சிமென்ட்
ஆலைகள் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று ஒரு சமயத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்
கிருக்கின்ற நிலைமை என்ன? முதலாளிகள் இதற்குச் செல
வாகிறது என்ற காரணத்தைக் காட்டி, பாதுகாப்பு ஏற்பாடு
களைச் செய்வதற்கு மறுக்கிறார்கள்,



1983 ஏப்ரல் 13] [திரு. என். சங்கரய்யா]

(பிற்பகல் 1-00)

ஆலைகள் மக்களுடைய தேக ஆரோக்கியம் என்னவாகும்
என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து, அதிலே கடுமையான
நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி கொடுப்பதற்கு முன்னால்
இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு நிறைவேற்றப் படுகிறதா என்று
ஒவ்வொரு கட்டத்திலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
இன்றைக்குக் காலையிலே கவன ஈர்ப்பு தீர்மானத்திலே கூட,
பவானி ஆற்றிலே சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர்
அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதிலே ஒரு திருத்தம்.
யுனைடெட் நேஷன்ஸ் டெவலப்மெண்டு புரோகிராம் திட்டத்தின்
கீழ் இங்கே அவர்கள் வந்து ஆய்வு செய்தார்கள். அதனுடைய
அறிக்கையிலே ரூ. 205 கோடியாகும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. ஆகவே இது மாற்றுத் திட்டம் என்று நான் ஏற்கெனவே
சொல்லியிருந்தேன். யுனைடெட் நேஷனஸ் டெவலப்
மெண்ட்டு புரோகிராம் கீழ் அவர்கள் ஆய்வு செய்து, கொடுத்த
அறிக்கையில் உள்ளதை நான் சொன்னேன். அடுத்து வீராணம்,
அதற்கடுத்து கட்டளைக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவது
பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று நான் சொன்னேன்.
அதற்கடுத்து இப்போது கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர்
கொண்டுவருவதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்துக்
கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஒரு சிறு திருத்தத்தை
சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவரவர்களே, ஆகவே
இன்று காலையில் வந்த ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்திலே
பவானி ஆற்றிலே சவுத் இந்தியா விஸ்கோ கம்பெனி அவர்
களுடைய கழிவு நீர் கலப்படத்தினால் மக்கள் எவ்வளவு
பாதிக்கப்படுகிறார்கள் என்ற பிரச்சினை வந்தது. ஆக மிக
அவசர உணர்வோடு, மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள்
இதை கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, வேறு தொழிற்சாலை அமையும் இடங்களில்,
அங்குள்ள மக்களுக்கு பாதிப்பில்லாமல், அந்தத் தொழிற்சாலை
களை அமைக்க வேண்டும் என்ற பிரச்சினையிலே இந்த
அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 13

அதுபோல இந்த தொழிற்சாலைகளுக்காக இடம் வாங்கும் போது, அங்கேயிருக்கக்கூடிய விவசாய மக்கள் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார்கள். அதனால் மக்கள் மிகவும் அவதிப் படுகிறார்கள். அவர்களுடைய நிலங்களை இழக்கிறார்கள். நெய்வேலியிலே வரக்கூடிய ஒரு பெரிய பிரச்சினை இதுதான். நான் கேட்கவிரும்புவது, ஒரு தொழிற்சாலையை துவக்கும் போது, அந்தத் தொழிற்சாலைக்கான நிலங்களை வாங்குகிற போது, பூரணமான மார்க்கெட் நிலவரப்படி, அந்த மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். அதுமட்டுமல்ல. அவர்கள் வாழ்வதற்கு மாற்று இடங்களும் கொடுக்கப்படவேண்டும், அவர்கள் குடும்பங்களுக்கு அங்கே நிறுவப்பட இருக்கின்ற அந்த தொழிற்சாலையில் வேலை கொடுக்க வேண்டும். அது தமிழக சர்க்கார் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, மத்திய சர்க்கார் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அந்தக் கோட்பாட்டை அவர்கள் அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல தூத்துக்குடி-கரூர் பிராட்கேஜ் பாதை இந்த தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானது. தமிழ் நாடு சர்க்கார் மத்திய சர்க்காரை தொடர்ந்து வற்புறுத்தி வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல வேதாரண்யத்தில் துவக்கப்பட இருக்கின்ற எண்ணெய் துரப்பண வேலை எந்த கட்டத்திலே இருக்கிறது என்பதைப் பார்த்து, அதுவும் ஒரு முழுமையான வடிவம் பெறச் செய்தால், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அது உதவியாக இருக்கும். இவ்விஷயத்தில் நாம் ஆழ்ந்து அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற விஷயங்களுக்கு போவதற்கு முன்னால், தொழில் வளர்ச்சி பற்றி பேசுகின்ற நேரத்தில், இன்று குடியாத்தத்தில் திருமகள் டெக்ஸ்டைல்ஸ் என்னும் தொழிற்சாலையில் சுமார் 200 பேர்கள் பணிபுரிகிறார்கள். அந்தத் தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு அக்டோபர் முதல் மூடப்பட்டிருக்கிறது. அதனுடைய நிர்வாகிகளுடைய கோளாறுகளின் காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு லே-ஆப் சம்பளம் கூட கொடுக்கப் படவில்லை. அந்த மூடியிருக்கும் தொழிற்சாலையை திறந்து வைப்பது என்பது, அது தொழிற் துறைக்கு செய்யக் கூடிய ஒரு சேவையாக இருக்கும் காரணத்தால், இன்று அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 13] [திரு. என். சங்கரய்யா]

இந்தத் தொழிற்துறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள், கொள்கை விளக்க அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பிடப்பட்டிருப்பது என்னவென்றால், இன்று இனிமேல் தொழில் மூலமாகத்தான் தமிழகத்தில் வருமானத்தைப் பெருக்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நான் கூற விரும்புவது என்னவென்றால், விவசாய உற்பத்தியை பெருக்காமல், இன்றைக்கு உள் நாட்டிலே இருக்கக் கூடிய மக்கள் வாங்கும் சகதியை அதிகப்படுத்தாமல், அதற்கான தீவிரமான நில சீர்திருத்தம் இல்லாமல் தொழில் வளர்ச்சியைப் பெருக்க முடியாது என்ற உண்மையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆக தீவிர நிலச் சீர்திருத்தத்தின் மூலமாக நிலக் குவியல் முறையை ஒழித்து, நிலத்தை உழவர்கள் கையில் கொடுத்து, அவர்கள் கையில் வருமானம் வந்து, வாங்கும் சக்தி வந்தால் தான் தமிழகத்தில் ஏற்படுத்தக் கூடிய, உண்டாக்கக் கூடிய பொருள்களைக்கூட வாங்குவதற்கான நிலைமை ஏற்படும். வெறும் உற்பத்தியை பெருக்கினால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. உதாரணத்திற்கு நான் கைத்தறி உற்பத்தியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கைத்தறியாளர்கள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். ஆனால் இப்போது என்ன பிரச்சினை ? மாநில சர்க்கார் ரூ. 10 கோடி கொடுத்து வாங்குகிறார்கள். மத்திய சர்க்கார் ரூ. 40 கோடி கொடுத்து வாங்குமா என்று அதனுடைய கோ-ஆப்டெக்ஸ் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆக உற்பத்தியை பெருக்கினால் என்ன பிரச்சினை ? அந்த உற்பத்தி பொருள்கள் விற்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் ? ஆகவே தமிழ்நாட்டினுடைய மக்கள் கையில் வாங்கும் சக்தி இல்லை. இந்தப் பிரச்சினையைச் சேர்த்துப் பார்த்தாலொழிய, இந்தத் தொழிற்சாலைகளுக்கான உள் நாட்டு மார்க்கெட்டை விரிவுபடுத்துவதற்காக, சமுதாயப் பொருளாதார சீர்திருத்தங்களைஏற்படுத்தினாலொழிய, தொழில் வளர்ச்சி என்பது ஆகாயக் கோட்டையாகத்தான் இருக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அந்தத் தொழில் துறை அறிக்கையிலே அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் என்பதன்கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள் ஒன்றோடொன்று போட்டியிடக்கூடிய தன்மையானவை அல்ல. மாறாக அவை ஒன்றுக்கொன்று உறுதுணையானவை. அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படும் வகையில் தொழில் உற்பத்தியைப் பெருக்கி, பெருமளவில் முதலீடுகள் அதிலே செய்ய வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 13

நான் கேட்க விரும்புகிறேன். அது உண்மையா ? ஏகபோக
முதலாளிகளுக்கும் சிறு முதலாளிகளுக்கும் போட்டி இல்லையா ?
இன்று கைத்தறிக்கும் பவர் லூம் விசைத்தறிக்குமே போட்டி
என்று ஒரு பக்கத்திலே வாதாடுகிறார்களே அது போட்டி
இல்லையா? குடிசைத் தொழிலை வைத்து நடத்தக் கூடியவர்களை
பெரிய தொழில்கள் நடத்துகிறவர்கள் அவர்கள் பூராவையும்
அழித்துவிடுவதற்கான முறையிலே மார்க்கெட்டிலேயிருந்து விலக்கு
வதற்காக ஏற்பாடு செய்யவில்லையா ? ஏற்பாடு செய்தார்
கள். ஆகவேதான் நான் கூறுகிறேன். இன்றைக்கு இவை
களை எல்லாம் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்
டும். கணக்கில் எடுத்துக்கொண்டு குடிசைத் தொழில்களுக்கும்,
சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும், இந்திய
ஏகபோக முதலாளிகளிடமிருந்தும், அயல்நாட்டு பெரும்
முதலாளிகளிடமிருந்தும், பாதுகாப்பு என்ற அளவில் ஒரு
கொள்கையை தமிழ்நாடு சர்க்கார் நடவடிக்கை எடுக்காமல்
போனால் நீங்கள் சொல்லக்கூடிய புள்ளிவிவரங்கள் பல இன்
றைக்கு உண்மையாக இல்லாமல் போய்விடும் என்று நான்
கூறவிரும்புகிறேன். உதாரணமாக நான் ஒன்றை இங்கே கூற
விரும்புகிறேன். அதாவது சங்ககிரி ஆலையிலே இண்டியன்
டுபாக்கோ என்ற அந்த நிறுவனம் அதனுடைய பெரும்பான்மை
யான பங்குகளைப் பெற்று அதனுடைய நிர்வாகப் பொறுப்பை
அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே இதைப்பற்றி
நான் ஆளுநர் உரையிலேகூட பேசியிருக்கிறேன். அன்றைக்கும்
பதில் வரவில்லை. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?
இந்தியன் டுபாக்கோ கம்பெனி என்பது ஒரு ஏகபோக இந்திய
நிறுவனம். அவர்கள் கையிலே சங்ககிரி சிமெண்ட் ஆலை
போகிறது. அதுமட்டுமல்ல. நான் அன்றைக்குக் குறிப்பிட்
டேன். அவர்கள் ஒரு காகித ஆலையினுடைய பங்குகளை
கூட பெரும்பான்மையாக வாங்குவதற்கு முயற்சிக்கி
றார்கள். இப்படி ஏகபோக முதலாளிகள் தமிழகத்திலே இருக்
கக்கூடிய அந்தத் தொழில்களை அவர்கள் வாங்குவதற்கு, எடுத்
துக்கொள்வதற்கு இன்றைக்கு செய்யக்கூடிய முயற்சிகளைப் பற்றி
அரசாங்கம் கவனம் செலுத்தி, அதை பாதுகாப்பதிலே, அக்கறை
செலுத்த வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.
காரணம் என்னவென்றால், இந்தியாவினுடைய பெரும் முத
லாளிகள் எல்லாம் சிறிய தொழில்கள், அதாவது கன்சுமர்ஸ்
இண்டஸ்டரீஸ் மக்கள் நுகரக்கூடிய பொருள்களிலே எல்லாம்கூட
அவர்கள் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் வரக்
கூடாது என்று வைத்துள்ள துறைகள்—உதாரணமாக சொல்ல
வேண்டும் என்றால் Federation of Indian chamber of comme.ce and
Industry பிக்கி என்று செல்லமாக அதை அழைக்கிறார்கள். இந்திய
பெரும் முதலாளிகளின் ஸ்தாபனம். அதுவும் புதுமையானதாகத்



1983 ஏப்ரல் 13] [திரு. என். சங்கரய்யா]

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் திரு. அசோக் ஜெயின் அவர்
கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா ? விவசாயத்
துறையிலேகூட நாங்கள் போக வேண்டும். விவசாயத் துறைக்கு
நிலத்திற்கு உச்சவரம்பு காட்டக்கூடாது. நிலத்திற்கு உச்ச
வரம்பு கட்டக்கூடிய சட்டங்கள் எல்லாம் முறியடிக்கப்பட வேண்
டும். நாங்கள் அதிலே புகுந்து இன்றைக்கு காய்கறி மற்றும்
தோட்டப் பயிர்களை நாங்கள் எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்று
மதி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே விவ
சாயிகளுடைய தலையிலே கை வைப்பதற்கு இந்திய பெரும்
முதலாளிகளுடைய சங்கத்தினுடைய தலைவர் துடித்துக்
கொண்டிருக்கும்போது இந்தச் சிறு தொழில்களை விட்டு
வைப்பார்களா ? இது எவ்வளவு பிற்போக்கான கொள்கை
என்பது உங்களுக்குத் தெரியும். நாம் கூறிக்கொண்டு இருக்கி
றோம். இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நிலம் இல்லை.
ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள், நிலஉடமைக்கு வரம்பு
கட்டுகிற சட்டங்களை தகர்த்து எடுத்து நிலங்களை எல்லாம்
நாங்கள் எடுத்து தொழில் ரீதியில் நடத்தி லாபம் சம்பாதிப்
பதற்கு எங்களுக்கு உரிமை வேண்டும் என்று கேட்கிறார்
கள். இதுவும் தொழில் துறையிலே உள்ள ஒரு பிரச்னை
என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : சார், Ashok Jain
President, Federa ion of Indian Chambers of commerce
அவர்கள் ஒரு யோசனையைக் கொடுத்தார்கள் என்றால் இது
வரைக்கும் உபயோகத்தில் கொண்டு வராத பூமியை அவர்களுக்கு
கொடுத்து, நீங்கள் செய்யுங்களேன் என்று சொல்லலாம். பூரா
வும் அவர்களுடையசொந்தத்திற்குக் கொண்டு வரப்போவதில்லை.
எக்ஸ்போர்ட்டுக்காக அதை ஏற்பாடு செய்யலாம். அந்த
யோசனையை ஏன் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள்
கிரிட்டிசைஸ் பண்ணுகிறார்கள் என்பதுதான் எனக்குப் புரிய
வில்லை.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா
செரீப் அவர்கள் இந்த அறிக்கையை சரியாகப் பார்க்கவில்லை
என்று நான் கருதுகிறேன். அவர்கள் சும்மா இருக்கிற காலி
நிலங்களைக் கேட்கவில்லை. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய
நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டக் கூடிய சட்டங்கள் என்பதை
நீக்கிவிட்டு எந்த வரம்பும் இல்லாமல அந்த நிலங்களை எங்களி
டம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஏற்கனவே இங்கே
விவசாயிகள் உழுவதற்கு நிலம் இல்லை என்ற நிலைமையிலே
அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இது பிற்போக்கான நட
வடிக்கை என்று நான் குறிப்பிட்டேன்.

களைச் செய்தால்தான், தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்திற்கு ஒருபெரு முயற்சியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இதிலே மற்றொரு பிரச்சினை என்னவென்றால், தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) என்ற ஸ்தாபனம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, பொதுத் துறையும், தனியார் துறையும் சேர்ந்து, கூட்டுத் துறை என்ற முறையில் இன்றைக்குப் பல தொழிற்சாலைகளை வளர்த்து வருகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். உருக்கு வார்ப்படம், சிமிட்டி, வெடி மருந்துகள், நைட்ரிக் அமிலம், அமோனியம் நைட்ரேட், மாங்கனீசியம், உலோகம் முதலிய பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளது. டிட்கோ நிறுவனம் 19 கூட்டுத் துறைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்றும், புகையிலை, தொலைக் காட்சி, தோல், பெட்ரோல் தொடர்பான இரசாயனப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் தயாரித்தல், இரசாயன உரம் தயாரித்தல் முதலிய தொழில்கள் இத்திட்டத்தில் சிறந்து விளங்குகின்றன என்று இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இந்த பொதுத் துறை நிறுவனம் இப்படி தனியாரோடு சேர்ந்து இத்தகைய பொருள்களைத் தயாரிக்க கவனம் செலுத்துவது நியாயம்தானா, பொருத்தமானதுதானா என்ற வினாவை இங்கே கேட்க விரும்புகிறேன். இந்த டிட்கோ 19 தொழில்களை கூட்டுத் தொழிலாக தொடங்கியுள்ளது என்று சொன்னால், அவைகள் எல்லாம் லாபகரமான தொழில்கள். அதிலே கிடைக்கின்ற லாபம் தமிழகத்தில் இருக்கும் பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடாதா என்ற கேள்வியைத்தான் நான் இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கேட்க விரும்புகிறேன்.

இதிலே நாம் ஏராளமாக நம்முடைய பணத்தையும் மத்திய மாநில சர்க்கார்களுடைய நிதி நிறுவனங்களிலுள்ள பணத்தையும் போட்டு தனியார் கையிலே ஒப்படைத்திருக்கிறோம். நாம் பணம் போட வேண்டியது அவர்கள் நிர்வாகம் நடத்த வேண்டியது அதனுடைய லாபத்தை அடைய வேண்டியது. இப்படி இருந்தால் தமிழ் நாடு எப்படி உருப்படியாகும்? அதிலே கூட ஊழல். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் இராணிப்பேட்டையிலே சிப்காட்டிலே உள்ள ஒரு கூட்டு நிறுவனம், தமிழ்நாடு குரோம்பேட் குரோமியம் கெமிக்கல்ஸ், டி.சி.சி., அதிலே 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஊழல் நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலே பொறுப்பிலே இருந்த தனி நபர் நீக்கப்பட்டுள்ளார். மேலும் என்ன



நடவடிக்கை என்பதைத் தெரிவிக்க வேண்டும். இப்படி பலர்
இந்த கூட்டுத்துறை நிர்வாகத்திலே இருந்து கொண்டு, பணத்
தையும், ஊழல் செய்து கொண்டு போய் விட்டால் இதனால்
நஷ்டம் அடையக் கூடியவர் யார் என்பதை நீங்கள் எண்ணிப்
பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்னொரு முக்கியமான பிரச்சனையைக்
குறிப்பிட விரும்புகிறேன். 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட டிட்கோ
முழுமையும் அரசு கம்பெனி. ஆலங்குளம் சிமெண்ட், அரக்
கோணம் ஸ்டீல் இன்றைக்குப் தொடங்கப்பட்டது. ஆனால்
சொல்லியிருக்கிறார்கள். பாருங்கள்,
ஆங்கிலத்திலே
In view of the concept of the Joint sector evolved by the
Government of India, the scope of its activities was enlarged
இவர்கள் பொதுத்துறையிலே தொழிலை நடத்துவதற்குத்தான்
இந்த டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மத்திய
சர்க்காரினால் உருவாக்கப்பட்ட கூட்டுத்துறை என்ற கருத்திற்கு
இணங்கி, ஆக அதைக் கெடுத்தது மத்திய சர்க்கார் என்பது
நமக்குத் தெரிகிறது. தமிழ்நாட்டிலே இந்த டிட்கோ பொதுத்
துறையில் தொழில்களை உருவாக்க அமைக்கப்பட்டது. மத்திய
சர்க்கார் அதிலே புகுந்து, ஜாயிண்ட் செக்டார் (கூட்டுத்துறை)
என்று சொல்லி கெடுத்துவிட்டார்கள். இன்றைக்கு என்ன நிலை
மை? நான் ஒரு கணக்கைப் போட்டு பார்த்தேன். அந்தக்
கணக்குப்படி பார்த்தால் இந்த டிட்கோ நிறுவனம் மூன்று கட்டங்
களில் இருக்கிறது. அதாவது இப்போது நடைபெறுகின்ற
தொழில்கள், உருவாக்கப்படக்கூடிய தொழில்கள், திட்டத்தில்
இருக்கக்கூடிய தொழில்கள் — இவை எல்லாம் சேர்த்து இந்த
அறிக்கையில் கூட்டிப் பார்க்கவில்லை, நான் கூட்டிப்பார்த்தேன்
— எல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் அவற்றின் எண்ணிக்கை
11 தான். அவற்றிற்குப் போடக்கூடிய மூலதனம் 113.10 கோடி
ரூபாய். அதே நேரத்தில் பொதுத்துறையிலே தொழில்களை
உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த டிட்கோ நிறுவனம்
கூட்டுத் துறையிலே என்ன செய்திருக்கிறது என்று பார்த்தால்
அதிலும் இப்போது நடக்கிற தொழில்கள், உருவாக்கப்பட
இருக்கிற தொழில்கள், திட்டத்தில் இருக்கிற தொழில்கள் என்ற
மூன்று கட்டத்திலும் பார்த்தால் 40 பிராஜக்டுகள் இருக்கின்றன.
அவற்றுக்குப் போடக்கூடிய மூலதனம் 470.95 கோடி ரூபாய்.
இது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து
கொள்ள வேண்டும். பொதுத்துத்துறையில் தொழில்களை உரு
வாக்க என்று அமைக்கப்பட்ட டிட்கோ நிறுவனம் பொதுத்
துறையில் 11 பிராஜக்டுகளுக்கு 113.10 கோடி போடுகிறது.
ஆனால் முதலாளிகள் சேர்ந்திருக்கிற கூட்டுத்துறையில் 40
பிராஜக்டுகளுக்கு 470.95 கோடி போடுகிறது. இப்படி இருந்தால்

13638

அடுந்தபடியாக நான் இங்கே குறிப்பிடுவது, எனக்கு ஒரு
ஆச்சரியமாக இருக்கிறது. 1976 ஆம் ஆண்டிலே தமிழ
கத்திலே இருந்த தொழில்களிலே உற்பத்தி செய்ய, தொழிலில்
முடக்கப்பட்ட மூலதனம் அன்றைக்கு குறைவாக இருந்தது,
2,007 கோடியாக இருந்தது. ஆனால் அறிக்கையிலே கூறு
கிறார்கள். 1980–81 ஆம் ஆண்டிலே தமிழகத்திலேயிருக்கின்ற
தொழில்களிலே முடக்கப்பட்ட மூலதனம் 4,292 கோடியாக
உயர்ந்து விட்டது என்று கூறுகிறார்கள். அதாவது 113.93
சதவீதம் சில ஆண்டுகளிலே தொழில்களிலே எல்லாம்
போடப்பட்ட மூலதனம் ஏறக்குறைய 2 மடங்காக கூடியிருக்கி
றது. எங்கேயிருந்து இந்தப் பணம் வந்தது என்று நான் கேட்க
விரும்புகிறேன். அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பிலே
இந்த 2 ஆயிரம் கோடி ரூபாய் இந்தப் புதிய மூலதனம் தொழில்
களிலே போடப்படுவதற்கு எங்கே இருந்து வந்தது? அதைப்
பற்றி எந்தவிதமான விளக்கமும் இல்லை. அமைச்சர் அவர்
கள் தன்னுடைய பதிலைச் சொல்வார்கள் என்று நான் நம்பு
கிறேன்.

(பிற்பகல் 1–10)

ஏனென்றால் ஏகபோக முதலாளிகளின் பணம், பெருமுத
லாளிகளின் பணம் எதற்காக திடீரென்று இந்த 2,000 கோடி
ரூபாய் இதிலே முடக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்
தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதிலே தமி
ழகத்திலே ஏகபோகம் வளர்ந்து கொண்டு இருக்கிறதா என்பதை
நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது, இந்திய சர்க்
கார் பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். 1967 ஆம்
ஆண்டுக்குப் பிறகு இந்திய அரசு பெரிய அளவிலே தமிழகத்திலே
முதலீடு எதுவும்செய்யவில்லை என்பது உண்மை. காங்கிரஸ்
ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டதோடு நின்றுவிட்டது என்பது
உண்மை. ஆகவே, மேலும் பல புதிய பெரிய நிறுவனங்களை
தமிழகத்தில் துவங்க வேண்டும் என்று சொல்வது நியாயமான
கோரிக்கை. இதிலே ஒன்றை நான் கூறவிரும்புகிறேன்.

திருச்சியில் இருக்கும் பி.எச்.இ.எல். நிறுவனம் 1984–85
இல் இருந்து ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் அளவிற்கு
உற்பத்தித் திறனை அதிகரிக்க விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
இது தொழில் வால்வுகள் தயாரிக்கவும் கருதுகிறது. இந்தத்
தகவல் இதிலே கொடுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்





கது. இது ஒரு சரியான முறையும் ஆகும். அதேபோல், ராணிப்பேட்டையில் இருக்கும் கொதிகலன் துணைப் பாகங்கள் தொழிற்சாலை முழு உற்பத்தித் திறனை 1984–85-ல் எய்தும் என்றும், ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிக்கும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. இவைகளிலே உற்பத்தி செய்யப்படுகின்ற கொதிகலன்களுக்கு மார்க்கெட் வேண்டாமா? இந்திய உருக்கு அதிகார மன்றம் (செயில்) அவர்களும், இந்த பாரத கனரக மின் நிறுவனமும் சேர்ந்து கோடிக்கணக்கில் செலவு செய்து இருக்கிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காருக்கு என்ன சொல்கிறார்கள் என்றால், அந்த நிர்வாகமும், தொழிற்சங்கமும்கூட என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த நாட்டில் உள்ள நாங்களே கொதிகலன்களை உற்பத்தி செய்யக்கூடிய சக்தியைப் பெற்றுவிட்டோம்; திறமையைப் பெற்றுவிட்டோம், ஆகவே, வெளிநாடுகளில் இருந்து இனி கொதிகலன்களை இறக்குமதி செய்யக்கூடாது என்று கேட்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசாங்கமும் அந்த பாரத கனரக மின் நிறுவனம் உற்பத்தி செய்யும் கொதிகலனைப் பயன்படுத்த வேண்டும். வெளிநாடுகளில் இருந்து கொதிகலன்களை வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்ற நிலையைச் சொன்னால் தான் அந்தத் தொழிற்சாலை வளரும் என்பதற்காக அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பல்புகளை உற்பத்தி செய்வதற்கு ஒரு ஏற்பாடு அவசியம் செய்யப்பட வேண்டும். அது தமிழகத்தில் இருக்கும் மின்சார வாரியத்திற்கு மிகவும் தேவைப்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சேலம் உருக்காலை பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். இன்றைக்கு அது மிகவும் சிறிய தொழிற்சாலை ஆகி விட்டது. நான் சில நாட்களுக்கு முன்பு அங்கே போய் இருந்தேன். அங்கேயுள்ள தொழிலாளர்கள் லே-ஆப் வரும் என்று அஞ்சுகிறார்கள். அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு மிகவும் கஷ்டமான நிலையில், பெரும் சிக்கலில் இருக்கிறது. பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் மீது மத்திய சர்க்கார் கஸ்டம்ஸ் டியூட்டி போடுகின்ற காரணத்தால் அவர்கள் பெரிதும் சிக்கலில் இருக்கிறார்கள். அந்த நிர்வாகம் இன்றைக்கு என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே தான் சேலம் உருக்காலையைப் பொறுத்த வரையில் அதை ஒரு பெரும் தொழிலாக ஆக்குவதற்கு நம்முடைய அரசாங்கமும், நாமும் சேர்ந்து அதற்கான ஏற்பாடு

இந்த மாநிலம் உருப்படியாகுமா என்று கேட்க விரும்புகிறேன். ஆக டிட்கோ ஸ்தாபனம் நான்கில் ஒரு பங்கு போடுகிற முதலாளி களை வளர்க்கத்தான் பாடுபடுகிறதே தவிர பொதுத்துறையை வளர்க்க அல்ல என்பது நமக்குத் தெரிகிறது. அதனால் தமிழக மக்களுக்கு வருமானம் கிடைப்பதில்லை.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது இருக்கக்கூடிய எச். என். டேவிஸ் என்ற கம்பெனி, வானவில் என்ற டை உற் பத்திச் செய்யக்கூடிய கம்பெனி, மல்லாடி டிரக்ஸ் என்ற கம்பெனி, தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் என்ற கம்பெனி ஆகிய இந்த நான்கு கம்பெனிகளும் பொதுத்துறையில் இருந்தால் மக்களுக்கு எவ்வளவு நல்லதாக இருக்கும் என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். தமிழ்நாட்டிலே கைத்தறித் தொழிலாளர் களுக்குத் தேவைப்படக்கூடிய டை உற்பத்திச் செய்யக்கூடிய சாயத்தொழிற்சாலை — அது பொதுத் துறையில் இல்லை. இவை ஒவ்வொன்றும் நல்ல லாபம் கொடுக்கக்கூடியவை. ஆனால் இவை எல்லாவற்றையும் இன்றைக்கு கூட்டுத் துறையில் வைத்து நடத்திவருவதின் மூலம் பயன்படக்கூடியவர்கள் தனிப்பட்ட முதலாளிகள்தான். இதை உணர்ந்து, தமிழக சர்க்கார் தன்னு டைய கொள்கையை மாற்ற வேண்டும். டிட்கோ என்ற நிறுவனம் பொதுத்துறையில் மட்டும் தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும்; கிடைக்கக்கூடிய வருமானம் தமிழக மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அடுத்து கூற விரும்புவது மதுரை ஜில்லாவில் திண்டுக் கல்லுக்கு அருகில் உள்ள பாளையத்தில் 4 இலட்சம் டன் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்த தமிழக சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் இருக்கிற ஒரு சந்தேகத்தை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் கேள்விப்பட்டது, பக்கத்தில் இருக்கக்கூடிய புலியூர் என்ற இடத்தில் செட்டிநாடு சிமெண்ட் என்ற ஒரு கம்பெனி இருக்கிறது. அதனுடைய நலன் பாதிக்கும் என்பதால் இந்த பாளையத்திலே சிமெண்ட் தொழிற் சாலை தொடங்குவது தாமதமாகிறது என்று மக்கள் மத்தியிலே ஒரு கருத்து இருக்கிறது. அந்த மக்கள் கருதுவதுபோல் இருந்தால் அது தவறானது. இந்த புலியூர் தொழிற்சாலை மிக சிறிய தொழிற்சாலை. அவர்களுக்குள்ளே போட்டி வரலாம். அப்படி வந்தால் தன்னுடைய தொழில் பாதிக்கும் என்பதால் பக்கத்திலே பொதுத்துறையில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதை ஆரம்பிக் காமல் இருக்க அவர்கள் குறுக்கிடுகிறார்கள் என்ற சந்தேகம்



(பிற்பகல் 1-20)

ஏற்படுகிறது. எனவே தான் இன்றைக்கு நான் அதை கிளப்ப விரும்புகிறேன். அதே போல டிட்கோ நடத்தக் கூடிய தொழில் களிலே அதிகாரிகள் அவர்களுடைய ஆதிக்கத்தை வைத்து மட்டும் நிர்வாகத்தை நடத்துவதை நம்பாமல், உண்மையிலேயே தொழி லாளர்களுக்கும் அதில் பங்கு ஏற்படுத்திக் கொடுத்து, அந்த முறையில் ஏற்பாடு செய்தால்தான், நிச்சயமாக தொழில்களில் உற்பத்தி அதிகரிக்கச் செய்ய முடியும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. அடுத்து நான் சொல்ல விரும்புவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் சலுகை கள் கொடுக்கப்படுவதாக நீங்கள் இந்த அறிக்கையிலே குறிப் பிட்டிருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட, அல்லது பழங்குடி மக் களிலிருந்து யாராவது தொழில் துவங்க முன் வந்தால், புரோ மோட்டர்ஸ் என்ற வகையில்—அவர்கள் தங்களுடைய மூல தனமாக போடுவதில், மற்றவர்கள் 20 சதவீதம் போட வேண் டும் என்றால், அவர்கள் 15 சதவீதம் கொடுத்தால் போதும் என்ற வகையிலும், வட்டியிலும் கன்சஷன் கொடுத்திருக் கிறீர்கள். எத்தனை பேர்கள் தொழில் துவங்க முன் வந் தார்கள் என்று அறியவிரும்புகிறேன். அந்த முயற்சிகளின் விளை வாக தமிழ் நாட்டில் இதுவரையில் பழங்குடி மக்களிலிருந்து, தாழ்த்தப் பட்ட மக்களிலிருந்து எத்தனை பேர்கள் தொழில் முனைவர்களாக முன் வந்தார்கள்? எத்தனை பேர்கள் தொழில் செய்கிறார்கள் என்கிற விவரம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் கொள்கை அளவிலே மட்டும் சொன்னால் போதாது, நடைமுறையில் பயன் இருக்கிறதா என்று பார்க்க வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் முன்னேற வேண்டும் என்கிற எண்ணத்தில் உண்மையிலேயே இந்தக் கொள்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எத்தனை பேர்கள் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இதன் மூலமாக வந்திருக்கிறார்கள் என்று சொல்வது தான் அதற்கு சாட்சியாக இருக்க முடியும். அதே போல நீங்கள் ஆரம்பித் திருக்கக் கூடிய தொழில்களில்—நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்—மானாமதுரையிலே 492 ஏக்கர்கள் தொழில் துவங்குதவற்காக வாங்கப்பட்டிருந்தாலும் கூட, அதிலே, 63 ஏக்கர்கள்தான் இதுவரையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நிலம் வாங்குவது எவ்வளவு கஷ் டம்? அத்தனை நிலங்களும் இன்றைக்கு வீணாக வைக்கப்பட்

டிருந்தால், எவ்வளவு பெரிய நஷ்டம் அதனால் இத்துறைக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறது. இப்படி சும்மா வைக்கப்பட்டிருக்கிற இந்த ஏக்கர் நிலங்களால் பிரயோஜனம் இல்லை என்பதை அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் என்று சொன்னால் அது பெரும் முதலாளிகளுக்கு உதவி செய்வதற்காகவே இருக்கிறது என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது...... (குறுக்கீடு)

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் :** தலைவர் அவர்களே முதலாளி முதலாளி என்று சொல்லுகிறார்கள். எந்த முதலாளி, யார் முதலாளி? அவர் எதைக் குறிப்பிடுகிறார்? கடன் வாங்கி முதல் போட்டு தொழில் செய்து, லாபம் வந்தாலும் திரும்பவும் அதையே முதலாக போட்டு, இப்படி பாடுபட வேண்டிய நிலைமையில் தான் முதலாளிகள் இருக்கிறார்கள்.

My comrade on my left says Mudalal. It is significant. I think he has not understood what are the responsibility of starting an industry.

**திரு. என். சங்கரய்யா :** முதலாளி என்று சொன்னால் அவர்களுக்கு குமட்டல் வருகிறது. இந்தியாவிலேயே ஏகபோக முதலாளிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் போய் இதைச் சொன்னால் பரவாயில்லை. இந்தியாவிலேயே இருக்கிற ஏக போக முதலாளிகள் தான் இந்தியா முழுவதும் இருக்கிற தொழிற் செல்வங்களை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற சில ஏக போக முதலாளிகளினுடைய குடும்பங்களும், இந்தியாவிலே இருக்கிற ஏக போக முதலாளிகளினுடைய குடும்பங்களின் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். முதலாளிகள் வளர்ந்து வருகிறார்கள். தலைவர் அவர்களே, அப்படி முதலாளிகள் என்று சொல்வதே மாண்புமிகு உறுப்பினருக்கு குமட்டலைத் தந்தால், அந்த நிலைமை வேண்டாம் என்றால், அந்தப் பெரும் முதலாளிகளின் கையிலே இருக்கும் சொத்துக்களை பாரதியார் சொன்னதைப் போல் நாட்டுடமை ஆக்கி விட்டால் அந்த குமட்டல் நின்று விடும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தான் உண்மையிலேயே சிறிய சிறிய தொழில்களுக்கு உதவி செய்து வந்திருக்கிறது. நீங்கள் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்கள்;



81-82ஆம் ஆண்டில் 5,646 மிகச் சிறிய தொழில்களுக்காக இந்த நிறுவனம் உதவி செய்திருக்கிறது என்று. உண்மையிலேயே பார்க்கப் போனால் பெரிய தொழிற்சாலைகளை துவங்குவதன் விளைவாக வேலை வாய்ப்பு அதிகரிக்க வில்லை. ஆனால் இப்படிப் பட்ட சிறிய தொழில்கள் மூலமாகத்தான் 52 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறோம். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில், இந்த நாட்டைப் பொறுத்த வரையில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கியிருக்கிறது என்ற நிலைமை இருக்கிறது.

குடிசைத் தொழில்கள், விவசாயம், சிறு தொழில்கள் ஆகிய பல்வேறு வகைகளிலே மக்களை ஈடுபடுத்தினால்தான் இந்த நாட்டில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி ஓரளவு வேலை வாய்ப்புகளை கொடுக்க முடியும். இப்போதைய பொருளாதார நிலைமையை மறந்து விட்டு, நாம் வேறு ஏதோ தேசத்தில் இருக்கிறோம் என்று கனவு கண்டு கொண்டிருந்தால் நமது நாட்டு மக்களின் நிலைமை மிக அலங்கோலமான நிலைமையாக ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த சர்க்கரை ஆலைகளை பொறுத்த வரையில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். போன தடவை தொழில் மானியக் கோரிக்கை வந்த போது, இது பற்றி பெரிய விவாதம் நடந்தது. அப்போது நாங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்ன சொன்னோம். இந்த சர்க்கார், இந்த விஷயத்தில் பின்னுக்கு போய்க் கொண்டிருக்கிறது. இந்த சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில், அது பொதுத் துறையிலோ, அல்லது கூட்டுறவுத் துறையிலோ தான் இருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதில் சொல்லும் போது சென்ற ஆண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலிருந்து நழுவி பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ முதலீடு செய்ய முடியாமல் போனால், வாய்ப்பு இல்லாமல் போனால் அதை தனியார்கள் செய்ய அனுமதிக்கிறோம் என்று சொன்னார்கள். அதை கடுமையாக அப்போதே நாங்கள் எதிர்த்தோம். என்ன சொன்னோம்? நாங்கள் சொன்னதை மாண்புமிகு ஹாஜா ஷெரிப் அவர்களே ஒத்துக் கொண்டார்கள்.

பெரிய தொழில் முனைவோர்களாக இருந்தாலும் அவர்கள் சொஞ்சம்தான் மூலதனம் போடுவார்கள். மற்றவற்றை எல்லாம் நிதி நிறுவனங்கள் தான் கொடுக்கும். நிதி நிறுவனங்கள் எவை? இந்திய சர்க்கார் மற்றும் மாநில அரசாங்கங்களுடைய நிதி நிறுவனங்கள். இவற்றிலிருந்துதான் அவர்கள் ..

பணத்தை வாங்குகிறார்கள். நாம் அரிசியைக் கொடுக்கிறோம், அவர்கள் உமியைக் கொண்டு வருவார்கள், இரண்டு பேரும் சாப்பிடலாம் என்ற வகையிலே செய்கிறார்கள். இதுதானே அவர்களுடைய தந்திரம். ஆகவேதான் நான் கேட்கிறேன். சென்ற ஆண்டிலே செய்த தவறு இப்போது என்ன ஆனது? இங்கே முடியாவிட்டால் என்று சொன்னார்கள். ஏன் முடியாது? நம்முடைய நிதி நிறுவனங்கள் பொதுத் துறையிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும் அவற்றை ஆரம்பிப்பதற்கு நிதியுதவி கொடுக்க முடியாதா? முடியும். போன தடவை ஒன்று என்று சொன்னார்கள். ஆனால் இப்போது பார்த்தால் தமிழ்நாடு சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அவர்கள் அந்த நிர்ப்பந்தத்திற்கு ஏற்று 9 பேர் தனியார் முதலாளிகள் இந்த சர்க்கரைத் தொழிலில் முதலீடு செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தார்களாம், அவர்களிலே 5 பேருக்கு தமிழ்நாடு சர்க்கார் சிபாரிசு செய்திருக்கின்றது. அதாவது அடுத்தாற்போல தமிழ்நாட்டிலே வரக்கூடி 5 தொழிற்சாலைகள் பொதுத் துறையிலே இருக்காது. கூட்டுறவுத் துறையிலேயும் இருக்காது. தனியார் முதலாளிகளுக்குத்தான் கொடுக்கப்படும். அப்படியானால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபத்தை தமிழ்நாடு சர்க்காருக்குக் கொடுக்கப் போகிறார்களா? அல்லது தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுக்கப் போகிறார்களா? அல்லது கூட்டுறவுத் துறையிலேயும் பொதுத் துறையிலேயும் நடைபெறக்கூடிய சர்க்கரை ஆலைகளின் நஷ்டத்தை இவர்கள் வந்து சரிபடுத்தப் போகிறார்களா? திருச்சி மாவட்டத்திலே பொதுத் துறையிலே உள்ள சர்க்கரை ஆலையும் இன்னொரு இடத்திலே இருக்கின்ற பொதுத் துறையிலே உள்ள சர்க்கரை ஆலையும் இலாபத்திலேதான் இயங்குகின்றது என்று சர்க்காரே ஒத்துக்கொண்டிருக்கிறது. அப்படி இலாபத்திலே நடக்கின்றபோது அதை ஏன் கைவிட்டிருக்கிறார்கள்? ஆகவே நான் உங்களுடைய தொழில் கொள்கையிலே ஒரு நழுவல் ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் சொல்கிறேன். ஆகவே தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருதிப் பார்க்கின்ற வகையிலே உங்களுடைய இந்தத் தொழில் கொள்கை இல்லை. எனவே இந்தக் கொள்கையிலிருந்து நீங்கள் பின் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோதான் இந்தத் தொழிற்சாலைகள் வந்தாக வேண்டும்.

அடுத்து காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை புகளூரிலே வருகின்றது என்பதைப் பற்றிய விவரங்களைப் பார்த்தேன். அதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. இப்போது உலக வங்கியிடமிருந்து 100 மில்லியன் டாலர் கடன் வாங்கப் போகிறீர்களே, அதற்கு என்ன வாய்ப்பு? இந்திய சர்க்கார் மூலமாக வாங்குகிறீர்களே அதற்கு இந்திய சர்க்கார் என்ன வட்டி போட்டு இருக்கிறார்கள்? இதை எப்படி செலுத்துகிறீர்கள்? காகிதத் தொழிலுக்காக கரும்புச் சக்கையை சர்க்கரை ஆலைகள் கொடுப்பதாகவும் அதற்குப் பதிலாக அவர்களுக்கு நிலக்கரி சப்ளை செய்வதாகவும் முடிவெடுத்தால் எவ்வளவு பெரிய திண்டாட்டம் ஏற்படும். இப்போது தூத்துக்குடியில் இருக்கின்ற அனல் மின்சார நிலையத்திற்கே நிலக்கரி சப்ளை செய்ய முடியவில்லை என்று திண்டாடிக்கொண்டிருக்கும்போது தமிழ்நாட்டிலே உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு இந்த நிலக்கரியை நீங்கள் சப்ளை செய்து அவர்களிடத்திலே இருந்து கரும்புச் சக்கையை பெற்றுக் கொண்டு இதை நடத்தவேண்டும் என்பதிலே எவ்வளவு பெரிய சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அடுத்து 10 கோடி டாலர் பணம் கடன் அமெரிக்காவிலே இருந்து வாங்கினால் அதற்கு அவர்களுடைய நிபந்தனை என்ன? அதாவது அந்தப் பணத்தைக் கொண்டு மிஷனரி, இயந்திரங்கள் எல்லாம் வாங்குகின்றபோது அவர்களுடைய நாட்டிலேதான் வாங்கவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். இதுதான் அவர்களுடைய சாதாரணமான ஒரு நிபந்தனை. அப்படி என்றால் அமெரிக்காவிலே இருக்கக் கூடிய முதலாளிகள் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை வாங்குவதற்குத் தான் அவர்களிடத்திலே இருந்து வட்டிக்குக் கடன் வாங்குகிறோமா? அப்படிப்பட்ட ஒரு நிலைமை நம்முடைய நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்றதா?



அடுத்து கனிவள ஆய்வுகளைப் பொறுத்தவரையிலே அதனை முறையாக பிரித்தது சரியானது என்று கருதுகிறேன். தமிழக மண்ணிலே இன்னும் புதைந்து கிடக்கக்கூடிய கனிவளங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு தனியான ஏற்பாடுகளைச் செய்து அதன் மூலமாக இன்றைக்கு மேலும் அதிலே சிறப்பாகச் செயல்படுவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தமிழகத்திலே மேலும் சில தொழில்களை உருவாக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அடுத்து வாலிநோக்கம் என்ற இடத்தில் சால்ட் கார்ப்பரேசன் தயாரிக்கின்ற உப்புக்காக ஒரு சிறிய ஃபோர்ட் உண்டாக்குவதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய அந்தப் பெரிய துறைமுகத்திலே வேலை இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது புதிதாக ஒரு மைனர் துறைமுகத்தை ஏற்படுத்தும்போது வேலைவாய்ப்பு நிலைமை என்னவாகும்? அதிலே பாதிப்பு ஏற்படாதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதைக் கொண்டு போக வசதி இல்லாத காரணத்தால் உப்பை உற்பத்தி பண்ண முடியவில்லை என்ற காரணத்தால் இந்த

ஏற்பாடு செய்யப்படுகின்றது என்று அறிகிறேன். ஆனால் அதிலே இருந்து ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினை இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே தொழில் துறைகளைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத்துறையிலே மட்டும்தான் ஆரம்பிக்க வேண்டும். கூட்டுத் துறையிலே நம்முடைய பணத்தை ஈடுபடுத்தி தனியார் முதலாளிகளிடத்திலே ஆதிககத்தைக் கொடுத்து . . . (குறுக்கீடு)

(பிற்பகல் 1–30)

அது ஒரு மாயமாகத்தான் முடியும். ஆகவே இன்றைக்கு சிறிய தொழில்களை குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்கு தமிழக அரசு சீரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஏற்கனவே நான் வற்புறுத்திய அந்தக் கொள்கையின் அடிப் படையில் மத்திய அரசு இன்றைக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்யவில்லை என்பது மட்டும் அல்ல மத்திய அரசு கொள்கை யிலே ஏகபோக முதலாளிகளுக்கும் அயல்நாட்டு பெரு முத லாளிகளுக்கும் சலுகை அளவிலே அவர்களால் நம்மைப் போன்ற மாநிலங்களுக்கு உதவி செய்ய முடியாத அந்த கொள்கை மாற்றத்திற்கும் இந்த அரசு பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அவை யின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் படுகிறது. (கூச்சல்—குழப்பம்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவை யின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பி னர்கள் கேட்பது பதில் இன்றைக்கு இல்லை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இன்னும் எவ்வளவு நேரம் பேச அனுமதிக் கிறீர்கள். இன்னும் எவ்வளவு பேர் பேச அனுமதிக்கப்போகி றீர்கள் என்பதைப்பற்றிச் சொன்னால் அவர்கள் நிம்மதியாக, பொறுமையாக பசியை தாங்கிக்கொண்டு இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கருப்பையாவும், திரு. குமரி அனந்தன்



அவர்களும் பேசுவதற்காக அமர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் 2 பேரும் பேசி முடித்தவுடன், இன்றைய அலுவலை முடித்து விடுவோம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் வேகமாக பேசி முடித்ததன் காரணம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நாங்கள் எல்லாம் கலந்து இன்றைக்கு விவாதம் முடியப்போவதுஇல்லை; அதை 18ம் தேதிக்கு ஒத்தி வைக்கிறோம் என்று சொன்ன காரணத்தால் என்னுடைய பேச்சை அத்துடன் முடித்துக்கொண்டேன். நீங்கள் மறுபடியும் நேரத்தை நீட்டிப்பது எப்படி? பல பேர் பேச வேண்டும் என்று சொன்னால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். நானும் தெரிந்து தான் சொல் கிறேன். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். அவர்கள் 2 பேரும் பேசுவதற்காக உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் வேண்டாம் என்று சொன்னால் மாற்றி விடுவோம்.

* திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறையினுடைய விளக்கமான குறிப்புகளை எல்லாம் இங்கே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்து இருக்கிறார்கள். துடிப்புள்ள இளம் அமைச்சர் இந்தத் துறையை செம்மைப்படுத்தவேண்டும் என்ற நோக்கத் தோடு மிக முயன்று காரியங்களை ஆற்றி வருகிறார்கள் என்பதை அதிலே தெளிவுபடுத்த முயன்று இருக்கிறார்கள். அதன் காரணத்தினால் இங்கே இருந்து வெளி மாநிலங்கள் குஜராத் போன்ற இடங்களுக்குச் சென்று அங்கு இருக்கின்ற தொழில் அதிபர்களைக்கூட நமது தமிழகத்தில் வந்து தொழிலைத் தொடங் குங்கள் என்று எல்லாம் அவர்கள் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள். ஆக அப்படி எல்லாம் தொழில் முன்னேற வேண்டும் என்று சொல்கின்ற எண்ணம் கொண்டு இருக்கின்ற அமைச்சருடைய பொறுப்பில் இருந்து கொண்டு இருக்கிற இந்த அமைச்சகத்தில் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க வேண்டும் என்று முன் வருகின்றபோது அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் கிடைக்கின்ற வகையில் உடனடியாக காரியங்கள் நிகழ்வது இல்லை என்ற குறைபாடு இருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் எந்த குஜராத்துக்குச் சென்று வந்தார்களோ அந்த குஜராத்தில்கூட தொடர்பு நிலையம் என்று 'காண்டாக்ட் (Contact centre) சென்டர்' என்று ஒன்றை வைத்து அந்த 'காண்டாக்ட் சென்டர்' என்று சொல்கின்ற தொடர்பு நிலையத்தில் தொழில் துறை இயக்குநரும், ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியாவினுடைய சார்பாளரும்

'சேம்பர் ஆப் காமர்ஸ்' னுடைய பிரதிநிதியும் ஒரே
இடத்தில் அமர்ந்து கொண்டு தொழில் முனைவர்களால் கொடுக்
கப்படுகின்ற மனுக்களை எல்லாம் உடனே பரிசீலித்து அப்
போதே அனுமதி வழங்குவதாக தகவல் கிடைக்கின்றது.
ஆகவே உடனடியாக அவர்களுக்கு பரிசீலனை செய்து அனுமதி
யும் கொடுக்கின்ற காரணத்தால் அந்த குஜராத் போன்ற
மாநிலங்களிலே தொழில் தொடங்குவதற்கு உற்சாகம் மிகுந்த
வர்களாக முனைபவர்கள் வருகிறார்கள். அதனை நாம்
இங்கே பின்பற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்
களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு 1985-ம் ஆண்டு வருகிற நேரத்தில் 'ஹாங்காங்'
போன்ற உலகப் புகழ்ப் பெற்ற நாடுகளில் எல்லாம் பெரிய
மாற்றங்கள் ஏற்படப்போவதாக அரசியல் ரீதியில் சொல்லு
கிறார்கள். அப்படி ஒரு மாற்றம் ஏற்படுகிற நிலை வரும்போது
நிறையத் தொழில்களைத் தொடங்குவதற்கு வேறு நாடுகளைத்
தேடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி என்று
சொன்னால் நமது நாட்டிலே வருகிறவர்களை வரவேற்கிற
போது நாம் மிகுந்த எச்சரிக்கையோடு அனுமதிக்கவேண்டு
மென்றும், அப்படி வருகிறவர்கள் நம் நாட்டு தொழில் வளத்தைப்
பெருக்கி வேலை வாய்ப்புக் கொடுக்கிறவர்களாகவும் இருக்க
வேண்டுமென்றும் இப்போதே நாம் கணக்கிலே எடுத்துக்
கொள்ளவேண்டும். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
குறிப்பிலேஃப்ரி டிரேட் ஸோன் என்று சொல்லப்படுகிற தடை
யிலா வணிக மண்டலம் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும்
இந்தியாவிலே இரண்டு இடங்களிலே இருப்பதைப்போல்
பிற இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு முனையவேண்டுமென்றும்
கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக நாம் மீனம்
பாக்கம் விமான நிலையத்திற்குப் பக்கத்திலே, நிலத்தை சரி
செய்யப் போகிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக கப்பல்
போக்குவரத்து இருக்கிற இடமாக பார்த்துச் செய்வது நல்லது.
வெளிநாடுகளிலிருந்து பெரும் அளவு சரக்கு வந்து அவைகளை
நம் பூமியிலே இறக்கி வைத்து அதன்மூலம் கிடைக்கிற வாடகை
போன்றவைகளாலே பெரும் பணத்தை ஈட்டமுடியும்
என்பதையும் உணரவேண்டும். அதற்காக தொண்டி போன்ற
இடத்திலே முன் நாளைய இலக்கியச் சான்றோடும் சரித்திரப்
புகழோடும் இருந்துகொண்டு இருக்கிற தொண்டி போன்ற
இடங்களை—துறைமுகமாக உருவாக்கி அந்தப் பகுதியிலே ஏராள
மாக நிலங்கள் கிடைக்கிற காரணத்தினாலே—தொழிலாளர்கள்
கிடைப்பார்கள் என்ற காரணத்தினாலே—அதனை ஃப்ரி
போர்ட் ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
ஆகவே தொண்டி முன்னைப்போலவே பழம்புகழ் பெறுவதற்காகவும்



நிறையப் பொருள் பெறுவதற்காகவும் வாய்ப்பாக நமக்கு கிடைக்குமானால் அதனை ஆராய்ந்து சிந்தித்து செயல்படுத்து வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது உள்ளூர் மூலப்பொருட்களை முழுமையாக இன்னும் நாம் பயன்படுத்தவில்லை. தர்மபுரி மாவட்டத்திலே தேன் கனிக்கோட்டை பகுதியிலே இருக்கிற சிலிசா பெரும் பாறை களை இன்னும் கண்ணாடித் தொழிலுக்குப் பயன்படுத்துகின்ற ஒரு நிலை கொண்டுவரப்படவில்லை, அதையும் ஆராய்ந்து 4, 5 கண்ணாடித் தொழிற்சாலைகளை அங்கே கொண்டுவர முடியும் என்று சொல்கிறார்கள். அதிலேயும் நம் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே இண்டஸ்ட்ரியல் கெமிக்கல் ஏறத்தாழ நம்முடைய தமிழகத்திற்குத் தேவைப்படுகிற நிலையிலே ஒன்றிரண்டுதான் இருக்கிறது என்று சொல்கிற அளவுக்குத்தான் இருக்கிறது. நாம் அந்தத் துறையிலே முன்னேறவேண்டும், இதற் காக வெளியிலிருந்து மூலப்பொருட்களைக் கொண்டுவந்து செய்வதாகும். ஆதலாலே அதிக அக்கறை செலுத்தவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கிறபோது —முன்னுரையிலே—சில தொழில்கள் போய்விட்டது போலவும் நம்முடைய அமைச்சர் கொள்கை விளக்கத்திலே இன்னும் போகவில்லை போலவும் இனியும் வரும் என்பது போலவும் இருக்கிறது. உதாரணமாக ஊட்டியில் இருக்கிற கலர் பிலிம் தொழிற்சாலை போய்விட்டது. எனவே மத்திய அரசு வேறு தொழிற்சாலைகளை இங்கே கொண்டுவரவேண்டும் என்று முன்னுரையிலே கேட்டிருக்கிறார்கள். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே அதை எப்படியும் நாம் கொண்டுவருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு அது இங்கே வரு மானால் நாம் எல்லாம் மகிழ்வோம் என்பது மட்டுமல்ல, வரு வதற்கு உரிய நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள் வார்கள் என்று நம்புகிறேன். அதைப்போலவே ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்குமேலே முதலீட்டோடு வர இருந்த நேவல் அக்கடமி நம்மிடமிருந்து போய்விட்டதாக நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் கேரளத்திலே அவர்கள் தேர்ந்தெடுத்த இடத்திலே அதை அமைக்கக்கூடாது என்று பெரிய அளவுக்கு எதிர்ப்பு ஏற்பட்டிருக் கிறது. எழிமலா என்று சொல்கிற இடம் முப்போகம் நெல் விளைகிற இடமாக இருக்கிற காரணத்தாலும் மிளகு போன்ற கமர்ஷியல் கிராப்ஸ் விளைகிற இடமாக இருக்கிற காரணத்தி

நாம் மோபெட் மயூரம் என்று செய்வதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். அதற்காக ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஷெட் ஒன்று போடப்பட்டதாகவும், அதிலே உருப்படியாக செய்து வெளியே வந்து தெருவிலே ஓடுகிற அளவிற்கு மோபெட் இருக்கிறதா? மயூரம் இருக்கிறதா என்று நமக்குத் தெரியவில்லை. மூன்று மாநிலங்களில் இரண்டு இடங்களிலிருந்து சிறந்த ஸ்கூட்டர்கள் வெளியே வந்து நம்முடைய மண்ணிலே ஓடிக்கொண்டிருக்கிறபோது, நாம் முயன்று செய்கிற ஒன்று மற்றவர்களுடைய மனதை கவராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு அமைச்சரும், அதிகாரிகளும் தயவு செய்து சிந்திக்க வேண்டும். 25 இலட்சம் ரூபாய் ஷெட் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வெறுமே இருப்பதற்கு காரணம் என்ன? அதற்கு பொறுப்பாளி யார் என்றும் பார்க்க வேண்டும். ஏன் என்றால் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாவது நமக்கு பெருமை தருவதாக இருக்குமே! ஆசியா விளையாட்டுப் போட்டி நடந்த போது வெளியிட்ட விளம்பரத்திலேயிருந்து, இங்கே போக்குவரத்துத் துறையில் இருந்து கொண்டிருக்கிற பேருந்துகள் வரை எங்கே பார்த்தாலும் '' பி இண்டியன்; பை இண்டியன் '' என்று நாம் போட்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் மின்சார தட்டுப்பாடு இருக்கிற நேரத்திலே சின்ன சின்ன கடைகளிலே எல்லாம் வந்திருப்பது என்னவென்றால் யமாகா ஜெனரேட்டர்; ஹோண்டா ஜெனரேட்டர்; இவைகள் தான் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே '' பை இண்டியன் '' என்றால் எதை ''பை'' பண்ணுவது? இந்தியாவிலே இருப்பதை ''பை'' பண்ணுவதற்கு முடியவில்லையா? அல்லது இப்படிப்பட்ட புரோட்டா டைப்பை இங்கே வாங்கி வந்து கோயம்புத்தூரிலே இருக்கிற லேத்து பட்டறையிலே கொடுத்தால் கூட அவர்கள் செய்து விடுவார்களே. அந்நிய நாட்டிலே செய்கிற ஜெனரேட்டரை இங்கே வாங்கி வந்து நாம் வெளிச்சத்தை பார்க்கிற நிலையிலே இருக்கிறோம் என்று சொன்னால், நள்ளிரவிலே சுதந்திரம் பெற்றோம், இன்னும் விடியவில்லை என்பது தான் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

ஆக, நமது சிந்தனையிலே முதலிலே வளர்ச்சி ஏற்பட வேண்டியிருக்கிறது. வெளியூர்களிலேயிருந்து அத்தனையும் வாங்கிவிட்டு வெறும் மொழியிலே மட்டும் Be Indian Buy Indian, என்று சொல்வதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதைப் போலத்தான் இலாபகரமான தொழிலை நடத்துவதன் மூலமாகத்தான் நாம் வளத்தைப் பெருக்க முடியும். வளத்தைப் பெருக்குவதன் மூலமாகத்தான் வறுமையை ஒட்ட முடியும்.



இங்கே நீங்கள் தந்திருக்கிற குறிப்புகளைப் பார்க்கிற நேரத்தில், சதர்ன் ஸ்டக்டரசல்ஸ், அரக்கோணம் ஸ்டீல்ஸ் ஆகியவை தொடர்ந்து நட்டத்திலேயே ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது தெரிகின்றது. குறைந்தபட்சம் ரூ. 1 கோடி இழப்பினைச் சந்திக்கிறது என்று சொன்னால், ரூ. 100 இலட்சத்தை ஒவ்வொரு நிறுவனமும் சந்திக்கிறது என்று சொன்னால், அங்கே தலைமை தாங்குபவர்கள் இதனைத் தவிர்க்க என்ன முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்க வேண்டும்.

இன்னும் ஒன்று, தொழில் துறை முன்னேறாமல் இருப்பது, முனைவர்கள் வராமல் இருப்பது, இவைகளுக்கெல்லாம் காரணமாக எது இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, இதற்குத் தலைமை தாங்குகின்றவர்கள் தொடர்ந்து அந்தப் பதவியிலே இல்லாமல் 6 மாதங்களுக்கு என்றும், 10 மாதங்களுக்கு என்றும், 4 மாதங்களுக்கு என்றும், இருந்து இருந்து போக, அதனைத் தொடர்ச்சியாக மனதிலே வைத்துக் கொண்டு அவைகளை முன்னேற்ற வேண்டுமென்று சொல்கின்ற ஒரு திட்டம் இல்லாமல் போகிறதோ என்ற ஐயப்பாடும் நமக்கு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால், கடந்த இரண்டு ஆண்டுகளிலே, இந்த டிட்கோ அமைப்பினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்றவர்கள்—முதலிலே, அன்பிற்குரிய திரு. சீதாகிருஷ்ணன், பிறகு திரு. பத்மநாபன், பிறகு திரு. எச். பி. என். ஷெட்டி, பிறகு திரு. மகாதேவன் அவர்கள், பிறகு, இப்பொழுது, திரு. வெங்கடேசன் அவர்கள். ஆக, இத்தனை பேரும் ஒரு குறுகிய காலத்திலே மாறி, மாறி பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். அவர் எடுத்துக் கொண்டிருக்கிற துறையை முறையாகப் புரிந்து கொண்டு என்னென்ன குறைகள் இருக்கின்றன, நிறைகள் இருக்கின்றன என்று பார்ப்பதற்கு முன்னாலேயே அவர் இன்னொரு இடத்திற்கு மாற்றப்படுகிறார் என்று சொன்னால், அதிலே தொடர்ந்த சிந்தனை, இந்த முனைப்போடு கூடிய சிந்தனை, செயல்பாடுகள் வராமல் போய்விடுமோ என்பதையும் அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் இங்கே இருக்கிற தனியார்களுக்கு தமிழ் மாநிலத்திலேயே தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்குரிய உற்சாகம் இல்லாமல் போகிறது. யூனிவர்சல் கார்பொரண்டம் என்பது என்னுடைய திருவொற்றியூர் தொகுதியிலே இருந்து கொண்டு இருக்கிற ஒரு பெரிய நிறுவனம். அது ரூ. 7 கோடியிலே விரிவாக்கம் செய்கிறது. அது தமிழ்நாட்டிலே விரிவாக்கத்தைச் செய்யாமல் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகிறது. அதற்கு என்ன காரணம்? வேறு மாநிலத்திலிருந்து ஆட்களை இங்கே

னாலும் நல்ல தென்னை உற்பத்தியாகிற இடமாக இருப்ப
தாலும் அங்கே வேண்டாம் என்று சொல்கிறார்கள். அங்கே
இருக்கிற எதிர்ப்புக்குழு எங்கள் பிணத்தின்மீதுதான் அந்த
நேவல் அக்கடமி வரவேண்டும் என்று சொல்கிற அளவுக்கு
எதிர்ப்பு இருக்கிற காரணத்தினால் நம் செங்கற்பட்டு மாவட்
டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கொடுக்கமுடியும் என்று
இருந்த நிலையை மீண்டும் நாம் நினைவுபடுத்தி மத்திய அர
சோடு தொடர்புகொண்டு அந்த நேவல் அக்கடமியை நமக்கே
தருகிற முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் 1967-க்கு முன்னாலே ஏறத்தாழ
11 பெருந் தொழில்களை தமிழகத்திலே ஏற்படுத்தியது என்றும்
அதற்குப் பின்னாலே நடுத்தரமாக இருக்கிற இரண்டே இரண்டு
தொழில்களைத்தான் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள்.
என்றும் அதிலே ஒன்று இராணிப்பேட்டையிலே பெல்-லுக்கு
துணைப் பொருட்களைத் தயாரிக்கிற தொழிற்சாலை, இன்
னொன்று சேலம் உருட்டாலை என்றும் அது உருக்காலையாக
இல்லாமல் உருட்டாலையாகவே ஏறத்தாழ இப்போது வந்
திருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இன்னும் மத்திய
அரசாங்கத்தோடு போராடி, வாதாடி நம்முடைய
தேவைகளை யெல்லாம் அதிகமாக எடுத்துச் சொல்லி எல்லாக்
கட்சித் தலைவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று தமிழ்
நாடு அரசாங்கம் மேலும் தொழில்களைக் கொண்டு வருவதற்கு
முயலவேண்டும்.

(பிற்பகல் 1-40)

ஆனால் அதே நேரத்தில் சில தொழில்கள் நமக்கு வருவதைப்
போலயிருந்து அவைகள் நம்மிடத்திலே வராமலே போய்விட்
டதோ என்று கூட சொல்கிறார்கள். உதாரணமாகச் சொன்
னால் வில்டெக் என்று சொல்கின்ற வில்கின்சன் உலக புகழ்
பெற்ற சவர பிளேடுகள் செய்கிற கம்பெனி நம்முடைய தமிழ
கத்திலே வரவிருந்ததாகவும், அவர்களுடைய முயற்சி இங்கே
உற்சாகத்தோடு வரவேற்கப்படாததாலே கர்நாடக மாநிலத்
திற்கு போய்விட்டது என்றும் சொல்கிறார்கள். இப்போது
மைசூரில் அந்த உலக புகழ் பெற்ற பிளேடுகள் வெளியாகிக்
கொண்டிருக்கின்றன என்று சொன்னால் இங்கே மூலதனம்
போட்டு துவங்க வருகிறவர்களுக்கு உற்சாகமான வசதிகள்
செய்து கொடுக்கப்படவில்லை ; வரவேற்பு இல்லை என்ற நிலை
இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருக்குமேயானால் அதிக





மான தொழில்கள் வருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்
என்பதை நாம் உணர வேண்டும். இவற்றிற்கெல்லாம் காரணம்
என்ன என்று பார்க்க வேண்டும். உதாரணமாக மினி ஷுகர்
பிளான்ட்ஸ். சிறிய அளவிலே இருக்கிற சர்க்கரை ஆலைகளை
கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். இந்தச் சர்க்கரை
ஆலைகளை இங்கே கொண்டு வரலாம் என்பது நம்முடைய
கொள்கை அளவிலே இருந்தாலும், இவைகளை செய்வதற்குரிய
கம்பெனிகளாக அமையும் ஒன்றிரண்டு கம்பெனிகள், கே. சி. பி.
கம்பெனி, வால்சன் போன்ற கம்பெனிகள்இந்த சிறிய பிளான்ட்ஸ்
களுக்குரிய எந்திரத்தை செய்து தருவதற்கு தயாராக இல்லை.
அவர்கள் பெரிய அளவிலேதான் செய்வோமென்கிறார்கள். வெளி
நாடுகளிலே, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலே இப்படிப்பட்ட
பிளான்ட்சை ஏராளமாக செய்து வைக்கிறார்கள். மெஷனரிஸ்
செய்து குவிக்கப்பட்டுள்ளன. ஆனால் மத்திய அரசாங்கத்தி
னுடைய கொள்கைபடி இந்த இயந்திரங்களை இங்கே வரவழைக்க
முடியாது. இங்கே இருக்கிறவர்கள் அந்த எந்திரத்தை செய்
வதற்கு தயாராக இல்லை. அப்படியிருக்கிற நிலையிலேமினி ஷுகர்
பிளான்ட்ஸ் எப்படி வரும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.
இன்னுமொன்று நாம் டிட்கோ மூலமாக 21 திட்டங்களை
வைத்திருக்கிறோம். இந்த 21 புராஜெக்ட்ஸ்களில் 80, 81,
82-ல் ஏறத்தாழ 12 திட்டங்கள் நிறைவுற்று இருக்க வேண்டும்
என்பது நமது நெஞ்சு நிறைந்த ஆசையாக இருந்தது. ஆனால்
இவைகளில் எத்தனை தான் வந்திருக்கிறது என்று எண்ணிப்
பார்க்கிற போது எதுவுமே இல்லையோ என்ற ஐயம் வருகிறது.
ஆக 10, 12 என்று சொல்கிற போது எதுவுமே செம்மையாக
நடக்கவில்லையென்ற ஒரு குறை இங்கே இருக்கிறது. பொருள்
கள் கூட எப்படி விற்பனை ஆகிறது என்பதை பாருங்கள்.
ஸ்கூட்டர்ஸ் செய்ய வேண்டுமென்று ஒரு திட்டம். ஆந்திரா
விலே செய்கிறார்கள். அவர்கள் ஆல்வின் புஷ்பக் என்ற
ஸ்கூட்டரை செய்கிறார்கள். இப்போது நடுத்தர மக்களும்,
இன்னும் சொல்லப் போனால் அலுவலகங்களிலே வேலை
பார்க்கிறவர்களும் தங்களுடைய குடும்ப பியட்டாக (Fiat)
கருதுவது இந்த ஸ்கூட்டர்களை தான். அதிலே தான் தங்
களுடைய குடும்பத்தையே ஏற்றிக் கொண்டு போகிறார்கள்.
நல்ல விலைக்கு போய்க் கொண்டிருக்கிற, நல்ல கிராக்கியோடு
போய்க் கொண்டிருக்கிற இந்த ஸ்கூட்டர்களை ஆந்திராவிலே
ஆல்வின் புஷ்பக் என்ற பெயரிலே வெளியிடுகிறார்கள்.
ஸ்கூட்டர்ஸ் ஆப் இந்தியா என்ற கம்பெனியின் உடனுழைப்பு'
அதனுடைய கொலாபரேஷன் அதற்கு கிடைத்தது. அவைகள்
நமது சாலையில் அதிகமாக ஓடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கி
றோம். கர்நாடகாவில் அதே ஸ்கூட்டர்ஸ் ஆப் இந்தியா
நிறுவனத்தின் உடனுழைப்போடு விஜெய் ஸ்கூட்டர்ஸ் வெளியிடு
கிறார்கள். அவைகள் சிறந்த முறையில் ஓடுகின்றன. ஆனால்

வாருங்கள் என்று சொல்லும் போது, ரூ. 7 கோடிமூலதனத்
தோடு இருக்கிற அந்த விரிவாக்கத்தை வெளியே கொண்டு
போகிறார்களே, அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் ஆய
வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, தொழில்களுக்கு ஒதுக்கப்படுகிற கோட்டா
என்று கொடுக்கிறார்களே, அந்த மூலப் பொருளை எல்லாம்
வாங்குகிறார்களே, பயன்படுத்துகிறார்களா ? மூலப் பொருளை
வாங்குகிறவர்கள் உற்பத்தி செய்கிறார்களா ? டின் கொடுக்கப்
படுகிறது ; இரும்பு கொடுக்கப்படுகிறது, செம்பு கொடுக்கப்படு
கிறது, வெண்கலம் கொடுக்கப்படுகிறது, அலுமினியம் கொடுக்கப்
படுகிறது, எவர்சில்வர் கொடுக்கப்படுகிறது, பாரபின் வாக்ஸ்
போன்றவைகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளை எல்லாம்
வாங்குகிறவர்கள் பொருள்களை உற்பத்தி செய்கிறார்களா ?
அல்லது, வாங்குவதற்கு மட்டும் கோட்டா, லைசன்சை வைத்துக்
கொண்டு, டெலிபோனிலேயே, அவர்கள் இந்த வியாபாரத்தை
செய்து, ஏதோ பணம் சம்பாதிக்கிறார்களா ? அப்படி என்றால்,
இது கள்ளச் சந்தையிலே விற்கப்படுகிறதா ? கள்ளச் சந்தை
யிலே விற்கப்பட்டால் அந்தக் கள்ளச் சந்தையிலே வாங்கி,
அதனைப் பொருளாக உற்பத்தி செய்கிறவர் அதிக விலைக்குத்
தானே கொடுப்பார்கள். அதிக விலைக்குக் கொடுக்கின்ற
பொழுது, பொது மக்கள்தானே பாதிக்கப்படுவார்கள். அப்படிப்
பொதுமக்கள் பாதிக்கப்படுகிற நேரத்தில் எவ்வளவு வியாபாரம்
நடந்தாலும், அது கள்ளத்தனமாக நடக்கிற காரணத்தாலே,
கணக்குக்குள்ளே வராத காரணத்தாலே, எங்கள் மாண்புமிகு
அமைச்சர் வரி போட்டு அதை வாங்க முடியாதே. ஆக, வரியும்
வருமானமும் வராமல் பொதுமக்களுடைய தலையிலே அதிக
மான விலையும் போய் நமக்குப் பயன் அற்ற நிலையிலே இருக்
கிறது இன்டஸ்ட்ரியல் எஸ்பையனேஜஸ் (Industrial Espionages)
என்று சொல்கின்ற அதனை உற்றுப் பார்க்கின்ற ஒற்றர்கள்
நமக்கு இருக்கிறார்களா ? அவர்கள் தொடர்ந்து சென்று வாங்கு
கிறவர்கள் தான் அதனைப் பயன்படுத்துகிறார்களா, இல்லையா
என்று பார்வையிடுகின்ற பழக்கம் இருக்கிறதா ? இருக்கும் என்றே
நான் கருதுகிறேன். இருந்தாலும் அது செம்மையாக நடக்க
வில்லை என்பதுதான் மக்களுடைய கருத்து. எல்லா இடங்களி
லும் அப்படிப்பட்ட தவறுகள் நடப்பதாக மக்கள் பரவலாகப்
பேசுகிறார்கள். அதிலே உண்மை இல்லாமல் இல்லை
என்பதையும் நான் நிலைனவுபடுத்த விரும்புகிறேன். அதைப்
போலத்தான் இன்டஸ்ட்ரியல் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் (Ind. strial
Expl. sives) என்று சொல்வதற்கு என்ன ஆராய்ச்சிகள் நடந்தது
என்று தெரியாது. என்ன முன்னேற்பாடுகள் நடந்தது
நன்று தெரியாது. ஆனால், நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பு





களிலே இது தொடர்பாக ரூபாய் ஒரு கோடி ஏற்கனவே செலவு
செய்து விட்டதாக நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். ரூபாய் ஒரு
கோடி இண்டஸ்ட்ரியல் எக்ஸ்ப்ளோசிவஸ்ஸீற்காக, அந்த
காரணத்திற்காக நீங்கள செலவு செய்திருக்கிறீர்களே அதனாலே
விளைந்த பயன் என்ன ? ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன என்று
இங்கே விளக்கம் தரப்படவில்லை. அதனாலே அந்த விளக்கத்தை
நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

புகளூர் காகித ஆலையைப் பற்றி இங்கே சொன்
னார்கள். உலக வங்கியிலே கடன் வாங்கியிருப்பதைப்
பற்றிச் சொன்னார்கள். அந்தக் காகித ஆலைக்கு உலக
வங்கி கடன் கொடுக்கிறது என்று சொன்னார்கள். காகிதத்
திலே என்ன இருக்கிறது என்று பார்த்தால் காகித
ஆலை சம்பந்தமான புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபொழுது
170 என்று ஆரம்பித்து, பிறகு 20 கோடி அதிகமாக ஆகி, 190
என்று ஆகி, இப்பொழுது மீண்டும் 10 கோடி அதிகமாக ஆகி
200 என்று ஆகியிருக்கிறது. இனிமேல் எவ்வளவு ஆகும் என்பது
கொஞ்ச நாட்கள் கழித்து மீண்டும் காகிதத்தைப் பார்த்தால்
அந்தக் காகித ஆலையைப் பற்றித் தெரியவரும். ஆனால் உலக
வங்கி, மூலதனச் செலவு அதிகமானால் நாங்கள் கடன் கொடுக்க
இயலாது என்று சொன்னதாக இதே அவையிலே அமைச்சர்
கூறியதாக என் நினைவு. இப்படிப்பட்ட நிலையில் ஏகப்பட்ட
பணத்தை இதிலே முதலீடு செய்து நாம் அந்தக் காரியத்தை
வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறு இருக்
கிறதா? சாத்தியக் கூறு இருக்க வேண்டுமென்பதுதான் நம்
முடைய ஆசையும்கூட. ஆனால் அது இப்பொழுது எந்தப்
பாதையில் போகிறது என்பது தெரியவில்லை.

(பிற்பகல் 1-50)

கரும்புச் சக்கையிலிருந்து காகிதத்தைக் கொண்டு வருவது
நல்ல முயற்சிதான். ஆனால் கரும்பு ஆலையிலிருந்துதான் அந்தக்
கரும்புச் சக்கையை நாம் கொண்டு வர இயலும். கரும்பு
ஆலைக்காரர்கள் அவர்களுக்கு வேண்டிய எரிபொருளாகவே
அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களாமே ; பர்னஸ்
ஆயில் (Fu nace oil) விலை மிக அதிகமாக இருப்பதாலே
அதைக் கழித்துக் கொள்ளும் பொருளாகவோ அல்லது அடுத்தவர்
எடுத்துப் போகும் பொருளாகவோ இல்லாமல் தாங்களே எரிப்
பது என்ற வகையில் அந்தப் பொருளைப் பயன்படுத்துகிறார்
களாமே. அப்படியிருக்கும்பொழுது இந்தக் காகித ஆலைக்கு
வேண்டிய கரும்புச் சக்கை கிடைக்காமல் போனால் நமது எண்ண
மெல்லாம் சக்கையாகப் போய்விட்டால் என்ன செய்வது என்
பதை உங்களது நினைவுக்குக் கொண்டு வருகிறேன். ஏனென்
றால், காகித ஆலைகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே

நமக்குக் கிடைத்திருக்கின்ற அனுபவங்கள் அனைத்தும் இனிப் பானவை அல்ல; கசப்பானவை என்று சொன்னால்கூடத் தவறில்லை.

ஏறக்குறைய 15 ரூபாய்க்கு ஒரு டன் மூங்கிலைக் கொடுக்கி
றோம், காகிதம் வேண்டுமென்ற காரணத்திற்காக. அவர்களுக்
குச் சலுகை விலையில் ஒரு டன் 15 ரூபாய்க்குக் கொடுக்கப்
படுகிறது. என்று சொல்லப்படுகிறது ஆனால் வெளியிலே
ஒரு டன் மூங்கில் 1,200 ரூபாய்க்கு விற்கிறது. தஞ்சாவூர்
போன்ற இடங்களில் கிடைக்கின்ற மூங்கில்கள் மட்டுமல்ல நான்
சொல்வது ; மலைப் பகுதிகளிலே விளைகின்ற நல்ல மூங்கிலாக
இருந்தாலும் சரி, ஒரு மூங்கில் 12 ரூபாய்க்கு விற்கிறது, 15
ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, ஏறத்தாழ ஒரு டன்னுக்கு
1,200 ரூபாய் பெறுமானமுள்ள மூங்கில் 15 ரூபாய்க்குக்
கொடுக்கப்படுகின்ற நேரத்தில், மலைப் பகுதிகளிலே விளைந்
திருக்கின்ற அருமையான மூங்கில்கள் வெட்டிக் கொண்டுவரப்
படுகின்றன. அப்படி வெட்டிக் கொண்டு வரப்பட்ட காரணத்தி
னாலே மழையும் அங்கே குறைந்து, அந்த மூங்கிலும் இங்கே
வந்த பிறகு மழை குறைந்த காரணத்தால் ஆற்றிலே தண்ணீர்
வரத்து குறைந்து, அந்தக் காகித ஆலையிலிருந்து வெளிவரு
கின்ற எஃப்ளுயன்ட் இருக்கிறதே, அந்த விஷ நீர், கொஞ்சம்
தண்ணீரிலே அதிகம் விஷநீர் கலப்பதன் காரணத்தாலே பள்ளிப்
பாளையம் போன்ற பகுதிகளிலே மீன்கள் செத்து மிதக்கின்றன
என்று சொல்கிறார்களே, அப்படி சொல்லுகின்ற அளவிற்கு ஒரு
பக்கத்திலே இருக்கிறது. இப்படி மழையும் குறைந்து, மிச்சம்
இருக்கின்ற நீரிலேயும் விஷ நீர் கலந்து விடுகின்ற நிலைமை
இருக்கிறது. அவர்களுக்கு நாம் 15 ரூபாய்க்கு மூங்கிலைக்
கொடுக்கிறோம். ஆனால், மூங்கிலை வெட்டிக் கிழித்து,
சின்னஞ்சிறு கிளம்புகளாக ஆக்கி, கூடை முடைந்துக் கொண்
டிருக்கிறார்களே, அவர்களுக்கும் 1,200 ரூபாய் என்றுதான் வைத்
திருக்கிறோம். ஆகவேதான், முன்பெல்லாம் பழக் கூடைகள்
கொடைக்கானலிலிருந்து வருகின்றன என்றால், எழும்பூர் இரயில்
நிலையத்திலே நின்று பார்த்தால் தெரியும். முன்பெல்லாம்
பழத்தை இறக்கி, கடைகளிலே பழங்களை எடுத்த பிறகு கூடை
களைப் போட்டு விடுவார்கள். ஆனால் இப்பொழுது அந்தக்
கூடைகளை மீண்டும் பத்திரமாக கட்டி, இரயில் செலவானாலும்
பரவாயில்லை என்று எண்ணி ரீசைக்கிளிங் நடக்கிறது ; மீண்டும்
கொடைக்கானலுக்குப் போகிறது. அந்த அளவிற்குக் கூடை
விலை இருக்கிறது. அப்படியிருக்க முடைந்து வாழ்பவர்களுக்கு
ஒதுக்கப்பட்டது எவ்வளவு? சலுகை விலையில் அவர்களுக்கு
அளிக்கப்படுகிறது எவ்வளவு? எதுவுமில்லை. ஆனால் இந்தச்
சலுகையைப் பெரும் தொழில் அதிபர்களுக்குக் கொடுக்கிறோமே,
அவர்களிடத்திலேயிருந்து வெள்ளைத்தாள் கிடைக்கிறது என்று



சொன்னால் அது மிகக் குறைவு; ஆனால் அவர்கள் நம்மிடத்திலே
யிருந்து பெறுவதோ மிகவும் அதிகம். அப்படிப்பட்ட காகித
ஆலைகளை நிர்வகித்து வருகின்ற பாணியைப் பார்க்கின்ற
பொழுது இனிமேல் வருகின்ற தொழிற்சாலைகள் எப்படி இருக்க
வேண்டுமென்பதைப்பற்றித் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது காடுகளில் இருக்கின்ற மூங்கில்களெல்லாம்
குறைந்து, 80 சதவீத மூங்கில், 20 சதவீதம் மரம் என்று போடு
வது போய் இப்பொழுது 80 சதவீதம் மரமும், 20 சதவீதம்
மூங்கிலும் போடுகின்ற அளவிற்கு அவர்களே வந்திருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. காடுக
ளெல்லாம் அழிக்கப்படுகின்றன என்பதை நாம் மனத்தில் வைத்
துப் பார்க்க வேண்டும்.

அதைப்போல மதுரா கோட்ஸ் போன்ற இடங்களிலிருந்து
வந்த நண்பர்கள் சொன்னார்கள். அம்பாசமுத்திரம் பகுதியில்
அந்தத் தாம்பிரபரணி ஆற்றிலே பொதிகையிலிருந்து வழிந்து
வந்து கொண்டிருக்கின்ற அந்த அருமையான நீர் இப்பொழுது
வற்றி, வரண்டு, ஏதோ ஒரு சின்னக் கால்வாயைப் போல் ஓடி,
நூலிழை போன்று நீர் செல்கிறது, அதிலேயும் இந்த கோட்ஸி
லிருந்து வந்து கொண்டிருக்கின்ற விஷ நீர் ஏராளமாகக் கலக்
கிறது, என்ன செய்வது என்று மக்கள் துன்புற்றுக் கொண்டிருக்
கிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப் பாளையம் பக்கத்தில் கோனூரிலே நிறையத் தொழிற்
சாலைகள் வர வேண்டும், இரசாயனத் தொழிற்சாலைகளெல்லாம்
வர வேண்டும் என்ற ஆசையோடு தமிழ்நாடு முதலீட்டுக் கழகமும்,
தனியாரும் சேர்ந்து பல இரசாயனத் தொழிற்சாலைகள் ஆரம்
பித்து சுமார் இருபது கோடி ரூபாய்க்கும் மேலே முடக்கப்பட்டிருப்
பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்னும் தொழிற்சாலை
வந்தபாடில்லை. பணம் போயவிட்டது தொழிற்சாலை வந்து
விட்டது என்று சொல்ல முடியவில்லை என்ற தகவல்
வந்திருக்கிறது. அரசாங்கம் அதையும் பரிசீலித்து ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் நமக்கு வர
வேண்டுமென்று ஆசை அரசாங்கத்திற்கு உண்டு. ஒரு ஸ்மால்
ஸ்கேல் இன்டஸ்ட்ரியிடம் ஒரு பொருளை உற்பத்தி செய்ய
தமிழக அரசாங்கமே டெண்டர் விடுகிறது என்றால், ஒரு தனிப்
பட்ட முதலாளியும் அதற்குப் போட்டியிட்டு, அந்த ஸ்மால்
ஸ்கேல் இன்டஸ்ட்ரியல் உறுப்பினராக உள்ள நிறுவனமும்

போட்டியிடுகிறது என்றால் அதிலே ஒரு உறுப்பினராக இருக்கின்ற ஒரு தொழிலதிபரும் போட்டியிடுகிறார் என்று சொன்னால், அந்த ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியிலே தன்னை ஒரு அங்கமாக வைத்திருக்கின்ற அந்தத் தொழில் துறைக்குத்தான், அந்த நிறுவனத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் என்ன நடந்திருக்கிறது ? அரக்கோணம் ஸ்டீல்ஸிலே ஒரு கொதிகலன் எண்ணெயைப் பயன்படுத்தி, அதாவது பர்னஸ் ஆயிலைப் பயன்படுத்தி எரியும் பர்னஸை செய்வதற்கான டெண்டரினை இந்த உள்ளூர்க்காரர்களும், நமது ஊர்க்காரர்களும், செய்வதற்கான டெண்டரினை ரூ. 18,50,000-க்கு கேட்க, கல்கத்தாவிலிருந்து விஷ்மான் என்கிற இன்ஜினியரிங் கம்பெனி ரூ. 25 இலட்சத்திற்கு கேட்டதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர 18½ இலட்சம் கேட்டதற்கு கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் சொல்லப்படவில்லை என்று சொன்னால், நம்முடைய ஊரில் இருக்கின்ற சிறு தொழில் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் உங்களிலே ஒரு அங்கமாக இருக்கிறவர்கள் எப்படி வளர்வது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அங்கிருந்து வருகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நமக்கு இலாபம் கிடைக்கின்ற அளவிலே அவர்கள் கேட்டால் பரவாயில்லை. இங்கு இருப்பவர்கள் கேட்டது 18½ இலட்சம். அங்கிருக்கிறவர்கள் குறிப்பிட்டது 25 இலட்சம். 25 இலட்சத்திற்குக் கொடுக்கப்பட்டு, 18½ இலட்சத்திற்கு கொடுக்கப்படவில்லை என்றால், அதற்கு என்ன காரணம் என்று கேட்கிறேன்?

இந்த நடுவண் அரசு இருக்கிறதே அதனுடைய தொழில் கொள்கை, திடீர் திடீரென்று மாறிக் கொண்டே இருக்கிறது. சென்ற ஆண்டிற்கு முன்னாலே என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால், பெரு முதலாளிகள் தங்களுடைய வருமானத்தில், பெரும் பகுதியையோ, சிறு பகுதியையோ, ஒரு பகுதியையோ ''ரூரல் ரீ கன்ஸ்ட்ரக்ஷன்'' கிராமப் புனர் உத்தாரணத்திற்கு செலவிட்டால், அதற்கு வரி விலக்கு என்றெல்லாம் சொல்லி, சிலர் அதை ஆரம்பித்தார்கள். ஏன் சேஷசாயி கூட ஆரம்பித்தது. சாலையினைப் போட்டது. ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டியது. இந்த ஆண்டு என்ன சொல்கிறார்கள் என்றால், அதெல்லாம் கிடையாது என்று சொல்கிறார்கள். நான் ஏன் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், எந்தக் கொள்கையாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட காலத்திற்கு பரிசோதனைக்குக் கூட விடாமல் நினைத்ததை நினைத்தமாதிரி மாற்றிக் கொண்டேயிருக்கிற ஒரு பழக்கம் இருந்து கொண்டிருக்கிறது. அதனால், இன்று மாநில அரசாங்கமும், மாநில அரசாங்கத்தின் கீழ் இருக்கின்ற மக்களும் பாதிக்கப்படு





கிறார்கள் என்பதையும் இங்கே நினைவிலே கொள்வதற்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் ஏற்படவேண்டுமென்று ஒரு காலத்தில் அதிகமாக பேசப்பட்டது. மாவட்டங்களிலே தொழில் மையங்கள் ஏற்பட வேண்டுமென்றால், அங்கேயிருக்கிற முனைவர்கள் உடனடியாக ஆலோசனை பெற்று, உடனடியாக உதவிகளைப் பெற்று, அங்கே தொழிற்கூடங்களை தொடங்குவதற்குரிய வாய்ப்பு ஏற்படும். அந்த மாவட்டத் தொழில் மையங்கள் எல்லாம் இப்போது சிந்தனை அளவிலே இருக்கிறதே தவிர. பெருமளவில் செயல்படுவதற்கு வரவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொன்றையும் மறந்துவிட வேண்டாம்.

மத்தியக் கிழக்கு நாடுகளிலே எண்ணெய் வளத்தினுடைய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்ற நேரம். இங்கிருந்து ஏராளமான பேர்கள் அங்கே போனார்கள். தொழிலைத் துவங்குவதற்கு மட்டுமல்ல, தொழிலாளர்களாகவும் போனார்கள். தச்சர்கள் போனார்கள். கொத்தனார்கள் போனார்கள். கொல்லர்கள் போனார்கள். காரோட்டிகள் போனார்கள். இப்படி ஏராளமான பேர்கள் அங்கே போனார்கள். அங்கே எண்ணெய் வளத்திலே வீழ்ச்சி ஏற்பட்ட காரணத்தினாலே அவர்கள் இங்கே வரக்கூடும். ஏற்கனவே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கக் கூடும். எனவே தொழில் அமைச்சகமும், நமது தமிழக அரசாங்கமும், அன்பிற்குரிய தொழிலமைச்சரும், முதலமைச்சரும், மற்றவர்களுமாக சிந்தித்து, அங்கிருந்து அவர்கள் வருவதற்கு முன்னாலே-அப்படி வந்தவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ற திட்டங்களை இங்கே வைத்திருக்கவேண்டும். அப்படி ஏற்ற திட்டங்களை வைத்திருந்தால் தான் நாம் ஏற்றிருக்கிற பொறுப்பை செம்மையாக செய்கிறோம் என்று பொருள்; எனவே தமிழகத்தில் இருக்கின்ற மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்கக் கூடிய வகையில் நல்ல ஒரு அமைச்சகத்தை, கையில் வைத்துக்கொண்டு தொழில் உற்பத்தியைப் பெருக்குகின்ற அமைச்சகத்தைக் கையில் வைத்துக்கொண்டு செயல்ப்பட்டு கொண்டிருக்கிற அமைச்சர்கள், இவைகளையெல்லாம் சிந்திக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் அடித்தளமாக அமைய வேண்டியது மின்சக்தி. அந்த சக்தி இங்கே இல்லையென்றால் எந்த திட்டமும் வராது, என்பது நமக்கு தெரியும். எனவே ஒன்றோடொன்று இணைந்து இருக்கின்ற அமைச்சகங்கள், ஒருவர் வளர்ச்சியிலே இன்னொருவர் வளர்ச்சியிருக்கிறது என்பதனை புரிந்துகொண்டு, இவர்களுடைய வளர்ச்சியிலே மக்கள் வளர்ச்சியிருக்கிறது என்

[திரு. குமரி அனந்தன்] 

பதை புரிந்து கொண்டு, மக்கள் வளர்ச்சியிலே தான் நாட்டி னுடைய வளர்ச்சி இருக்கிறது என்பதை புரிந்துகொண்டு, அந்த வளர்ச்சியிலேதான் இந்தியாவினுடைய புகழின் வளர்ச்சி யும் உலக நாடுகளின் மத்தியிலே இருக்கிறது என்று புரிந்து கொண்டு செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமை கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 15-4-1983, காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்புடிக்கான விதிகளும் ஆணைகளும்.

255. சிட்டலபாக்கம் கிராமத்தின் நி.அ. எண்கள் 190/2 பி. 190/3 பகுதி, 190/1 பகுதி, 191/1 பகுதி மற்றும் 192 முதல் 194-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 20-7-1982-ம் தேதியிடப் பெற்ற 661 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர-நாட்டுப் புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம், எண். 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.

256. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு முறைப்படுத்துதல்) விதிகளில் விதி 23 உள்விதி (8)-ல் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 25-6-1982 தேதியிடப்பெற்ற 1106ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம், 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற் றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

175. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொ ழில்கள்) 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

176. 1983-84ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

177. 1983-84ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

178. காவல்துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பதினேழா வது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

179. தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட கிராம மற்றும் சிறு தொழில்கள் குறித்த அறிக்கை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை (ஏழா வது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

*180.* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1971–72 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

*181.* இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978–79 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

*182.* இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

*183.* உடுக்குறியிடப்பெறாத வினாக்களும்—விடைகளும் எண்கள் 1 முதல் 50 வரை).



## இணைப்பு—I.

(582 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 744-க்கான விடையைக் காண்க).

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள லிட்டில் பிளவர் மேல் நிலைப் பள்ளியைச் சார்ந்த திரு. எல். சந்திரசேகர் என்னும் மாணவர் (பதிவு எண். 691658) 1982 ஏப்ரல் மாதம் நடைபெற்ற பிளஸ் 2 தேர்வுகளை எழுதினார். இந்த ஒரே ஒரு மாணவருடைய கணிதம், இயற்றியல், வேதியல், உயிரியல் ஆகிய நான்கு பாடங்களுக்கான விடைத்தாள்களில் மட்டும் சில பக்கங்களுக்கான கூடுதல் விடைத்தாள்கள் காணாமல் போனதாகத் தெரியவந்துள்ளது. பல மேல்நிலைப்பள்ளிகளில் பிளஸ் 2 தேர்வுகள் எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் காணாமல் மறைந்து போனது என்பது சரியல்ல.

(ஆ) இது குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மாணவரது தந்தை ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். இதன் தொடர்பாக உயர்நீதி மன்ற ஆணைப்படி காவல்துறை (குற்றப்பிரிவு) புலன் விசாரணை நடத்தி வருகின்றது.

(இ) இத்தகைய தவறுகளை தடுக்கும்பொருட்டு தற்போது நடைபெறும் அரசுத் தேர்வுகளில் மாணவர்கள் முதன்மை விடைத்தாளின் தலைப்பில் இணைக்கப்பட்ட கூடுதல் விடைத்தாள்களின் மொத்த எண்ணிக்கையை குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவிர, தேர்வு மைய உதவிக் கண்காணிப்பாளர்களும், மாணவர்களிடமிருந்து விடைத்தாள்களைப் பெறும் பொழுது முக்கியமாக இணைக்கப்பட்ட கூடுதல் விடைத்தாள்களின் எண்ணிக்கையை சரிபார்த்த பின்னரே பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். விடைத்தாள்களைத் திருத்தும் மையங்களிலும், உதவித் தேர்வாளர்கள், விடைத்தாள்களை திருத்துவதற்கு முன்பு, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கூடுதல் விடைத்தாள்களின் எண்ணிக்கையை சரிபார்த்த பின்னரே விடைகளைத் திருத்த முற்பட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள். தலைமைத் தேர்வர்களும், தனி உதவித் தேர்வாளர்களும், மதிப்பெண் பட்டியல் சரிபார்க்கும் அலுவலர்களும், கூடுதல் விடைத்தாள்கள் சரியாக உள்ளனவா என ஆய்வு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பல நிலைகளிலும் சரிபார்க்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளதால், இத்தகைய தவறு இனிமேல் நேர வாய்ப்பு இருக்

வருகின்றனர். 1979–80 மற்றும் 1980-81 ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டத்திற்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்டத் தொகை முறையே ரூ. 4.32 இலட்சங்கள் மற்றும் ரூ. 4.44 இலட்சங்களாகும். 1981–82-ல் வழங்கப்பட்ட தொகை ரூ. 4.29 இலட்சங்களாகும். 1982–83 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு ரூ. 3 இலட்சங்களாகும். மைய அரசினால் வழங்கப்பட்ட மான்யம் ரூ. 3 இலட்சங்களாகும். இவ்வாண்டிற்கு மேலும் கூடுதல் மான்யம் ரூபாய் 26,640 கேட்கப்பட்டுள்ளது.

**(4) குழந்தைகள் காப்பகம்.**

இத்திட்டம், பணியில் உள்ள மகளிர் மற்றும் நோயால் அவதியுறும் மகளிர் ஆகியோருக்கு உதவிக்கரம் நீட்டிக்கும் நோக்கமுடன், குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கும் நிறுவனங்கட்கு உதவித்தொகை வழங்கும் திட்டமாகும். சுமார் 382 நிறுவனங்கள் மூலம் 9,550 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். 1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டத்திற்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை முறையே ரூ. 12.40 இலட்சங்கள் மற்றும் ரூ. 15 இலட்சங்களாகும். 1981–82-ல் வழங்கப்பட்ட தொகை ரூ. 19.84 இலட்சங்களாகும். 1982–83 ஆம் ஆண்டின் ரூ. 20,83,428 ஒதுக்கீடு, மைய அரசினால் வழங்கப்பட்ட மான்யம் ரூ. 20,83,428 ஆகும்.

**(5) விடுமுறை சுற்றுலா திட்டம்.**

இத்திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 50 படிக்கும் பள்ளி சிறுவர்களை கோடைக்கால விடுமுறையின் போது 15 நாட்கள் கால அளவில் அவர்களை பயனுள்ள இடங்களுக்கு கூட்டிச் சென்று வரும் நிறுவனங்களுக்கு ரூ. 5,000 மான்யம் வழங்குவதற்கான திட்டமாகும். (1980–81 ஆம் ஆண்டு இதுபோன்ற 54 கேம்ப்கள் (Camps) மேற்கொள்ளப்பட்டதால் 2,700 சிறுவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தனர். 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டத்திற்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை முறையே ரூ. 3 இலட்சங்கள் மற்றும் ரூ. 2.60 இலட்சங்களாகும். 1981–82-ல் வழங்கப்பட்ட தொகை ரூ. 2.00 இலட்சங்களாகும். 1982–83 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

**(6) பெண்களுக்கான குறுகிய கால பயிற்சி.**

இத்திட்டம், ஏற்கனவே படிப்பினை நிறுத்திவிட்டு ஆனால் வேலை வாய்ப்பிற்காக படிப்பினைத் தொடர்ந்து முடிக்க



விரும்பும் மகளிருக்கான குறுகிய கால பயிற்சி திட்டமாகும். E.S.L.C. அல்லது S S.L.C. தேர்விற்காக பயிற்சி காலம் இரண்டு வருடம் ஆகும். S.S.L.C. தேர்வில் தேர்ச்சியுறாத பெண்களுக்காகவும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 15 நிறுவனங்கள் மூலம் 300 பெண்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். 1979–80 மற்றும் 1981–82 ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டத்திற்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை முறையே ரூபாய் 1.1 இலட்சங்கள் மற்றும் ரூ. 1.78 இலட்சங்களாகும். 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 2.37, 200/15 நிறுவனங்களுக்கு மத்திய சமூக நலவாரியத்தால் அளிக்கப்பட்டது.

**(7) வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டம்.**

இத்திட்டம் தொண்டு நிறுவனங்களின் மூலமாக பெண்களுக்கு பலவகைத் தொழிற்சாலைகள், தையல், காரியாலயம் பயிற்சி, வானொலி மெக்கானிசம், தொலைக்காட்சி பராமரிப்பு செவிலியர் பயிற்சி, இல்லக்காப்பாளர் பயிற்சி, புகைபடக் கலை முதலியவைகளில் பயிற்சி அளிப்பதற்காக 1975 உலகப் பெண்களாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1,500 மகளிர் மறுவாழ்விற்காக தற்போது 79 பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டங்களுக்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்டத் தொகை முறையே ரூ. 11.70 இலட்சங்கள் மற்றும் 15.39 இலட்சங்களாகும். 1981–82-ல் ரூ. 15,18,178 மத்திய சமூக நலவாரியத்தால் அளிக்கப்பட்டது. 1982–83-ற்கு விண்ணப்பங்கள் வந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

**(8) பணி செய்யும் பெண்கள் தங்கும் வசதி.**

சொந்த ஊரை விட்டு வெளியே நகரங்கள் பட்டணங்களில் வேலை தேடும் பெண்களுக்காக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விடுதிகள் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் பெண்களுக்கு அளித்து மேலும் அவர்களுக்கு பாதுகாப்பையும் அளிக்கின்றது. விடுதி வார்டர்களின் சம்பளம் பொழுதுபோக்குச் சாதனங்கள் மற்றும் தேவைப்படின் வாடகை முதலியவற்றிற்கு வாரியம் மான்யம் வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் 7 பெண்கள் பணி புரியும் விடுதிகள் பயனடைந்து வருகின்றன. 1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகட்கு இத்திட்டத்திற்காக மைய சமூக நல வாரியம் வழங்கியத் தொகை முறையே ரூ. 0.33 இலட்சம் மற்றும் ரூ. 0.35 இலட்சமாகும். 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,300 மைய சமூக நல வாரியம் வழங்கியுள்ளது. 1982–1983–ற்கு விண்ணப்பம் வந்தவுடன் பரிசீலித்து அனுப்பப்பட்டு நிதி உதவி பெறப்படும்.

(ஈ) திரு. எஸ். சந்திரசேகரது நலனைக் கருதி சென்ற
ஆண்டு பிளஸ் 2 தேர்வுக்கு வருகை தந்ததைக் கணக்கில்
கொள்ளாமல் அடுத்து வரும் தேர்வினையே முதலாகக்
கொண்டு அன்னாரது மருத்துவம், பொறியியல் போன்ற மேற்
படிப்புகளுக்கான விண்ணப்பங்களை பரிசீலிக்குமாறு உயர்
நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் மார்ச் 1982 தேர்
வின் பொழுது அம்மாணவன் செய்முறைத் தேர்வுகளில்
(Practical Examinations) பெற்ற மதிப்பெண்களையே
கணக்கில் கொள்ளலாமென்றும் திரும்பவும் அவன் செய்முறை
தேர்வுகளில் கலந்துகொள்ளத் தேவையில்லை என்றும் உயர்
நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இணைப்பு—II

(602-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 753-க்கான
விடையைக் காண்க).

### விவர அறிக்கை.

தமிழ்நாடு சமூகநல வாரியம் இம்மாநிலத்தில் 1954 ஆம்
ஆண்டு முதல் மைய சமூக நல வாரியத்தின் ஓர் அங்கமாக
ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாரியம் சமூக தொண்டு நிறுவனங்
களுக்கு ஓர் தலைமை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.
மற்ற வாரியங்களைப் போல் அல்லாது, தமிழ்நாடு சமூக நல
வாரியம் 1961 ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழ்நாடு சமூக நல
இயக்குநரகத்தோடு இணைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.
இதன் காரணமாக அரசுக்கும் வாரியத்திற்கும் மற்றும் தொண்டு
நிறுவனங்களுக்கும் இடையே ஒழுங்கான செயல்பாடும் மற்றும்
ஒருமித்த கருத்தும் இருந்து வருகிறது.

சமூக நல வாரியம் தொண்டு நிறுவனங்கட்கு, அவைகள்
மேற்கொண்ட சமூக மற்றும் சேவை பணிகட்கு நிதி உதவியும்
அளித்து வருகின்றது, வாரியத்தின் இம்மான்ய உதவி திட்டங்
கள் மகளிர், குழந்தைகள், முதியோர் மற்றும் ஊனமுற்றவர்கள்
ஆகியோரின் சேவைகட்காக செயல்படுத்தப்படுகின்றது.

சமூக நல வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்
விவரங்கள் பின்வருமாறு.

(1) வருட மான்யம் மற்றும் திட்டக்கால மான்யங்கள்.

பதிவு செய்யப்பட்ட சமூக நல நிறுவனங்களுக்கு வருடத்
திற்கு 50 சதவீதம் சரிசம அடிப்படையில் (Matching Grant)



குழந்தைகள் காப்பகம் மற்றும் ஊனமுற்றோர், முதியோர்
இல்லம், குடும்ப நல சேவை இல்லங்கள், மறுவாழ்வு திட்டம்
மற்றும் குழந்தைகள் சுகாதார நிலையங்கள், ஆகியவற்றிற்காக
வழங்கப்படுகின்றது. ஆண்டொன்றுக்கு வருட மான்யம் திட்
டத்தின் கீழ் அளிக்கப்படும் அதிக பட்சத் தொகை ரூ. 5,000மும்
திட்டக்கால மான்யத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் அதிக
பட்ச தொகை ரூ. 10,000 மும் ஆகும். மேற்கண்ட திட்டங்
களின் கீழ் சுமார் 358 நிறுவனங்கள் பயனடைந்து வருகின்றன.
1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகட்கு மேற்கண்ட திட்டங்
கட்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை
முறையே ரூ. 7.88 இலட்சங்கள் மற்றும் ரூ. 8.21 இலட்சங்கள்
ஆகும். 1981–82-ல் மான்யமாக அளிக்கப்பட்ட தொகை
ரூ. 8.27 இலட்சங்கள். 1982–83 ஆம் ஆண்டில் மைய அரசி
னால் வழங்கப்பட்ட மான்யம் ரூ. 3 இலட்சங்களாகும்.
இவ்வாண்டிற்கு மேலும் கூடுதல் தொகையாக ரூ. 51,600-க்கு
விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

(2) மாநில மண்டலங்கள் திட்டம்.

இத்திட்டம் உள்ளூர் மகளிர் மன்றங்களின் கிராம சமூக
நல விரிவாக்க தொடர்ச்சி திட்டமாகும். இத்திட்டத்திற்
கானச் செலவினை 75 சதவீதம் வாரியம் மேற்கொள்கிறது.
16 நிறுவனங்கள், 35 மையங்களை, 35 கிராமங்களில் நடத்தி
வருகின்றன. பால்வாடி, சத்துணவு, சமூக கல்வி மற்றும்
கிராப்ட் (Graft) போன்றவைகள் இத்திட்டத்தின் முக்கிய பணி
களாகும். 1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகட்கு இத்திட்டத்
திற்காக மைய சமூக நல வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை
முறையே ரூ. 1.25 இலட்சங்கள் மற்றும் ரூ. 1.19 இலட்சங்கள்
ஆகும். 1981–82 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தொகை ரூ. 1.19
இலட்சங்கள். 1982–83 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு ரூ. 1.20
இலட்சங்கள். மைய அரசினால் வழங்கப்பட்ட மான்யம் ரூ. 1.20
இலட்சங்களாகும்.

### 100 சதவீத மான்ய சிறப்பு திட்டங்கள்.

(3) சத்துணவுத் திட்டம்.

இத்திட்டம், குழந்தைகள் வளர்ச்சியின் அடிப்படைத்
தேவைகளை உணர்ந்து பால்வாடி குழந்தைகட்கு சத்துணவு
வழங்குவதற்கானத் திட்டமாகும். மேற்சொன்ன பால்வாடி
நடத்தும் நிறுவனங்கட்கு ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு 20
பைசா வீதம் அளிக்கப்படுகிறது. 132 நிறுவனங்களின் மூலம்
சுமார் 4,335 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து

(9) சமூக பொருளாதாரத் திட்டம்.

இத்திட்டம் பெண்கள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோர் தம் குடும்ப வருமானத்தை சிறு தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் பெருக்கிக் கொள்வதற்காக உள்ள திட்டமாகும். அச்சகங்கள், புத்தக பைண்டிங், தச்சு வேலை, ரொட்டி முதலியன தயாரித்தல், கைத்தறி நெசவு, பால் பண்ணை, பொம்மைகள் செய்தல் முதலான 51 பிரிவுகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் சுமார் 20 பெண்களுக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. மேற்கண்ட பிரிவுகளில் இயந்திரங்கள் பணி மூலதனம் ஆகியவற்றிற்காக மைய சமூக நல வாரியம் ஒரு மொத்த தொகை மான்யம் வழங்கி வருகின்றது. இத்தொகை தொடர் மான்யமல்ல. மேற்கண்ட பிரிவுகள் வியாபார ரீதியில் செயல்பட எதிர்பார்க்கப்படுகிறது. 1979—80 மற்றும் 1980—81 ஆண்டுகட்கு இத்திட்டத்திற்காக மைய சமூக நல வாரியம் வழங்கியத் தொகை முறையே ரூ. 10.76 இலட்சங்கள் மற்றும் ரூ. 22.01 இலட்சங்களாகும். 1981—82-ம் ஆண்டிற்கு பால் பண்ணை திட்டத்திற்கு ரூ. 3,01,940-ஐ மைய சமூக நலவாரியம் மான்யமாக வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்திற்காக ரூ. 9,92,000-ஐ கடனாக வழங்கியுள்ளது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 35,000 கடனாகவும் ரூ. 15,000 மான்யமாகவும் வழங்கியுள்ளது. சிறுதொழில் திட்டத்தின்கீழ் 1982—83-ல் ரூ. 7,37,695-ஐ மான்யமாக வழங்கியுள்ளது.

(10) குடும்ப நல பயிற்சி முகாம் திட்டம்.

1981—82-ல் இத்திட்டத்திற்காக மைய சமூக நல வாரியம், தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்காக 45 கேம்புகளை (Camps) அனுமதித்து, ஒவ்வொரு கேம்புக்கும் ரூ. 200 என்ற அளவில் 45 கேம்புகளுக்கு ரூ. 9,000 வழங்கியுள்ளது. மாநில சமூக நல வாரியம் இக்கேம்புகளை கொண்டு நிறுவனங்களுக்கு அளித்து இதற்கானச் செலவினை வழங்கியுள்ளது.

(11) கிராமப்புற பெண்களுக்கு பயிற்சி.

மைய சமூக நல வாரியம் இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற பெண்களுக்கு பொது கூட்டுறவு பயிற்சிக் கூடத்தில் பயிற்சி அளிக்க 1981—82-ல் 4 கேம்புகளுக்கு ரூ. 18,000-ஐ வழங்கியுள்ளது.

1981—82 ஆம் ஆண்டிற்கு மாநில அரசும், தொண்டு நிறுவனங்கட்கு வழங்க மானியத் தொகையாக ஒரு இலட்ச ரூபாய் அளித்துள்ளது. இத்தொகையினை மாநில சமூக நல வாரியம் 21 நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.



## இணைப்பு-III

(69—ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டமும்.

நம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்கள் பங்கினைச்செலுத்தி வரும் துறைகளில் தொழில் துறையும் ஒன்றாகும். இம்மாநில மொத்த உற்பத்தியில், தொழில் துறையின் மூலம் 26.6 சதவீதம் கிடைக்கிறது. மாநிலத்தில் கிடைக்கப் பெறும் வருவாயில் பெரும் பகுதி தொழில் துறையிலிருந்து கிடைக்கிறது. இது, வேளாண்மைக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. வேளாண்மைத் துறையில் வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்துவரும் நேரத்தில் இம்மாநிலத்தில் தொழில் ஆதாரங்களை பெருக்குவதன் மூலந்தான் நம் மாநிலத்தின் பொருளாதார, மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் வருமானத்தையும் வேலைவாய்ப்பையும் மேலும் அதிகரிக்க இயலும் என்பது மறுக்க முடியாத ஒரு கருத்தாகும். இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு தொழில் என்பதன் கீழ் உள்ள பல்வேறு துறைகளில் அதாவது பெருந்தொழில்கள், நடுத்தர தொழில்கள், சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கதர்-கிராமத் தொழில்கள் ஆகியவற்றின்கீழ் பரவலாக ஒரே நிலையில் வளர்ச்சியை ஏற்படுத்த நாம் கவனமாக திட்டங்கள் தீட்டி வருகிறோம். தொழில் என்பதன் கீழுள்ள பல்வேறு பிரிவுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிடும் தன்மைத்தானவை அல்ல, மாறாக அவை ஒன்றுக்கொன்று உறுதுணையானவை ஆகும். அதிக அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த இயலும் வண்ணம் தொழில் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பெருமளவில் முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது.

2. இக்கொள்கையின் பயனாக, தமிழ்நாட்டில் அமைப்பு ரீதியாக உள்ள துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்களின், எண்ணிக்கை, 1976—77 ஆம் ஆண்டில் 8,570 ஆக இருந்தது, 1980—81-ல் 10,964 ஆக உயர்ந்துள்ளதைக் காணலாம். இது 27.9 சதவீத உயர்வாகும். அதே கால அளவில், மேற்சொன்ன தொழில்களில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக்கான மூலதனம் 1976—77-ல் ரூ. 2,007 கோடியாக இருந்தது. 1980—81-ல் ரூ. 4,292 கோடியாக உயர்ந்துள்ளது. அதன் மூலம் சுமார் 113.91 சதவீதம் உயர்ந்துள்ளது. அதேபோல, மேற்சொன்ன தொழில்களில் பணியாற்றி வருபவர்களின் எண்ணிக்கை 1976—77-ல்

6.98 இலட்சமாக இருந்தது. 1980—81-ல் 8.78 இலட்சமாக அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர்வு சுமார் 25.75 சதவீதமாகும்.

3. இம்மாநிலத்தில் உள்ள தொழில்களின் மொத்த உற்பத்தியில், பதிவு செய்யப்பட்ட துறைகள் அளித்துள்ள பங்கானது, நடப்பு விலை வீதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது ரூ. 648.6 கோடியாக அல்லது 15.07 சதவீதமாக இருந்தது. 1980—81-ல் ரூ. 1,229.2 கோடியாக அல்லது 20 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1976—77 ஆம் ஆண்டு இருந்ததைவிட இந்த உயர்வு சுமார் 89.5 சதவீதம் என்பதைக் காட்டுகிறது.

4. பெரிய தொழில் துறையும், நடுத்தரத் தொழில்களையும் ஏற்படுத்த, அனுமதிக் கடிதம் அல்லது தொழில் உரிமம் வழங்குவது தொடர்பாக தனியார் துறை கூட்டுத் துறை மாநில அரசு நிறுவனங்கள் தெரிவித்த செயற் குறிப்புகளை மாநில அரசு, பரிந்துரை செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியது. நடுத்தர, பெரிய தொழில்களை நிறுவ, மத்திய அரசு 1982 ஆம் ஆண்டில் 41 அனுமதிக் கடிதங்களை வழங்கியது. மேற்சொன்ன தொழில்களை அமைக்க தேவைப்படும் முதலீடுகள் சுமார் ரூ. 99.4 கோடியாகும். இத்திட்டங்கள் முடிக்கப்படுகையில், 8,400 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும், 1982 ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சித்துறை தலைமை இயக்குநரகம் (DGTD) பெரும்பாலும் நடுத்தர, சிறுதொழில் பிரிவுகளில் 92 பிரிவுகளைப் பதிவு செய்து கொண்டுள்ளது. சிறு தொழில் பிரிவில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்த விவரங்கள் 'சிறு தொழில்' என்ற தலைப்பின் கீழ் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

5. தொழில் வளர்ச்சிக்கு நீண்ட கால, நடுத்தரக்கால நிதியுதவி அளிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற இயலாது. இம்மாநிலத்தில் அவ்வாறு நிதியுதவி அளிக்கும் இரண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை ஆகும். நடுத்தர பெரிய தொழில்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ரூ. 30 இலட்சம் வரை கடன் வழங்குகிறது. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 30 இலட்சம் முதல் 60 இலட்சம் வரை கடன் வழங்குகிறது. 1982—83 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ரூ. 50 கோடி அளவிற்கும், சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 25 கோடி அளவிற்கும் கடன் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



6. தொழில் வளர்ச்சியை முடுக்கி விடுவதற்கு அரசு அளித்து வரும் பல்வேறு செயலூக்கங்களில் முக்கியமான சில வருமாறு :—

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் :

(அ) இம்மாநிலத்திலுள்ள 57 வட்டங்களில் 33 வட்டங்களை பின்தங்கிய பகுதிகளாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்துடன் மாநில அரசு மேலும் 24 வட்டங்களை பின்தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ளது. இவ்வட்டங்களில் அமைக்கப்படும் தொழில்கள் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் அளவிற்கு உதவித் தொகை பெற தகுதியுடையவையாகும். இத்திட்டங்களின்கீழ் 1982—83 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 3.30 கோடியாக இருக்கக்கூடும். இத்திட்டம், இம்மாநிலத்தின் பின்தங்கிய வட்டங்களில் முதலீடு செய்வதற்கு வழி கோலுவதாக உள்ளது.

விற்பனை வரிக்கான வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் :

(ஆ) தொழில்களுக்குச் சிறந்த முறையில் செயலூக்கம் அளிக்க வேண்டுமென்ற நோக்குடன், மாநில அரசு, இம்மாநிலத்தில் உள்ள 9 பின் தங்கிய மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் வளாகத்திலும், குன்றத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலும் விற்பனை வரிக்காக வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கு ஒரு திட்டத்தைக் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 1983ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரை 1.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டில் வழங்கப்படும் தொகை 3 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு இத்திட்டத்தை மாற்றியமைத்து, பகுதி I, பகுதி II ஆகிய திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறத் தேவையான தகுதியின் அளவை ரூ. 15 இலட்சம், 50 இலட்சத்திலிருந்து முறையே ரூ. 50 இலட்சம் ரூ. 1 கோடியாக உயர்த்தியது.

உதவித் தொகை வழங்கு புதிய திட்டம்:

(இ) இம்மாநிலத்தில், மின் அணுக் கருவிகள், மோட்டார் வண்டி துணைப் பாகங்கள், மருந்துகள், மருந்துப் பொருட்கள் ஆகிய தொழில்கள் மேலும் வளர்ச்சியுற நல்ல வாய்ப்புகள் உள்ளன. அவை விரைவாக வளர்வதற்கான சிறப்பியல்புகளை பெற்றுள்ளன. அத்தொழில்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பாண்டில் புதிய திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளிலுமுள்ள மேற்குறிப்பிட்ட மூவகைத் தொழில்களுக்கு 10 சதவீதம் உதவித்

தொகை கிடைக்கும்படிச் செய்யப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ், விரைவாக வளர்ச்சிபெறும் இத்தொழில்கள் இம் மாநிலத்தில் செழித்து வளருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. கூட்டுத்துறையில் அல்லது முற்றிலும் மாநில அரசுக்குச் சொந்தமான தொழில்களைத் தொடங்குவதால் பல நன்மைகள் விளையுமென்பதை அரசு அறியும். முதலீடு அதிகமாகத் தேவைப்படும் தொழில்கள் அல்லது புதிய அல்லது இதுவரையிலும் தொடங்கப்படாத அல்லது மிகவும் உயரிய தொழில் நுட்ப அறிவு தேவைப்படுகிற தொழில்களே இவ்வாறு தொடங்கப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு, அரசு டிட்கோ, எல்காட், தமிழ்நாடு உப்புக் கழகம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் போன்ற பல கழகங்களை அமைத்துள்ளது. இவற்றில், டிட்கோ நிறுவனம் பொதுத்துறையில் பல பெரிய நடுத்தரத் தொழில்களைத் தொடங்கியுள்ளது. தனிப்பட்ட தொழில் முனைவர்களுடன் கூட்டு சேர்ந்து கூட்டுத் துறையில் பல தொழில் பிரிவுகளையும் தொடங்கியுள்ளது. உருக்கு, வார்ப்படம், சிமிட்டி, வெடி மருந்துகள், நைட்ரிக் அமிலம், அமோனியம் நைட்ரேட், மங்கனிசியம், உலோகம் முதலிய பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளது. டிட்கோ நிறுவனம், 19 கூட்டுத் துறைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. புகையிலை, தொலைக்காட்சி, தோல், பெட்ரோல் தொடர்பான இராசாயனப் பொருள்கள், மருந்துப் பொருட்கள் தயாரித்தல் இராசாயன உரம் தயாரித்தல் முதலிய தொழில்களில் இத்திட்டங்கள் சிறந்து விளங்குகின்றன.

8. மின் அணுக்கருவிகள் தேவையை நிறைவு செய்யவும் அவற்றின் உற்பத்தியில் முன்னேற்றம் காணவும், அத்தொழில் உற்பத்தியை விரைவுபடுத்தவும் தமிழ்நாடு மின்னணுக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னணுத் துறையில் உற்பத்தியளவு 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 19 கோடியாக இருந்தது 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 33 கோடியாக (70 சதவீதத்திற்கும் மேலாக உற்பத்தியளவு உயரும்) உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனம் எடுத்துக் கொண்ட திட்டங்களில் குவாட்ஸ் டிஜிடல் மின் அணுக் கைக்கடிகாரங்கள் (Quarts Degital Electronic Watches) அலுமினியம் எலக்ட்ரோலிடிக் கபாசிடர்ஸ் (Aluminium Electrolitic Capacitors) ஆகியவை சிலவாகும்.

9. 1982–83 ஆம் ஆண்டில், அரசு பொதுத் துறைகளில் சுமார் ரூ. 19.71 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களில் தோராயமாக 23 கோடி ரூபாயை முதலீடு செய்ய அரசு கருதியுள்ளது. இவ்வாறு அரசு முதலீடுகள் செய்து ஒருபுறம் பொதுத் துறை நிறுவனங்களையும் கூட்டுத்துறை நிறுவனங்களையும் மேம்படுத்து



கிறது. மற்றொருபுறம் தனியார் துறை நிறுவனங்களில் முதலீடு செய்து செயலூக்கம் அளிக்கிறது. இதனால் அரசின் கொள்கை பெருமளவில் நிறைவேற்றப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. நம் மாநிலத்தில், மத்திய அரசுத்துறை நிறுவனங்களை அமைக்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது. எனினும், மத்திய அரசிடமிருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. எடுத்துக் காட்டாக போதுமான அளவு அடிப்படை வசதிகள் நிறைந்துள்ள உதகை மண்டலத்தில் வண்ண நிழற்படச் சுருள் தயாரிப்புத் திட்டத்தைத் தொடங்கலாம் என்று இந்த அரசு தெரிவித்தது. ஆனால் மத்திய அரசு வேறுவிதமாகத் தீர்மானித்துள்ளது. இருப்பினும், இனி நிறைவேற்றவிருக்கிற மத்திய அரசுத்துறை திட்டங்கள் சில இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

11. தற்போது, நம் நாட்டில் தடையிலா வணிக மண்டலங்கள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்று பம்பாய்க்கு அருகிலும், மற்றொன்று குஜராத் மாநிலத்தில் கண்ட்லா என்ற இடத்திலும் உள்ளது. தடையிலா வணிக மண்டலங்கள் பலவற்றை நம் நாட்டில் மேலும் தொடங்குவது குறித்து மத்திய அரசு கருதி வருகிறது. அதுபோன்ற தடையிலா வணிக மண்டலம் ஒன்றைத் தமிழ்நாட்டிலும் தொடங்குமாறு மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்காக மீனம்பாக்கத்திற்கருகில் நிலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, தமிழ்நாட்டில் இத்தகைய தடையிலா வணிக மண்டலத்தை தொடங்குமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 13

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)**

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசுத் துறையின்கீழ் ஆலங்குளத்தில் சிமிண்ட் ஆலையையும், அரக்கோணத்தில் உருக்குத் தொழிற் சாலையையும் செயலாக்கும் நோக்கத்துடன் 1965-ல் நிறுவப் பட்டது. மத்திய அரசின் கூட்டுத்துறைக் கொள்கை காரண மாக தனியார் தொழில் முனைவோர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத்துறை முயற்சியாக பெருந்தொழில்களை அமைக்கும் வாய்ப்பு தொடர்ந்து பெருகுகிறது. குறிப்பாக தனியார் தொழில் முனைவர்கள் சொந்தமாக தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் பெருந்தொழில்களை அமைக்கும் வாய்ப்பு பெருகுகிறது.

2. 18 ஆண்டுக் காலத்தில் "டிட்கோ" நிறுவனம் பல தரப்பட்ட தொழில்களையும் மேற்கொண்டுள்ளது. பொதுத் துறையில் புதிய தொழில்களைத் தொடங்கியுள்ளது. தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத்துறைத் தொழில்களையும் முன்னேற்றமடையச் செய்துள்ளது. மேலும் சிரமத்திற்குள்ளான சில நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கும் உதவி யுள்ளது.

3. 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் அன்றுள்ளவாறு (a) உற்பத்தியிலுள்ள (b) நிறைவேற்றப்பட்டு வருகிற (c) திட்டமிடும் நிலையிலுள்ள திட்டங்கள் குறித்த விவரம் பின் வரும் விவர அறிக்கையில் காணலாம்.

டிட்கோ

| | | மூலதன முதலீடு. (ரூ. கோடியில்). | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| அரசுத்துறை. | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். 4 | 45.63 | 3,383 |
| | நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள். 4 | 34.94 | 553 |
| | திட்ட நிலையில் உள்ளவை. 3 | 32.53 | 488 |
| கூட்டுத்துறை | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள் 20 | 223.27 | 6,121 |
| | நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள். 9 | 55.21 | 2,814 |
| | திட்டமிடும் நிலையில் உள்ளவை. 11 | 192.37 | 3,819 |



1983 ஏப்ரல் 13]

4. கூட்டுத் துறையின் கீழ் பின்வரும் நான்கு தொழிற்பிரிவு கள் 1—4—1982 முதல் 31—12—1982 வரையிலான காலத் தில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

(1) ஏஷியன் பேரிங்ஸ் லிமிடெட்.

(2) வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

(3) மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மாசூடிகல்ஸ் லிமிடெட்.

(4) தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலை சர்ஸ் லிமிடெட்.

**ஏஷியன் பேரிங் லிமிடெட்.**

இந்நிறுவனம் கிழக்கு ஜெர்மனியின் உடனுழைப்புடன் உயர்ந்த தொழில் நுட்பத்திறம் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும். இந்த ஆண்டில், உற்பத்தி தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள் களின் தரம் இந்தியாவில் கிடைக்கக்கூடிய பொருள்களில் சிறந்து விளங்குகின்றன. மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் பேரிங்குகளுக்கு இணையானவையாய் உள்ளன.

**வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.**

இதற்கு முன்பிருந்த சக தொழில் முனைவர் காரணமாக, இந்நிறுவனம் மிகவும் காலந்தாழ்த்தித் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின் முதல் கட்டப் பணியை (அதாவது நாப்தா)

[1983 ஏப்ரல் 13

''டிட்கோ'' அதன் சொந்த முயற்சியிலேயே செயலாக்க முடிந்தது. கெட்டிச் சாயங்கள், வண்ணச் சாயங்கள், சல்பர் பிளாக் ஆகியவற்றைத் தயாரிக்கும் இரண்டாம் கட்டப் பணியைத் தொடங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. நூலிழை, கைத்தறிகள் ஆகியவற்றைப் பெருமளவு உற்பத்தி செய்வதால் தமிழகம் சாயங்களைப் பெருமளவு பயன்படுத்துகிறது. எனினும் இதுவரையில், இச்சாயங்களுக்கு பிற மாநிலங்களை நாம் எதிர்நோக்கியிருந்தோம். இப் பிரிவு ஏற்படுத்தப்பட்டால் இனி கைத்தறிகளுக்குத் தேவைப்படும் பெருமளவு வண்ணச் சாயங்களை இந்நிறுவனம் வழங்கும்.

### மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மசூடிகல்ஸ் லிமிடெட்.

இந் நிறுவனம் எஸ்பிட்ரின் ஹைடிரோகுளோரைடு தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இது வரையில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த அடிப்படை மருந்தை, இந்தியத் தொழில் நுட்பமுறைகள் மூலம் உற்பத்தி செய்வதற்கு 'டிட்கோ' நிறுவனம், தொழில் நுட்ப அறிஞர் ஒருவருக்கு உதவியளித்துள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 500 பிரிவுகள் மருந்துப் பொருள்கள் முதலியவற்றைத் தயாரிக்கின்ற போதிலும், மிகச் சில அடிப்படை மருந்துகளே தயாரிக்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் அடிப்படை மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது. இவ்வளர்ச்சி காரணமாக இம்மாநிலத்தில் உள்ள எண்ணற்ற நிறுவனங்கள் இந்த அடிப்படை மருந்துகளைத் தயாரிக்க முன் வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ். லிமிடெட்

ரூபாய் 53 கோடிக்கும் அதிகமாகச் செலவாகும் இத்திட்டம் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இது ஜப்பான் நாட்டின் உடனுழைப்புடன் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம், உப்பை, அதன் முக்கியப் பொருள்களில் ஒன்றாகப் பயன்படுத்தும், இந்நிறுவனம் தயாரிக்கும் அம்மோனியம் குளோரைடு, சோடா ஆஷ் போன்றவை மிகப் பிரசித்தி பெற்ற தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு இணையானவை. சோடா ஆஷ் தயாரிப்பது இம்மாநிலத்திலுள்ள துப்புரவுப் பொருள் தயாரிக்கும் சிறு தொழில் பிரிவுகள் மேலும் வளர்ச்சியுறப் பெரிதும் உதவும்.

5. பின் வரும் இரு தொழிற் பிரிவுகள் 1—1—1983 முதல் 31—3—1983 வரையிலான கால அளவில், வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.



1983 ஏப்ரல் 13]

### அசிடிலின் அண்டு இண்டஸ்ட்ரியல் காஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட்.

ஆக்ஸிசன் காஸ் சிலிண்டர் முதலிய பிற காஸ் சிலிண்டர்களைத் தயாரிப்பதைக் காட்டிலும் அதிகச் சிரமமான அசிடிலின் காஸ் சிலிண்டர்களைத் தயாரிக்கும் நிறுவனங்களில் இது இரண்டாவது நிறுவனமாகும். இந்நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் மிகக் கடுமையான தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டியுள்ளது. இந்நிறுவனத்தின் அமெரிக்க நாட்டு உடனுழைப்பாளர்கள், இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டு, இந்நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் உயர்ந்த தரமானவை எனச் சான்றளித்துள்ளனர்.

### சென்னை ஷூ ஃபேப்ரிக்ஸ் லிமிடெட்.

உற்பத்திப் பொருளை அமெரிக்கா நாட்டிற்கு முழுவதையும் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் அமெரிக்கா நாட்டு பிரௌன் அண்டு கம்பெனியின் உடனுழைப்புடன், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஷூக்களை தயாரிக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இங்குள்ள தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வெளிநாட்டு உடனுழைப்பாளர்கள் அடங்கிய குழு பயிற்சி அளித்து வருகின்றது. இத்தொழிற்சாலை உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

6. பின்வரும் நான்கு தொழிற் பிரிவுகளும் 1983-84-ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.—

(1) கமர் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

(2) ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட்.

(3) பைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட்.

(4) தமிழ்நாடு ஃப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

7. உற்பத்தி செய்யும் நிலையிலும், செயல்படுத்தப்படும் நிலையிலும் உள்ள இருபத்தொன்பது தொழிற்சாலைகளில் பதினைந்து இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப் பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகத் தொழில்கள் தொடங்கப் படவேண்டும் என்பதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதிலும் 'டிட்கோ' கவனம் செலுத்துகிறது.

8. 1982-83-ல் 'டிட்கோ' மேற்கொண்ட முயற்சியால் அதற்கு ஆண்டொன்றுக்கு 50,000 டன் லினியர் ஆல்கைல் பென்ஜின் உற்பத்தி செய்வதற்கு ஒன்றும், ஆண்டொன்றுக்கு 10,000 டன் ஐசோபுரொபைல் ஆல்கஹால் உற்பத்தி செய்வதற்கு ஒன்றுமாக இரண்டு இசைவுக் கடிதங்கள், டிட்கோவிற்கு வழங்கப்பட்டன. இத்திட்டங்கள், சென்னை சுத்திகரிப்பு ஆலைகளுடன் சேர்க்கப்பட்டு சென்னை சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கத்தால் கிடைக்கும் பொருள்கள் இத்திட்டத்திற்கென்று பயன்படுத்தப்படும். சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இம்மாநிலத்தில் எதிர்காலத்தில் பெட்ரோ கெமிகல் தொழில் வளாகத்தை ஏற்படுத்தும் பொருட்டு, லினியர் ஆல்கைல் பென்ஜின் திட்டத்தை பொதுத்துறையில் நிறுவ 'டிட்கோ' கருதியுள்ளது. இவ்வாறு செய்வதால், காலப்போக்கில் இந்நிறுவனம் சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்தை உடனடியாக விரிவாக்குவதன் அடிப்படையில பல்வேறு திட்டங்களைச் செயலாக்கும். ஏனெனில் பிறபுரொபைலின் அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக 'டிட்கோ' அனுப்பிய விண்ணப்பங்கள் இன்னும் மத்திய அரசின் ஏற்பளிப்பைப் பெறாமல் உள்ளன. இவ்வாறாக, 'டிட்கோ' இம்மாநிலத்தில் நடுத்தர, பெருந்தொழில் முன்னேற்றத்தில் முக்கியப் பங்காற்றி, இந்நாட்டிலுள்ள மாநில அளவிலான தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

9. 'டிட்கோ' இத்திட்டங்களின் வாயிலாக இது வரையில் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இந் நிறுவனத்திடம் பரிசீலனையில் உள்ள திட்டங்களும் செயலாக்கப் படுமானால் மேலும் 7,500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். இவ்வாறாக, 'டிட்கோ' இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நிற்பதுடன் தமிழ் நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்கவும் உதவுகிறது.

10. 1980-81-ல் 'டிட்கோ' ரூ. 29.6 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. இது 1981-82-ல் ரூ. 159.8 இலட்சத்தை எட்டியது. இனிவரும் ஆண்டுகளில் இதே போக்கு தொடர்ந்து நீடிக்கும் என்று உறுதியாக நம்புகிறோம். இந்த ஆதாயப் பெருக்கத்தால், இந்நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஈடு செய்ய இயலுமென்று 'டிட்கோ' நம்புகிறது.



## தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம்.

1. தமிழகத்தில் தனியார் தொழில் முனைவோர் தொழிற் பிரிவுகளை நிறுவ (தமிழக அரசு) உதவுவதுடன், பொதுத் துறையிலும், கூட்டுறவுத்துறையிலும் தொழில் பிரிவுகளை தமிழக அரசு நிறுவி வருகிறது. இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோகத்துடன் இம்முயற்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கிளை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமிண்டு மற்றும் அது சம்பந்தமான பொருள்களின் வினியோகம் மற்றும் தேவையைக் கருத்திற்கொண்டு சிமிண்டு, சிமிண்டு சம்பந்தப்பட்ட பொருள் களை உற்பத்தி செய்ய இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக ரூ. 12.5 கோடியில் ரூ. 11.8 கோடி இதுவரையில் மூலதனமாக செலுத்தப் பட்டுவிட்டது.

2. தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

| I. சிமிண்டு ஆலைகள். (1) | உற்பத்திப் பொருள். (2) | ஆண்டொன்றுக்கு நிறுவியத்திறன். (3) |
|---|---|---|
| (i) ஆலங்குளம் சிமிண்டு தொழிற் சாலை. | சிமிண்டு .. | 4 இலட்சம் மெட்ரிக் டன்கள். |
| (ii) அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு .. | 5 இலட்சம் மெட்ரிக் டன்கள். |
| II. ஆஸ்பெஸ்டாஸ் ஆலை— | | |
| தமிழ்நாடு ஆஸ் பெஸ்டாஸ். | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 36,000 மெட்ரிக் டன்கள். |

இவற்றோடு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டைக் கையாண்டு வருகிறது.

[1983 ஏப்ரல் 13

2.1. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள சிமிண்டு ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இவற்றைத் தவிர தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் மதுரை மாவட்டம், பாளையத்தில் ஒரு சிமிண்டு ஆலை நிறுவும் திட்டம், ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது,.

3. ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை.

3.1 இத் தொழிற்பிரிவு 1970 ஆம் ஆண்டு வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் உரிமம் வழங்கப்பட்ட நிறுவிய திறனுடையது. இப்போது இந்த ஆலை தனது 13 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. நடைமுறையிலுள்ள பல்வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமிண்டு ஆலை 1981-82 வரை திட்டமிட்டபடி அதன் உற்பத்தியை எட்ட முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் இந்த ஆலைக்காக மைய அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலை போதுமானதாக இல்லை. இதன் விளைவாக ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர இத் தொழிற்சாலை தொடர்ந்து 1981–82 வரை நட்டத்தில் இயங்கி வந்துள்ளது.

3.3 இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் போது உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்னில்). (2) | ஆண்டின் போது விற்பனை (இலட்சம் மெட்ரிக் டன்னில்). (3) |
|---|---|---|
| 1976–77 .. .. | 3.38 | 3.33 |
| 1977–78 .. .. | 3.09 | 3.08 |
| 1978–79 .. .. | 3.19 | 3.20 |
| 1979–80 .. .. | 2.74 | 2.78 |
| 1980–81 .. .. | 3.01 | 3.07 |
| 1981–82 .. .. | 2.94 | 2.93 |



1983 ஏப்ரல் 13]

3.4. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை. மின்சக்தியின் மீதான உயர்ந்த பட்சத் தேவையிலான வெட்டு. உயர் மின்சக்தி நுகர்வோர்களின் மீது கொண்டுவரப்பட்ட மின்வெட்டு, இரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகியவையே இந்தத் தொழிற்சாலையின் குறைந்த உற்பத்திக்குப் பெரும் புறக்கட்டுப்பாடுகளாக இருக்கின்றன.

3.5. 1982–83 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் ஆலங்குளம் சிமிண்டுத் தொழிற்சாலை தன்னுடைய உற்பத்தித்திறனில் 92 விழுக்காடு அளவை எட்டியுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஜூலை முதல் நிலக்கரி விநியோகம் முன்னேற்றமடைந்துள்ளது. எனினும் 3—10—1982-இல் இருந்து புகுத்தப்பட்ட மின்வெட்டின் விளைவால் இரண்டாவது அரை இறுதி ஆண்டில் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எனினும் நடப்பு ஆண்டில் ஆலங்குளம் சிமிண்டு ஆலை இலாபம் ஈட்டத் தொடங்கி திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆலை போதுமான இலாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

3.6. இந்தத் தொழிற் பிரிவு பிற்பட்ட பகுதியில் 1,637 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் பெருமளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

4. அரியலூர் சிமெண்டு ஆலை.

4.1. ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறனுள்ள அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை ஓர் உலர் செய்முறை ஆலை ஆகும். இத்தொழிற்பிரிவு சிமிண்டு உற்பத்தியை 1—8—1979-ல் தொடங்கியது.

4.2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் போது உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்னில்). (2) | ஆண்டின் போது விற்பனை (இலட்சம் மெட்ரிக் டன்னில்.) (3) |
|---|---|---|
| 1979–80 (8 மாதங்களுக்கு) | 1.16 | 1.16 |
| 1980–81 .. .. | 2.47 | 2.42 |
| 1981–82 .. .. | 2.84 | 2.88 |

4.3. நடப்பு 1982–83 முதல் அரையாண்டில் அரியலூர் சிமிண்டு ஆலை 1.70 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்துள்ளது. இது கடந்த 1981–82 ஆம் ஆண்டில் இதே கால அளவிற்குண்டான சிமிண்டு உற்பத்தியைக் காட்டிலும் 44 ஆயிரம் மெட்ரிக் டன் அதிகமாகும். நடப்பிலுள்ள மின்வெட்டின் காரணமாக நடப்பு ஆண்டில் அரியலூர் சிமிண்டு ஆலை 2.28 மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4.4. இந்த ஆலை 907 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் சார்பு வேலை வாய்ப்பிற்கும் பெருமளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ்.

5.1. பல்வகைப்படுத்தும் திட்டத்தின் முதற்படியாக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகளை உற்பத்தி செய்வதற்கு, ஆலங்குளம் சிமிண்டு ஆலைப்பகுதியில், ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஷீட் திட்டத்தினை அமைத்துள்ளது. இந்தத் தொழிற்பிரிவு அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கியுள்ளது.

5.2. துவக்கப்பட்ட முதல் 6 மாதங்களில் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் ஆலை 8,251 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும் துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்துள்ளது. இந்த ஆலை 1982–83 ஆம் ஆண்டில் 19,811 மெட்ரிக் டன் மற்றும் 1983–84 ஆம் ஆண்டில் 25,500 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும், துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்யும். இந்த ஆலை நடப்பு ஆண்டில் இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.3. இவ்வாலை 203 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புக்கு வகைசெய்வதுடன் கச்சாப் பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

6. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாளுதல்.

6.1. கடந்த 31—3—1982 உடன் முடிவடைந்த நிதி ஆண்டின்போது தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 1.08 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டையும் தூத்துக்குடியில் இறக்குமதி



செய்யப்பட்ட 1.64 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டையும் பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 15 ஆயிரம் மெட்ரிக் டன் சிமிண்டையும் கையாண்டுள்ளது.

6.2. நடப்பு ஆண்டில் இந்திய சிமிண்டு நிறுவனத்தின் சார்பாக 2.03 இலட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கையாண்டு விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்று செயலாற்றியது.

6.3. டி.பி.ஆர். கொரியாவைச் சேர்ந்த கொரியா சிமிண்டு ஏற்றுமதி நிறுவனத்துடன் 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்டை விநியோகம் செய்வதற்காக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. 15—4—1983-க்கு முன்பாக மேற்குறிப்பிட்டுள்ள சிமிண்டின் முழு அளவையும் கையாள இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர 1983–84 ஆம் ஆண்டில் 3.5 இலட்சம் டன் சிமிண்டை இறக்குமதி செய்ய தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சிமிண்டு அரசுத் துறைகளுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் சமமாக விநியோகம் செய்யப்படும். இது அதிகமாயுள்ள சிமிண்டு கிராக்கியை கணிசமான அளவு குறைக்கிறது.

7. ஆலங்குளம் சிமெண்டு ஆலையின் மேம்பாட்டு மற்றும் நவீனப்படுத்தும் திட்டம்.

ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் உள்ள மின் இயல் தூசி தடுப்பான்கள் மற்றும் வேறு சமப்படுத்தும் கருவிகளைப் பொருத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப் பணி எல்லா வகையிலும் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டச் செயலாக்கத்தால் ஆலங்குளம் ஆலைப்பகுதியில் காற்று அசுத்தம் குறைக்கப்படுவதுடன் சிமிண்டு முற்றிலும் சேதமாகாமல் தடுக்க உதவும். ஆலங்குளம் ஆலை அதன் உற்பத்தியை நிலைப்படுத்தவும் ஆண்டுக்கு 4.5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி அளவை எட்டுவதற்கும் இத் திட்டம் உதவும்.

8. பாளையம் சிமெண்டுத் திட்டம்.

மதுரை மாவட்டம் பாளையம் பகுதியில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித்திறன் கொண்ட சிமிண்டு ஆலை ஒன்றை நிறுவ தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இசைவுக் கடிதத்தை வழங்குவதற்காக மைய அரசிற்கு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் விண்ணப்

பித்துள்ளது. இத் திட்டத்திற்கு மைய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. மைய அரசை அதன் முந்தைய முடிவினை மறு பரிசிலனை செய்யுமாறும் பாளையத்தின் அருகில் புதிய சிமிண்டு ஆலை ஒன்றினை அமைப்பதற்காக இசைவுக் கடிதத்தை வழங்குமாறும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

9. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம்.

ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டத்தை அமைப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 8 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மைய அரசிடமிருந்து தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இத் திட்டத்திற்கான முதற் கட்ட பணிகள் நடை பெற்று வருகின்றன. இத் திட்டத்தை துவக்கப்பட்ட 30 மாதங்களில் நிறைவு செய்ய இயலும். இந்தத் திட்டம் செயல்படுத்தப் படும் போது சுமார் 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.



தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

ஒரு பகுதியில் தொழில்கள் உருவாகி வளர்ச்சி பெற வேண்டுமானால் அங்குள்ள தொழில் முனைவோர் நற்திறமையுடன் செயலாற்றி தொழில் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும். இந்த வகையில் ஆராய்ந்து பார்த்தால், உள்ளூரிலுள்ள தொழில் நிறுவனம் தான் தொழில்களை உருவாக்கி பலருக்கு வேலை வாய்ப்பு அளித்து மற்றவர்களும் இதுபோன்று தொழில்களைத் தொடங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன்மூலம் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட உதவ முன் வரவேண்டும்.

2. தொழில் தொடங்கும் பாங்கினை வளர்த்திட உதவுவது தன் பொறுப்பாகும் என்பதை அரசும் உணர்ந்துள்ளது. இதன் பயனாகத் தொழில்கள் உருவாவதற்கான பகுதிகளை மேம் படுத்தி அங்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகிறது. தொழில் தொடங்க முன்வரும் தொழிலதிபர்களுக்குப் பல்வேறு ஊக்கத் தொகைகள், சலுகைகள், ஏனைய நிதி உதவியினை அரசு வழங்குகின்றது. பெரிய, நடுத்தர தொழில்களின் முன்னேற்றத்திற்காக அரசு 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தை (சிப்காட்) நிறுவியது. இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து செயல்பட்டு வருகின்றது. அப்போதிருந்து இந்நிறுவனம் பெரிய நடுத்தர தொழில்கள் உருவாகி வளர்ச்சி பெற அரும் பணியாற்றி வருகின்றது. அதிலும் குறிப்பாகத் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் தொழில்கள் பெருக பெரிதும் பாடுபட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலும் இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் 116 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன் 62,000 பேருக்குமேல் நேரடி வேலை வாய்ப்பிற்கும் வாய்ப்பு அளித்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும் அதற்கு வேண்டிய நிதியுதவியினை அளிப்பதிலும் கீழ்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது :—

(அ) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நடுத்தர, பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

(ஆ) தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(இ) இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

(ஈ) தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவி பணிகள் செய்தல்.

3. முதல் பத்தாண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்த சிப்காட், தமிழக அரசின் உதவியுடனும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும் பல்வேறு புதிய முறைகளைக் கையாண்டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினரால் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந்நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம், மாபெரும் வளர்ச்சியினைக் கண்டது. கடந்த ஆண்டுகளில் தவணைக் கடன் வழங்குவது கணிசமாக உயர்ந்துள்ளது. நிதி ஊக்கத் திட்டங்களான முதலீட்டு உதவித் தொகை வட்டியில்லா விற்பனைவரிக் கடன், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கான சலுகைகளும், சிப்காட் நிறுவனத்தினரால் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவித் தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின்தங்கிய வட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முதலீட்டு உதவித் தொகைத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற உதவித் தொகையைப் பெறுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது.

4. இராணிப்பேட்டை, ஒசூர் தொழில் பேட்டைகளில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் பேட்டைகளை கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் நிறுவுவதற்கு ஏற்கெனவே முயற்சி மேற்கொண்டு உள்ளது. தொழில் முனைவர்கள் ஒன்று கூடுவதற்கு முதலாவதாக ஏற்பாடு செய்து இத்தொழில் பேட்டைகளுக்கு அவர்களை அழைத்துச் சென்றதன் மூலம் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு ஊக்கமும் ஆதரவும் கிடைத்தது. கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரையில் உள்ள தொழில் பேட்டைகளில் நிலம் ஒதுக்கும் பணிகள் ஏற்கெனவே தொடங்கி விட்டன. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட



தளர்த்தப் பட்ட ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டங்கள், அறிமுகப் படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித் தொகை திட்டங்களினால்சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பல மடங்காக அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. வெளிநாடுகளில் வசிக்கின்ற, பணியாற்றுகின்ற இந்தியர்கள் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் முதலிடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்புப் பன்னாட்டுப் பிரிவை சிப்காட் அமைத்துள்ளது. இது குறித்து வெளிநாடுகளிலுள்ள தனியார்களுடனும், சங்கங்களுடனும் தொடர்பு கொள்ளப் பெற்றுள்ளது. வெளிநாட்டில் வசிக்கின்ற 153 இந்தியர்களிடமிருந்து இதுவரை கடிதங்கள் வரப் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் அமெரிக்கா, அரேபிய நாடுகள், மலேசியா ஆகியவற்றிலிருந்து வந்துள்ளன. வெளிநாடுகளில் வசிப்பவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளப் பெற்று வருகின்றது.

### ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டங்கள்.

(i) தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை.

தொழிற்சாலையை அமைக்கத் தொழில் முனைவோருக்கு உதவி வேண்டி தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பினை ஆராய உதவி அளிக்கப்படுகிறது. இந்த ஆய்வுகளுக்காகும் செலவிற்கு உதவும் திட்டம் ஒன்றினை 'சிப்காட்' வகுத்துள்ளது. இந்த ஆய்விற்கான செலவில் 10 சதவீதத்தை முதலில் செலுத்தினாலேயே இந்த அறிக்கைகள் கிடைக்கின்றன. மேலும், இந்த ஆய்விற்கான செலவில் 40 சதவீதம் இத்தொழிற்சாலையினைத் தொடங்கிய பின்னர் வசூலிக்கக்கூடிய கடனாக மாற்றப்பெறும் மீதமுள்ள 50 சதவீதம் 'சிப்காட்' டினால் உதவித் தொகையாக வழங்கப் பெறும்.

இப்புதிய திட்டத்தின் கீழ் 20 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை 13 அறிக்கைகள் தயாராக உள்ளன. ஒன்பது ஆய்வுகள் தொடங்குவதற்காகத் தீவிர பரிசீலனையிலுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 12 தொழில் முனைவோர் இந்த ஆய்வு அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினைப் பொறுத்த மட்டில், பல்வேறு காரணங்களால் சில பகுதிகள் மற்ற பகுதிகளைக் காட்டிலும் வெகு வேகமாக முன்னேறியுள்ளன. இதனால், மாநிலத்தின் சீரான தொழில் வளர்ச்சி முறையில் சில வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. இந்த வேறுபாட்டினை நீக்கும் வகையில்,

இத்தகைய தொழில் வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளில் பொருளாதார மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இவ்வாறு, இப்பகுதிகளை மேம்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு முதலீடு செய்துள்ளது. சில பகுதிகள் தொழில் வளர்ச்சி அடையக்கூடிய பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு அரசு சிறப்பான வசதிகளை அளிக்கும்.

### (ii) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்.

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் வட்டியில்லா விற்பனை வரிக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றில், ஆனால் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள எல்லையோர நகர்ப்புற கூட்டுப் பகுதிகள், மதுரை, திருச்சிராப்பள்ளி, நகரப் பகுதிகளுக்கு வெளியே தொடங்கப்படும் நடுத்தர, பெரும் தொழில்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்பெறுகின்றன.

இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து எளிதாக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் முதல் பகுதியின் கீழ் தற்போது செயல்படும் நடுத்தர, கனரகத் தொழில்களும், நடுத்தரத் தொழில்களாக விரிவடையும் சிறுரகத் தொழிற் பிரிவுகளும் கணிசமான அளவுக்குத் தொழிலை விரிவுபடுத்தும் போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ வட்டியில்லா விற்பனை வரிக் கடன் கொடுக்கப்படுகிறது. அத் தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித்தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புக்களில்25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 50 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டு சம தவணைகளில் வட்டி இன்றி, இந்தக் கடன் தொகைகளை திருப்பிச் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் இரண்டாம் பகுதியின் கீழ், ஒரு தொழிற் பிரிவு முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு (அதாவது 24 காலாண்டு



உற்பத்திக்கு) ஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அந்த ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும், ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையான இருப்புக்களில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்துக்கோ எந்த தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 24 காலாண்டு தவணைகளில் ரூபாய் 100 இலட்சத்திற்கு மேற்படாமல் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு ஆண்டுச் சம தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின் கீழ் 147 தொழிற் பிரிவுகள் பயனடைந்து உள்ளன. அவற்றிற்கு ரூபாய் 1,414·48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதில், 1982 டிசம்பர் வரை ரூபாய் 1,296.06 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பதினோரு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. முதல் பிரிவு. (2) | இரண்டாம் பிரிவு. (3) | மொத்தம். (4) | வழங்கப்பட்ட தொகை. முதல் பிரிவு. (5) | இரண்டாம் பிரிவு. (6) | மொத்தம். (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972—73 .. .. | 79.19 | .. | 79.19 | 12.19 | .. | 12.19 |
| 1973—74 .. .. | 57.72 | .. | 57.72 | 31.56 | .. | 31.56 |
| 1974—75 .. .. | 73.63 | .. | 73.63 | 91.48 | .. | 91.48 |
| 1975—76 .. .. | 2.10 | 0.72 | 2.82 | 57.60 | .. | 57.60 |
| 1976—77 .. .. | 49.13 | 29.72 | 78.85 | 48.32 | 30.26 | 78.58 |
| 1977—78 .. .. | 52.60 | 58.88 | 111.48 | 35.19 | 56.04 | 91.23 |
| 1978—79 .. .. | 59.19 | 94.00 | 153.19 | 56.80 | 96.24 | 153.04 |
| 1979—80 .. .. | 105.52 | 140.26 | 245.78 | 47.26 | 137.74 | 185.00 |
| 1980—81 .. .. | 88.79 | 143.55 | 232.34 | 85.53 | 144.91 | 230.44 |
| 1981—82 .. .. | 26.05 | 133.50 | 159.55 | 67.83 | 132.45 | 200.28 |
| 1982—83 (1982 டிசம்பர் வரை). | 97.01 | 122.92 | 219.93 | 43.66 | 121.00 | 164.66 |
| மொத்தம் .. | 690.93 | 723.55 | 1,414.48 | 577.42 | 718.64 | 1,296.06 |



**1983—84** ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட திட்ட இலக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 300 இலட்சமாகும். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு அரசு இதுவரை ரூபாய் 1,372.8 இலட்சம் வழங்கியுள்ளது.

(iii) மத்திய முதலீட்டு உதவித் தொகை.

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற்பிரிவும், அதன் நிலையான முதலீட்டில் (இதில் நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்ட முதலீடுகளும் அடங்கும்) 15 சதவீதத்தை மானியமாகப் பெறத் தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற்பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்சவரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீத தொகையும், உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும். மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்தின்கீழ் ஈட்டுத் தொகை ரூபாய் 19.87 கோடி பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முதன்மை நிலை வகித்து வருகிறது. அனுமதிக்கப்பட்ட, பகிர்ந்தளிக்கப்பட்ட, மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத்தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

**1983—84** ஆம் ஆண்டில், அனுமதிக்கப்படுவதற்காக, பகிர்ந்தளிக்கப்படுவதற்காக, மத்திய அரசிடமிருந்து பெறுவதற்காக இலக்கிடப்பட்ட தொகை முறையே ரூபாய் 250 இலட்சமாகும்.

(iv) மாநில அரசின் முதலீட்டு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மானியத் திட்டத்தின் கீழ் வராத தெரிந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய 24 வட்டங்கள் திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, தென்னாற்காடு மாவட்டம், கடலூர் ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கும் தொழில் தொகுதிகள் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதத்திற்கு இணையான தொகை அல்லது ரூ. 15 இலட்சம் இவை இரண்டில் எது குறைவோ அதைபெறத் தகுதியுடையவைகளாகும். இத்திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர, பெரிய

தொழில்கள் பயன்பெறும். இத்திட்டம் 3—10—81 முதல் செயல் படுத்தப்படுகிறது. 1982—83, 1983—84 ஆண்டுகளில் முறையே ரூ. 50 லட்சம். ரூ. 100 இலட்சம் செலவிட இலக்கிடப்பட்டுள்ளது. 1982—83-ல் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரை ரூ. 22.90 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(v) குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்.

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய, மாநில அரசின் மானியத் திட்டத்தின் கீழ் வராத, தமிழகத்தின் யாதொரு பகுதியில் நிறுவப்படும் பின்வரும் வகையைச் சேர்ந்த தொழில்கள் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒவ்வொரு நிரந்தர ஊழியருக்கு ரூபாய் 20,000 அல்லது ரூபாய் 10 இலட்சம் இதில் எது மிகக்குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவைகளாகும். இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் தொழில்களின் விவரம் வருமாறு:—

(அ) மின்னணுவியல்.

(ஆ) மருந்துகள், ஏனைய மருந்துப் பொருட்கள்.

(இ) மோட்டார் வண்டித் துணைத் தொழில்கள்.

தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டத் திட்டம் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற ஒரு திட்டமாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

II. நேரடி நிதி உதவி—

(i) பதினோரு ஆண்டுகளில் சிப்காட் ஒப்புதல் அளித்த வழங்கிய தவணைக் கடன் பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடி யாகத்தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1972—73 | 108.50 | .. | 108.50 | 26.11 |
| | | | 190.34 | 33.9? |





| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1974—75 .. | 191.28 | 7.99 | 183.29 | 117.61 |
| 1975—76 .. | 27.08 | 7.25 | 19.83 | 162.87 |
| 1976—77 .. | 140.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977—78 .. | 340.55 | 69.48 | 271.07 | 123.82 |
| 1978—79 .. | 233.96 | 10.00 | 223.96 | 141·85 |
| 1979—80 .. | 580.50 | 12.74 | 567.76 | 296.61 |
| 1980—81 .. | 1,958.10 | 27.86 | 1,930.24 | 786.52 |
| 1981—82 .. | 1,899.05 | 225.01 | 1,674.04 | 1,405.86 |
| 1982-83 (1982 டிசம்பர் வரை.) | 2,032·21 | .. | 2,032.21 | 831·00 |
| | 7,709.87 | 415.13 | 7,294.74 | 4,008.30 |

1975—76 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி உதவி, 1976—77 ஆம் ஆண்டிலிருந்து கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட அனுமதிகளும் மிக அதிகமாக உயர்ந்துள்ளன. 1983—84 ஆம் ஆண்டிற்கான அனுமதி மற்றும் வழங்கல் குறித்த இலக்கு முறையே ரூ. 35.00 கோடியும் ரூபாய் 22.00 கோடியும் ஆகும். இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் தற்போதைய மறு நிதியுதவி வரம்பு ரூபாய் 36.50 கோடி என்றிருக்க, 31—12—1982ஆம் நாளன்றுள்ளபடி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியில் உள்ள நிலுவைத் தொகை ரூ. 26.96 கோடியாகும்.

இம்மாநிலத்தில், பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்காக இதுவரை ரூ. 73 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1982—83-ம் நிதி ஆண்டில் காலங்கடந்த பாக்கித் தொகை வசூல் நிதியாண்டின் தொடக்கத்தில் 53.3சதவீதமாக இருந்து31—12—82 ஆம் நாளன்றுள்ளபடி 61.7 சதவீதமாக் உயர்ந்து உள்ளது. பாக்கித் தொகையைச் செலுத்தத் தவறியது தொடர்பாக ஆய்வுக்குழு, அவ்வப்போது கூடி அதுபற்றி ஆய்வு செய்து

[1983 ஏப்ரல் 13

அனைத்துத் துணைப் பிரிவுகளையும் கண் காணித்ததாலேயே காலங்கடந்த பாக்கித் தொகை வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டது.

(ii) உத்தரவாதம் அளித்தல்/நேரடி மூலதனம்:

பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிப்பதன் மூலமும் அல்லது நேரடியாகத் தாமே பங்குகள் வாங்குவதன் மூலம் 'சிப்காட்' நிறுவனம் தொழில்களுக்கு உதவுகிறது. ''சிப்காட்'' நிறுவனம் இதுவரை ரூ. 28·7 இலட்சம் மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளது. இத்திட்டம் குறித்த விவரங்கள், இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1983–84 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட அனுமதி இலக்கு ரூ. 25.00 இலட்சம் ஆகும்.

(iii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ், தொழில் நுட்ப/தொழில் முனைவர்கள் முதலில் தொடங்கும் நடுத்தரத் தொழில்களுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, அத் தொழில்களுக்கு ஆகும் செலவில் 10 சதவீதம் வரையில் தொடக்க நிதியுதவி அளிக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஒரு முகவர் என்ற முறையில் சிப்காட் நிறுவனம் 1982–83 ஆம் ஆண்டில் (1982 டிசம்பர் வரை ) 6 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 55.00 இலட்சம் வரை நிதி உதவி அளித்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்கு அனுமதி இலக்கு ரூ. 120 இலட்சமாகவும் தொகை வழங்கும் இலக்கு ரூ. 100 இலட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட தொகைகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. (1) | அனுமதிக்கப் பட்ட தொகை. (2) | வழங்கப் பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. | 4.00 | .. |
| 1978–79 .. .. .. | 9.15 | 4.00 |
| 1979–80 .. .. .. | 12.90 | 21.47 |
| 1980–81 .. .. .. | 26.50 | 16.29 |
| 1981–82 .. .. .. | 38·58 | 20.10 |
| 1982–83 .. .. .. (31-12–1982 வரை). | 55.07 | 20.70 |
| | 146.20 | 82.56 |



1983 ஏப்ரல் 13]

(iv) ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள்—

சிப்காட் நிறுவனம் 29–11–1979 முதல் ஆதி திராவிடர்கள்/ பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்களுக்கு பின்வரும் சலுகைகள் வழங்கி ஊக்கமளிக்க முடிவு செய்துள்ளது.

(அ) இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்/பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்கள் எந்த இடத்தில் தொழில் தொடங்கினாலும், அவர்களின் பங்குத் தொகை, திட்டச் செலவில் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக இது, பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும், முன்னேறிய பகுதிகளில் 20 சதவீதமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அத்தகைய தொழில் முனைவர்கள் ஏற்படுத்தக் கூடிய தொழில்களுக்கு உத்தரவாதமளித்தல்/நேரடி மூலதன உதவி இயன்ற அளவு அதிகமாக நீட்டிக்கப்படும்.

(இ) அத்தகைய தொழில்களுக்கான குறித்த காலக் கடன்களுக்கு பின்தங்கிய பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 11 சதவீதமும், வளர்ச்சி அடைந்த பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 12½ சதவீதமும் விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இத்திட்டத்தின் கீழ், வட்டி விதம் 1½ சதவீதம் குறைத்து வசூலிக்கப்படுகிறது.

(ஈ) முதலீட்டுக்கு முந்திய ஆய்வுத் திட்டத்தின் கீழ் அறிக்கைச் செலவு வகையில் தொழில் முனைவர்களிடமிருந்து தொடக்கத் தொகையாக எதிர்பார்க்கப்படும் 25 சதவீதம் மட்டுமே, ஏனைய தொழில் முனைவர்களுக்கு அது 50சதவீதமாக இருக்கும்.

III. வளர்ச்சி மையங்கள்.

| வளர்ச்சி மையங்களின் பெயர். (1) | 31—12—1982 வரையிலான தொழில் முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பகுதியின் பரப்பு. (2) (ஏக்கர்) | மூலதனச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| இராணிப்பேட்டை .. .. .. | 729.78 | 142.80 |
| ஓசூர் .. .. .. | 1,235·86+ | 169.00 |
| மானாமதுரை .. .. .. | 492.08 | 61.90 |

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | .. ... | 394.00 | 19.19 |
| கும்மிடிப்பூண்டி.. | .. ... | 301.00 | 16.33 |
| கடலூர் .. | .. .. | 407.00 | 30.69 |
| தூத்துக்குடி .. | .. .. | .. | .. |

| வளர்ச்சி மையங்களின் பெயர். | 6 ஆம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் தொழில் முன்னேற்றம். | | |
|---|---|---|---|
| | பரப்பு, (ஏக்கர்) | மொத்த மூலதனம். | நிகர மூலதனம். |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (4) | (5) | (6) |
| இராணிப்பேட்டை .. | 143.96 | 105.00 | 55 00 |
| ஓசூர் .. .. | 508.33 | 290.00 | 210.00 |
| மானாமதுரை .. .. | 492.08 | 140.00 | 110.00 |
| புதுக்கோட்டை .. | 544.45 | 120.00 | 75.00 |
| கும்மிடிப்பூண்டி.. .. | 804.93 | 165.09 | 80.00 |
| கடலூர் .. .. | 463.41 | 165.00 | 70.00 |
| தூத்துக்குடி .. .. | 1,318.53 | 51.00 | 45.00 |

† இரண்டாவது தொழில் பகுதி.

இராணிப்பேட்டை :

அரசு, 729.78 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இட ஒதுக்கீட்டிற்காக உள்ள நிலம் 480.68 ஏக்கர் (93 மனைகள் கொண்டது) ஆகும். இதில் 428.89 ஏக்கர் பரப்பு கொண்ட 81 மனைகள், ஏற்கனவே 68 தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. 40 பிரிவுகள், கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தி தொடங்கியுள்ளன. 18 பிரிவுகளின் கட்டுமானப் பணிகள் பல் வேறு நிலைகளில் உள்ளன. இப்பகுதியில் மனைகளுக்கு அதிக கிராக்கி இருப்பதால் முதல் பகுதியையொட்டி இரண்டாவது தொழில் பகுதி ஒன்று அமைப்பதற்காக மேலும் 144 ஏக்கர்



நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலங்கள் மேம்படுத்தப்பட்டு 1982—83 இறுதிக்குள் ஒதுக்கீடு செய்யத் தயார் படுத்தப்படும்.

ஓசூர் :

7 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் ஒதுக்கீடு செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட 1,235 ஏக்கரில், இதுவரையில் 937 ஏக்கர் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில் முனைவர்களுக்கும், அப்பகுதியின் ஏனைய சமூகத் தேவைகளுக்கும் நிலம் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள தொழில் பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் ஓசூர்—கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ் சாலையில் உள்ள 508 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை :

மதுரைக்கு அருகாமையிலுள்ள (45 கி.மீ.) மானாமதுரை தொழில் தொகுதி, தண்ணீர் வளம் தேவைப்படாத பொதுவான வகைத் தொழில்களுக்காக என்றே அமைக்கப்பட்டதாகும். தொழில் முனைவர்களுக்கு வழங்குவதற்காக சாலைகள், வடிகால், தொலைபேசி, டெலக்ஸ், பள்ளி, முதலுதவி நிலையம், உணவகம், திரைப்படக் கொட்டகை, கடைகள், வீட்டுவசதி முதலியவை போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய சீரமைக்கப்பட்ட 492 ஏக்கர் நிலம் ' சிப்காட் ' நிறுவனத்திடம் உள்ளது. விற்கத்தக்க 365 ஏக்கர் நிலத்தில் இதுவரையில் 63 ஏக்கர் அளவுள்ள 15 மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை :

சிப்காட் நிறுவனத்தின் புதுக்கோட்டை தொழிற்சாலைத் தொகுதி, பின்தங்கிய பகுதிகளை விரைவில் வளர்ச்சியடையச் செய்வதற்காக மைய தொழில் வளர்ச்சி நிலையங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்க இந்திய அரசு கருதி வருகின்றது. இந்தத் தொழிற்சாலைத் தொகுதி புதுக்கோட்டை நகரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி விமான நிலையத்திலிருந்து ஒரு மணி பயணநேரம் கூட ஆகாத தொலைவில் அமைந்துள்ள இத் தொழிற்சாலைத் தொகுதி, மின்னணுவியல், சிறு அளவுப் பொறியியல் தொழில்களுக்குத் தகுந்ததாகத் திகழ்கிறது. சிப்காட் நிறுவனம், இங்கு 394 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பளவை ஏற்கனவே கையகப்படுத்தியுள்ளது. மேலும் 164 ஏக்கர் பரப்புள்ள

நிலத்தைக் கையகப்படுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இத்தொழிற்சாலைத் தொகுதியில் தங்கள் தொழில்களை அமைத்துக் கொள்ள மொத்தம் 94 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைக் கேட்டு நான்கு நிறுவனங்கள் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளன.

கடலூர் :

சிப்காட்டின் கடலூர் தொழிற்சாலைத் தொகுதி, தண்ணீரை அடிப்படையாகக் கொண்ட இரசாயன செய்முறைப்படுத்தும் தொழில்களுக்கு இடமளிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. கையகப்படுத்துவதற்காக 463 ஏக்கர் பரப்புள்ள நிலம் குறித்து, நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. 407 ஏக்கர் பரப்புள்ள நிலம் இதுவரையில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதி, கடலூர்-சிதம்பரம் சாலையில் கடலூரிலிருந்து 7 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. புதுச்சேரியிலிருந்து 30 நிமிடத்தில் இவ்விடத்திற்குச் செல்லலாம். இத் தொழிற்சாலைத் தொகுதியில் மொத்தம் 100 ஏக்கர் பரப்புள்ள நிலம் கேட்டுள்ள ஐந்து நிறுவனங்கள், தங்கள் தொழில்களை அமைக்க ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் நிலம் ஒதுக்குவது பற்றி பல நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டு வருகின்றன.

கும்மிடிப்பூண்டி :

கும்மிடிப்பூண்டியிலுள்ள சிப்காட்டின் தொழிற்சாலைத் தொகுதி, சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் சென்னை—நெல்லூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதிக்குக் குறுக்கே சென்னை—கல்கத்தா அகல இரயில் பாதை செல்கிறது. மோட்டார் வண்டித் துணைப் பாகங்கள் தயாரிக்கும் தொழில்கள், ஏனைய பொறியியல் தொழில்கள் விரைவில் வளர்ச்சி பெறுவதற்கு மிகச் சிறந்த இடமாக விளங்குகிறது. நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின்கீழ் 804 ஏக்கர் பரப்புள்ள நிலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. இதுவரையில் 301 ஏக்கர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 113 ஏக்கர் நிலம் கேட்டுள்ள பன்னிரண்டு நிறுவனங்கள் இப் பகுதியில் தங்கள் தொழில்களை அமைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் நிலம் ஒதுக்குவது பற்றி பல நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டு வருகின்றன.



தூத்துக்குடி :

தூத்துக்குடியில் எவ்விடத்தில் தொழிற்சாலைத் தொகுதியை அமைப்பது என்பது பற்றிய செயற்குறிப்பையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அரசு தொடங்கிய நிலம் கையகப் படுத்தும் நடவடிக்கைகளை உயர்நீதி மன்றம் தடை ஆணையின் மூலம் நிறுத்தி வைத்துள்ளது.

மாநில அரசு வழங்கும் நிதியுதவி :

1982—83 ஆம் ஆண்டிற்காக சிப்காட் நிறுவனத்திற்கு மாநில அரசு பங்கு மூலதனமாக ரூ. 4.50 கோடியும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்திற்காக ரூ. 3.00 கோடியும்; அரசு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சமும் ஒதுக்கியுள்ளது.

நடைமுறைப் பயன்கள் :

1982—83 ஆம் நிதியாண்டில் அனைத்துச் செலவு, தேய்மானம் ஆகியவற்றிற்கு ஒதுக்கிய பிறகும் வரி விதிப்பிற்கு முன்பும் நிகர ஆதாயம் ரூ. 85 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகர ஆதாயம் 1981—82-ஆம் ஆண்டு காலத்தில் ரூ. 77 இலட்சமாக இருந்தது.

ஒவ்வொரு திட்டப் பணி குறித்தும் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டும் விவரங்கள் III-ஆம் இணைப்பில், கொடுக்கப்பட்டுள்ளன.

(1) 1982—83 ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் (ஒப்புதல் வழங்குதல்).

(2) 1983—84 ஆம் ஆண்டிற்குரிய சாதனை இலக்குகள் (ஒப்புதல் வழங்குதல்).

உதவியளிக்கப்பட்ட தொழில்களில் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 வரை ஏறத்தாழ 62,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

[1983 ஏப்ரல் 13

A மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | * பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள். | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை. | 154 | 975.89 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை :— | | |
| 1978–79 .. .. .. | 46 | 284.04 |
| 1979–80 .. .. .. | 52 | 333.72 |
| 1980–81 .. .. .. | 69 | 528.42 |
| 1981–82 .. .. .. | 46 | 289.98 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை. | 56 | 388.94 |
| 31–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம். | 423 | 2,800.99 |

* அனைத்தும் சேர்ந்து.



1983 ஏப்ரல் 13]

| ஆண்டு. | சிறு தொழில் நிறுவனங்கள். | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. | 749 | 179.47 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை— | | |
| 1978–79 .. .. .. | 181 | 62.85 |
| 1979–80 .. .. .. | 406 | 78.86 |
| 1980–81 .. .. .. | 637 | 218.26 |
| 1981–82 .. .. .. | 544 | 213.38 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை. | 1,604 | 495·75 |
| 30–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் .. .. | 4,121 | 1,248.57 |

| ஆண்டு. | மொத்தம். | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை .. .. | 903 | 1,155.36 |
| ஏப்ரல் திங்கள் முதல் மார்ச்சு திங்கள் வரை — | | |
| 1978–79 .. .. .. | 227 | 346.89 |
| 1979–80 .. .. .. | 458 | 412.58 |
| 1980–81 .. .. .. | 706 | 746.68 |
| 1981–82 .. .. .. | 590 | 503.36 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை .. .. .. | 1,660 | 884.69 |
| 31–12–1982 ஆம் நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் .. | 4,544 | 4,049.56 |

1982–83 ஆம் ஆண்டில் ஒவ்வொரு திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ஒப்புதல் மற்றும் வழங்குதல் குறித்த விவரங்கள் :—

| (1) | ஆண்டின் முன்னேற்றம் (1982 ஆம் ஆண்டு ஏப்ரல்–டிசம்பர் திங்கள்.) (2) | 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1983–84 ஆம் ஆண்டிற்கான சாதனை இலக்கு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| குறிப்பிட்ட காலக் கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 2,032·21 | 3,000·00 | 3,500·00 |
| வழங்குதல் .. | 831·00 | 2,000·00 | 2,200·00 |
| ஆரம்ப மூலதனம்— | | | |
| ஒப்புதல் .. .. | 55·07 | 60·00 | 120·00 |
| வழங்குதல் .. .. | 20·70 | 60·00 | 100·00 |
| வட்டியில்லா விற்பனை வரிக்கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 219·93 | 300·00 | 300·00 |
| வழங்குதல் .. .. | 164·66 | 300·00 | 300 00 |
| உதவித் தொகை— | | | |
| (சிப்காட்டிற்கு மட்டும்) ; | | | |
| ஒப்புதல் .. .. | 332·73 | 250·00 | 250·00 |
| வழங்குதல் .. .. | 224·27 | 250·00 | 250·00 |
| திரும்பப் பெறுவது .. | 192·23 | 250·00 | 250·00 |



| (1) | 1982–83 ஆம் ஆண்டின் முன்னேற்றம் (1982 ஆம் ஆண்டு ஏப்ரல் டிசம்பர் திங்கள். (2) | 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1983–84 ஆம் ஆண்டிற்கான சாதனை இலக்கு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பங்குத் தொகை— | | | |
| ஒப்புதல் .. .. | 6·50 | 25·00 | 25·00 |
| வழங்குதல் .. | 1·52 | 25·00 | 25·00 |
| மாநில அரசின் மூலதனப் பங்கு உதவித் தொகைத் திட்டம்— | | | |
| ஒப்புதல் .. .. | 22·90 | 50·00 | 100·00 |
| வழங்குதல் .. | .. | 50·00 | 100·00 |

## B. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில் நிறுவனங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. | 618.43 | 151.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச்சு 1979 வரை | 176.03 | 30.09 | 206.12 |
| | 2.24 | .. | 2·24 |
| 1979–80 .. .. | 232.26 | 41.78 | 274.04 |
| 1980–81 .. .. | 319.09 | 109.33 | 428.42 |
| 1981–82 .. .. | 304.75 | 158.39 | 463.14 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரை .. | 224.27 | 55.33 | 279.60 |
| மொத்தம் .. | 1,877.07 | 546.54 | 2,423.61 |

## C. மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட் | அனைத்தும் சேர்ந்து |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை .. .. .. | 501.83 | 613.59 |
| 1978–79 .. .. .. | 161.50 | 229.63 |
| 1979–80 .. .. .. | 125.54 | 165.57 |
| 1980–81 .. .. .. | 301.91 | 425.35 |
| 1981–82 .. .. .. | 150.02 | 263.26 |
| 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை .. .. .. | 192.23 | 289.99 |
| 31–12–1982 ஆம நாள் வரை சேர்ந்து வந்த மொத்தம் | 1,433·03 | 1,987·39 |



## நிலையான வட்டியில்லாப் பங்குத் தொகைகளுக்கு உறுதியளித்தலும்/தொகை வழங்குதலும்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| ஆண்டு. | ஒப்புதல். | ரத்து செய்தல். | பொதுமக்களுக்கு விற்கப்பட்ட பங்குகளின் மதிப்பு/நேரடியாக தொகை செலுத்துமாறு கோரப்பட்டவற்றின் மதிப்பு. | எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகளின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1972–73 .. | 23·20 | .. | .. | .. |
| 1973–74 .. | 24·30 | .. | 26·70 | .. |
| 1974–75 .. | 5·00 | .. | 2·50 | 0·55 |
| 1975–76 .. | 16·50 | .. | 3·00 | 1·29 |
| 1976–77 .. | 11·00 | 18·50 | 2·00 | 2·00 |
| 1977–78 .. | 16·00 | 13·30 | 1·50 | 1 13 |
| 1978–79 .. | 5·00 | 3·50 | 5·00 | 0 37 |
| 1979–80 .. | 6·20 | 2·50 | 13·00 | 1·55 |
| 1980–81 .. | 24·40 | .. | 21·20 | 12·29 |
| 1981–82 .. | 13·75 | .. | 19·65 | 8 02 |
| 1982–83 .. | 6·50 | .. | .. | 1·53 |
| 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்வரை. | 151·85 | 37·80 | 94·55 | 28·73 |

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொழில் பிரிவுகளைத் தொடங்க முந்தைய ஆண்டுகளில் ஆற்றியப் பணிகளை ஒப்பிடும்போது கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக நிதி உதவி ஒப்பளித்ததிலும் வழங்கியதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டு நிதியுதவி ஒப்பளித்ததும் வழங்கியதும் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடுகையில் உச்ச அளவாகும். நிதி உதவி கோரிய 5,699 விண்ணப்பங்களுக்கு மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. 52·13 கோடியில் ரூ. 35·07 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1980—81) 5,183 விண்ணப்பங்களுக்கு ரூ. 36·90 கோடி ஒப்பளிக்கப்பட்டதில் ரூ. 22·59 கோடி வழங்கப்பட்டது. இந்நிறுவனம் 1982—83-ம் ஆண்டில் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் அதிக அளவில் நிதியுதவி அளித்துள்ளது.

அண்மைக் காலத்தில் நிதியுதவி அதிகரித்திருப்பதை பின்வரும் அட்டவணையில் காணலாம் :—

| ஆண்டு. | கடன் ஒப்பளிக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒப்பளிக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. | நிலுவையாக உள்ள தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1977—78 .. | 384 | 12·27 | 8·67 | 65·41 |
| 1978—79 .. | 825 | 12·06 | 9·05 | 68·52 |
| 1979—80 .. | 1,500 | 17·18 | 10·66 | 73·12 |
| 1980—81 .. | 5,183 | 36·90 | 22·59 | 74·59 |
| 1981—82 .. | 5,699 | 52·13 | 35·07 | 108 17 |
| 1982—83 .. | 3,225 | 55·68 | 39·27 | 135·00 |

(தற்காலிகமானது) ஆந்திரம், குஜராத், மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம், போன்ற மாநிலங்களிலுள்ள இதர பெரிய மாநில நிதி உதவி நிறுவனங்கள் அளித்துள்ள நிதியுதவி அளவோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடுதொழில் முதலீட்டு நிறுவனம் பணிகள் ஆற்றியுள்ளது.



கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆற்றியுள்ள பணிகளின் சிறப்பு அம்சம் யாதெனில் சிறுதொழில்கள் குறுந்தொழில்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியும் அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதேயாகும்.

குறைந்த அளவு முதலீட்டுடன் சிறுதொழில் குறுந்தொழில் துறைகளில் பெருமளவு வேலைவாய்ப்புகள் உருவாவதால் எளிதான நடைமுறையில் சலுகை நிபந்தனைகளின் பேரில் நிதி உதவி அளிப்பதின் மூலம் சிறு தொழில், குறுந்தொழில் நிறுவனங்களை விரைவாக வளர்ச்சியுறச் செய்வதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பெருமளவு கவனம் செலுத்துகிறது.

இந்நிறுவனம் 1981—82 ஆம் ஆண்டில் 5,646 சிறிய குறுந்தொழில் பிரிவுகளுக்கு ரூ. 44·44 கோடி கடன் ஒப்பளித்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் 5,083 சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் பிரிவுகளுக்கு ரூ. 22.68 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இது நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை அளவில் 99·1 சதவீதமும், ஒப்பளிக்கப்பட்ட தொகை அளவில் 85·3 சதவீதமும் ஆகும். அதே அளவில் 1982—83-ம் ஆண்டில் சிறு தொழில்களுக்கு அளித்துள்ள நிதியுதவி முந்திய ஆண்டுகள் அளித்த உதவிகளைவிட அதிக அளவாக அமைந்துள்ளது.

சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், முதல் முறையாக தொழில் தொடங்குவோருக்கும் பயன்படும் வகையில் குறுந்தொழில் பிரிவுகளுக்கு அதிகமாக நிதியுதவி அளித்திருப்பது சிறுதொழில் துறைக்கு வழங்கும் நிதியுதவியின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதில் ரூ. 1 இலட்சம் வரையில் 4,815 தொழில் பிரிவுகள் மொத்தம் 13·93 கோடி கடனுதவிபெற்றுள்ளன. சிறுதொழில் பிரிவுகளுக்கு அளித்துள்ள நிதி உதவியில் இது 31·3 சதவீதமாகும்.

சிறு தொழில், குறுந்தொழில் பிரிவுகளுக்குச் சென்ற ஐந்தாண்டுகளில் வழங்கிய நிதியுதவி பற்றிய விவரத்தை பின்வரும் அட்டவணையில் காணலாம் :—

| ஆண்டு. | | எண்ணிக்கை. | தொகை. | மொத்தம் நிதியுதவியில் சதவீதம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1977—78 | .. | 329 | 578·70 | 47·11 |
| 1978—79 | .. | 782 | 580·40 | 48·09 |

| ஆண்டு | | எண்ணிக்கை | தொகை | மொத்தம் நிதியுதவியில் சதவீதம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1979-80 | .. | 1,447 | 886·36 | 51·57 |
| 1980—81 | .. | 5,083 | 2,268·41 | 61·46 |
| 1981—82 | .. | 5,646 | 4,444·10 | 85·31 |
| 1982—83 (தற்காலிகமானது). | | 3,175 | 4,867·55 | 87·42 |

சிறுதொழில்கள், குறுந்தொழில்கள் ( Small scale and Tiny sec'or ) ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக் கும், சிறப்பாக முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதன் காரண மாக, இத்தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளின் விளைவாக வேலை வாய்ப்புகள் கணிசமாகப் பெருகியுள்ளது.

| ஆண்டு. | | | உருவாக்கப் பட்ட வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1977—78 | .. | .. | 6,070 |
| 1978—79 | .. | .. | 13,670 |
| 1979—80 | .. | .. | 19,625 |
| 1980—81 | .. | .. | 42,000 |
| 1981—82 | .. | .. | 52,000 |

பெருமளவு வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டுமென் கின்ற தலையாய நோக்கத்தை அடைவதில், வளவாயில்கள் மிகுந்த அறிவு நுட்பத்துடனும் பயனுள்ள வகையிலும் பயன் படுத்தப்பட்டுள்ளன என்பதை மேற்கூறிய புள்ளி விவரம் தெளி வாக்குகிறது. இதனால் குறிப்பாக சமுதாயத்தின் மிக நலிந்த பிரிவினர் பெருமளவில் பயனடைள்ளனர். குறிப்பாக, இம் மாநிலத்தில் கிராமப் பகுதியிலிருந்தும், பிற்பட்ட பகுதிகளி லிருந்தும் வருவோர் பெரிதும் பயனடைந்துள்ளனர்.



## 1982—83-ல் மேற்கொண்ட பணிகளின் மதிப்பீடும் எதிர்காலப் பணிகளும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நிதி ஒப்பளிப்பதிலும், வழங்கிய திலும் வசூல் செய்வதிலும் இந்நிறுவனம் மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ளது, இந் நிறுவனம் இனிவரும் ஆண்டுகளிலும் தன் னுடைய சாதனையை மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

இம்மாநிலத்தில் மின்தட்டுப்பாடு ஏற்படும்போது தொழில் பிரிவுகள், உற்பத்தியைத் தொடர்ந்து மேற்கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கென்று நிதி உதவி அளிக்கும் சிறப்புத் திட்டமொன்றை இந் நிறுவனம் அண் மையில் செயலாக்கி, இத்திட்டத்தை செயல்படுத்தி மொத்தம் 570 தொழில் பிரிவுகளுக்கு ஜெனரேட்டர்கள் வாங்குவதற் கென்று, ரூ. 13.00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருள்களை ஏற்றுமதி நோக்கமாக இயங்கும் தொழில்களுக்கும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படும் பொருள்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கும் நிதி உதவி வழங்கும் பொருட்டு தனித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. தொழில் நுட்பத் தகுதி, கல்வித் தகுதி அல்லது வேறுவகைத் தகுதிகள் பெற்ற தகுதிவாய்ந்த தொழில் முனை வோருக்கு அல்லது போதிய அனுபவம் பெற்றிருந்து தொழில் முனைவர்களாக வேண்டுமென்கின்ற ஆர்வம் உள்ளவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இந்நிறுவனம் 1982—83-ல் ரூ. 18.80 இலட் சம் எளிய கடனுதவியாக அளித்துள்ளது. (ரூ. 6.51 இலட்சம் 1981—82-ல்.)

இந்நிறுவனம் வெறும் நிதியுதவி வழங்கும் நிறுவனமாக மட்டுமின்றி முழுமையான ஒரு தொழில் மேம்பாட்டு அமைப் பாக ஆவதற்குப் பெருமுயற்சி செய்து வருகிறது. பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பற்றியும் மூலப் பொருட்கள் கிடைப்பது பற்றியும் அங்காடி நிலவரம் முதலியன பற்றியும் தகவல்களைச் சேகரித்து அளிக்கவும் நிறு வனத்தின் தலைமை அலுவலகத்திலும், இணை அலுவலகங் களிலும் ''தொழில் முனைவோர்களுக்கான வழிகாட்டிப் பிரிவு'' ஒன்று அமைக்கப்பட உள்ளது.

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கென்று வட்டார அலுவலகம் ஒன்றையும் திறக்க இந்நிறுவனம் கருதியுள்ளது. மாவட்ட நிலையிலேயே சிறு தொழில் முனைவர்களுக்கு உதவி

யளிக்கும் பொருட்டு, வட்டார/இணை அலுவலகங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்ட அதிகாரங்கள், தக்கவாறு, கூடுதலாக்கப் பட்டுள்ளன. இப்பொழுது வட்டார அலுவலகங்கள் ரூ. 2.50 இலட்சம் வரையில் கடனுதவி அளிக்கும். மேலும் கிளை அலுவலகங்கள் ரூ. 7.50 இலட்சம் வரையும் கடனுதவி பட்டுவாடா செய்யும்.

தற்போது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பெரும்பாலும் தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி நிறுவனமாக இருந்து முக்கியமாக சிறு தொழில் குறுந்தொழில் வளர்ச்சியிலேயே அதிகக் கவனம் செலுத்துகிறது. இருப்பினும் அது தன்னுடைய பணியைச் செவ்வனே செய்து ஆதாயம் ஈட்டியுள்ளது என்பது பாராட்டத்தக்கது. இந்நிறுவனம் ஆதாயம் ஈட்டியுள்ள விவரங்கள் பின்வரும் அட்டவணையில் அறியலாம் :—

| ஆண்டு. | தள்ளுபடித் தொகை. வரித் தொகை ஆகியவற்றிற்கு முந்திய ஆதாயம். | தள்ளுபடித் தொகை, வரித்தொகை போக ஆதாயம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980–81 .. .. .. | 125.70 | 2.24 |
| 1981–82 .. .. .. | 118.72 | 13.1 |



## சர்க்கரைத் தொழில்.

1.1. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சர்க்கரைத் தொழில் இம்மாநிலத்தின் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கான தலையாய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத்துறை இயக்ககம் 1969-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னும் இவ்வியக்ககம் பல புதிய திட்டங்களை நிறைவேற்றிட திட்டமிட்டுள்ளது.

1.2. கூட்டுறவுத்துறை மற்றும் பொதுத்துறை ஆகியவற்றிற்கு, போதிய நிதி ஆதாரம் இல்லை என்பது உட்பட பல காரணங்களால் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க அவை முன்வர இயலாத இடங்களில், போதுமான கரும்பு கிடைப்பதைப் பொறுத்தும், ஏற்கனவே தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளுக்கு ஊறு நேரா வண்ணமும் உள்ளதா என்ற ஆய்வுக்கு உட்பட்டும், புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க தனியார் துறையை ஊக்குவிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதற்கு ஏற்ப, தனியார் துறையிலிருந்து 9 விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. இதில் 5 விண்ணப்பங்கள் மைய அரசுக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 4 விண்ணப்பங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. சேலம் மாவட்டம், பள்ளிபாளையம் என்ற இடத்தில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலை நிறுவ மைய அரசு பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு முன் உரிமம் வழங்கியுள்ளது.

1.3. கூட்டுறவுத்துறையில் திருத்தணி பகுதியில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் உடைய சர்க்கரை ஆலை நிறுவ மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை (மாயூரம்) பகுதியில் ஒரு 1,250 டன் பிழிதிறனுடன் கூடிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இணையத்தின் விண்ணப்பம் மைய அரசின் ஆய்வில் உள்ளது.

### 2. தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் :

2.1 தமிழக சர்க்கரை ஆலைகளின் 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விபரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2. நமது நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில், தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. தமிழக

சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு விவசாயிகளுக்கும் இடையே நிலவி வரும் நல்லுறவு ஆலைகள் சிறந்த வகையில் செயல்பட உதவுகிறது.

2.3. கடந்த மூன்றாண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும், 1982–83 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடும் கொண்ட விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆண்டும். | பிழியப் பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை யின் அளவு. | சர்க்கரை கட்டு மானம். | நிறுவிய பிழி திறனை பயன் படுத்திய அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சம் டன்களில்.) | | (விழுக்காடுகள்.) | |
| 1 1980–81 | 45.54 | 4.30 | 8.67 | 69 |
| 2 1981–82 | 85.93 | 7.55 | 8.78 | 120 |
| 3 1982–83 * | 76·41 | 6.79 | 8.89 | 107 |

* மதிப்பீடுகள்.

2.4. 1981–82 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாக இருந்தது. இதன் பயனாக, தமிழகம் மொத்தம் 85.93 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் சாதனை அளவை எட்டுவதற்கு முடிந்தது. 1982–83 ஆம் ஆண்டில் தமிழக சர்க்கரை ஆலைகள் 76.41 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1980–81 ஆம் ஆண்டில் பிழியப்பட்ட கரும்பின் அளவைவிட கூடுதலாகவும், 1981–82 ஆம் ஆண்டு பிழியப்பட்ட கரும்பின் அளவைவிட சற்று குறைவாகவும் இருக்கும்.

2.5. தமிழகத்தில் 1981–82 ஆம் ஆண்டு 7.55 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6.79 இலட்சம் டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



3. கரும்பின் விலை :

3.1. மைய அரசு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்புக்கு குறைந்த பட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 130 என்று 1981–82 ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்தது. இது அதற்கு முன் ஆண்டு நிர்ணயித்த விலைக்கு சமமான தொகையாகும். கரும்பு விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள், வேளாண்மை இடுபொருள் விலை, மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 165 என்று 1981–82 ஆம் ஆண்டுக்கு அரசு விலை நிர்ணயித்தது. சர்க்கரைக் கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின், 0.1 விழுக்காடுக்கு 19.4117 பைசா வீதம் பிரிமியமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

3.2 மைய அரசு 1982–83 ஆம் ஆண்டுக்கும், 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சர்க்கரைக் கட்டுமானம் உடைய கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 130 என்ற அதே குறைந்த பட்ச விலையை அறிவித்துள்ளது. 8.5 சதவீதம் கட்டுமானம் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 175 வீதம் ஆலைகள் கொடுக்க வேண்டும் என்று கரும்பு விலையினை மாநில அரசு நிர்ணயம் செய்துள்ளது.

4. கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம் :

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தாம் அரைவை செய்யும் கரும்பிற்கு, டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மீதான மேல்வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல், மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவிடப்படுகின்றது. 1982–83 ஆம் ஆண்டில் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு செலவிட ரூ. 250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது.

இந்நிறுவனம் ஆரம்பக்கட்டமாக சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் தொழில் நுட்பம் உடைய தொழிலாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

6. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ) :

6.1. பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு என்று தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் அரசின் கொள்கை மாறுதல் காரணமாக பொதுத்துறைக்கு பதிலாக கூட்டுறவுத் துறையில் மட்டுமே புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

6.2. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட இரு இடங்களில் சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் இயங்கி வருகின்றன அவையாவன :—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், எரையூர், மற்றும்

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம்.

6.3. இவ்விரு சர்க்கரை ஆலைகளும் 1981—82 ஆம் ஆண்டு தமது நிறுவிய பிழிதிறனில் 146 விழுக்காடுகள் அளவுக்கு உற்பத்தி செய்துள்ளன.

7. சாராவி வடிப்பகம் :

தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) கூட்டு முயற்சியாக ஒவ்வொரு ஆண்டும், 6 மில்லியன் லிட்டர் சாராவி தயாரிக்கும் திறனுடைய இரு வடிப்பகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது. அவை முறையே திருச்சிராப்பள்ளி மாவட்டம், எரையூர் என்ற இடத்தில் இயங்கி வரும் பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலும், சேலம் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் அமைக்கப்படும். இது தொடர்பாக, உரிய விண்ணப்பங்கள் மைய அரசின் தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநரகத்துக்கு (டி.ஜி.டி.டி.) உரிமம் வழங்குமாறு கோரி அனுப்பப்பட்டுள்ளது. அவ்வுரிமங்கள் கிடைக்கப் பெற்றவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



8. வேலை வாய்ப்பு :

சர்க்கரைத் தொழில் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிப்பதோடு, சர்க்கரை ஆலைகள் அருகே உள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. இது தவிர, சர்க்கரை ஆலைகளில் துணைப் பொருளான சர்க்கரைக் கழிவுப்பாகினை (மொலாஸஸ்) மூலப் பொருளாகக் கொண்ட சாராவி வடிப்பகங்கள், கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள், எண்ணெய் தயாரித்தல் ஆகிய தொழில்கள் வளர்ச்சியடைய சர்க்கரைத் தொழில் பேருதவியாக உள்ளது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.

இணைப்பு.

| எண்ணும் ஆலைகளின் பெயரும். | நாள் ஒன்றுக்கு பிழி திறன். | 1980-81. பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1980-81. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1980-81. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). | 1981-82. பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1981-82. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1981-82. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (டன்களில்). | | (டன்களில்). | | |
| (அ) கூட்டுறவுத் துறை— | | | | | | | |
| ஆம்பூர் .. .. | 2,200 | 90,021 | 8,177 | 9.08 | 3,03,935 | 29,271 | 9.63 |
| மதுராந்தகம் .. | 1,750 | 2,09,083 | 19,336 | 9.25 | 3,62,345 | 31,390 | 8.66 |
| 3 அமராவதி .. | 2,000 | 1,76,135 | 15,967 | 9.07 | 3,80,068 | 35,535 | 9.35 |
| 4 சேலம் .. .. | 2,500 | 3,00,212 | 26,684 | 8.89 | 5,28,367 | 46,968 | 8.89 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 2,000 | 2,03,464 | 17,327 | 8.52 | 3,64,669 | 32,026 | 8.78 |
| 6 நேஷனல் .. | 1,500 | 2,00,700 | 18,300 | 9.12 | 3,08,295 | 28,996 | 9.41 |
| 7 தருமபுரி .. | 1,250 | 2,13,402 | 20,750 | 9.72 | 2,64,287 | 25,581 | 9.68 |
| 8 வேலூர் .. .. | 1,250 | 1,22,590 | 10,981 | 8.96 | 3,14,128 | 27,395 | 8.72 |
| 9 திருப்பத்தூர் .. | 1,250 | 1,00,796 | 9,346 | 9.27 | 2,30,380 | 21,936 | 9.52 |
| 10 செங்கல்ராயன்.. (உளுந்தூர் பேட்டை | 1,250 | 79,616 | 6,504 | 8.17 | 3,12,116 | 25,628 | 8.22 |
| | 16,950 | 16,96,019 | 1,53,372 | 9.04 | 33,68,590 | 3,04,726 | 9.04 |
| (ஆ) தனியார் துறை :: | | | | | | | |
| 11 ஈ.ஐ.டி. பாரி .. | 4,000 | 4,49,899 | 35,560 | 7.90 | 7,57,226 | 61,080 | 8.07 |
| 12 காவேரி* .. | 1,250 | 2,21,596 | 17,890 | 8.07 | 2,87,998 | 25,333 | 8.79 |
| 13 டெக்கான் ... | 1,850 | 3,27,085 | 27,938 | 8.54 | 4,05,344 | 34,347 | 8.53 |

இணைப்பு—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 14. சவுத் இந்தியா | 2,700 | 2,53,985 | 20,843 | 8.21 | 4,04,145 | 32,368 | 8.01 |
| 15. அருணா .. | 4,000 | 4,65,670 | 40,891 | 8·78 | 6,96,353 | 60,831 | 8·74 |
| 16. சக்தி .. | 4,000 | 6,48,514 | 57,236 | 8.83 | 11,21,964 | 1,04,305 | 9.30 |
| 17. மதுரா** .. | 800 | 1,51,731 | 11,360 | 6.83 | 2,03,101 | 15,402 | 7.58 |
| 18. கோத்தாரி .. | 2,000 | 2,23,622 | 18,957 | 8.48 | 3,99,363 | 34,808 | 8.72 |
| 19. ஆரூரான் .. | 2,000 | 1,72,542 | 16,762 | 9.71 | 3,21,029 | 27,518 | 8.57 |
| | 22,600 | 29,14,644 | 2,46,437 | 8.45 | 45,96,523 | 3,95,992 | 8.61 |
| (இ) பொதுத் துறை : | | | | | | | |
| 21. தஞ்சாவூர் .. | 1,250 | 2,02,790 | 17,770 | 8.76 | 3,24,780 | 27,007 | 8.32 |
| 22. பெரம்பலூர் .. | 1,250 | 1,40,211 | 12,615 | 9.00 | 3,03,133 | 27,335 | 9.02 |
| | 2,500 | 3,43,001 | 30,385 | 8.85 | 6,27,913 | 54,352 | 8.65 |
| தமிழ்நாடு மொத்தம் | 42,050 | 49,53,664 | 4,30,194 | 8.68 | 85,93,026 | 7,55,080 | 8.78 |

* இவ்வாலை மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது

** தளர்த்தப்பட்ட உரிமம் வழங்கும் முறைக்கு ஒப்ப விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்.

செய்தித்தாள்களுக்கான காகிதம், காகிதம் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி அவற்றை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் — காகித நிறுவனத்தை அமைத்து வருகிறது. திருச்சி மாவட்டம், புகளூரிலுள்ள இந்நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத்தையும் 40,0000 டன் அச்சிடும் தாள், எழுதுதாளையும் தயாரிக்கக் கருதியுள்ளது. இதற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 கோடியாகும். இத்திட்டத்திற்கு ரூ. 190 கோடி செலவாகக் கூடும். ரூ. 66.5 கோடி மூலதனதப் பங்கில் ரூ. 34 கோடியை அரசுக்குச் சொந்தமான கழகமும் தமிழ்நாடு அரசும் வழங்கும். மூலதனப் பங்கில் எஞ்சியுள்ள தொகையை உலக வங்கியும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் வழங்கும். மேலும் இவை இரண்டும் ரூ. 113.5 கோடிக்குக் கடனுதவி அளிக்கும்.

2. உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், 100 மில்லியன் டாலருக்கு மத்திய அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மூலம் கடனுதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. மொத்தத்தில் ரூ. 113.5 கோடி காலக் கடன் வழங்குவதற்காக இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம், இந்தியத் தொழில் கடன்-முதலீட்டுக் கழகம் போன்ற அனைத்திந்திய நிதியுதவி நிறுவனங்களுடன் இந்நிறுவனம் பொதுக் கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது. இக்காலக் கடனில் வணிக வங்கிகள் ரூ. 16.7 கோடி வரையில் உதவி செய்யவும் இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மேற்படி தொகையை வழங்க வேண்டியிராது. இந்த ரூ. 16.7 கோடி அளவிற்கு மேற்படி வங்கியின் நிதி உதவியும் குறையும். மரக்கூழ் தயாரிப்பு எந்திரத்தைப் பெறவும் இந் நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

3. வன-மீன்துறை, தமிழ்நாடு மாநில வனத்தோட்டக் கழகத்திடமிருந்து 70,000 டன் நீலகிரி தைலக் கலப்பின மரங்களை இந்நிறுவனத்துக்கு ஒதுக்கியுள்ளது. இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும் முக்கிய கச்சாப் பொருளான கரும்புச் சக்கையைப் பெற சர்க்கரை ஆலைகளுடனும் தமிழ் நாடு சர்க்கரை ஆலைக் கழகத்துடனும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டுள்ளன.

4. புகளூர் கிராமத்தில் இந்நிறுவனத்தின் வசம் சுமார் 735 ஏக்கர் நிலத்தை அரசு ஒப்படைத்துள்ளது. நிலக்கரி வழங்க ஏற்பாடு செய்திருப்பதும் மனநிறைவளிப்பதாயுள்ளது.

5. அப்பகுதியின் பொருளாதார நிலையை உயர்த்த இத் திட்டம் பெரிதும் உதவும் என நம்பப்படுகிறது. பயிற்சி பெற்ற வர்கள், பயிற்சி பெறாதவர்கள், உயர் தகுதி பெற்றவர்கள் உட்பட நேரடியாகவும் மறைமுகமாகவும் 2,000 பேருக்கு இது வேலை வாய்ப்பளிக்கும்.

6. திட்டமிட்டபடி பணி நிறைவேறி வருகிறது. பின்வரும் பணிகள் நடந்தேறி வருகின்றன :

7. நிறுவனம் அமைக்கப்படும் இடத்தில் நடைபெறும் பணிகள் :

(அ) காகிதம் தயாரிக்கும் எந்திரம் நிறுவப்படும் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. காகிதம் தயாரிக்கும் எந்திரம் நிறுவும் பணி 1983 மார்ச்சு இறுதிக்குள் தொடங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. இப்பணியைத் தொடங்குவதற்காக உரிய காலத்தில் கட்டுமானப் பணி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. மரக்கூழ் தயாரிக்கும் ஆலைக்கான கட்டிட பணியும் நடந்தேறி வருகிறது.

(ஆ) அதிகாரிகள் தங்கும் இல்லம், 1983 ஜூன்-ஜூலை திங்களில் தயாராகி விடும்.

(இ) 'B' வகை வீடுகள் 1983 செப்டம்பர் மாதத்திற்குள் தயாராகி விடும். 24 'c' வகை வீடுகள் ஆகஸ்ட் திங்களிலும் எஞ்சிய 16 வீடுகள் 1983 செப்டம்பர் திங்களிலும் தயாராகிவிடும்.

(ஈ) 40 அறைகள் கொண்ட 'B' வகை இல்லத்தைக் கட்டுவதில் ஒரு தொகுதியில் நிலை மட்டம் வரை வந்துள்ளது. முதல் தொகுதி 1983 செப்டம்பர் மாதத்திற்குள்ளும், இரண்டாம் தொகுதி 1983 நவம்பர் மாதத்திற்குள்ளும் முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) தொழிற்சாலைப் பகுதியில் 2.3 கிலோ மீட்டர் சாலையில் மண்ணிடும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

(ஊ) இரயில் பெட்டிகளை ஒரு பக்கமாக நிறுத்தி பக்கக் கரை அமைக்கும் பணி கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது.

8. தளவாடம், எந்திரம் வாங்குதல்: நிறுவனம் இதுவரை யில் 67 ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுள்ளது. அவற்றில் 56 ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் கடனுதவி வங்கியின் நடைமுறை யின்கீழ் தளவாடமும், எந்திரமும் வாங்குவதற்குத் தொடர் புடையனவாகும்.

9. அஸ்வதநாராயணா அண்டு ஈஸ்வரா (கட்டிடப் பொறி யியல் பணிகள்), டெவலப்மெண்ட் ப்ராஸஸ் ப்ளாண்ட் அண்டு யுட்டிலிடிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றைச் சேர்ந்த ஆலோ சகர்கள் தொழில் நுட்ப நுணுக்க விவரங்கள் தேவைப்படுமிடத்து ஆலோசனை அளித்து வருகின்றனர்.



## தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.

இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும் வகையில் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் (எல் காட்) அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக, எல்காட் சொந்த மாகவோ மற்றவர்களுடன் கூட்டாகவோ சேர்ந்து தொழிற் பிரிவுகளை அமைத்து வருகிறது. ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணி யை (ஆ. மே.) மேற்கொள்கிறது. மேலும், குறிப்பாக சிறு தொழில் துறையில் உள்ள தொழில் பிரிவுகளின் தயாரிப்புக்குத் தேவையான வடிவமைப்பு, அடிப்படைத் தகவல்கள் முதலியவை களை எல்காட் வழங்குவதோடு, தரக்கட்டுப்பாடு, விற்பனை ஆகி யவற்றிற்கும் உதவுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். அரசால் செலுத்தப்பட்ட மூல தனம் ரூ. 78.64 இலட்சமாகும்.

2. எல்காட் தற்போது பின்வரும் திட்டங்களைச் செயல் படுத்துகிறது. இவற்றுக்கு மத்திய அரசு தொழில் அனுமதி கடிதங்களை ஏற்கனவே வழங்கியுள்ளது.

### I. டிஜிடல் மின்னணு கைக்கடிகாரங்கள்:

இத்திட்டச் செலவினம் ரூ. 19 இலட்சமாகும். ஆண்டு ஒன் றுக்கு ரூ. 6 கோடி மதிப்புள்ள 2 இலட்சம் கைக்கடிகாரங்களைத் தயாரிக்க எல்காட் நிறுவனத்துக்கு உரிமம் அளிக்கப்பட்டிருக் கிறது. முதல் கட்டத்தில் இந்நிறுவனம் சுமார் 1.5 கோடி மதிப்புள்ள 50,000 கைக்கடிகாரங்கள் தயாரிக்கும் பணியை மேற் கொண்டுள்ளது. இந்தக் கைக்கடிகாரங்கள் ஏற்கனவே விற் பனைக்கு வந்துள்ளன. இவைகள் பிரபல்யமடைந்துள்ளது. இத் தொழிற்சாலை நேரடியாக 20 பேருக்கும் மறைமுகமாக சுமார் 40 பேருக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கும்.

### II. அலுமினியம் எலர்ட்ராலிட்டிக் கப்பாசிட்டர்கள் தயாரிப்புத் தொழிற் சாலை :

இத்தொழிற்சாலைக்கான செலவினம் ரூ. 179.31 இலட்ச மாகும். இத்தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் அமைக்கப்பட்டுள்ளது. சோதனை உற்பத்தி தொடங்கப்பட் டுள்ளது. வணிக உற்பத்தி விரைவில் தொடங்கவிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 50 இலட்சம் கப்பாசிட்டர்களைத் தயாரிக் கையில் அதாவது முழு உற்பத்தித் திறனை இத்தொழிற்சாலை எய்தும்போது சுமார் 140 பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும்.

III. இருவழி வானொலி கம்பியில்லாத்தந்தி (செய்தி சாதனம் தயாரிப்பு)

இத்திட்டச் செலவினம் ரூ. 250.00 இலட்சமாகும். இத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை இங்கிலாந்திலுள்ள மார்கோனி கம்பியில்லாத் தந்தி சாதனத் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முழு உற்பத்தித் திறனை எய்தும்போது 755 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும். இத்தொழில் திட்டம் சென்னையில் அமைய இருக்கிறது.

IV. மெட்டல்/கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள்

இத்திட்டச் செலவினம் ரூபாய் 55 இலட்சமாகும். இத்தொழிற்சாலை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பொட்டப்பாளையத்தில் அமைக்கப்படவிருக்கிறது. இத்தொழிற்சாலை 50 மில்லியன் மெட்டல் பிலிம் ரெசிஸ்டர்களையும் 250 மில்லியன் கார்பன் பிலிம் ரெசிஸ்டர்களையும் தயாரிக்கும். எல்காட் கூட்டுத்துறைத்திட்டங்களை ஊக்கப்படுத்துகிறது. எல்காட் நிறுவனத்தின் அப்படிப்பட்ட தொழில் திட்டங்களில் இது முதலாவதாகும். இத்தொழிற்சாலை மூலம் 70 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும்.

3. எல்காட் நிறுவனம் கீழ்க்காணும் தொழிற்சாலைகளை நிறுவ மத்திய அரசு அனுமதிகள் வழங்கியுள்ளது :—

| தொழிற்சாலையின் பெயர். | ஆண்டு உற்பத்தித் திறன். |
|---|---|
| (அ) தொலைபேசி கருவிகள் .. | 2 இலட்சம். |
| (ஆ) சிறு கணக்கீட்டுப் பொறிகள்/டெர்மினல்கள். | 50/2000 |
| (இ) எக்ஸ்கதிர் சாதனம் .. .. | 250 |
| (ஈ) அச்சிட்ட சர்க்யூட் பலகை .. .. | 20,000 சதுர மீட்டர். |

இத்திட்டங்களைச் செயல்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

4. வடிவமைப்பு-மேம்பாடு முன் மாதிரிகளைத் தயாரிக்க, ஆராய்ச்சி-மேம்பாட்டுப் பிரிவை 'எல்காட்' நிறுவனம் அமைத்துள்ளது. இப்பிரிவில், செய்தித் தொடர்பு, அன்டனா அன்டு



ஸிஸ்டம்ஸ், இரு வழி வானொலிப் பெட்டிகள், வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள், ஸ்டாண்டர்டைஸ்ட் தொலைக்காட்சிப் பெட்டி ரிஸீவர், புஷ்பட்டன், தொலைபேசி டயல்கள் முதலியவை உருவாக்கப்பட்டன/உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய பணிகள் :

(i) விற்பனை :

சிறு தொழிற்சாலைகள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய பல விற்பனை நிலையங்களை நிறுவ இந்நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இது தொடர்பாகச் சிறு தொழிலதிபர்களிடம் ஏற்கனவே பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.

### கனி வள நிறுவனங்கள்.

தொழிற் சார்ந்த முக்கியமான கனிமப் பொருள்களை வெட்டி எடுப்பதற்கும், கருங்கற்களை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கனிம நிறுவனத்தை (டாமின்) 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவியது. இந்த நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 100 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு ரூ. 57.50 இலட்சமாகும். அண்மையில் இந்நிறுவனத்திற்கு ரூ. 15 இலட்சம் கூடுதல் பங்கு மூலதனத்தையும் ரூ. 15 இலட்சம் கடனையும் அரசு அளித்துள்ளது.

2. 1982-83ஆம் ஆண்டில் (1983 சனவரி முடிய) இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை விவரம் வருமாறு :—

| கனிப் பொருளின் பெயர். | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | அளவு. | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
| கருங்கற்கள் .. | 1,000 கன மீட்டர். | 24.95 | 1,119 கன மீட்டர். | 65.31 |
| சாம்பல் நிறக் கற்கள் | 1,966 கன மீட்டர். | 13.00 | 1,316 கன மீட்டர். | 34.47 |
| முக்கிய கனிப் பொருள்கள். | 23,463 மெட்ரிக் டன். | 13.68 | 12,785 மெட்ரிக் டன். | 14.70 |

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நான்காம் ஆண்டில் விற்பனை ரூ. 98.16 இலட்சத்தை எட்டியது. நடைமுறை இலாபமாக ரூ. 25.73 இலட்சம் கிடைத்துள்ளது. 1978-79ஆம் ஆண்டு சிறிது நட்டம் அடைந்த போதிலும் இது சரிக்கட்டப்பட்டு விட்டது. 1983-84ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ. 2 கோடியாக உயரும் என்றும் அதிக லாபம் கிடைக்கும் என்றும், இன்னும் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் இந்நிறுவனம் சுமார் 1,600 பேருக்கு வேலை அளிக்கிறது.



**சிவகங்கையில் கிராபைட் வெட்டி எடுக்கும் திட்டம் :—**

சிவகங்கையில் கிராபைட்டை சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 258 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இத் தொழிற்சாலை தனித்தியங்கும் திறன் உடையதா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதி உதவிக்கான ஆயத்தப்பணி நடந்து வருகிறது.

டாமின் நிறுவனம் இலாபகரமாக இயங்கி வருகிறது. இந் நிறுவனம் முதலமைச்சரின் வறட்சி நிவாரண நிதிக்கும் ஊரக வளர்ச்சிப் பணிக்கும் (தாரா) நிதி அளித்துள்ளது.

### கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை அமைத்தல்.

'டாமின்' நிறுவனம் ரூ. 393 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கருங்கற்களை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. மணலி அருகே இதற்கான நிலம் இந்நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலைக்குரிய எந்திரங்களை வாங்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து விலைப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இதற்கான பணி 1982-83 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் தொடங்கும்.

### தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்).

திருவாளர்கள் சேலம் மாக்னசைட் நிறுவனம் முன்னர் சொந்தமாக வைத்திருந்த சுரங்கத்திலிருந்து மாக்னசைட் தாதுப் பொருளை வெட்டி எடுக்கும் தொழிலை ஏற்று நடத்த தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்) 17—1—1979 இல் அமைக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்நிறுவனம் செயல்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். இது 2,400 பேருக்கு வேலை அளிக்கிறது.

2. 1982-83-ல் (டிசம்பர் 1982 முடிய) 'டான்மாக்' நிறுவனத்தின் செயலாற்றல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| மாக்னசைட் தாதுப் பொருள் உற்பத்தி (டிசம்பர் 1982 முடிய). | 85,203 மெட்ரிக் டன். |
| மாக்னசைட் தாதுப்பொருள் விற்பனை. | 75,180 மெட்ரிக் டன். |
| விற்று வரவு .. .. .. | ரூ. 309 இலட்சம். |
| அகற்றப்பட்ட கழிவு பொருட்களின் எடை. | 18,45,695 மெட்ரிக் டன். |

இந்நிறுவனம் தொடங்கிய முதல் ஆண்டில் ரூ. 60.64 இலட்சம் இலாபம் அடைந்தது. 1980-81-ல் ரூ. 30.79 இலட்சமும் 1981-82-ல் ரூ.79.75 இலட்சமும் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1982-83-ல் தேய்மானத்திற்கு ரூ.39 இலட்சம் ஒதுக்கீடு போக ரூ. 84.34 இலட்சம் இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர் காலத்திட்டங்கள்.**— இந்நிறுவனம் விரைவில் தன்னுடைய பணியை விரிவு படுத்தத் திட்டமிட்டுள்ளது. கரிந்த மாக்னசைட் தயாரிக்கும் சூளை ஒன்றை நிறுவவும், பன்னாட்டு தரத்திற்கேற்ப கரிந்த மாக்னசைட்டைத் தயாரிப்பதற்கு மாக்னசைட்டை இரசாயன முறையில் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. விரிவாக்கப் பணியில் இது முதற்கட்டமாகும். ரூ. 6.3 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கரிந்த மாக்னசைட்டாக தயாரிப்பதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இரசாயன முறையில் மாக்னசைட் சுத்தப்படுத்துவதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. உயர்ந்த ரக வெப்பந்தாங்கி கற்களைத் தயாரிப்பதற்கு தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.



## தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனமும் முறையே ரூ. 100 இலட்சம், ரூ. 90 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உப்பைச்சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது ஆகும்.

## மாரியூர்— வாலிநோக்கம் உப்பு திட்டம்.

இத்திட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்று கருதப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாரியூர் வாலிநோக்கத்தில் 1975-ல் மேற்கொள்ளப்பட்டு 1976 முதல் உப்பு உற்பத்தி துவங்கப்பட்டது. ஆண்டு வாரியாக உற்பத்தி செய்யப்பட்ட அளவு பின்வருமாறு :—

| ஆண்டு. | மெட்ரிக் டன்கள். |
|---|---|
| 1976 | 550 |
| 1977 | 3,400 |
| 1978 | 6,500 |
| 1979 | 22,660 |
| 1980 | 29,047 |
| 1981 | 25,600 |
| 1982 | 37,000 |

உற்பத்தியிலும் விற்பனையிலும் அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் இத்திட்டம் எந்தவித வசதியும் இல்லாத பின்தங்கிய இடத்தில் நிறைவேற்றப்படுவதால் விற்பனை செய்வதில் தொடர்ந்து பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இங்கு 800 நபர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### மரவக்காடு—வடக்காடு உப்புத் திட்டம்.

இத்திட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகள் 1979-ல் மேற்கொள்ளப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. 1982-ம் ஆண்டு முடிய 1,300 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இதுவரை இத்திட்டத்திற்காக ரூ. 25 இலட்சம் செலவாகியுள்ளது.

1983 ஆம் ஆண்டு முடிய 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு இரயில் வசதியும் போக்குவரத்து சாலை வசதியும் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் 400 முதல் 500 நபர் வரை பருவகால வேலை வாய்ப்பும் 20 நபர்கள் நிரந்தர வேலை வாய்ப்பும் மற்றும் மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### வாலி நோக்கத்தில் சிறு துறைமுகம் ஏற்படுத்துதல் :

வெளி வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு வாலி நோக்கத்தில் ரூ. 75 இலட்சம் செலவில் சிறு துறைமுகம் கட்டுவதற்கு மாநில திட்டக்குழு இசைவு தந்து இதற்காக 1983—84-ல் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சிறு துறைமுகம் கட்ட 2 அல்லது 3 ஆண்டு காலமாகுமாதலால் துறைமுகத் துறை தற்காலிக ஏற்பாடுகள் செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. துறைமுகம் கட்டி முடிந்தவுடன் இத்திட்டத்தின் மூலம் உப்பின் தேவை பெருகி வரும். மேற்கு வங்காளம், அஸ்ஸாம், போன்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி மூலம் விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

### புதுத் திட்டங்கள் :

மாரியூர் வாலி நோக்கத்தில் உள்ள உப்பு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யவிருக்கும் ஜிப்ஸம் என்ற கனிப் பொருளிலிருந்து எலும்பு முறிவு அறுவை சிகிச்சைக்குப் பயன்படும் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிப்பதற்கான திட்டம் உத்தேசத்தில் உள்ளது.

(2) மாரியூர் வாலி நோக்கத்தில் சத்துள்ள உப்பு தயாரிக்கும் திட்டத்தை மைய அரசு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ. 35 இலட்சம் மான்யமாகவும், கடனாகவும், மைய அரசு வழங்கும். 12,000 டன் சத்துள்ள உப்பு (For :fied Salt) தயாரிக்கப்படும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1983-ல் உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கி 1984-ல் பண இழப்பு வராமல் தவிர்த்து வரும் ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் அடைய வாய்ப்பு இருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.



### தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

இம்மாநிலத்தில் பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த பின்வரும் பீங்கான் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில் பிரிவுகளைக் கொண்டு தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது.

**வணிகப் பிரிவுகள் :**

(1) டாசல் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.

(2) டாசல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.

(3) டாசல் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

**வளர்ச்சிப் பிரிவுகள் :**

(4) பீங்கான் தொழில்களுக்கான தொழிற்பேட்டை, விருத்தாசலம். (அரசின் முகவராக நிருவகிப்பது).

(5) டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம்.

பயிற்சி-வேலை வாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரிவுகள் :

(6) டாசல் கலை நிலையம், விருத்தாசலம்.

(7) டாசல் பீங்கான் தொழில் மையம், ஓமலூர்.

2. டாசல் வணிகப் பிரிவுகளில் மட்பாண்டங்கள், பீங்கான் கலைப் பொருட்கள், எல். டி. மின் காப்பீட்டுக் கருவிகள், துப்புரவு சாதனங்கள், கல் ஜாடிகள், மெருகிடப்பட்ட கற்குழாய்கள் முதலிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழில் மேம்பாட்டு நடவடிக்கையாக டாசல் விருத்தாசலம் தொழில் பேட்டையை நடத்துகிறது. இங்கு பீங்கான் பொருட்களைச் சுடுவதற்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன. விருத்தாசலத்தில் மட்டுமல்லாது இதற்கு அடுத்துள்ள பகுதிகளிலும் இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களிடையே இப்பணி வசதிகள் மிகவும் பிரபலமடைந்துள்ளன. பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுட்ப உத்திகளில் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு இரு பயிற்சிப் பிரிவுகளை நடத்துவதும், டாசல் நிறுவனம் ஆற்றும் பணிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

[1983 ஏப்ரல் 13

3. 1981–82 ஆம் ஆண்டில் டாசல் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து தொழிற் பிரிவுகளின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 207.12 இலட்சமாகும் சுமார் 1,000 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. தரமான மற்றும் நியாயமான விலையில் கிடைக்கும் டாசல் உற்பத்திப் பொருட்களுக்கு அங்காடியில் நல்ல மதிப்பு உள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்திற்கு, ரூ. 10.97 இலட்சம் தேய்மானத்திற்கு ஒதுக்கீடு செய்த பின்னர், ரூ. 11.54 இலட்சம் நிகர இழப்பு ஏற்பட்டது. எனவே, ரொக்க இழப்பு சொற்பமே. அதாவது ரூ. 0.60 இலட்சமாகும். 1982–83 ஆம் ஆண்டில் மின்வெட்டு இருந்தாலும் டாசல் நிறுவனம் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு சுமார் ரூ. 20 இலட்சம் நிகர இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

4. 1983–84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனம், கற்குழாட் உற்பத்தி தொழிற்சாலையில் இரு சூளைகளை ரூ. 5.40 இலட்சம் செலவில் சீரமைக்கும் பணியை மேற்கொள்ளும். இவ்வாறு பழைய சூளைகளை மாற்றியமைப்பது சூளையின் சூடேற்றும் திறனை சரியான அளவில் வைப்பதற்கு உதவும்.



1983 ஏப்ரல் 13]

தொழில் வணிக இயக்ககம்.

மாநிலப் புவியியல் பிரிவுகள் :

இம்மாநிலத்தில், சிமெண்டு, மட்பாண்டத் தொழில், வெப்பந் தாங்கிக் கற்கள் தயாரிக்கும் தொழில்கள், இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றுக்கு அடிப்படைத் தேவை கனிப் பொருட்களாகும். கனிப்பொருட்கள் பல்வேறு பெரிய நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழ்நாடு புவியியல் பிரிவு கடந்த பல ஆண்டுகளாக தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் கனிப்பொருட்களை அகழ்ந்தாய்வு செய்தல், புதிய தொழிற்சாலைகளுக்கு ஆதாரமாக உள்ள கனிப்பொருள்—படிவங்களைக் கண்டறிதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. புவியியல் பிரிவு சேகரித்துள்ள கனிப் பொருட்கள் படிமங்கள் குறித்த தகவல்களும் புள்ளி விவரங்களும் பெரும்பாலான தனியார் தொழிற்சாலைகளுக்குப்பயனளிக்கின்றன. இவை தவிர, தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு பீங்கான் நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் ஆகிய பல்வேறு அரசு நிறுவனங்களும் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இப்பிரிவு அகழ்வாய்வுப் பணிகளுக்குப் புவி இயற்பியல், புவி வேதியியல் உள்ள நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதுடன், புவியியல் நிழற்பட உத்தியினாலும் பயன்பெறுகின்றது. நவீன தொழில் கருவிகளும் ஆய்வுக் கூட சாதனங்களும் இப்பிரிவிடம் உள்ளன. இப்பிரிவு பொதுத் துறை நிறுவனங்களுக்கும் தனியார் தொழில்-முன்னோர்களுக்கும்—தொழில் நுட்ப ஆலோசனை நல்குவதுடன் திட்ட வடிவமைப்புகளையும் எடுத்தியம்புகின்றது.

கனிமச் சலுகைகள் வழங்குவது, கனிப்பொருள் ஆதாரங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாயை உயர்த்துவதற்கு தக்க கொள்கைகளை வகுப்பது ஆகியவை தொடர்பாக அரசுக்கு உதவியாக இம்மாநில புவியியல் பிரிவு இருந்து வருகின்றது. கீழே அட்டவணையில் காட்டியுள்ளது போன்று கனிப் பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய் படிப்படியாக உயர்ந்துள்ளதற்கு இதுவே சான்றாகும்.

| (1) | (2) |
|---|---|
| 1980–81 .. .. .. .. | 412 |
| 1981–82 .. .. .. .. | 433 |

(மாக்னசைட் தாதுப் பொருள் விற்றதன் மூலம் கிடைத்துள்ள தொகையும் இதில் அடங்கும்).

[1983 ஏப்ரல் 13

இதுபோலவே கடந்த சில ஆண்டுகளாக கனிப்பொருள் உற்பத்தியிலும் விரைவான முன்னேற்றம் காணப்பெறுகின்றது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | கனிமப்பொருட்கள் மொத்த உற்பத்தி. (இலட்சம் டன்களில்) (2) |
|---|---|
| 1978 .. .. .. .. .. | 88.4 |
| 1979 .. .. .. .. .. | 81.9 |
| 1980 .. .. .. .. .. | 94.4 |
| 1981 .. .. .. .. .. | 104.7 |

இந்த ஆண்டில் புவியியல் பிரிவு மேற்கொண்ட பல்வேறு கனிப்பொருட்கள் ஆய்வுகளின் பின்வரும் முக்கிய இணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

சுண்ணாம்புக்கல் :

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டத்திலுள்ள ஆலம்பாடி, கோட்டநத்தம் கிராமங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சுக்கவாடி—பிச்சம்பட்டி கிராமம் ஆகிய பகுதிகளில் 13 சதுர கிலோ மீட்டர் பகுதியில் படிகச் சுண்ணாம்புக்கல் படிந்திருப்பது குறித்து விரிவான ஆய்வுகள் செய்ததன் பயனாக, 46 மில்லியன் டன் சிமிண்டுக்குப் பயன்படுத்தக் கூடிய தரமான சுண்ணாம்புக்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பெற்றது. இது தவிர சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்தில் சின்ன கவுண்டனூர், தேவண்ண கவுண்டனூர் கிராமங்களில் 9 சதுர கிலோ மீட்டர் பகுதியில் 6.6 மில்லியன் டன் சிமிண்டுக்கு ஏற்ற தரமான சுண்ணாம்புக்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்திலுள்ள சாத்தான்குளம், திசையன்விளை, சமுகரங்கபுரம் கிராமங்களில் காணப்பெறுகின்ற சுண்ணாம்புக்கல், 'கங்கர்' (kankar) படிமங்கள் விரிவான திட்டப்பணி குறித்துத் திட்டமிடுவதற்காக ஆய்வு செய்யப்பெற்றன.



1983 ஏப்ரல் 13]

சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் :

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி வட்டத்தில் தூத்துக்குடிக்கும், பழையகாயலுக்கும் இடையில் 50 சதுர கிலோ மீட்டர் பகுதியில் ஆய்வு செய்ததில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் திட்டுகள் 1.0 இலட்சம் டன் வரை படிந்திருப்பது கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது.

சிலிகா மணல் :

தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யத்திற்கருகில் கரியப்பட்டணம் கிராமத்தில் 2.7 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிலிகா மணல் குறித்து முன்னர் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பெற்று அதன் தரத்தினை உறுதிபடுத்துவதற்காக அவை சோதனைக் கூடத்தில் சோதனை செய்யப்பெற்றன. அப்பகுதியில் காணப்பெறும் 6.6 மில்லியன் டன் சிலிகா மணல் படிவுகள் வார்ப்படத் தொழிற்சாலைக்கு ஏற்ற தரம் உடையவை. தீவிர வேளாண்மைப் பணிகளின் பயனாக, பயிரிடப்பெறாத பகுதிகள், மதிப்பீடு செய்யக்கூடிய பகுதிகளிலிருந்து 10 சதவீத இருப்புகள் மட்டுமே தயாராகக் கிடைக்கும் நிலையில் உள்ளன.

கடல் உப்பு :

இராமநாதபுரம் மாவட்டத்தில் வடக்கே தொண்டியிலிருந்து தெற்கே கீழக்கரை வரையில் சுமார் 200 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள கடற்கரை பகுதியில் நிலமட்டத்திற்குக் கீழே 8 முதல் 20 மீட்டர் ஆழம் வரையில் உப்பு செறிந்த உள்மண் இருப்பது கண்டறியப்பட்டது. இது எந்த அளவுக்குப் படிந்துள்ளது. அப்பகுதி பாறைகளில் ஏனைய இரசாயனப் பொருட்கள் படிந்திருக்கின்றனவா என்பதைத் தீர்மானிக்க துளையிடுதல் உள்ளிட்ட அகழ்வாய்வுப் பணி மேற்கொள்ளப் பெற்றது.

செங்கல் களிமண் :

சென்னையைச் சுற்றிலும் முக்கியமாகச் செங்கற்பட்டு மாவட்டம் திருபெரும்புதூர் வட்டம் பூவிருந்தவல்லியைச் சுற்றிலும் செங்கற்களைத் தயாரிப்பதற்கான களிமண் படிவுகள்

[1983 ஏப்ரல் 13

தலைவர்களுக்கு உத்திரவிட்டது. கருங்கல்லிற்கு அங்காடியில் தற்போதுள்ள விலையினைக் கருத்திற் கொண்டு அரசு 14—5—1982ஆம் நாளன்று கருங்கல்லிற்கான உரிமைக் கட்டணத்தை கன அடிக்கு ரூ. 50-லிருந்து ரூ. 200ஆக உயர்த்தியது. இவற்றால் ரூ. 7 இலட்சம் கூடுதலாகக் கிடைக்குமென மதிப்பிடப்படுகின்றது.

புவியியல் பிரிவுக்கும் சுரங்கப் பிரிவிற்கும் தனி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் இயக்குநர் அலுவலகத்தின் தலைமையிடம் சென்னையில் இருக்கும். 15 வட்டாரச் சுரங்கப் பிரிவுகள் இதன் பொறுப்பில் இருக்கும். இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செய்துள்ள பணிகளை இனி உதவி இயக்குநர்கள் கவனிப்பார்கள். கனிப் பொருள் நிர்வாக அமைப்பு முழுவதும் சீரமைக்கப்பெறும்.



1983 ஏப்ரல் 13]

**நலிவுற்ற நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்.**

பல்வேறு காரணங்களால் சில நிறுவனங்கள் சரிவர இயக்கப்படாமையால் நலிவு அடைந்து விடுகின்றன. இந்நிறுவனங்கள் நலிவடைவதற்கு முக்கிய காரணங்கள், தான் தயாரிக்கும் பொருட்களை வெளிச்சந்தைகளில் விற்பதில் உள்ள கஷ்டங்கள், போதிய நிதியின்மை, தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் பொறுப்பற்ற நிர்வாகம் ஆகியவைகளேயாகும். சில சமயங்களில் நிறுவனம் நலிவுற்ற தன்மையை அடைவதற்கு நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக அமைகின்றன. இதன் உடனடி விளைவாக இந்நிறுவனங்களின் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. மேலும் பல தொழிலாளர்களின் குடும்பங்கள் நேரிடையாகப் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் இந்நிறுவனங்கள் அரசை அணுகும்போது அவைகள் புத்துயிர் பெற்று மீண்டும் துவங்க மற்றும் தொழிலாளர் நலனைக் காக்க எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அம்மாதிரியான புனரமைப்பு நடவடிக்கைகள் சில கீழ் வருமாறு :—

முதலாவதாக தமிழ்நாடு நலிவுற்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) 1969 சட்டத்தின் கீழ் மேற்படி நிறுவனங்களைக் கொண்டு வருதல், அந்நிறுவனம் தன் முயற்சியால் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மீண்டும் இயங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கடன் கொடுத்தவர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதனால் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கிறது. தற்சமயம் அவ்வாறு பாதுகாப்பளிக்கப்பட்ட நிறுவனங்கள் பின்வருமாறு :—

(1) ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தருமபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்ச் கியர்ஸ் லிமிடெட், சென்னை.

(5) சௌவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(6) பிரிமியர் பர்டிலைசர் லிமிடெட், சென்னை.

(7) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஒசூர்.

இருப்பது கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. களிமண்ணைத் தோண்டுவதற்காக 47 இடங்கள் ஆய்வு செய்யப்பெற்று பூவிருந்தவல்லி பெரும்புதூர் கிளைச்சாலையைச் சுற்றியுள்ள 11 இடங்கள், குருக்கம்பாக்கம், சிக்கராயபுரம், மாங்காடு, கொல்லிச்சேரி, மூண்ணாம்கட்டளை, கொல்லப்பன்சேரி, மானவேடு, தோட்டக்குளம் ஆகிய இடங்களில் களிமண் படிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு தங்கப் படிவுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பெற்று வருகின்றது. பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக் கூடிய அளவிற்கு மணிக்கற்கள் கிடைக்கின்றனவா என்பதைக் கண்டறியவும் இதைப் போன்று ஆய்வு மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

ஆந்திரப் பிரதேசம், பலோன்ச்சா பகுதியிலுள்ள இந்திய அரசு நிறுவனமான ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் தொழிற்சாலையில் திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்புத்தாதினை சோதனை செய்யுமாறு புவியியல் பிரிவினை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இந்தப் புதிய முறையின் மூலம் ''நேரடிக் குறைப்பு'' முறையில் திடநிலையிலேயே இரும்புத்தாதினை மென்னிரும்பாக மாற்றலாம். இவ்வாறு உற்பத்தி செய்யப்பெறும் மென்னிரும்பு தொடர் வார்ப்படத் தொழிற்சாலைகளில் (அரக்கோணத்தில் உள்ளதுபோன்ற தொழிற்சாலையில்) இரும்பு வில்லைகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப் பெறுகின்றன. இவை இரும்புத்துண்டு துணுக்குகளுக்குப் பதிலாக பெருமளவில் பயன்படுத்தப் பெறுகின்றன. திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்புத்தாது குறித்த சோதனைகள் வெற்றி பெறுமானால், சேலம், தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கும் இத்தகைய தாதுக்களை நிலக்கரி அல்லது பழுப்பு நிலக்கரியினைப் பயன்படுத்தி மென்னிரும்பாக மாற்ற இம்முறையைப் பின்பற்றலாம். திருவண்ணாமலையில் கிடைக்கும் தாதுப் பொருளை ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் தொழிற்சாலையில் முதற்கண் சோதனை செய்து பார்க்க அரசு ரூ. 15 இலட்சம் அனுமதித்துள்ளது.

**பல்வகை :**

மதுரை-திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேசன், சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்தில் உள்ள இந்தியா சிமெண்ட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாளர் மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனம் ஆகியவற்றின் குத்தகைப் பகுதிகளில் சுண்ணாம்புக்கல் எந்த அளவுக்கு படிந்துள்ளன என்பதையும் புவியியல் பிரிவு விரிவாக மதிப்பிட்டுள்ளது.



பின்வரும் நோக்கங்களுக்காக பொறியியல் சார்ந்த புவி இயல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்றன.

(அ) பொதுப்பணித்துறையினருக்காக கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், பரம்பிக்குளம். ஆழியாறு திட்டத்தின் கீழ் ஆனைமலையாற்றில் நீர்த்தேக்கங்களுக்கான ஏற்ற இடங்களைத் தெரிந்தெடுத்தல்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சேர்வலாறு நீர்மின் சக்தித் திட்டத்தின்கீழ் அஸ்திவாரம் அமைப்பதில் உள்ள பிரச்சனைகள் பற்றியும் சேர்வலாற்றையும், பாபநாசத்தையும் இணைக்கும் குடைவரை பற்றியும் ஆராய்தல்.

(இ) வேளாண்மைக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டத்தில் 7 இடங்களில் மண்ணில் நிலைத்தன்மை குறித்து ஆராய்தல்.

**கனிப்பொருள் நிர்வாகம் :**

மாநில புவியியல் பிரிவு 98 சுரங்கக் குத்தகை மனுக்களைப் பரிசீலித்து தொழில் நுட்ப வகையில் பரிந்துரைத்துள்ளது. 364 அனுமதிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. கடந்த ஆண்டில் 70 சுரங்க குத்தகை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன. 322 அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. காஞ்சீபுரம், கடலூர், சேலம், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள 7 வட்டாரச் சுரங்கப் பிரிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது. கனிப்பொருட்கள் சலுகைகோரும் விண்ணப்பதாரர்களின் தொழில் திட்டங்களை சரிபார்க்கின்றன. வகுக்கப் பெற்றுள்ள நிபந்தனைகளுக்கிணங்க சுரங்கப்பணிகள் நடைபெறுகின்றனவா என்பதனைப் பார்த்து மனநிறைவு அடைவதற்காக சுரங்கப் பிரிவுகள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுகின்றன. அரசு புறம்போக்கு நிலங்களில் தோண்டப்படும் கனிமத்திற்கு வசூலிக்கப்படுவதைப்போன்று பட்டா நிலங்களில் எடுக்கப்படும் கனிமத்திற்கும் நூறு சதவீதம் உரிமை ஊதியத் தொகை, இயங்கா காலவாடகை வசூலிக்கப்பட வேண்டுமென்று அரசு 10–5–1982ம் தேதியன்று மாவட்ட ஆட்சித்

(8) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(9) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட், சென்னை.

(10) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங்ஸ், புதுக்கோட்டை

(11) சோமசுந்தரம் சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.

(12) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(13) பிளாஸ்டிக்ஸ் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

புனரமைப்புத் திட்டங்கள் நிறுவனம் மீண்டும் துவங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் வகூலிக்கப்படுகின்றன. சாதாரணமாக நிதி நிறுவனங்களும், வங்கிகளும் நிதி உதவியளிக்கின்றன. அரசு அந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. அம்மாதிரியான நிறுவனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ், லிமிடெட், சென்னை. | 14.35 |
| 2. | மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர். | 30.00 |
| 3. | பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை | 20.00 |
| 4. | மீனாட்சி மில்ஸ், மதுரை .. .. | 55·00 |
| 5. | பின்னி லிமிடெட், சென்னை .. .. | 100.00 |
| 6. | இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை .. | 47.00 |
| 7. | ஜெயலட்சுமி மில்ஸ் (பி) லிமிடெட், கோவை | 30.00 |
| 8. | ஜோதி மில்ஸ் லிமிடெட், கோவை .. | 50.00 |

நிதி பற்றாக்குறையினால் இந்நிறுவனங்கள் விற்பனைவரி மற்றும் மின் கட்டணம் கட்ட முடியாமல் நிலுவைகளாக சேர்ந்து விடுகின்றன. அந்நிலுவைகளைத் தவணை முறையில் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்கின்றது.



மற்றும் வேறு வகையிலும் அதாவது அந்நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்வதிலும் புனரமைப்புத் திட்டங்கள் தயாரிப்பதிலும் உதவியளிக்கிறது.

மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் நிறுவனத்துக்கு அளிக்கப்பட்ட அரசின் பொறுப்புறுதி ரூ. 30 இலட்சத்திலிருந்து 1 இலட்சமாக குறைந்துள்ளது. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், மற்றும் மீனாட்சி மில்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதியைத் திரும்பப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல்ஒர்க்ஸ் லிமிடெட் சேலம்.

இந்நிறுவனம் நிதி நிலை இடர்ப்பாடுகள் காரணமாக 10–12–1976 அன்று மூடப்பட்டு 500 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அரசு இந்நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாக 14–10–1977 முதல் ஓர் ஆண்டு காலத்துக்கு அறிவித்து கடைசியாக 30–4–1983 வரை நீடிக்கப்பட்டது. இத்தொழிற்சாலை திறக்கப்படும் பொருட்டு இந்தியன் வங்கி ரூ. 14.35 இலட்சம் கடனுக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பயனாக இத்தொழிற்சாலை 26–10–1970–ல் திறக்கப்பட்டது. ஆனால் 5–3–1981 முதல் மீண்டும் நிதி நிலை காரணமாக மூடப்பட்டது. கடந்த இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் அரசே மேற்படி நிறுவனத்தை எடுத்து நடத்தவோ அல்லது தனியார் நிறுவனம் எடுத்து லாபகரமாக இயக்கவோ அரசிடம் முறையிடவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இதன்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத் தொழிற்சாலையை தனியார் நிறுவனம் எடுத்து நடத்துவதில் உள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் :

கம்பெனிச் சட்டம் 1956 விதிகளின்படி 1963 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் முதல் மின்சார மீட்டர்கள் மற்றும் மின்சாரக் கருவிகள் தயாரிக்கும் பொருட்டு பொது நிறுவனமாக நிர்மாணிக்கப்பட்டது. 1966–67–ல் இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியது. செயல்பட முடியாமல் ஏற்பட்ட சில சிரமங்கள் காரணமாய் இந்த நிறுவனம் 14–9–1974–ல் மூடப்பட்டு தமிழக அரசின் ஆதரவாலும், தமிழ்நாடு மின்வாரியம், பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், நிதி நிறுவனங்கள், இந்திய தொழில் புனரமைப்புக் கழகம் (Industrial Reconstruction Corporation of India) இவற்றின் ஒத்துழைப்பினாலும் இந்த நிறுவனம் தனது உற்பத்தியை

[1983 ஏப்ரல் 13

8—12—1977 முதல் மீண்டும் துவங்கியது. தமிழ்நாடு அரசு இதை ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்தக் கால வரம்பு தற்பொழுது 20—9—1983 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் 650 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இது திறக்கப்படும்போது ரூ. 396 இலட்சம் தொடர் இழப்பும் 31—3—1982 அன்று ரூ. 294 இலட்சம் தொடர் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் இத்தொழிற்சாலை மேம்பாடு அடைந்து வருகிறது என்று தெரிகிறது.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்:

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட், 1965-ம் ஆண்டு தொடங்கி அம்பத்தூரில் உயர் அழுத்த, குறைந்த அழுத்தமுள்ள ஸ்விட்ச் கியர்களைத் தயாரித்து வந்தது. அதிக நஷ்டம் காரணமாக இந்தத் தொழிற்சாலை 14—3—1978-ல் மூடப்பட்டது. இது ஒரு நலிவுற்ற நிறுவனமாக அரசு 9—11—1978-ல் அறிவித்தது. இந்த காலவரம்பு நீடிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி பாரத் ஸ்டேட் வங்கி நிறுவனத்தை புனரமைக்கப்பட வேண்டிய நிதி நிலையை அரசுக்குத் தந்தது. இந்த நிறுவனம் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் உற்பத்தியை தொடங்கியது.

தற்பொழுது தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 610 ஆகும்.



1983 ஏப்ரல் 13]

மத்திய அரசுத் துறைத் திட்டங்கள்.

பொருளாதார வளர்ச்சியில் பொதுத் துறை பெரும் பங்கு கொள்ள வேண்டுமென்பதும் அடிப்படைத் தொழில்களில் முதலீடுகள் செய்வது பொதுத் துறையின் பொறுப்பாக இருக்க வேண்டுமென்பதும் மத்திய அரசின் தொழில் கொள்கையாகும். இந்நாட்டில் தொழிலில் பெருமளவு முதலீடு செய்யும் ஒரே அமைப்பு மத்திய அரசாகும். இதனைக் கருத்திற் கொண்டு பார்த்தால், இம்மாநிலத்தில் மத்திய அரசு புதிய பெரும் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் இந்த முதலீட்டில் தமிழ் நாட்டிற்கு கணிசமான அளவு வரவேண்டும். புதிய திட்டங்கள் உருவாகும் போதெல்லாம் புதிய திட்டங்களை இம்மாநிலத்தில் அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசினை கேட்டுக் கொள்கிறது. எனினும், இம்மாநிலத்தில் மத்திய அரசு நிறுவனங்கள் 11 மட்டுமே உள்ளன என்றும், அவையனைத்தும் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னரே நிறுவப்பட்டவை என்றும் அறிகிறோம். 1967 ஆம் ஆண்டிற்குப் பின்னர், மத்திய அரசின் நடுத்தர அளவிலான இரு நிறுவனங்கள் மட்டுமே இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டன. இவற்றில் ஒன்று தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட பகுதியாகிய இராணிப்பேட்டையில் ரூ. 32 கோடி முதலீட்டுடன் 1980—81 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட்டின் துணை சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனமாகும். மற்றொன்று சேலத்தில் ரூ. 167 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குப் பொருள்களைத் தயாரிக்கும் ஆலையாகும். எனவே, தமிழ் நாட்டின் தற்போதைய நிலையை மாற்றியமைக்க மத்திய அரசு தமிழ் நாட்டில் அதிக அளவு முதலீடு செய்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது தெளிவாகிறது.

ஏற்கனவே, செயற் படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் தொழில் திட்டங்களின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு :

இரயில் பெட்டித் தொழிற்சாலை :

இத்தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் வரை இத்தொழிற்சாலை மொத்தம் 13,974 இரயில் பெட்டிகளை உற்பத்தி செய்துள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் மொத்த இரயில்பெட்டிகளின் மதிப்பு ரூ. 70 கோடியாகும். 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 74 கோடி மதிப்புள்ள இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 1967 ஆம் ஆண்டில் 2 மீட்டர் கேஜ் இரயில் பெட்டிகளைத் தாய்லாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்து தனது ஏற்றுமதி வியாபாரத்தை

[1983 ஏப்ரல் 13

**பாரத கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி :**

இந்நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டு 1965-ல் உற்பத்தி தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 650 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரிக்கும் வகையில் இந்நிறுவனம் வடிவமைக்கப்பட்டது. இது மிகக் குறுகிய காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட உற்பத்தித் திறனை எய்தியுள்ளது. இதன் உற்பத்தி திறனை ஆண்டொன்றுக்கு 1100 மெகாவாட் ஆகவும் பின்னர் 2500 மெகாவாட் ஆகவும் அதிகரிப்பதற்கான திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளது. நடந்தேறிவரும் விரிவாக்கத் திட்டத்தின் அடுத்த நிலை, 1984–85 லிருந்து ஆண்டொன்றுக்கு 4000 மெகாவாட் அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகும். இது தொழில் வால்வுகள் (Ind.strial V.lve) தயாரிக்கவும் கருதுகிறது. இது 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். 1982 டிசம்பர் முடிய உள்ள ஆண்டுக்கான மொத்த வியாபாரத்தொகை ரூ. 358.2 கோடியாகும். ஆண்டொன்றுக்கு 165 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்க தற்போது நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 87 ஆயிரம் மில்லியன் டன்னாக இருக்கும். உரிமம் வழங்கப்பட்ட திறனளவு 1984–85 இல் எய்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை :**

இது 1965-ல் அமைக்கப்பட்டது. இந்த ஆலை 1969-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 2·5 மில்லியன் டன் எண்ணெயை தூய்மைப்படுத்துவதாகும். இது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயரழுத்த டீசல், குறைவழுத்த டீசல் எண்ணெய், உலை எண்ணெய், மசகெண்ணெய், எரிவாயு, நாப்தா முதலிய பெட்ரோலியம் பொருள்களை சுத்தப்படுத்துகிறது. இந்த ஆலையை ஏற்பத்தியது, உரம்டிரம் தொழிற்சாலை, பெட்ரோ-இரசாயனத் தொழிற்சாலை முதலிய துணை தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் 1,500 பேருக்கு நேரடியாகவும், சுமார் 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இது விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

**சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை, மணலி :**

இந்நிறுவனம் 1966-ல் அமைக்கப்பட்டது. இது 1971-ல் வணிக முறையில் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாண்டில் 1982 டிசம்பர் வரை இந்நிறுவனம் 4.98 இலட்சம் மெட்ரிக் டன் ''விஜய் காம்ப்ளக்ஸ்'' உரங்களையும் 85,000 மெட்ரிக் டன் ''விஜய் யூரியாவையும்'' தயாரித்துள்ளது. 1982 டிசம்பர் வரை இந்நிறுவனம் 4.68 இலட்சம் மெட்ரிக் டன் ''விஜய் காம்ப்ளக்ஸ்'' உரங்களையும், 98,000 மெட்ரிக் டன் ''விஜய் யூரியாவையும்'' விற்பனை செய்துள்ளது. இது 1,150 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.



1983 ஏப்ரல் 13]

**படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி :**

இத்தொழிற்சாலை 1966-ல் அமைக்கப்பட்டது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 5,000 சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதாகும். 1982 டிசம்பர் முடிய உள்ள காலத்தில் மொத்த நிறுவு திறனில் 86.82 சதவீதத்தை எய்தியுள்ளது. மேற்சொன்ன காலத்தில் இதன் விற்பனைத் தொகை ரூ. 3.93 கோடியாகும். இது 2,769 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

**சேலம் உருக்காலை, சேலம் :**

இது 1977-ல் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் முதல் நிலை 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர் சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது. 1982 மார்ச்சில் இது உற்பத்தியை தொடங்கியது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 3,180 டன் எவர் சில்வர் உருக்கு தயாரிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இது 1982 டிசம்பர் வரை 3,214 டன் எவர் சில்வர் உருக்கு சுருள்களைத் தயாரித்துள்ளது. இதன் மூலம் இத்தொழிற்சாலை செயற்படத் தொடங்கிய முதலாண்டிலேயே வரையறுக்கப்பட்ட இலக்குக்கும் அதிகமாக உற்பத்தி செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 181.19 கோடி செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்க; 1982 டிசம்பர் வரை 167.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது 1,207 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இத் தொழிற்சாலைக்கு அருகே நவீன நகரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதல் நிலையில் ரூ. 10.43 கோடி செலவில் 785 பிரிவுகள் கட்டக் கருதப்படுகிறது. இது 1983 ஜுனுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த தொழிற்சாலையாகச் செயற்படுத்துவதை மத்திய அரசு உறுதி செய்வதற்காக மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் இயன்ற வரையில் எடுத்து வருகிறது. முதலில் கருதப்பட்டவாறு இத்திட்டத்தின் வருங்கால மேம்பாட்டுக்கான திட்டத்தை வகுப்பதற்கான இந்திய உருக்கு அதிகார மன்றம் (SAIL) சோதனை நடத்தியுள்ளது என்றும், இதனை இந்திய

சிறிய அளவில் தொடங்கியது. உயர்ந்த வேலைப்பாடு அமைந்த 359 இரயில் பெட்டிகளையும், வசதியான இருக்கைகளும் ஏனைய வசதிகளும் அடங்கிய 298 இரயில் பெட்டிகளையும் பர்மா, தைவான், தாய்லாந்து, ஸாம்பியா, டான்சேனியா, பிலிப்பைன்ஸ், உகண்டா, வியட்நாம், நைஜீரியா ஆகிய நாடு களுக்கு ஏற்றுமதி செய்து இந்நிறுவனம் எல்லா நாடுகளிலும் நற் பெயர் பெற்று தன் புகழை நிலை நாட்டியுள்ளது. இந்நிறுவனம் சுமார் ரூ. 25.57 கோடி மதிப்புள்ள இரயில் பெட்டிகளை இது வரை ஏற்றுமதி செய்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் பங்களா தேஷ் இரயில்வேக்கு 9 இரயில் பெட்டிகளையும், மொசாம்பிக் இரயில்வேக்கு 15 இரயில் பெட்டிகளையும் தயாரித்து வழங்கு வதற்கு புதிய ஏற்றுமதி ஆணைகள் இந்நிறுவனத்திற்கு வந் துள்ளன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் :

இந்நிறுவனம் 1956 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது பின்வரும் தொழிற்சாலைகள் ஒருங்கே அமைந்துள்ள ஒரு தொழிற்பகுதியாகும்.

| | பெயர். | உற்பத்தித் திறன் |
|---|---|---|
| (1) | திறந்தவெளி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம். | ஆண்டுக்கு 6.5 மில்லியன் டன்கள். |
| (2) | அனல் மின் நிலையம் | 600 மெகாவாட் |
| (3) | இரசாயன உரத் தொழிற்சாலை | ஆண்டுக்கு 1.5 இலட்சம் டன் யூரியா. |
| (4) | நிலக்கரிக் கட்டி தயாரிப்பு கரிம ஆலை. | ஆண்டுக்கு 4.3 இலட்சம் டன் லீகோ. |
| (5) | களிமண் சுத்திகரிப்பு ஆலை | ஆண்டுக்கு 6,000 டன் களிமண். |

1982 டிசம்பர் வரையிலான கால அளவின் மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 235.81 கோடியாகும். மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 243.28 கோடியை எய்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் சுரங்கம் வெட்டுதல், இரண்டாம் அனல் மின் நிலையம் அமைத்தல் முதலிய விரிவுத் திட்டங்கள் நடைபெறு கின்றன. இரண்டாம் சுரங்கம் வெட்டுவதன் மூலம் ஆண்டுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்குமென்று எதிர்பார்க் கப்படுகிறது. இரண்டாம் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 630 மெகா வாட்டாக இருக்கும். இவற்றில் 5,000 தொழி லாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.



இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் :

இந்நிறுவனம் 1960 டிசம்பரில் நிறுவப்பட்டது. இதன் உற் பத்தித் திறன் ஆண்டுக்கு 8,500 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்வதாகும். 1981–82 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மிக உயர்ந்த அளவான 9,229 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய் தது. 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு 8,500 டெலிபிரிண்டர்களாக இருக்க, 1982 டிசம்பர் வரை 6,591 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்தது. இது இந்நாட்டிலேயே பல்வேறு டெலிபிரிண்டர்களையும் துணைக் கருவிகளையும் தயா ரிக்கும் ஒரே நிறுவனமாகும். அஞ்சலக-தந்தி, பாதுகாப்புப்பணி, இரயில்வே, விமானப் போக்கு வரத்து முதலிய எல்லாத் துறை களின் தேவைகளையும் இந்நிறுவனம் நிறைவு செய்கிறது.

கிண்டியில் தற்போதுள்ள தொழிற்சாலையில் 15,000 மின் தட்டச்சு இயந்திரங்கள் தயாரிப்பதற்காக இந்நிறுவனத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 2,500 பிளாபி டிஸ்க் டிரைவ் (Floppy Disc Drive) என்ற பொருளை உற்பத்தி செய்ய இந்நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கப் பட்டுள்ளது. இது சுமார் 2,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் :

இந்நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டது. இது 1967-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் நிறுவு திறன் 6.15 மில்லியன் சதுர மீட்டர்களே ஆகும். அண்மையில் இது 7.7 மில்லியன் சதுர மீட்டர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ. 197 இலட்சம் செலவில் முழு ஆராய்ச்சி மேம்பாட்டு நிலையம் அமைப்பது குறித்து இந்நிறுவனத்தின் செயற்குறிப்புக்கு மத்திய அரசு 1982 ஜூனில் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம் நிறை வேற்றப்பட்டு வருகிறது. இது 1984 அக்டோபரில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் சுமார் 2,900 பேர் பணி புரிகின்றனர்.

உதகமண்டலத்தில் கலர் பாசிடிவ் பிலிம்ஸ் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக மத்திய அரசு இதனை மாநிலத்திற்கு வெளியே அமைக்க முடிவு செய்துள்ளது என்று அறியப்படுகிறது. எனினும், கலர் பாசிடிவ் பிலிம்ஸ் தொழிற்சாலையை தமிழ் நாட்டிலேயே அமைப்பதற்கு இயன்ற எல்லா முயற்சிகளும் எடுக் கப்பட்டு வருகின்றன.

உருக்கு அதிகார மன்றத்தின் ஆராய்ச்சிக் குழு பரிசீலனை செய்துள்ளது என்றும், இவ்வறிக்கையை இந்திய உருக்கு அதிகார மன்றம் தீவிரமாகப் பரிசீலனை செய்கிறது என்றும் மத்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது.

கொதி கலன் துணைப் பாகங்கள் தொழிற்சாலை, இராணிப் பேட்டை :

ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் துணைப் பாகங்களை ரூ. 32.8 கோடி செலவில் தயாரிப்பதற்காக மத்திய அரசு 1980 ஜுலையில், ஒப்புதலளித்தது. முழு உற்பத்தித் திறனை அடைந்தவுடன், இத்தொழிற்சாலை 4,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 1983 இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்றும், முழு உற்பத்தித் திறனை 1984–85 இல் எய்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 1,400 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 75 இலட்சம் வரையில் செலவிட மாநில அரசு ஒப்புதலளித்துள்ளது.



## இணைப்பு—IV

### உட்குறியிடாத வினாக்கள்.

வரிசை எண்கள் 1-லிருந்து 50 வரையிலான வினாக்களுக்கு அட்டவணைப் பட்டியல்

| | உறுப்பினர் பெயர். | வினாக்களின் வரிசை எண். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | திரு. எம். அப்பாதுரை | 13 |
| 2. | திரு. மெ. ஆண்டி அம்பலம் | 34 |
| 3. | திரு. எம். ஆறுமுகம் | 19 |
| 4. | திரு. எஸ். இராசாராமன் | 15, 24 |
| 5. | திரு. ஜே. எஸ். இராசு | 2 |
| 6. | திரு. எஸ். டி. உகம்சந்த் | 40, 45 |
| 7. | திரு. ஏ. டி. கருப்பையா | 23 |
| 8. | திரு. கே. கல்லன் | 29, 30 |
| 9. | திரு. ரா. கிருஷ்ணன் | 17 |
| 10. | திரு. ஏ. டி. குலசேகர் | 41 |
| 11. | திரு. என். குலசேகரபாண்டியன் | 28 |
| 12. | திரு. கே. கோபாலகிருஷ்ணன் | 44 |
| 13. | திரு. எம். ஆர். கோவேந்தன் | 20 |
| 14. | திரு. என். எஸ். வி. சித்தன் | 16, 42 |
| 15. | திரு. செ. சிவசாமி | 8 |
| 16. | திரு. சீ. சிவப்பிரகாசம் | 10 |
| 17. | திரு. செ. செம்மலை | 27,31,46 |

[1983 ஏப்ரல் 13

| உறுப்பினர் பெயர். (1) | வினாக்களின் வரிசை எண். (2) |
|---|---|
| 18. திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி .. .. .. | 32 |
| 19. திரு. ஏ. எம். சேதுராமன் .. .. | 33 |
| 20. திரு. கே. சௌந்தரராஜன் .. .. | 38 |
| 21. திரு. கே. எம். தங்கமணி .. .. | 5, 6 |
| 22. திரு. இரா. தாமரைக்கனி .. .. | 11,35,37,49 50 |
| 23. திரு. பெ. சு. திருவேங்கடம் .. | 1, 9 |
| 24. திரு. பி. துரைராஜ் .. .. .. | 21 |
| 25. திரு. பம்மல் நல்லதம்பி .. .. .. | 25 |
| 26. திரு. தி. கா. நல்லப்பன் .. .. .. | 7, 39 |
| 27. திரு. ப. நெடுமாறன் .. .. .. | 4 |
| 28. திரு. என். பழனிவேல் .. .. .. | 48 |
| 29. திரு. கு. பா. பழனியப்பன் .. .. | 22 |
| 30. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் | 3, 43, 47 |
| 31. திரு. து. புருஷோத்தமன் .. .. | 18 |
| 32. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 14 |
| 33. திரு. இரா. முத்தையா .. .. | 12 |
| 34. திரு. டி. மணி .. .. .. .. | 36 |
| 35. திரு. கு. ரமணி .. .. .. | 26 |



1983 ஏப்ரல் 13]

போளூர் நகரிலிருந்து ஆலங்காயம்வரை கப்பி சாலை போடும் திட்டம்.

1—

வினா 511—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் நகரத்திலிருந்து ஜவ்வாது மலையில் ஆலங்காயம் வரை சம்னாமத்தூர் வழியாக கப்பி சாலை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு தொகை எவ்வளவு ?

(இ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): இந்திய அரசு இவ்வேலைக்கு ரூ. 75 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இச்சாலையின் எல்லாப்பகுதிகளிலும் வேலை துவங்கப்பட்டுள்ளது.

2—

குரும்பலூர் உயர்நிலைப் பள்ளிக்கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

வினா 1809—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதி குரும்பலூர் பேரூராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தின் ஒரு பகுதி 1977–78 ஆம் ஆண்டில் அடித்த புயலால் சேதமடைந்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் பழுதடைந்த கட்டிடத்தை மீண்டும் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி பள்ளியில் கட்டிடத்தை மீண்டும் கட்டுவதற்காக பொதுப்பணித்துறை காவேரி மேம்பாட்டுத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் திட்ட ஆய்வு கோட்ட அலுவலர் அவர்களால் பிப்ரவரி 1978 இல் முழுவதும் இடிக்கப்பட்டு பின் நிலவரைத் தளம் வரை கட்டப்பட்டுள்ளது என்றும், மேற்கொண்டு கட்டிடத்தை கட்டி முடிக்க நிதி வசதி இல்லாத காரணத்தால் அடுத்த நிதியாண்டுகளில் முடிக்க இயலவில்லை என்றும், ஆனால் அவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் முடிவுற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 —

சிங்கிலிகாமபட்டி அருள்மிகு சுங்க விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

வினா 3920— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் வட்டம், கல்வார்பட்டி கிராமம், சிங்கிலிகாமபட்டியில் உள்ள அருள்மிகு சுங்க விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் 1978 வாக்கில் குமாரசாமிக் கவுண்டர் என்ற தனிப்பட்டவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அந்தப் பட்டா வழங்கப்பட்டது.

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சிறு இனாம்கள் ஒழிப்புச் சட்டம், 1963 (சட்டம் 30/63)படி அரசால் 15 —2 —1965-ல் எடுக்கப்பட்டு நிலவரித் திட்டம் அமுல் செய்யப்பட்டது. சட்டபூர்வ விசாரணையின்போது நிலவரித் திட்ட வட்டாட்சியர் ஆணை எண் எஸ். ஆர். 387/இனாம் ஒழிப்புச் சட்டம் —(திண்டுக்கல்/67) நாள்: 21 —3 —1967-ல் இந்நிலத்திற்கு பிரிவு-8(2) (ii)-ன்படி சுங்க விநாயகர் கோவிலுக்குப் பட்டா வழங்கப்பட்டு, பின்பு குமாரசாமி கவுண்டரால் மேல் முறையீடு செய்ததின் பேரில் மதுரை இனாம்கள் ஒழிப்பு நடுவர் மன்றம் ஓ.பி. 73/69, நாள் 1-4-1969 ஆணையால் மறுவிசாரணைக்கு அனுப்பப்பட்டு அதன் பேரிலான சட்டபூர்வ மறு விசாரணைக்குப்பின் நிலவரித் திட்ட



வட்டாட்சியரின் எஸ். ஆர். 387, எம். ஐ. திண்டுக்கல், 67, நாள் 8 —4 —1970 ஆணையில் திரு. ப. குமாரசாமி கவுண்டர் 1911-ல் ஏற்பட்ட சாசுவத கவுலின் மூலம் மேற்படி நிலத்திற்கு குடிவார பாத்தியதை உடையவரெனக் கருதி பிரிவு 8(1)-ன்கீழ் அவருக்கு நிபந்தனையின்றி பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிலம் டி. டி. 132 அங்கீகாரப்படி சுங்க விநாயகர் சுவாமியை பூஜைசெய்து வந்தோரே நிலத்திற்கு முழுச் சொந்தக்காரர்களென்றும், நிலத்தை அனுபவிக்கத்தக்க குடிவார உரிமையை அதன் வழிவந்தோர் மூலம் பட்டா கோரினவரின் மூதாதையர் பெற்றவரெனவும், இச் சட்ட பூர்வ விசாரணை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உத்திரவு எவருக்காவது அதிருப்தி அளிப்பதாக இருப்பின் இனாம்கள் ஒழிப்பு நடுவர் மன்றத்திற்கு உரிய காலத்திற்குள் மேல் முறையீடு செய்துகொள்ள வேண்டுமெனவும், உத்திரவை வழங்கிய நிலவரித்திட்ட வட்டாட்சியர் அவ்வாணையிலேயே குறிப்பிட்டிருக்கிறார். மேற்குறித்த உத்திரவு பிறப்பித்த விவரத்தை உரிய படிவத்தில் குறிப்பிட்டு கிராமத்தில் 14 —5 —1970 அன்று முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்திரவை எதிர்த்து எதிர் மனுதாரரான திரு. ரா. சுப்பாண்டி பண்டாரமோ அல்லது சுங்க விநாயகர் சுவாமி பேரில் சிரத்தையுள்ளவர்கள் எவரும் நடுவர் மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யவில்லை.

4 —

மதுரை நகரில் காவலர் குடியிருப்புகளைப் புதுப்பித்துக் கட்டும் திட்டம்

வினா 4413— திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் கிரைம் பிரான்ஞ் போலீஸ் அலுவலகத்திற்கு அருகே உள்ள காவலர் குடியிருப்புகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அவற்றைப் புதுப்பித்துக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட குடியிருப்புகளை இடித்துவிட்டு, அந்த இடத்தில் காவல்துறையினருக்குப் புதிதாகக் குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

திண்டிவனத்திலிருந்து நகரப் பேருந்துவிடல்.

வினா 4473—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம், பெரமண்டூர், முட்டியூர் வழியாக திண்டிவனத்திற்கு டவுன் பஸ் விட அரசு முன்வருமா ?

விடை—

திண்டிவனத்திலிருந்து பெரமண்டூர், முட்டியூர் வழியாகத் திண்டிவனத்திற்கு நகரப் பேருந்துவிடும் திட்டம் ஏதும் இல்லை. ஆயினும், திண்டிவனத்திலிருந்து முட்டியூர் வழியாக பெரமண்டூருக்கும், திண்டிவனத்திலிருந்து பாஞ்சாலம் வழியாக சாரம் வரைக்கும் பலமுனைப் பேருந்துவிடுவதற்கு அனுமதி கோரி மனுச் செய்யுமாறு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

6—

சலம்பாதி ஓடை பழுதுபார்க்கும் திட்டம்.

வினா 4516—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மயிலம் பஞ்சாயத்து யூனியன், சாலை கிராமத்தில் உள்ள சலம்பாதி ஓடை உடைத்துள்ளதைச் சரிசெய்து மதகுமற்றும் கலிங்கலை பழுதுப் பார்த்தும் நீர்ப்பாசன வசதி அளித்திடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

ஏரிகளின் வரத்து வாய்க்காலைப் பொதுப்பணித்துறை நிதியிலிருந்து மராமத்து செய்வதில்லை. குடிமராமத்தின் கீழ்தான் செய்ய வேண்டும். சலம்பாதி ஓடையின் குறுக்கே மதகு ஏதும் இல்லை என்றும் சாலை ஏரியின் மதகு மற்றும் கலிங்கல் நல்ல நிலையில் இருப்பதால் அதற்கு மராமத்து வேலைகள் எதுவும் செய்யத் தேவையில்லை என்றும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.





7 —

பெருந்துறை செல்லாண்டி அம்மன் கோயில் நிலங்கள் மூலம் கிடைத்த வருமானம்

வினா 5052—திரு தி. கா. நல்லப்பன் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை செல்லாண்டி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான பூமி எத்தனை ஏக்கர் ?

(ஆ) அந்தக் கோவிலின் ஆண்டு வருமானம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், பெருந்துறை அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுக்கு புன்செய் நிலம் மட்டும் 10 ஏக்கர் 69 செண்ட் சொந்தம் உள்ளது. கோயிலுக்குச் சொந்தமாக நன்செய் நிலம் கிடையாது. இத்திருக்கோயிலுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்வருமாறு வருமானம் வந்துள்ளது.

| பசலி ஆண்டு. | | | ஆண்டு வருமானம். (ரூபாய்) |
|---|---|---|---|
| 1389 | .. | .. | 30,401.83 |
| 1390 | .. | .. | 30,833.80 |

8 —

வினா 5704—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இளையான்குடி யூனியன், குறிச்சி பஞ்சாயத்தில் ஒன்பது குடி தண்ணீர் குழாய்கள் போடப்பட்டு வடிகால் வசதி செய்யப்படாததால் தெருவெல்லம் சதா சேரும் சகதியுமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) சீக்கிரம் வடிகால் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குறிச்சி சிற்றூரில் குடிநீர் விநியோகத்திற்காக 8 பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று குழாய்களுக்கு வடிகால் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 குழாய்களுக்கு வடிகால் வசதி அமைக்க இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார்.

9 –

மண்டகொளத்தூர்—திருண்ணாமலை பேருந்து விடும் திட்டம்

வினா 5963—திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) வடாற்காடு மாவட்டம், மண்டகொளத்தூர் கிராமத்திலிருந்து புலிவாநந்தல், போளூர், கலசபாக்கம், லாடவரம், கோலூர், சிட்டம்பட்டு, ஆர்ப்பாக்கம், மங்கலம், திருவண்ணாமலை வரை பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆயினும் போளூரிலிருந்து கலசப்பாக்கம், நாயுடுமங்கலம், மல்லவாடி, வேங்கைகல், திருவண்ணாமலை, மண்டலம்பாடி, பொர்குணம், கோலூர், லாடவரம், கொம்மநந்தல் என்ற கிராமங்களைத் தொட்டு போளூர் வரை மூன்று தனி ஒட்டங்களும், போளூரிலிருந்து கொம்மநந்தல், புலிவாநந்தல், குறுக்கு ஆகிய கிராமங்களைத் தொட்டு மண்டகொளத்தூர் வரை 6 தனி ஒட்டங்களும் செல்ல தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்திற்கு பேருந்து உரிமம் வழங்கப்பட்டுள்ளது

10 –

காவல் நிலைய துணை ஆய்ாளர்களுக்கு ஜீப் வழங்குதல்

வினா 6086 –திரு. சி, சிவப்பிரகாசம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) ஒவ்வொரு காவல் நிலைய துணை ஆய்வாளர்களுக்கும் ஜீப் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமலுக்கு வரும் ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

11 –

சென்னை பொது மருத்துவ மனையில் இருதய உள்ளமைப்பு இயக்க விளக்க சாதனை நிறுவுதல்

வினா 6186—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இருதய உள்ளமைப்பு மற்றும் இயக்க விளக்க சாதனம் நிறுவும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) –சென்னை அரசு பொது மருத்துவ மனையில் இருதய இயல்துறை பிரிவில் ஏற்கெனவே இக்கருவி இருக்கின்றது. அங்குள்ள கருவிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது –

(அ) இருதய இரத்தக்குழாய் ஊடுகதிர் கருவி அமைந்த இருதய உள் ஆய்வுக்கூடம் 9 இலட்சம்.

(ஆ) பல்நோக்கு அலை அடையாள குறியீடு பதிவு செய்யும் கருவி —3 இலட்சம்.

(இ) இருதய தீவிர சிகிச்சைப் பிரிவு—அணு ஆற்றல் இயந்திர கதிரியக்க அமைவுடன் இணைந்த கருவி—3.5 இலட்சம்.

(ஈ) இருதய ஆராய்ச்சிக்கூடம்—இருதய அலை எதிரொலி இயக்கக் கருவி—11 இலட்சம்.

(உ) இருதய நோய்த் தடுப்பும் இருதய மறுவாழ்வு சிகிச்சைப் பிரிவு —இ.கே.ஜி. அழுத்தம் கணக்கிடும் பொறி வசதியுடன் கூடிய டெபிபி டெபிபிரிலேட்டர் —3.5 இலட்சம்.

[1983 ஏப்ரல் 13

சிறுபான்மையினரால் நடத்தப்படும் தனியார் கல்லூரிகளுக்கு இவ்விதி பொருந்தாது.

(ஆ) தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்களுக்கான 18 சதவீத இட நியமன விதி அநேகமாக பின்பற்றப்படுகிறது. மேற் கூறிய ஒரு சில காரணங்களால் இவ்விதி சரியாக பின்பற்றப் படாத கல்லூரிகளுக்கு வருங்காலத்தில் இவ்விதி சரியாகப் பின் பற்றப்படவேண்டுமென கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவுரை வழங்கவிருக்கிறார்.

NUMBER OF APPLICATION FILED FOR LAY-OUTS·

15—

Q.6792 : THIRU S.RAJARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(a) The total number of applications filed for approval for layouts by (1) State undertakings, (2) Government and (3) Public, to the Directorat of Town Planning during the Calender year 1978, 1979 and 1980

(b) District-wise

Ans: (a) & (b) A statement is laid on the table of the House.

*ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

16—

Survey undertaken about the accident Prone areas in Madurai District.

Q. 6801: THIRU N S.V. CHITTHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state: —

(a) whether any Survey is being undertaken in Madurai District about the accident prone areas:

(b) If so, the details thereof

Ans:

(a) Yes

(b) A detailed statement is placed on the table of the House·

(அ) ஆம்.

(ஆ) விரிவான அறிக்கை **ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

---

*பக்கம் 28ல் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.
**பக்கம் 30-ல் இணைப்பு IIஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 13]

17—

மூளை வளர்ச்சி குறைவான குழந்தைகளை பராமரித்து பயிற்சி அளிக்கும் நிலயங்கள்.

வினா 7010—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூளை வளர்ச்சி குறைவாக உள்ள குழந்தைகளை பராமரித்து பயிற்சி அளிக்கும் நிலையங்களை அரசு ஏற்படுத்தியுள்ளதா?

(ஆ) திருநெல்வேலியில் மேற்படி நிலையம் அமைக்கப் படுகிறதா?

(இ) எத்தனை குழந்தைகள் சேர்க்கப்படுகிறார்கள்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மூளை வளர்ச்சி குறைவாக உள்ள குழந்தைகளை பராமரிக்கும் நிலையம் ஒன்று சென்னையில் அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) சுமார் 100 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

" நிர்வாகப் பயிற்சி பெறும் நிலையங்கள் ".

18—

வினா 7143— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Madras Institute of Management—Anna Institute of Managemen என்று அழைக்கப்படும் நிர்வாகப்பயிற்சி பெறும் நிலையங்களில் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?

(ஆ) இதில் மாணவர்கள் சேர்வதற்கு என்ன தகுதி தேவை?

விடை—

(அ) தற்போது இப்பயிற்சி நிலையத்தில் அரசு அலுவலர் களுக்கும் பொது நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்களுக்குப் பயிற்சி ஏதும் அளிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1983 ஏப்ரல் 13

12 —

சாப்டூர் அரசு மருத்துவ மனைக்கு செவிலியர் நியமனம்.

வினா 6440—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் சாப்டூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் மருத்துவ நர்ஸ் (Staff Nu se) இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு மருத்துவமனை உசிலம்பட்டியிலிருந்து ஒரு செவிலியரை அரசு மருத்துவமனை சாப்டூருக்கு 14—4—1981-ல் மாற்றப்பட்டு, அவர் 13—5—1981-ல் பணியில் சேர்ந்துள்ளார்.

13—

ஆறுமுகமங்கலம் குளப்பாசனத்துற்கு வடிகால் அமைத்தல்.

வினா 6451—திரு. மு. அப்பாத்துரை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா ஆறுமுகமங்கலம் குளப்பாசனத்திற்கு வடிகால் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பேதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ரூபாய் : 18.18 இலட்சம் மதிப்பீட்டில் ஆறுமுகமங்கலம் குளம் மறுகால் போக்கை புனரமைக்கும் பணிக்கான செயற்குறிப்பு நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.



1983 ஏப்ரல் 13]

14—

தனியார் நடத்தும் கல்லூரி உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் நியமன விகிதம்.

வினா 6522—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர் நியமனத்தில் அரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படுகின்றதா?

(ஆ) இல்லையென்றால் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை இட ஒதுக்கீடு விதி முழுமையாகப் பின்பற்றப்படுகிறது. தனியார் கல்லூரிகளிலும் இவ்விதி அநேகமாக பின்பற்றப்படுகிறது.

சில தனியார் கல்லூரிகளில் கீழ்க்காணும் காரணங்களுக்காக தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்படும் 18 விழுக்காடு இடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லையென்பது தெரியவருகிறது.

(1) உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் நியமனங்களுக்கு இட ஒதுக்கீடு முறை 1980 ஆம் ஆண்டு முதல்தான் அமுலுக்கு வந்துள்ளது. எனவே, அதற்கு முந்தைய ஆண்டுகளில் இட ஒதுக்கீடு அடிப்படையில் நியமனங்கள் செய்யப்படவில்லை.

(2) தேவையான கல்வித் தகுதி படைத்த தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் ஆசிரியர் பணிக்கு கிடைக்காமை.

(3) வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அனுப்பப்பட்ட நபர்கள் தேர்வுக்கு வராததால் தேர்வு செய்ய இயலாமல் போவது.

(4) சில பணியிடங்களுக்கு முறையான விளம்பரம் கொடுத்த பின்னும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்களில் யாரும் விண்ணப்பிக்காமை.

(5) சில கல்லூரிகளில் இதுவரை 18 சதவீதம் இடத்தை மேற்கூறிய வகுப்பினரால் பூர்த்தி செய்யவில்லையெனவும், இனி வரும் காலியிடங்களுக்கு அவர்களை நியமனம் செய்வதாகவும் நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

19—

பயிற்சி மருத்துவர்களின் பயிற்சியை இரண்டு வருடங்களாக உயர்த்துதல்

வினா 7387—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) தமிழ் நாட்டில் பயிற்சி மருத்துவர்களின் (House Surgeons period) தற்போதைய ஒரு வருட பயிற்சி முறையை இரண்டு வருடங்களாக உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

20—

பட்டுக்கோட்டை கோட்டம் மின் பிரிவு அலுவலகம் கிராமப்புற பிரிவாக செயல்பட கோரிக்கை.

வினா 7570—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மின்திட்டம், பட்டுக்கோட்டை கோட்டம் பேராவூரணி இயக்குதலும், காத்தலும் பிரிவு அலுவலகம் கிராமப்புற பிரிவாக தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





21—

சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 7850—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அவ்வலுவலகம் கட்டுவதற்காக நில எடுப்புச் செயற்குறிப்பு வருவாய் நிர்வாக ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

22—

சென்னை மாநகராட்சியால் வீடுகட்ட அனுமதியளிக்கப்பட்ட ஆறு மாதம் நிபந்தனையை நீக்கும் செயற் குறிப்பு.

வினா 8093—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி வீடு கட்ட அனுமதியில் ஆறு மாதத்திற்குள் ஆரம்பிக்கவேண்டுமென்ற நிபந்தனையை நீக்க அரசுமுன்வருமா?

விடை—

சென்னை மாநகராட்சியால் வீடு கட்ட அனுமதி அளிக்கப்பட்ட நாளிலிருந்து கட்டிட வேலையை ஆறு மாதத்திற்குள் ஆரம்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவது குறித்த செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

23—

### பாகநேரியிலிருந்து பேருந்து விடும் செயற்குறிப்பு.

வினா 8416— திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கைத் தாலூகா பாகநேரியிலிருந்து அழகாபுரி, அம்மன் பட்டி, இராமலிங்கபுரம் வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பாகநேரியிலிருந்து அழகாபுரி, அம்மன் பட்டி, இராமலிங்கபுரம் வழியாக நகரப் பேருந்து விடுவதற்கு இராமநாதபுர மாவட்ட மண்டலப் போக்குவரத்து அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

24—

### UTILISING THE WASTE OF THE CERAMIC PRODUCTS.

Q. 8775—THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Indust ies be pleased to State:

The detaile of the steps taken by Government to utilise the waste of the Ceramics Products manufactured by the State owned Ceramic Corporation units, in Tamil Nadu?

விடை—

1. சுடப்பட்டு நிராகரிக்கப்பட்ட வெண்மை பீங்கான் பொருட்கள் எதற்கும் பயன் படுவதில்லை.

2. நிராகரிக்கப்பட்ட உப்பு மெருகிட்ட குழாய்கள் மீண்டும் மாவு மாதிரி தூளாக்கப்பட்டு மறுபடியும் கலவையில் கலந்து உபயோகப்படுத்தப்படுகின்றன.

3. வீணாக்கப்பட்ட வார்ப்புகள், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றன.

4. உடைந்த செங்கற்கள், ஜல்லியாக விற்கப்படுகின்றன.



25—

### தரமணி-கானகம்வரை பாதை அமைத்தல்.

வினா 9036— திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியைச் சேர்ந்த தரமணியிலிருந்து கானகம் வரை சரியான பாதை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பாதை அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி 149 ஆவது கோட்டத்தில் தரமணியிலிருந்து கானகம் வரையுள்ள கானகம் சாலை 20-8-1981இல் புதிதாக கருங்கல் ஜல்லியுடன் கிராவலும் கொண்டு போடப்பட்டுள்ளது.

26—

### கோவை நகராட்சி மதிய உணவு தயாரிக்கும் மையத்தில் நடைபெற்ற மோசடி

வினா 9233— திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியின்கீழ் நடந்து வருகிற மதிய உணவு தயாரிக்கும் மையத்தில் சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்னால் நடந்த பண மோசடி ஊழல் குறித்து நடத்தப்பட்ட விசாரணை முடிவுகள் என்ன?

(ஆ) குற்றமிழைக்கப்பட்டவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது?

(இ) அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார்? யார்?

விடை—

(அ) கோவை நகராட்சி மதிய உணவு மையத்தில் நடைமுறைகளில் ஏற்பட்ட குறைபாடுகளின் பேரில் 1-1-1973 முதல் 31-12-1976 வரையிலான காலங்களுக்கான தணிக்கையில் ஆட்

சேபணைகளில் கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அனுப்பப்பட்ட பதில்களையும் சம்பந்தப்பட்ட கோப்புகளையும் தணிக்கைத் துறை அதிகாரி நேரில் பார்வையிட்டுள்ளார்.

(ஆ) முன்னாள் கல்வி அலுவலரின் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒருவருக்கு ஓராண்டு ஊதிய உயர்வை பின் பிணைப்புடன் (Stoppage of increment for one year with cumulative effect) நிறுத்தி வைத்து, தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. மற்றவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறுதி முடிவுக்கேற்ப அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.

(இ) தணிக்கை ஆட்சேபனையின் பேரில் முன்னாள் நகராட்சி கல்வி அதிகாரி ஒருவர், முன்னாள் கல்வி மேற்பார்வையாளர்கள் இருவர், மற்றும் உதவியாளர் ஒருவர், இளநிலை உதவியாளர்கள் எட்டு பேர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

### பொடாரியம்மன் பள்ளத்தில் ஏரி கட்டுதல்.

வினா 9289—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், வெள்ளார் கிராமம், கம்மம்பட்டி அருகில் பொடாரியம்மன் பள்ளத்தில் ஏரி கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### வாணியம்பாடி தாலுக்காவில் பேருந்து விடல.

வினா 9396—திரு. நன். குலசேகரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா ஆலங்காயம்—வாணியம்பாடி இடையே நிம்மியம்பட்டு, வேப்பாலம்பட்டி, ராங்கபுரம், வேப்பம்பட்டு வழியாக பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடியிலிருந்து நிம்மியம்பட்டு, வேப்பாலம்பட்டி, ராங்கபுரம், வேப்பம்பட்டு வழியாக ஆலங்காயம் செல்லும் சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால் இத்தடத்தில் பேருந்து விடும் செயற் குறிப்பு இல்லை.

### உதகை குன்னூர் நகர் பகுதி வளர்ச்சி திட்டத்திற்கு மத்திய அரசு மூலம் ஒதுக்கப்பட்ட தொகை.

வினா 9522—திரு. கே. கல்லன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை, குன்னூர் நகர் பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு பண ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஒரு விரிவான அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*பக்கம்—31இல் இணைப்பு IIIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1983 ஏப்ரல் 13

### நீலகிரியிலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்.

**வினா 9527—திரு. கே. கல்லன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரியிலுள்ள 11 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் எத்தனை இலாபத்திலும், எத்தனை நட்டத்திலும் நடைபெறுகின்றன ?

(ஆ) அதற்குரிய காரணங்கள் யாவை ?

**விடை—**

(அ) நீலகிரியில் இயங்கி வரும் 11 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் 9 தொழிற்சாலைகள் நட்டத்திலும், இரண்டு தொழிற்சாலைகள் இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

(ஆ) 9–4–1977 முதல் மத்திய அரசு கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் தேயிலை மீது ஆயத் தீர்வை விதித்தது. 14–2–1979 முதல் இத்தீர்வை நீக்கப்பட்ட பின் கூட உடனடியாக தேயிலை விற்பனை விலையில் ஏற்றம் ஏற்படவில்லை. மேலும் உலக சந்தையில் தேயிலை விலை சரிவு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, நிலக்கரி விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, ஊழியர்கள் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, இயந்திரங்கள் பழுது பார்க்கும் கட்டணம், தனியார் தொழிற்சாலைகளில் கடுமையான போட்டி, தேவையான அளவு கொள்முதல் செய்ய பச்சைத் தேயிலை இல்லாததால் அதிக அளவு உற்பத்தி அடைய முடியாமை ஆகியவை நட்டம் ஏற்படக் காரணங்களாகும்.

### ஓமலூர் பீங்கான் தொழில் மையம்.

**வினா 9624—திரு. செ. செம்மலை :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் பீங்கான் தொழில் மையத்தில் 1980–81 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

(ஆ) இழப்பைச் சரிக்கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



1983 ஏப்ரல் 13]

**விடை—**

(அ) ஓமலூர் பீங்கான் தொழில் மையம் 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 1.13 இலட்சம் இழப்பை அடைந்துள்ளது.

(ஆ) ஓமலூர் பீங்கான் மையம் கிராமப்புறத்திலுள்ள குறைந்த கல்வி அறிவுள்ள இளைஞர்களுக்கு குறிப்பாக குயவர் சமூகத்திற்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏற்படுத்தப்பட்டதாகும். இது வணிக நோக்கத்தோடு இயக்கப்படாத கிராமப்புற தொழில் மையமாகும். அதிக விலையில்லாத ஊறுகாய் ஜாடிகள் தான் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. மற்ற ஆதாயமுள்ள பொருட்களை உற்பத்தி செய்ய, இங்கு வசதிகள் போதுமானதாக இல்லை. தகுந்த களி மண், தரமான நிலக்கரி போன்ற மூலப் பொருட்கள் கிடைப்பதிலும் அவற்றை இரயில் வாகன்கள் மூலம் தொழிலகங்களுக்கு கொண்டு செல்வதிலும் மிகுந்த சிரமங்கள் மற்றும் செலவுகளுக்கு உட்பட நேரிடுகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித் திறனும் தரமானதாக இல்லை.

எனினும் ஓமலூர் தொழிலகத்தில் உற்பத்தியை பலதரப்படுத்தி இழப்பைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஊறுகாய் ஜாடிகளுடன் சூளைகளுக்கான செங்கற்களை ( Refractory Bricks ) உற்பத்தி செய்யவும், முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளால் தொழிலகத்தின் செலவை ஈடு செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கீழ்பவானி வாய்க்காலில் பாசன வசதி செய்து கொடுத்தல்.

**வினா 9863—திரு. ப. செ. சென்னிமலை என்கிற எ. கந்தசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கீழ் பவானி வாய்க்காலில் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் பாசன வசதி செய்து கொடுக்கும்படி கரூர் வட்டம் கார்வழி பொதுமக்கள் சார்பில் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள மனு பரிசீலனை செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கீழ்பவானி கால்வாயை நவீனப் படுத்தும் திட்டம் ஒன்று தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது. நவீனப்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின், கிடைக்கும் உபரி நீரின் அளவை கருத்தில் கொண்டு புதியதாக பாசன நிலங்களை கீழ்பவானி திட்ட ஆயக்கட்டில் சேர்ப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**ஆரம்பப்பள்ளி பாடப் புத்தகங்களில் பெரியார் காமராசர் வாழ்க்கை வரலாறுகள் வெளியிடல்**

**வினா 9906**—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார், காமராசர் போன்ற தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆரம்பப்பள்ளி பாடப்புத்தகங்களில் வெளியிடப்படுமா ?

விடை—

தொடக்கப்பள்ளி பாட நூல்களில் ஏற்கெனவே தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. தவிர், நடுநிலை உயர்நிலைப் பள்ளி பாட நூல்களிலும், துணைப் பாட நூல்களிலும், வாழ்க்கை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

**சந்தானவர்த்தினியாற்றின் குறுக்கே அணைக்கட்டுதல்**

**வினா 9960** :—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியம், எமக்கலாபுரம் கிராமம் அருகே சந்தானவர்த்தினியாற்றின் குறுக்கே அணைக்கட்டி, நல்லொட்டான் கண்மாய் புதுக்குளம் ஆகியவற்றிற்கு பாசன வசதி செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இதற்கான மதிப்பீடு ரூபாய் 3.46 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு சிறுபாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

35—

**அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுமுறையை அதிகரித்தல்.**

**வினா 10082**—திரு. இ. ர. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில், பணியாற்றும் மணமான ஆசிரியை மற்றும் ஆசிரியை அல்லாத பணியாளர்களுக்கு மகப்பேறு விடுமுறையை அதிகரிக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் மணமான பெண் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இரண்டு மாத மகப்பேறு விடுப்பு 1—4—80 முதல் மூன்று மாதங்களாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விடுமுறைச் சலுகைகள் அனைத்தும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கும் பொருந்தும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் மணமான ஆசிரியை மற்றும் ஆசிரியை அல்லாத அலுவலர்களுக்கும் இரண்டு மாத காலமாக இருந்த மகப்பேறு விடுப்பானது, 1—4—80லிருந்து மூன்றுமாத காலம் என்று நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த விடுப்பினை மேலும் நீட்டித்து வழங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36— [1983 ஏப்ரல் 13

## நாகர்கோவில் ஐ.டி.ஐ யினை விரிவுபடுத்துதல்

வினா—10185—திரு. டி. மணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் தற்போது இயங்கிவரக்கூடிய ஐ.டி.ஐ. யினை விரிவு படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எலக்ட்ரிகல் டர்னர், ஜெனரல் எலக்ட்ரானிக்ஸ், ரேடியோ மற்றும் டெலிவிஷன் மெக்கானிக், மெஷினிஸ்ட், மெக்கானிக், டிராப்ட்ஸ்மென்ஸ், மெக்கானிக் ரெப்ரிஜிரேட்டர் மெக்கானிக் (டீசல்) ஆகிய பிரிவுகள் எப்போது விரிவுபடுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

37—

## சிறைத் துறையில் பணியாளர்கள் சங்கம் வைக்க அனுமதி வழங்கல்.

வினா 10291—திரு. இ. ா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சிறைத்துறையில் எல்லாதரப்பட்ட பணியாளர்கள் (All categories) சங்கம் வைக்க அனுமதி வழங்கப்படுமா ?

விடை—

தமிழ்நாடு சிறைத்துறையில் பணியாற்றும் சிறைக் காவலர்கள் (Ward r) நிலையிலிருந்து உதவி சிறை அலுவலர்கள் Assistant Jail rs ) வரை உள்ள பணியாளர்களுக்கு சங்கம் அமைக்க அனுமதி வழங்கப்படிருக்கிறது.



1983 ஏப்ரல் 13]

38—

## திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதிகள் எண்ணிக்கை

வினா 10357—திரு. கே. சௌந்தரராஜன் : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மத்திய சிறைச்சாலையில் எவ்வளவு கைதிகள் உள்ளனர் ?

(ஆ) அவர்களில் விசாரணை இல்லாமல் உள்ள கைதிகளின் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) 15—1—1982 அன்றைய நிலவரப்படி சிறைவாசிகளின் எண்ணிக்கை—956 (சிறையின் கொள்ளளவு 2,(10)

(ஆ) 221 பேர்கள்.

39—

## ஊத்துக்குளியில் மருத்துவமனை ஆரம்பிக்கும் திட்டம்

வினா 10375—திரு. ஏ. கா. நல்லப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம் ஊத்துக்குளியில் மருத்துவமனை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்போது செயல்முறைக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை. ஆனால், தற்போது ஊத்துக்குளியில் முழுநேர ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை ஒன்று செயல்பட்டுவருகிறது.

40—

செங்கற்பட்டு மாவட்டத்தில் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் வீட்டு மனைப்பட்டா வழங்கல்.

**வினா 10497—திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம்—மதுராந்தகம் வட்டம், சீக்கனாங்குப்பம் கிராமம் மற்றும் பாலூர் கிராம மக்கள் குடியுரிமை சட்டத்தின் கீழ் வீட்டு மனை கோரி பல ஆண்டுகளாகியும் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் உடனடியாக வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) சீக்கனாங்குப்பம் கிராமத்திலிருந்து குடியிருப்பு சட்டத்தின்கீழ் பட்டா வழங்கும்படி 140 விண்ணப்பங்கள் வந்துள்ளன. பாலூர் கிராமத்திலிருந்து எந்தவித விண்ணப்பமும் வரவில்லை. ஆயினும், சாதாரண ''தர்க்காஸ்து'' விதிகளின் கீழ் 66 விண்ணப்பங்கள் பாலூரிலிருந்து வரப்பெற்று அவை பரிசீலனையில் உள்ளன.

(ஆ) எல்லா விண்ணப்பங்களும் விசாரணையில் உள்ளன. விசாரணை முடிந்த பிறகு, பட்டா வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

41 —

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் மருத்துவமனை கட்டும் திட்டம்.

**வினா 10652—திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் குறைந்தது 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) இல்லையெனில் இத்திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

1980–81 ஆம் ஆண்டில் பத்திரிகைகளுக்கு அரசு அளித்த விளம்பரத் தொகை.

**வினா 10888—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–81 ஆம் ஆண்டில் தமிழக அரசு பத்திரிகைகளுக்கு கொடுத்த விளம்பரத் தொகை எவ்வளவு ?

விடை—

அரசுத் துறை மற்றும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், வாரியங்கள், 1980–81 ஆம் ஆண்டில் பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் செய்ததற்கான செலவு ரூபாய் 1,54,80,779.

43 —

நல்லமனூர் கோட்டை, வேடசந்தூர் சாலையில் தார் போடும் திட்டம்.

**வினா 11827—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்—கரூர் சாலையில் இருந்து பிரியும் நல்லமனார் கோட்டை - வேடசந்தூர் சாலையில் தார்போடும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்—கரூர் சாலையில் இருந்து பிரியும் நல்லமானூர்கோட்டை—வேடசந்தூர் சாலையில் தார் போடும் திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

44—

## பெரியகுளம் கோட்டத்தில் பாசன குளங்களை சீரமைக்க ஒதுக்கிய தொகை.

வினா 11929—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79, 1979–80, 1980–81-ஆம் ஆண்டுக்கென பெரியகுளம் கோட்டத்திற்கு பாசன குளங்களை சீரமைப்பதற்கென ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டதா?

விடை—

(அ) பஞ்சாயத்து யூனியன் மற்றும் பொதுப்பணித்துறை கண்மாய்களை சீரமைக்க பெரிய குளம் கோட்டத்திற்கு வருடாந்திர வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விபரங்கள் பின் வருமாறு :

| வருடம். | பஞ்சாயத்து யூனியன் கண்மாய்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. | பொதுப் பணித்துறை கண்மாய்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978–79 .. .. .. | 2·20 | 2·00 |
| 1979–80 .. .. .. | 1·90 | 2·10 |
| 1980–81 .. .. .. | 1·24 | 2·44 |

(ஆ) ஆம்.



45—

## செங்கற்பட்டு மாவட்டத்தில் சாலைகள் சீரமைப்பு.

வினா 120919—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சியில் குடி நீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றப்பட்டதன் காரணமாக பழுதுபட்டுள்ள சாலைகளை சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

பழுதடைந்துள்ள சாலைகளை உடனே சீர் செய்யுமாறு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

46 —

## தமிழ்நாட்டில் பெண்களுக்கான பாலிடெக்னிக்குகள்.

வினா 12137—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண்களுக்கென்று நடத்தப்பட்டுவரும் பாலிடெக்னிக்குகள் எத்தனை?

(ஆ) அவைகளில் தனியார் பாலிடெக்னிக்குகள் எத்தனை?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் பெண்களுக்கென்று நடத்தப்பட்டு வரும் ஏழு பல்தொழில் பயிற்சி பயிலகங்களில் நான்கு கல்வி நிலையங்கள் தனியார் துறையினை சேர்ந்தவைகள் ஆகும்.

## ஆலம்பாடி சுண்ணாம்புக்கல் சுரங்கம்.

வினா 12154—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம் ஆலம்பாடியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்தை நடத்தும் செட்டிநாடு சிமெண்ட் கம்பெனி அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ( Royalty ) தொகை செலுத்துகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை. மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆலம்பாடியில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்தை நடத்தும் திருவாளர்கள் செட்டிநாடு சிமெண்ட் கம்பெனி அதற்கான உரிமை ஊதியத்தொகையை, (Royalty) 1960 ஆம் ஆண்டு கனிவளச் சலுகை விதி 14-ன் படியும் படிவம் 'கே'-யில் எழுதிக்கொடுத்த ஒப்பந்தப்படியும், தவிர, 1957 ஆம் ஆண்டு சுரங்கமும், கனிவளங்களும் (ஒழுங்கு படுத்துதலும் பராமரித்தலும்) சட்டத்தின் 9-வது பிரிவின்படியும் அரசுக்கு செலுத்துகின்றது. இத்தொகை அரசுக்குச் சேர்வதால், அரசுக் கணக்கில் இத்தொகை சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

(ஆ) பதில் எழவில்லை.

48—அரசுத்துறை மூலம் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

வினா 12292—திரு. என். பழநிவேல்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழகத்தில் அரசுத்துறையின் சார்பாக சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



49—

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஏற்றுமதி.

வினா 12317—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமத் தொழில்களில் பனை ஓலையினால் செய்த பொருட்கள், கயிறினால் செய்யப்பட்ட பொருட்கள், பாம்கோலா, குளிர்பானம், தரமான நல்லெண்ணெய், கோபுரம் மார்க் சலவை சோப்பு போன்றவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் தனது தூத்துக்குடி தும்பு ஏற்றுமதி பிரிவு மூலம் தும்பினை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது. அவ்விணையம் பனை வெல்லப் பாகினை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

ஹாலந்து போன்ற நாடுகளுக்கு பனையோலைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்துள்ளது. ''பாம்கோலா'' குளிர்பானம், நல்லெண்ணெய் போன்றவைகளை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக செயற்குறிப்பு பரிசிலனையில் இல்லை.

கோபுரம் மார்க் சலவை சோப்பினை மேற்கு ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் வாரியம் ஈடுபட்டுள்ளது. இது சம்பந்தமாக இந்திய அரசு வர்த்தக நிறுவனம் (State Trading corporation) மூலம் கடிதபோக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

மற்றும் ஏனைய கதர் மற்றும் கிராமத் தொழிற் பொருட்களை ஏற்றுமதி செய்வது சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1983 ஏப்ரல் 13

## சேலத்தில் சிங்கநனைஸ்டு கண்டன்சர் இயந்திரம் அமைக்கும் செயற்குறிப்பு.

50—

வினா 12325—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் கோடையில் மின் அழுத்த குறையை சரி செய்யும் சிங்கநனைஸ்டு கண்டன்சர் எனப்படும் இயந்திரம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) சேலம் உப மின் நிலையத்தில் சிங்கநனைஸ்டு கண்டன்சர் எனப்படும் இயந்திரம் அமைக்கும் வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன.

(ஆ) இந்த இயந்திர நிர்மாண மதிப்பீடு ரூ. 90 இலட்சங்கள் ஆகும். இதில் இயந்திரத்தின் விலை ரூ. 75 இலட்சமாகும்.



## இணைப்பு I

(உடுக்குறியிடாத வினா எண் 6792க்கான விடையைக் காண்க.)

| | 1978 | | | 1979 | | | 1980 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு நிறுவனங்கள். | அரசு | பொது | அரசு நிறுவனங்கள். | அரசு | பொது | அரசு நிறுவனங்கள். | அரசு | பொது. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| நகராட்சி மன்றங்கள் மற்றும் நகரியங்கள் (மாவட்டவாரியாக). | | | | | | | | | |
| . செங்கல்பட்டு | .. | 10 | 9 | 12 | 3 | 28 | 11 | .. | 25 |
| . வட ஆற்காடு .. | .. | .. | 16 | .. | .. | 15 | .. | 1 | 24 |
| . தென்னாற்காடு .. | .. | 1 | 10 | .. | 1 | 22 | 1 | .. | 16 |
| . தஞ்சாவூர் .. — | 1 | 1 | 8 | .. | 1 | 19 | 4 | 1 | 25 |
| . திருச்சிராப்பள்ளி .. | .. | .. | 2 | | .. | 17 | .. | .. | 21 |

இணைப்பு I

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. புதுக்கோட்டை | .. | .. | .. | .. | .. | .. | 3 | .. | .. | 1 |
| 7. மதுரை .. | .. | | 2 | 7 | 1 | 1 | 8 | 1 | 2 | 10 |
| 8. இராமநாதபுரம் | .. | .. | .. | 15 | 1 | .. | 13 | .. | .. | 30 |
| 9. கன்னியாகுமரி | .. | .. | .. | .. | 1 | .. | 4 | 5 | 1 | 13 |
| 10. திருநெல்வேலி | .. | 2 | 1 | 14 | .. | 1 | 25 | .. | 2 | 25 |
| 11. சேலம் | .. | 1 | 24 | 9 | .. | 10 | 13 | 1 | 16 | 8 |
| 12. நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | | .. | 3 |
| 13. தர்மபுரி .. | .. | .. | 3 | 5 | | .. | 3 | .. | .. | 4 |
| 14. பெரியார் .. | .. | .. | .. | 7 | .. | .. | 9 | 1 | .. | 13 |
| 15. கோயம்புத்தூர் | .. | 1 | 1 | 16 | 1 | 1 | 44 | .. | .. | 48 |
| சென்னை மாநகராட்சி | | .. | .. | 5 | .. | .. | 6 | .. | .. | 3 |
| மதுரை மாநகராட்சி | .. | 5 | .. | 29 | 1 | .. | 51 | 1 | .. | 130 |
| கோயம்புத்தூர் மாநகராட்சி. | .. | .. | .. | 14 | .. | 1 | 21 | 1 | .. | 35 |



## இணைப்பு II.

(உடுக்குறியிடாத வினா எண். 6801-க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்.

(ஆ) வடக்கு மதுரையில் சாலை விபத்து ஏற்படும் இடங்கள் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கை.

கீழ்க்கண்ட இடங்கள் விபத்துக்களை விளைவிக்கும் இடங்களாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளன :—

(1) திண்டுக்கல்லில், பழனி—திண்டுக்கல் சாலை தாடிக் கொம்பு சாலை, பேகம்பூர் இரயில்வே ஜங்சன் சாலை, அரண்மனைக் குளம் சாலை, சோலை ஹால் சாலை, மண்காறை பக்கத்திலுள்ள பழனி சாலை, தோம்மையார்புரம் பக்கத்திலுள்ள பாலம், திண்டுக்கல்—மதுரை சாலை, என்.ஜி.ஓ. குடியிருப்பு, முள்ளிப்பாடி (திருச்சி சாலை) வாழ்வார் கோட்டை திருப்புச் சாலை.

(2) மேட்டூர் இரயில்வே கேட்டிற்குப் பின்புறமுள்ள ஒரு குறுகிய வளைவு, திண்டுக்கல் பக்கம் உள்ள ஒரு குறுகிய பாலம்.

(3) ஆண்டிப்பட்டி—தாங்சாயம் சாலை.

(4) முனிசிபல் உயர்நிலைப்பள்ளிக்கு முன்னால் உள்ள ஒருவராபுரம், காரமடைத் தோட்ட வளைவு நெடுஞ்சாலை பயணியர் தங்கும் விடுதி, காலயம்பூதூர் அக்ரகாரம் இரயில்வே நிலையம் தாலையம் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள பழநி, உடுமலைப்பேட்டை சாலைத் திருப்பம், விளாம்பட்டி இரயில்வே நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள கோதம்பூண்டி சாலை.

(5) ரெட்டியார் சத்திரத்திற்கும் பஞ்சாலமாய்கம் பட்டிக்கும் இடையிலுள்ள சாலை.

(6) பழநி-திண்டுக்கல் நெடுஞ்சாலை, ரெட்டியார் சத்திரம் மூலச்சத்திரம், உட்டாண்சத்திரம் நகர எல்லை, விருப்பாட்சி சத்திரப்பட்டி நகர எல்லை மேலும் கணக்கன்பட்டி.

(7) தேவதாணப்பட்டிக்கும் பெரியகுளத்திற்கும் இடையிலுள்ள மலைச்சாலை குசவப்பட்டிக்கும் லட்சுமிபுரத்திற்கும் இடையிலுள்ள தேனி சாலை.

(8) கோடைக்கானல் மலைச்சரிவுச் சாலை முழுவதும் உள்ள குறுகிய வளைவுச் சாலைகளும்.

(9) அரப்பாடி கிராமத்திற்கு சமீபத்திலுள்ள தேனி மதுரை சாலை, வீரப்பாண்டி பாலத்துக்கருகிலுள்ள தேனி சின்னமனூர் சாலை.

(10) கீழே உள்ள மலைச்சாலைகள்..

(வழி) கூடலூர்-குமுளி சாலை, சின்னமனூர்-நெடுஞ்சாலை போடி-போடி மேட்டுச் சாலை, கும்பம்-கும்பமேட்டுச் சாலை.

நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினாலும், காவல் துறையினாலும், மேற்கூறப்பட்ட விபத்துக்கள் அதிகம் நடக்கும் இடங்களில், அவ்விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## இணைப்பு III.

உடுக்குறியிடாத வினா எண் 9522-க்கான விடையைக் காண்க.

மத்திய அரசு தனது சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் உதகை, குன்னூர் நகரப் பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் உதகமண்டலம் நகருக்கு நகர வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 10 இலட்சமும் 1980-81 ஆம் ஆண்டில் கூனூர் நகருக்கு நகர வளர்ச்சி பணிகளுக்காக ரூ. 23 இலட்சமும் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மேற்படி ரூ. 10 இலட்சத் தொகையுடன் மாநில அரசு தனது சரிபங்கு தொகையாக ரூ. 10 இலட்சத்தை வழங்கி மொத்த தொகையான ரூ. 20 இலட்சமும் வழங்கி, மேற்படி தொகையை நகர் மற்றும் ஊர் வளர்ச்சி வாரியத்திடம் ''வளர்ச்சி நிதி''யின் கீழ் கடனாக உதகை நகர ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டும் வழங்கியது.

மாநிலஅரசு வளர்ச்சி நிதியிலிருந்து மேலும் ரூ.20 இலட்சத்தை உதகை நகர ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளுக்கென வழங்கியது. இத்தொகை ஒப்புதலளிக்கப்பட்ட ஆறு வணிகத்திட்ட பணிகளை நிறைவேற்றும் பொருட்டு 1980-81-க்கு மாநில அரசால் வழங்கப்பட்டது.



உதகைப் நகர்ப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட திட்டபபணிகளும் அத்திட்டங்களை நிறைவேற்ற ஒதுக்கப்பட்ட நிதித் தொகை பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன ;—

உதகமண்டலம்—

| திட்டத்தின் பெயர். | திட்ட மதிப்பீடு. | அங்கீகரிக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. | விடுவிக்கப்பட்ட தொகை. | 1979–80 1980–81. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மனை மற்றும் மனை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காந்தி நகர்ப் பகுதியில் நில ஆக்கிரமிப்பும் வளர்ச்சிப் பணிகளும். | 7.00 | 7.00 | 2.20 | 2.20 | .. |
| மண்டி மற்றும் அங்காடிகள் | | | | | |
| 2. நகராட்சி சந்தையில் 4ஆவது கட்ட வளர்ச்சிப் பணிகள். | 10.00 | 6.00 | 4.00 | 4.00 | 20.00 (ஆறு வணிக திட்டங்களுக்காக மாநில அரசால் விடுவிக்கப் பட்டது.) |
| 3. நகராட்சி சந்தையில் 5ஆவது கட்ட வளர்ச்சிப் பணிகள். | 10·00 | 6.00 | .. | .. | .. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. நகராட்சி சந்தையில் உள்ள தற்காலிக கடைகள் வளர்ச்சிப் பணிகள். | 2.50 | 1.80 | 1.80 | 1.80 | .. |
| **போக்குவரத்து வளர்ச்சிப் பணிகள்—** | | | | | |
| 5. லாரி நிறுத்துமிடம் கட்டுதல் | 7.00 | 5.00 | 3.00 | 3.00 | .. |
| 6. அப்பர் பஜார் ரோட்டில் லாரி நிறுத்துமிடம் மற்றும் வாடகை கார் நிறுத்துமிடம் கட்டுதல். | 6.25 | 6.00 | 3.00 | 3.00 | .. |
| 7. சேரிங்கிராஸ் பகுதியில் வாடகை கார் நிறுத்துமிடம் கட்டுதல். | 4.50 | 3.00 | 3.00 | 3.00 | .. |
| 8. நகராட்சி பொறியாளர் குடியிருப்பு அருகில் வாடகைக் கார் நிறுத்துமிடம் அமைத்தல். | 4.50 | 3.00 | 3.00 | 3.00 | .. |
| மொத்தம் .. | 51.75 | 37.80 | 20.00 | 20.00 | 20·0 |

மேற்குறிப்பிட்ட திட்டங்களின் மொத்த திட்ட மதிப்பீடு தொகை ரூ. 62.79 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட மதிப்பீடு தொகைக்கு இசைவு அளித்து, மீதியுள்ள தனது பங்கை விரைவில் அளிக்கும்படி மத்திய அரசை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் அங்கீகரிக்கப்பட்ட எட்டு திட்டங்களில் அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒதுக்கப்பட்ட ரூ. 40 இலட்சத்தில் இதுகாறும் ரூ. 23.23 இலட்சம் திட்ட பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.



**கூனூர்—**

மத்திய அரசால் வழங்கப்பட்ட ரூ. 23.00 இலட்சத்தை ஏற்றுக்கொண்டு மாநில அரசு, தனது சரி பங்கு தொகையான ரூ. 23 இலட்சத்தை வழங்கி, மொத்த தொகையான ரூ. 46.00 இலட்சத்தை "நகர ஊரமைப்பு வாரியத்திடம் வளர்ச்சி நிதி" யின்கீழ் கடனாக வழங்கியது.

கூனூர் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களும் அத்திட்டங்களை நிறைவேற்ற ஒதுக்கப்பட்ட நிதி உதவி பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டத்தின் பெயர். | திட்ட மதிப்பீடு. | அங்கீகரிக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. | விடுவிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **போக்குவரத்துப் பணிகள்** .. | 47.00 | 21.00 | 21.00 | [illegible] |
| **பார உந்துவண்டி நிலையம் கட்டுதல்** | 10,80 | 5.00 | 5.00 | |
| **மண்டி மற்றும் சந்தை—** | | | | |
| **தினசரி அங்காடி மாற்றி அமைத்தல்** | 27.00 | 11.00 | 11.00 | 11.00 |
| **உ கிடங்கு அமைத்தல்** .. | 34.00 | 10.20 | 10.20 | [illegible] |

கூனூர் நகராட்சியில் ஆரம்பக்கட்டப் பணிகளான தொழிட் நுட்ப அங்கீகாரம் மற்றும் சாரம் பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன

13638 600 008

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1. Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-12.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabhu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.